# கிறிஸ்தவ

# கடவுள் யார்?

# அவர் எப்படிப்பட்டவர்?



# கிறிஸ்தவ

# கடவுள் யார்?

# அவர் எப்படிப்பட்டவர்?

***மூலம்:***

***தலை சிறந்த வேதபாடங்கள்***
***R.ஸ்டான்லி புத்தகங்கள்***
***GotQuestions இணையம்***

**WOG BOOKS 185**

First Edition 2025

**Editor / தொகுப்பாசிரியர்:**

Yesudas Solomon / ஏசுதாஸ் சாலொமோன்
Mathanraj Joshua / மதன்ராஜ் ஜோசுவா

**Source / மூலம்:**

வேதபாடங்கள், R.ஸ்டான்லி புத்தகங்கள், GotQuestions

**Published By / பதிப்பு:**

Bible Minutes, www.WordOfGod.in

**Copyright: Public Domain / இலவசம் / பொதுதளம்**

This book is not copyright protected. You are free to download, print and make copies without any permission from us. இந்தப் புத்தகத்தை நாங்கள் காப்புரிமைக்கு உட்படுத்தவில்லை. ஆகையால் நீங்கள் இந்தப் புத்தகத்தை எங்களுடைய அனுமதி இல்லாமலேயே மறுப்பதிப்புச் செய்துக்கொள்ளலாம்.

**Download / பதிவிறக்கம்:**

www.WordOfGod.in and www.Archive.org

**Contact Us / தொடர்புக்கு:**

**WhatsApp: +91 7676505599**
**Email:** wordofgod@wordofgod.in

# பொருளடக்கம்

*முகவுரை ........................................................................ 1*

*1. தேவன் உயிர் வாழ்கிறாரா? தேவன் உயிரோடு இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் உண்டா?................................................ 3*

*2. தேவன் என்பவர் உண்மைதானா? தேவன் என்பவர் உண்மைதான் என்பதை நான் எப்படி தெரிந்துகொள்வது?. 8*

*3. சர்வ வல்ல தேவன் இருக்கின்றாரா?..................... 13*

*4. தேவன் யார்? தேவன் என்றால் என்ன? தேவனை நாம் எப்படி அறிந்துகொள்வது?.................................................. 30*

*5. பிதாவாகிய தேவன் யார்? .................................... 33*

*6. தேவனை சிருஷ்டித்தவர் யார்? தேவன் எங்கிருந்து வந்தார்? 55*

*7. ஒரே மெய்யான தேவன் ....................................... 57*

*8. தேவனுடைய பண்புகள் யாவை? தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார்? .......................................... 71*

*9. வேதாகமம் திரித்துவத்தைப் பற்றி என்ன போதிக்கிறது? 76*

*10. திரித்துவத்தை விளக்க முடியுமா?.......................... 81*

*11. பிதாவாகிய தேவன் குறித்த கருத்தை நான் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும்? ............................................................ 85*

*12. தேவன் ஏன் நல்ல மனிதர்களுக்கு தீமையான காரியங்களை சம்பவிக்கும்படி அனுமதிக்கிறார்? .......................................... 88*

*13. தேவன் தீமையை சிருஷ்டித்தாரா?........................ 93*

*14. தேவன் புதிய ஏற்பாட்டில் இருப்தைக்காட்டிலும் பழைய ஏற்பாட்டில் ஏன் வித்தியாசமானவராக இருக்கிறார்?......... 96*

15. தேவன் அன்பாக இருக்கிறார் என்பதன் அர்த்தம் என்ன? 100

16. இன்றும் தேவன் நம்மோடு பேசுகிறாரா?............103

17. தேவனுக்குப் பயப்படுதல் என்றால் என்ன?.......105

18. தேவன் அவரது மனதை மாற்றிக்கொள்கிறாரா?108

19. தேவன் எல்லோரையும் நேசிக்கிறாரா அல்லது கிறிஸ்தவர்களை மட்டும் நேசிக்கிறாரா?.............................114

20. தேவன் ஒரு பாவி / அவிசுவாசியின் ஜெபங்களைக் கேட்கிறாரா / பதிலளிக்கிறாரா?..........................................117

21. தேவன் ஏன் எரிச்சலுள்ள தேவனாக இருக்கிறார்?120

22. தேவன் ஆணா அல்லது பெண்ணா?....................123

23. தேவன் / வேதாகமம் பாலியல் சார்பியமுள்ளதா?128

24. தேவன் இன்றும் அற்புதங்களைச் செய்கிறாரா? 132

25. தேவன் இன்று எல்லாரையும் சுகமாக்குகிறாரா? 135

26. பூகம்பங்கள், சூறாவளிகள் மற்றும் சுனாமிகள் போன்ற இயற்கை பேரழிவுகளை தேவன் ஏன் அனுமதிக்கிறார்? ... 137

27. தேவன் இருப்பாரேயானால், அவர் ஏன் இவ்வளவு உபத்திரவங்களை அனுமதிக்கின்றார்?.................................140

28. தேவனைக் கேள்வி கேட்பது தவறா?.................154

29. யாராவது தேவனை எப்பொழுதாவது பார்த்திருக்கிறார்களா? 156

30. தேவனிடத்தில் கோபமாக இருப்பது தவறா?......158

31. தேவனிடம் ஏமாற்றத்தை உணர்வது தவறா?.....163

32. தேவனுடைய மகிமை என்றால் என்ன? ............166

33. தேவன் நித்தியமானவர் என்பதன் அர்த்தம் என்ன?171

34. தேவன் நேர்மையானவரா? .................................. 174

35. தேவன் எல்லையற்றவர் என்பதன் அர்த்தம் என்ன? 176

36. தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார்? ........... 179

37. தேவன் சர்வ வல்லமையுள்ளவர் என்பதன் அர்த்தம் என்ன? 181

38. தேவன் சர்வவியாபி என்பதன் அர்த்தம் என்ன?185

39. சர்வஞானி என்பதன் அர்த்தம் என்ன?............... 189

40. நாம் பாவம் செய்யும்போது தேவன் நம்மை தண்டிகிறாரா? 193

41. தேவன் ஏன் விசுவாசத்தை எதிர்பார்க்கிறார்?.... 196

42. கடவுள் நம்மை பாவம் செய்ய தூண்டுகிறாரா? 201

43. தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று கூறுவதன் அர்த்தம் என்ன?.......................................................... 203

44. சாத்தான் கலகம் செய்வான் என்று தேவன் அறிந்திருந்தார் எனில், பிறகு ஏன் அவர் அவனை சிருஷ்டித்தார்? ............ 208

45. தேவனை மெய்யாக அறிவதற்கான திறவுகோல் என்ன? 212

46. சில சமயங்களில் விசுவாசிகள் நோய்வாய்ப்படுவது தேவனுடைய சித்தமா? ...................................................... 216

47. தேவனுடைய பல்வேறு பெயர்கள் என்ன, அவற்றின் பொருள் என்ன? ............................................................... 220

48. தேவன் இப்போது எங்கே இருக்கிறார்? வேதனையில் இருக்கும்போது போது தேவன் எங்கே? ............................. 225

49. தேவனுடைய கோபத்தைப் பற்றிய வேதாகமப் புரிதல் என்ன? 229

*50. மனிதன், தேவனுடைய மாதிரியிலிருந்து எப்பொழுது, எவ்விதம் விலகிச் சென்றான்?............................................232*

*51. தேவன் மனிதரானாரா?........................................237*

*52. இயேசு தேவனா? இயேசு தாம் தேவன் என்று எப்பொழுதாவது கூறினாரா?............................................248*

*53. இயேசு கிறிஸ்து யார்?........................................251*

*54. வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தையா? 256*

*55. கிறிஸ்தவம் என்றால் என்ன? கிறிஸ்தவர்கள் என்ன விசுவாசிக்கிறார்கள்?..............................................263*

*56. பரிசுத்த ஆவியானவர் யார்?................................267*

*57. கிறிஸ்துவின் தெய்வீகம் வேதாகமத்தின் அடிப்படையிலானதா?..................................................269*

*58. தேவனுடைய சித்தம் என்றால் என்ன?..............274*

*59. என்னுடைய வாழ்விற்கான தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளுதல் எப்படி?..................................................279*

*60. தேவ சித்தத்தைத் திட்டமாய் அறிய முடியுமா?..283*

*61. கடவுள் நமது வாழ்க்கைக்கு முழு வரைபடத்தையும் கொடுத்துவிடுகிறாரா?..................................................286*

*62. நான் ஒரு இந்து, நான் எதற்காக கிறிஸ்தவனாகவேண்டும்? 290*

*63. நான் ஒரு முஸ்லீம், கிறிஸ்தவனாக மாறுவதை நான் ஏன் கருத்தில் கொள்ள வேண்டும்?............................................303*

*64. தேவனிடத்தில் நான் எப்படி சரியான நிலையைப் பெறமுடியும்?......................................................................308*

*65. பரலோகத்திற்கு போகிறதற்கு ஒரே வழி இயேசு மட்டும்தானா? ........................................................................ 311*

*66. இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள் என்பதன் அர்த்தம் என்ன?............. 315*

*67. கிறிஸ்தவன் என்றால் என்ன?.............................. 318*

*68. இரட்சிப்பின் வழி என்றால் என்ன?.................... 321*

*69. பாவியின் ஜெபம் என்றால் என்ன?.................... 325*

*70. மன்னிப்பு கிடைத்ததா? தேவனிடமிருந்து நான் எவ்வாறு மன்னிப்பைப் பெறுவது?..................................................... 328*

*71. நான் எப்படி ஒரு கிறிஸ்தவனாக முடியும்?........ 333*

*72. நான் எப்படி தேவனுடைய பிள்ளையாக முடியும்?336*

*73. கிறிஸ்தவத்திற்கு நான் எப்படி மாறுவது? ........... 341*

*74. பரலோகத்திற்கு செல்லுதல் - எனது நித்திய இலக்குக்கு எப்படி நான் உத்தரவாதம் அளிக்க முடியும்?...................... 345*

*75. இயேசு இரட்சிக்கிறார் என்பதன் அர்த்தம் என்ன?349*

*76. நான் எனது விசுவாசத்தை இயேசுவின்மேல் வைத்திருக்கிறேன்... இப்பொழுது அடுத்து என்ன? ............ 353*

# முகவுரை

வாசகர் அனைவருக்கும் அன்பின் வணக்கம். இந்த புத்தகம் கடவுளைப்பற்றி தெளிவாக அறிந்துக்கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்தோடு வெளியிடப்படுகிறது. அச்சுப்புத்தகமாக வெளியிடுவதைக்காட்டிலும் மின்-நூலாக/PDF வெளியிட்டால் சுலபமாக அனைவருக்கும், அதாவது பார்வையில்லாதோர், கிறிஸ்தவரல்லாதோர், நாத்திகர்கள், வெளிநாட்டில் வாழும் தமிழர், புத்தகம் வாங்க வசதியில்லாதோர் என அனைவருக்கும் இலகுவாக கிடைக்கும் என்று எண்ணுகிறோம். இது இலவசமாக கொடுக்கப்படுகிறது.

இந்த புத்தகத்தில் உள்ள கட்டுரைகள் ஒவ்வொன்றும் தலை சிறந்த வேதவல்லுனர்களால் எழுதப்பட்டவை. இவைகள் வெவ்வேறு வேதப்பாடங்கள், R. ஸ்டான்லி அண்ணன் புத்தகங்கள், GotQuestions இணையம் ஆகியவைகளில் இருந்து தேர்ந்து எடுக்கப்பட்டவை.

இந்த புத்தகவரிசையில் "இயேசு கிறிஸ்து யார்? அவர் எப்படிப்பட்டவர்?", "பரிசுத்த ஆவியானவர் யார்? அவர் எப்படிப்பட்டவர்?" என்னும் கூடுதலான இரண்டு புத்தகங்களும் இலவசமாக வெளிவந்துள்ளன.

இந்த புத்தகங்களை மற்றவர்களோடும் பகிர்ந்துக்கொள்ளுங்கள்.

தாழ்மையோடு,

ஏசுதாஸ் சாலொமோன்

மதன்ராஜ் ஜோசுவா

# 1. தேவன் உயிர் வாழ்கிறாரா? தேவன் உயிரோடு இருக்கிறார் என்பதற்கு ஆதாரம் உண்டா?

*தேவன் இருக்கிறார் என்பதை நிரூபிப்பதும் அல்லது தேவன் இல்லை என்று நிரூபிக்காமல் நிராகரிப்பதும் அரிதான காரியமாகும். தேவன் இருக்கிறார் என்கிற உண்மையை நாம் விசுவாசித்து விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என திருமறை கூறுகிறது: "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்." (எபிரெயர் 11:6) தேவனில் விசுவாசம் வைத்து அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிற நியதி இல்லாதிருக்குமானால், வெறுமனே எளிமையான நிலையில் எல்லோரும் காணும்படி தேவன் தோன்றி தம்மை இருக்கிறவராக இந்த உலகத்திற்கு காண்பித்து நிரூபித்திருக்க முடியும். ஆனால் அவர் அப்படி செய்திருந்தால், விசுவாசிக்க வேண்டும் என்பதன் அவசியம் இல்லாமற் போயிருக்கும். "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது." (யோவான் 20:29)*

*விசுவாசத்தினால் தேவனை நம்பவேண்டும் என்று சொல்வதனால், அவர் இருக்கிறார் என்பதற்கு எந்தவித ஆதாரமும் இல்லையென்று சொல்லிவிட முடியாது. "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும்,*

*அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்" (சங்கீதம் 19:1-4) என்று வேதாகமம் கூறுகிறது. நாம் நட்சத்திரங்களைக் காண்பதிலும், அகில உலகத்தையம் காண்பதிலும், இயற்கையின் அதிசயங்களைப் கவனிப்பதிலும், சூரியன் மறைவதின் அழகை ரசிப்பதிலும் இவைகளை படைத்த ஒருவர் இருக்கிறார் என்பதைப் புரியச்செய்கிறது. இவைகள் எல்லாம் போதுமானதாக இல்லாவிட்டால், நம்முடைய இருதயங்களிலே, அவர் வாழ்கிறார் என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. பிரசங்கி 3:11 கூறுகிறது, "உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்". நம்முடைய இருதயத்தின் ஆழத்தில் ஒரு புரிந்துகொள்ளுதல் இருக்கிறது. அதாவது நம்முடைய வாழ்கைக்குப் பின், இதைவிட மேலான ஒரு வாழ்வு இருக்கிறது என்பது தெரிகிறது. அறிவுப்பூர்வமாக ஒருவேளை இதை நாம் மறுக்கலாம், ஆனால் தேவனுடைய சமுகம் நம்மை சுற்றியும் இருந்துகொண்டிருக்கிறது. சிலர் தேவன் இருக்கிறார் என்பதை மறுக்கிறார்கள், அவர்களை வேதாகமம் கடிந்துகொள்கிறது: "தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்" (சங்கீதம் 14:1). வரலாற்றில் முழுவதுமாக பார்க்கும்பொழுது எல்லாக் கலாச்சாரத்திலும், நாகரீக மேம்பாட்டிலும், எல்லாக் கண்டங்களிலும் உள்ளவர்கள் தேவன் இருக்கிறார் என்பதை நம்புகிறார்கள். இவர்கள் தேவன் இருக்கிறார் என்று நம்புவதற்கு ஏதோ ஒன்று நிச்சயமாக இருக்கவேண்டும்.*

*தேவன் இருக்கிறார் என்பதற்கு வேதாகமம் கூறுகிற விவாதங்களை அல்லாமல் வேறு விவாதங்களும் உள்ளன. முதலாவதாக, "**மெய்ப்பொருள் ஆய்வு விவாதம்**" இந்த விவாதம் கருத்துக்களின் அடிப்படையில் தேவன் இருக்கிறார் என்று நிரூபிக்கின்றன. இது தேவனைப்பற்றிய வரையறையுடன் தொடங்குகிறது, "தேவனைத்தவிர வேறொரு பெரியகாரியம் இருக்க முடியாது". இருப்பது இல்லாமல் இருப்பதைக் காட்டிலும் பெரியது. ஆகையால்*

*அந்த பெரியகாரியம் தேவனாகத்தான் இருக்க வேண்டும். தேவன் இல்லாவிட்டால் அந்த பெரியகாரியம் இருந்திருக்க முடியாது. ஆனால் இது முரன்பாடான கடவுளைக்குறித்த விளக்கம்.*

*இரண்டாவது விவாதம், "**நோக்க ஊளவியல் விவாதம்**" ஆகும். உலகம் மிக நன்றாக மற்றும் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டிருப்பதனால், இதற்கு பின்னால் இதனை உருவாக்கிய அல்லது வடிவமைத்த ஒருவர் நிச்சயமாக இருக்கவேண்டும். உதாரணமாக பூமி தற்போது இருக்கிற அந்த ஸ்தானத்தில் இருந்து சூரியனுக்கு சற்று அருகில் சென்றாலும் அல்லது சற்று தூரமாயிருந்தாலும், பூமியில் வசிக்கிற மக்கள் உட்பட சகல ஜீவராசிகளும் அழிந்துபோய்விடும் ஒருவரும் உயிர்வாழ முடியாது. நம்முடைய தட்ப வெட்ப நிலையில் சில சதவிகிதம் கூடுதலாகவோ, குறைவாகவோ இருந்தால் பூமியிலிருக்கிற எல்லா உயிரினங்களும் மரித்துப்போய்விடும். நம் உடம்பிலுள்ள ஒரு அணு உருவாகுவதற்கு அனேக புரத அணுக்கள் தேவை. அதாவது ஒரு அணு உருவாக குறைந்தபட்சம் 10243 புரத மூலக்கூறுகள் தேவை. அதாவது பத்தோடு (10) 243 பூஜ்ஜியங்களைச் சேர்க்க வேண்டும். ஒரு சிறிய உயிரணுவில் மில்லியன் கணக்கான புரத மூலக்கூறுகள் அடங்கியிருக்கின்றன.*

*தேவன் இருக்கிறார் என்பதற்கான மூன்றாவது விவாதம் "**அண்ட அமைப்புசார் விவாதம்**" என அழைக்கப்படுகிறது. எந்தஒரு விளைவுக்கும் ஒரு எதிர் விளைவு அல்லது காரணம் இருக்கும். உலகமும் அதில் உள்ளவைகளெல்லாம் ஒரு செயல் எனில் இந்த செயல்களை செயல்படுத்தின அல்லது கொண்டுவந்த வேரொரு செயல் இருக்க வேண்டும். அதாவது இவைகளெல்லாம் உருவாகுவதற்கு ஒரு காரணம் இருக்கவேண்டும். காரணமாவதற்கு இறுதியாக எல்லாவற்றையும், எல்லா செயல்களுக்கும் காரணமாயிருக்கிற ஒருவர் இருக்கவேண்டும். அவருக்கு மேலே அவரை*

*உருவாக்குவதற்கு காரணமாக யாருமில்லை. தன்னை உருவாக்க ஒருவருமில்லாமல் இருக்கிறவர் தான் தேவன்.*

*நான்காவது விவாதம், "**நெறிமுறை சார் விவாதம்**" என அறியப்படுகிறது. இது தார்மீக, ஒழுக்கநெறி மற்றும் நன்னடத்தையைப் பற்றியது ஆகும். வரலாற்றில், எல்லாக் கலாச்சாரத்திலும் ஒரு நியதி அல்லது ஒழுங்குமுறை உண்டு. அனைனருக்குமே சரி அல்லது தவறு குறித்த திறனறிவு உண்டு. கொலை, பொய், திருட்டு, தவறான நடத்தை இவைகளெல்லாம் எல்லா நாடுகளைச் சார்ந்தவர்களும் இது தவறு அல்லது இது சரி என்று மறுப்பு அல்லது ஆதரவு தெரிவிக்கிறார்கள். நன்மை எது தீமை எது என்று அறிகிற உணர்வு எல்லா மனிதருக்கும் இருக்கிறது. இந்த உணர்வு பரிசுத்தமான தேவனிடத்தில் இருந்து வரவில்லைஎன்றால் பின்னே எங்கே இருந்து வருகிறது?*

*இவைகள் எல்லாவற்றின் மத்தியிலும் மக்கள் தேவனை மறுதலிக்கவே செய்வார்கள் என்று பரிசுத்த வேதாகமம் நமக்கு தெளிவாக சொல்கிறது. "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்" (ரோமர் 1:25). மேலும் ஜனங்கள் போக்கு சொல்ல இடமில்லை எனவும் வேதாகமம் அறிவுறுத்துகிறது: "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை" (ரோமர் 1:20). ஆம் இன்று மக்கள் தேவனை நம்பாமல் இருப்பதற்கு, எந்த ஒரு கராணத்தையம் கூற முடியாது.*

*அறிவியல் பூர்வமாக தேவனை நிரூபிக்க முடியாது என்று அவரை நம்பாமல் இருக்கிறார்கள். மேலும் தேவன் இருக்கிறார் என்பதற்கு சான்றுகள் இல்லாததால் நம்ப மறுக்கிறார்கள். தேவன் இருக்கிறார் என்றால், நாம் செய்கிற ஒவ்வொரு செயல்களுக்கும் அவருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதையும், பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை உணரவேண்டும். (ரோமர் 3:23; 6:23) தேவன் இல்லையென்றால் நாம் நம் விருப்பப்படி நம் மனம்போல வாழலாம். பரிணாமக் கொள்கையைப் பிடித்துக்கொண்டு தேவனை உதாசினப்படுத்தி வாழ்கிற ஒரு கூட்டம் உண்டு. தேவன் உயிரோடிருக்கிறார் என்பது அனைவரும் அறிந்த உண்மை. தேவன் இல்லை என்பதை நிரூபிக்கும் கடுமையான முயற்சியே, தேவன் இருக்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறது. தேவன் இருக்கிறார் என்பது நமக்கு எப்படித்தெரியம்? கிறிஸ்தவர்கள் என்கிற நிலையில், நாம் தேவனுடன் தினமும் பேசுவதால், அவர் இருக்கிறார் என்பதை அதினால் அறிகிறோம். அவர் பேசுவதை நான் சத்தமாகக் கேட்பதில்லை ஆனால் அவர் பிரசன்னம், வழிநடத்துதல், அன்பு மற்றும் கிருபையை ஆகியவற்றை உணர்கிறோம். நமது வாழ்கையில் நடந்த சில நிகழ்ச்சிகளுக்கு அல்லது சம்பவங்களுக்கு விளக்கம் கொடுக்கிற பொழுது தேவன் இருக்கிறார் என்பதைத்தவிர, வேறு விளக்கம் கொடுக்க இயலாது. தேவன் நம்மை ஆச்சரியமான விதமாக இரட்சித்து நம் வாழ்க்கையை மாற்றியிருக்கிறார். ஆகவே அவரைத் துதித்து அவரில் அன்பு செலுத்துவதைத்தவிர நமக்கு வேறே என்ன செய்ய முடியும்.*

*இறுதியாக தேவன் இருக்கிறார் என்பதை விசுவாசத்தின் மூலமாக அறிந்துகொள்கிறோம். (எபிரெயர் 11:6). தேவன்பேரில் வைக்கும் விசுவாசம் என்பது குருட்டுத்தனமானதல்ல. விசுவாசம் என்பது ஒரு பாதுகாப்பான, வெளிச்சமான அறையில் அடி எடுத்து வைப்பதாகும். இதில் ஏற்கெனவே எண்ணற்ற மக்கள் இருக்கிறார்கள்.*

# 2. தேவன் என்பவர் உண்மைதானா? தேவன் என்பவர் உண்மைதான் என்பதை நான் எப்படி தெரிந்துகொள்வது?

*தேவன் என்பவர் உண்மைதான் என்பதை நாம் அறிந்துகொள்வதற்காக, அவர் தம்மை மூன்று வழிகளில் வெளிப்படுத்தியிருக்கிறார்: சிருஷ்டிப்பு, அவருடைய வார்த்தை மற்றும் அவரது குமாரனாகிய இயேசுகிறிஸ்து.*

*தேவன் இருக்கிறார் என்பதற்கான பொதுவான மற்றும் அடிப்படையான ஆதாரம் அவர் உருவாக்கினவைகள் தான். "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை" (ரோமர் 1:20). "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" (சங்கீதம் 19:1).*

*நீங்கள் வயல்வெளி நடுவில் ஒரு கைக்கடிகாரத்தை கண்டுபிடிக்கிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுவோம், நீங்கள் உடனே அந்த கடிகாரம் எங்கிருந்தோ திடீரென அங்கே தோன்றி வந்ததாகவோ அல்லது இதற்கு முன்பதாக இருந்தே அந்த கைக்கடிகாரம் இருந்திருக்கிறது என்றோ நிச்சயமாக எண்ணமாட்டீர்கள். அந்த கைக்கடிகாரத்தின் வடிவமைப்பைக் கொண்டு அதற்கு பின்னணியில் ஒரு வடிவமைப்பாளர் கண்டிப்பாக இருக்கிறார் என்பதாக நீங்கள் எடுத்துக்கொள்வீர்கள். ஆனால் இவைகளைக் காட்டிலும் தேவனின் படைப்பிலே, அழகான வடிவமைப்பையும், தெளிவான தோற்றத்தையும் நாம் காண்கிறோம்.*

*நாம் கணக்கிடுகிற நேரம் வெறும் கைக்கடிகாரங்களிலே அல்ல, மாறாக தேவனின் படைப்பிலுள்ள பூமியின் சுழற்சியினாலேயே நேரத்தைக் கணக்கிடுகிறோம். உலகத்தின் அமைப்பு அதை உருவாக்கினவருடைய அழகான படைப்பை வெளிப்படுத்துகிறது. அதை உருவாக்கினவர் ஒருவர் இருக்கிறாரென்பதை இந்த பிரபஞ்சம் பிரதிபலிக்கிறது, இதுவே ஒரு மாபெரும் வடிவமைப்பாளர் இதற்கு பின்னில் இருக்கிறார் என விவாதிக்கிறது.*

*இரகசிய குறியீட்டோடு வருகிற ஒரு செய்தியை நீங்கள் பெறுகிறீர்கள், உடனே அந்த இரகசிய குறியீட்ட உடைக்க பார்ப்பீர்கள். நீங்கள் நினைப்பதெல்லாம், இந்த செய்திக்கு பின்னால் ஒரு அறிவுப்பூர்வமான அனுப்பினவர் இருக்கிறார் மற்றும் யாரோ ஒருவர் இந்த செய்தியை உருவாக்கியிருக்க வேண்டும் என்பதாகும். ஆக்சிஜனற்ற ரைபோகரு அமில குறியீடு (DNA code) எவ்வளவு சிக்கலான, பல பாகங்களை கொண்டதாக நம்முடைய சரீரத்தில் உள்ள ஒவ்வொரு உயிரணுக்களிலும் கொண்டிருக்கிறோம்? ஆக்சிஜனற்ற ரைபோகரு அமில குறியீடு பார்க்கும்போது, இந்த குறியீட்டை எழுதின எழுத்தாளரை நம்மால் மெய்யாகவே கண்டுகொள்ளாமல் போகமுடியுமா?*

*தேவன், மிக அழகாக, இசைவாக அமைக்கப்பட்ட இந்த உலகத்தை உண்டாக்கினவர் மட்டுமல்லாமல், ஒவ்வொருவர் உள்ளத்திலும், நித்தியத்தைக் குறித்த உணர்வையும் வைத்திருக்கிறார் (பிரசங்கி 3:11). மனிதர்களுக்கு உள்ளார்ந்த உணர்வுகள் இருக்கிறது, நம் கண்களால் காண்பதைக்காட்டிலும் சிறந்ததொரு காரியம் வாழ்க்கையில் இருக்கிறது, உலகத்தில் வழக்கமாய் நடைபெறுவதைக் காட்டிலும் மேலான ஒரு நிலை இருக்கிறது. நித்தியத்தைக் குறித்த வெளிப்பாடு குறைந்தபட்சம் இரண்டு வழிகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது: சட்டம்-இயற்றுதல் மற்றும் ஆராதனை.*

*சரித்திரத்தின் எல்லா காலக்கட்டத்திலும் உண்டாயிருந்த ஒவ்வொரு நாகரிகத்திலும் சில நல்லொழுக்கம் மற்றும் சமுதாய ஒழுங்கு சட்டத்தை கொண்டிருந்தது. அதை ஒவ்வொரு கலாச்சாரத்திலும் எல்லாராலும் போற்றப்படுவதாக இருக்கிறது. உதாரணமாக "அன்பு" உலகிலுள்ள எல்லாராலும் மேலாக மதிக்கப்படுகிறது. அதே சமயம் "பொய் சொல்லுவது" உலகிலுள்ள எல்லோராலும் கண்டிக்கப்படுகிறது. இந்த பொதுவான ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகள், அதாவது நல்லது எது? தீயது எது? என்பதை நிர்ணயிக்கும் உலகளாவிய ஏற்றுக்கொள்ளக்கூடிய இந்த நியதி நமக்குள்ளே இருப்பது, இதை நமக்கு அளித்த எல்லாவற்றிற்கும் மேலாக ஒருவர் இருக்கிறார் என்பதையே சுட்டிக் காண்பிக்கிறது.*

*அதைப் போலவே உலகத்திலுள்ள மக்களனைவரும் அவர்கள் எந்த கலாச்சாரத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும், தேவனைத் தொழுது கொள்ள வேண்டும் என்கிற ஒரு அமைப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் தொழுதுகொள்கிற தெய்வமோ அல்லது பொருளோ வேறுபட்டிருக்கலாம். ஆனால் "மேலான ஒரு சக்தி/வல்லமை" இருக்கிறது என்பதை எல்லாருடைய உள்ளுணர்வும் ஏற்றுக் கொள்கிறது. தேவன் தமது சாயலாகவே மனிதனை உண்டாக்கினார் என்பதே நாம் தேவனைத் தொழுது கொள்வதற்கு ஏற்ற மனப்பான்மையை நமக்கு தந்திருக்கிறது (ஆதி. 1:27).*

*தேவன் தமது வார்த்தையைக் கொண்டும் (வேதாகமம் மூலமாக) தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார். வேதாகமம் முழுவதுமே தேவன் இருக்கிறாரென்பதற்கு பிரத்தியட்சமாக இருக்கிறது (ஆதியாகமம் 1:1; யாத்திராகமம் 3:14). ஒரு மனிதன் தனது சுயசரிதையை எழுதும்போது, அவர் மெய்யாகவே இருக்கிறார் என்பதை நிரூபிப்பதற்காக தனது நேரத்தை வீணடிக்க மாட்டார். அதேபோல தேவனும், தான் இருப்பதை அல்லது ஜீவிப்பதை அவருடைய புத்தகத்தில் அதிக நேரம்*

*எடுத்து எழுதி நிருபிக்கவேண்டிய அவசியம் அவருக்கு இல்லை. வாழ்க்கையை மாற்றுகிற சுபாவமுள்ள வேதாகமம், அதனுடைய துல்லியம் மற்றும் எழுதுகின்ற வேளைகளில் தொடர்ந்துள்ள அற்புதங்கள் யாவும் போதுமான ஆதாரங்களாயிருக்கிறது.*

*மூன்றாவதாக, தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார் (யோவான் 14:6-11). "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவான் 1:1, 14; கொலோ. 2:9ஐயும் காண்க).*

*இயேசுகிறிஸ்துவின் அற்புதமான இவ்வுலக வாழ்க்கையில், பழைய ஏற்பாட்டின் அத்தனை பிரமாணங்களையும் பரிபூரணமாக கடைபிடித்து, மேசியாவாகிய அவரைப்பற்றின எல்லா தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றினார் (மத்தேயு 5:17). இயேசு கிறிஸ்து எண்ணற்ற அற்புதங்களையும், ஏராளமான மனதுருக்கத்தையும், தான் கொண்டு வந்த செய்தியை உறுதிப்படுத்துவதற்கும், தெய்வீகத்திற்கு சாட்சியாக செய்தார் (யோவான் 21:24, 25). அவர் சிலுவையிலறையப்பட்டு மூன்று நாட்களுக்கு பிறகு மரித்தோரிலிருந்து உயிரோடெழும்பினார், இந்த உண்மை நூற்றுக்கணக்கான நேரில் கண்ட சாட்சிகளால் உறுதிப்படுத்தப்பட்டது (1 கொரி. 15:6). இயேசு கிறிஸ்து யார் என்பதற்கு ஏராளமான வரலாற்று ஆதாரங்கள் மலைபோல் குவிந்து கிடக்கின்றன. அப்போஸ்தலனாகிய பவுல் கூறியதுபோல, "இது ஒரு மூலையிலே நடந்த காரியமல்ல" (அப்போஸ்தலர் 26:26).*

*தங்கள் சொந்த கருத்தக்களை மட்டுமே நம்புகிற அநேக நாஸ்திகர்கள் மற்றும் சந்தேகவாதிகள் இருப்பார்கள் என்றும் அவர்கள் தேவனில்லை என்பதற்கு அநேக ஆதாரங்களை கொடுப்பார்கள் என்றும் அறிந்திருக்கும். சிலருக்கு எத்தனை ஆதாரங்களை கூறினாலும் அவர்கள் நம்பமாட்டார்கள் (சங்கீதம் 14:13). இது எல்லாமே விசுவாசத்தினாலேயே வருகிறது (எபிரெயர் 11:6).*

# 3. சர்வ வல்ல தேவன் இருக்கின்றாரா?

ஒரு வீடு அதன் அஸ்திபாரத்தை விட பலமானதாய் இருப்பதில்லை. ஒரு வீட்டின் பல்வேறு பகுதிகளும் அவ்வீடு கட்டப்பட்டுள்ள அஸ்திபாரத்தினால் விளைவுகளைப் பெறுகின்றன.

ஒரு வீட்டிற்கு அஸ்திபாரம் எப்படியோ, அதுபோலவே வாழ்க்கைக்கு, "சர்வ வல்லமையுள்ள தேவன் இருக்கின்றாரா?" என்ற கேள்வி முக்கியமானதாய் இருக்கிறது. தேவன்மேல் நாம் கொண்டுள்ள நம்பிக்கை அல்லது நம்பிக்கையின்மைதான் வாழ்க்கையைப் பற்றிய நமது சிந்தனைகளுக்கு வண்ணங்களையும், விளக்கங்களையும் தருகின்றது.

ஆகவே, "தேவன் இருக்கின்றாரா?" என்பதே எவர் ஒருவரும் கேட்க முடிகின்ற மிகவும் ஆழ்ந்த அறிவுள்ள கேள்வியாய் உள்ளது. இக்கேள்விக்கு அளிக்கப்படும் பதிலானது, வாழ்க்கையைப் பற்றிய நமது மற்ற எல்லாக் கேள்விகளுக்கான பதில்களையும் பாதிப்பதால் இக்கேள்வி அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு மனிதர் இந்தக் கேள்விக்கு, "இல்லை, தேவன் இல்லவே இல்லை" என்று பதில் தருவதாக வைத்துக்கொள்ளுவோம். பிறகு அவர், "நான் இந்த உலகில் எவ்விதமான வாழ்க்கை நடத்துவேன்?" என்ற கேள்விக்குப் பதில் அளிக்கையில், "நான் தேர்ந்தெடுக்கும் எவ்வகையிலும் நான் வாழலாம். நான் படைக்கப்பட்டவனல்ல, நான் எந்த ஒரு மேலான வல்லமைக்கும் கணக்கு ஒப்புவிக்கத் தேவையில்லை. நியாயமான வழிகளில் சந்தோஷத்தையும், ஆக்க வளத்தையும் என் சக மனிதர்கள் பெறும்படி பார்ப்பதே எனக்குள்ள ஒரே கடமை ஆகும். இதற்கப்பால் எனது வாழ்க்கையில் நான் என்ன செய்கின்றேன் என்பது, என்னைப் பொறுத்ததேயாகும். மரணத்திற்குப் பிறகு நான் வாழப்போவதில்லை

*என்பதால், இவ்வாழ்க்கையில் என்னால் முடிந்த அளவு நான் இதன் இன்பங்களைப் பிழிந்து எடுக்க வேண்டும்" என முடிவு செய்வார்.*

*"தேவன் இருக்கின்றாரா?" என்ற கேள்விக்கு "ஆம், அவர் இருக்கின்றார்'' என்று ஒரு மனிதர் பதில் அளிப்பதாக வைத்துக் கொள்வோம். அவர் "நான் இந்த உலகில் எவ்விதமான வாழ்க்கை நடத்துவேன்?'' என்ற கேள்விக்கு பின்வருமாறு முற்றிலும் மாறுபட்ட பதிலை அளிக்க வேண்டியிருக்கும்: "எல்லாம் வல்ல ஒருவரால் நான் படைக்கப்பட்டிருக்கிறேன். நான் இங்கு இருப்பதற்கு அவர் ஒரு தெளிவான நோக்கத்தைக் கொண்டுள்ளார், அந்த நோக்கத்தை நான் கண்டுபிடிக்க வேண்டும். அவருடைய சித்தத்தைக் கண்டறிந்து, அதன்படி வாழ்வதால் மட்டுமே, என்னைப் படைத்தவர் எனது வாழ்க்கையில் தர விரும்பும் சமாதானத்தையும், நோக்கத்தையும் நான் காண முடியும். ஒரு நாளில் அவர் என்னை அழைப்பார் என்பதையும், நான் இவ்வுலகில் வாழ்ந்திருந்த வழி பற்றி அவரிடம் நான் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்றும் நான் அறிந்துள்ளேன்.''*

*"சர்வ வல்லவரான தேவன் இருக்கின்றாரா?" என்ற கேள்வியை நாம் மிகவும் வினயத்துடன் கவனித்துப் பார்ப்போம். தேவன் இருக்கின்றார் என்று நம்புவதற்கு அவசியமான காரணங்கள் எவையேனும் உள்ளனவா? தேவன் இருக்கின்றாரா என்பது பற்றிய விவாதத்துடன் வேதாகம நூல் தொடங்குவதில்லை. அது, உண்மையில், தேவன் இருக்கின்றார் என்ற உறுதிப்பாட்டுடன்தான் தொடங்குகின்றது: "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்'' (ஆதி. 1:1). இருப்பினும் வேதாகமம் முழுவதிலும், தேவன் இருக்கின்றார் என்பதற்குப் பகுத்தறிவுள்ள ஆதாரங்கள் ஆங்காங்கு பரவலாக உள்ளன. அவைகளில் சில நேர்முகமாகவும், சில மறைமுகமாகவும் தரப்படுகின்றன. சில விஷயங்கள் வெளியரங்க மாகக் கூறப்பட்டுள்ளன, மற்றும் சில விஷயங்கள் உள்ளரங்கமாகக் கூறப்பட்டுள்ளன. இவைகளில் அநேக விஷயங்களை நாம், இரு*

கருத்துக்களாகச் சுருக்கமாய்க் கவனிப்போம். இவ்விரு காரணங்களைப் பற்றி நீங்கள் சற்று ஆழமாகச் சிந்தித்தால், தேவன் இருக்கின்றார் என்று ஊக்கமாய் நம்புவதற்கு இவைகள் உங்களை வழி நடத்தும்.

**உலகத்தின் ஆதாரம்**

நம்மைச் சுற்றியும் நமக்கு மேலேயும் உள்ள இவ்வுலகமானது, தேவன் இருக்கின்றார் என்பதை நம்புவதற்கு நம்மை வற்புறுத்தக்கூடிய முதலாவது ஆதாரம் ஆகும். பூமியும், இந்த அண்டம் முழுவதும் தேவன் இருக்கின்றார் என்று சொல்லாற்றலோடு அறிவிக்கின்றன.

பூமி என்று நாம் அழைக்கின்ற ஒரு கிரகத்தில் நாம் வாழ்கின்றோம். சூரிய மண்டலத்தின் ஒரு பகுதியான இது, சூரியனைச் சுற்றி வருகிறது. இந்தச் சூரிய மண்டலம் கேள்விக்கு அப்பாற்பட்ட ஒழுங்கும் அமைப்பும் உள்ளதாய் இருக்கின்றது. எல்லா கிரகங்களும் தங்கள் தங்கள் வட்டப் பாதையிலேயே இருந்து, ஒன்றுடன் ஒன்று மோதாத வகையில் அமைந்துள்ளன. சரியான வேகத்தில், சரியான தூரத்தில் இவையாவும் சூரியனைச் சுற்றி வருகின்றன. சூரியனுடன் பூமிக்குள்ள தொடர்பானது பகலையும் இரவையும் மற்றும் பருவ காலங்களையும் உண்டாக்குகின்றது. இப்பூமி எப்போதுமே சூரியனில் இருந்து சரியான தூரத்தில் இருந்து வருகிறது. நாம் சூரியனை விட்டுச் சற்று விலகியிருந்தால் உறைந்து விடுவோம். சூரியனை இன்னும் சற்று நெருங்கியிருந்தால் நாம் கருகி விடுவோம்.

நம்முடையது தவிர இன்னும் பல சூரிய மண்டலங்கள் வானவெளியில் இருப்பதாக அறிவியல் அறிஞர்கள் நமக்குக் கூறுகின்றனர். இந்த அண்டத்தின் அளவை நாம் இன்னமும் உறுதியாக அறியவில்லை. நமது தொலை நோக்கிக் கருவிகள் இந்த அண்டத்தின் எல்லையை காண முடியாது; நமது சிந்தனை இதன் அகலத்தைப் பகுத்தறிய முடியாது. இந்த அண்டத்தைப் பற்றி நாம் அதிகமாக அறிந்திருக்காவிட்டாலும், இதைப் பற்றி ஒன்றை மட்டும் நாம் உறுதியாக அறிந்துள்ளோம்-ஒழுங்கு மற்றும் அமைப்பு என்பது இந்த

அண்டத்தின் பண்பாக உள்ளது. இது தற்செயலாக உண்டான தாகவோ அல்லது அலங்கோலமானதாகவோ இருப்பதில்லை; இது ஒன்றிணைவும், ஒழுங்கமைவும் உள்ளதாகும்.

இந்த அண்டத்தின் இருப்புப் பற்றிய விஷயமானது, பின்வரும் இரண்டு முடிவுகளில் ஒன்றை நாம் ஏற்றுக் கொள்ளும்படி நம்மை வற்புறுத்துகின்றது: இது படைக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது தற்செயலாய் ஏற்பட்டிருக்க வேண்டும். இந்த அண்டமானது தற்செயலாக ஏற்பட்டுள்ளது என்று ஒருவர் வாதிட்டால், அவர், இவ்வண்டம் ஒன்றுமில்லாமையிலிருந்து ஏற்பட்டது என்றோ, அல்லது ஏற்கனவே இருந்த பொருள் ஒன்று வானவெளியில் வெடித்துச் சிதறியதால் இது ஏற்பட்டது என்றோ அவர் முடிவு செய்ய வேண்டும். ஆனால் மேற் சொல்லப்பட்ட இரு பெரிய முடிவுகளில், இந்த அண்டம் படைக்கப்பட்டது என்ற முடிவே அறிவுக்கு ஏற்புடையதாகும். இந்த அண்டமானது, ஒன்றுமில்லாமையில் இருந்து தானாகவே ஏற்பட்டது என்று நேர்மையாக நாம் எவ்விதம் நம்ப முடியும்? பொருட்கள் எப்போதுமே இருந்து வருகின்றன, அவைகள் வானவெளியில் வெடித்துச் சிதறியதால்தான் இந்த அண்டம் ஏற்பட்டது என்பதைப் பகுத்தறிவுடன் நாம் எப்படி நம்ப முடியும்?

ஒருவேளை, ஒரு மனிதர் தமது கையில் ஒரு புத்தகத்துடன் என்னிடம் வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவர் அந்தப் புத்தகத்தை என்னிடம் கொடுத்து, அதைப் பார்க்கும்படி கூறுகிறார். அதை நான் பரிசோதித்துப் பார்க்கத் தொடங்குகிறேன். அந்தப் புத்தகத்தின் மேல் அட்டையில், "க்ரூடனின் முழுமையான ஒத்த வாக்கிய அகராதி" என்றுள்ளதை நான் கவனிக்கிறேன். பதிப்பகத் தாரின் பெயர் இருக்க வேண்டிய இடத்தில், "ஜோண்டர்வென்" என்று அச்சிடப்பட்டிருப்பதையும் நான் கவனிக்கிறேன். அதன் பக்கங் களைப் புரட்டுகையில், *KJV* ஆங்கில வேதாகமத்தில் உள்ள வேறு பட்ட பெயர்கள், இடங்கள் மற்றும் சொற்றொடர்கள் யாவும், அகர வரிசையில் அப்புத்தகத்தில் அடங்கியிருப்பதைக் காணுகின்றேன்.

அச்சொற்கள் எல்லாம், வேதாகமத்தில் உள்ளது பற்றிய பல வகைப்பட்ட குறிப்புகளும் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன. அப்புத்தகத்தின் மேல் அட்டையில், 2,00,000க்கும் அதிகமான குறிப்புகள் அப்புத்தகத்தில் அட்டவணைப்படுத்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. நான் அதைப் பார்த்தவுடன், "இந்த புத்தகப் பதிப்பாளருடன் நான் தொடர்பு கொண்டு, இந்தப் புத்தகத்தின் பிரதியொன்றை நான் பெற முடியுமா என்று கேட்கவிருக்கிறேன்" என்று கூறலாம்.

அப்பொழுது அந்த மனிதர், "இப்புத்தகத்தின் பிரதியொன்றை நீங்கள் வாங்க முடியாது. இப்புத்தகம் அலெக்ஸாண்டர் க்ரூடனால் தொகுக்கப்படவும் இல்லை, ஜோன்டர்வென் பதிப்பகத்தாரால் வெளியிடப்படவும் இல்லை. இது தற்செயலாக ஏற்பட்டது, இதை நாங்கள் முழுமையான நிலையில் கண்டோம். ஒன்றும் இல்லாமை யிலிருந்து இது தானாகவே ஏற்பட்டது" என்று கூறுகிறார். நான் அந்த மனிதரிடம், "ஆங்கில வேதாகமத்தின் பெயர்கள், இடங்கள், சொற்றொடர்கள் அடங்கிய இந்த அட்டவணைகள் எல்லாம் யாராலும் தொகுக்கப்படவில்லை என்று என்னிடம் சொல்கிறீர்களா? 2,00,000க்கும் அதிகமான இந்தக் குறிப்புகள் எல்லாம் ஒன்றுமில்லா மையிலிருந்து வந்தது என்று சொல்லுகிறீர்களா? இந்தப் புத்தகம் அச்சுக் கோர்த்து, அச்சிட்டு, புத்தகக்கட்டாகச் செய்தல் ஆகிய இவ் வேலைகள் யாராலும் செய்யப்படவில்லை என்று சொல்லுகிறீர்களா?" என்று கேட்பேன்.

ஒருவேளை அந்த மனிதர், "ஆம், நான் அப்படித்தான் சொல்லு கின்றேன்" என்பாரேயானால், நான் அவரிடம், "நீங்கள் கூறுவது தவறானது என்று நான் அறிவேன். நீங்கள் ஒரு மனிதர் என்பதற்காக, நான் மரியாதை செலுத்துகிறேன், ஆனால் இப்புத்தகம் உண்டான விதம் பற்றி நீங்கள் கூறுவது எனது பகுத்தறிவுக்கு ஏற்றதாக இல்லை. இந்தப் புத்தகம் தற்செயலாக ஏற்பட்டதில்லை என்று நான் எவ்விதத்

தயக்கமும் இல்லாமல் தைரியமாகச் சொல்ல முடியும்'' என்று கூறுவேன். நான் இவரிடம் கூறும் எனது பதிலில் மிகவும் நம்பிக் கையுடன் இருப்பேன், ஏனெனில் எனது பகுத்தறிவானது வேறு எந்த முடிவையும் ஏற்றுக்கொள்ள எனக்கு இடம் தராது.

ஒருவேளை, வேறொரு மனிதர் வந்து ஒரு வானொலிப் பெட்டியை என்னிடம் தருகிறார் என்று வைத்துக் கொள்வோம். இம்மனிதர் என்னிடம், "இந்த வானொலிப் பெட்டியைப் பாருங்கள், இதன் கீழே ஒரு மின்சார வயரைச் செருகி, இதை இயங்கச் செய்து கேட்கலாம். இந்த வானொலிப் பெட்டியின் உள்ளே கீழ்ப்பக்கத்தில் ஒரு மின்கலம் உள்ளது. மின்சார வயரானது அதில் செருகப்பட்டால், அந்த மின்கலத்தில் மின்சாரம் சேகரித்து வைத்துக் கொள்ள முடியும். மின்சாரம் இல்லாத இடத்தில் இதன் மூலம் வானொலியை இயங்கச் செய்ய முடியும். எனவே இவ்வானொலிப் பெட்டியை உங்கள் வீட்டிலும், மற்றும் நீங்கள் பயணம் போகும் போதும் இயங்க வைக்க முடியும்'' என்று கூறுகிறார். நான் அந்த மனிதரிடம், "இது எனக்கு மிகவும் பயன்படும். நான் அடிக்கடி பிரயாணம் செல்லுகின்றேன், எனவே இது போன்ற வானொலிப் பெட்டி எனக்கு மிகவும் பயன் படும். இது போன்ற வானொலிப் பெட்டியொன்று நான் வாங்க முடியுமா என்று பார்க்கப் போகிறேன்'' என்று கூறுவேன்.

அதற்கு அம்மனிதர், "ஓஹோ! இல்லை, இது போன்ற வானொலிப் பெட்டியொன்றை நீங்கள் வாங்க முடியாது. இது உண்டாக்கப்பட வில்லை. இது தற்செயலாக ஏற்பட்டது. இங்கிருந்து சற்றுத் தொலைவில் ஒரு தொழிற்சாலை உள்ளது. அதில் பிளாஸ்டிக், உலோகம், மரம் முதலிய பொருட்கள் எல்லாம் உள்ளன. சில வாரங்களுக்கு முன் அத்தொழிற்சாலையில் ஒரு பெரிய வெடிப்பு நிகழ்ச்சி நடந்தது. இந்தப் பொருட்கள் எல்லாம் அப்போது காற்றில் தூக்கியெறியப்பட்டன. அப்போது காற்றில் பறந்த இப்பொருட்களில் சில ஒன்று சேர்ந்தன, ஏதோ ஒரு வழியில் அவை யாவும் ஒன்றி

ணைந்தன, பின்பு அவை இந்த வானொலிப் பெட்டியாகத் தரையில் விழுந்தன. அழிந்து போன அந்தக் கட்டிடத்தின் குப்பை மற்றும் வீணான பொருட்களின் மத்தியில் நாங்கள் இந்த வானொலிப் பெட்டியைக் கண்டோம். இது வடிவமைக்கப்படவும் இல்லை, உண்டாக்கப்படவும் இல்லை. அந்த வெடி நிகழ்ச்சியால் இது விளைந்தது'' என்று கூறுகிறார் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். உடனே நான் அம்மனிதரிடம், "இந்த வானொலிப் பெட்டி வடிவமைக்கப்படவில்லை என்று நான் நம்ப வேண்டும் என்கிறீர்களா? இது தொழில் நுட்பத்துடன், கவனமாக ஒன்று சேர்க்கப்பட வில்லையா? இந்த வானொலிப் பெட்டி அறிவினால் அல்ல மாறாக சந்தர்ப்பவசத்தால் நடந்த வெடி நிகழ்ச்சியால் உண்டாயிற்று என்று உறுதிப் படுத்துகிறீர்களா?'' என்று கேட்பேன். அப்பொழுதும் அவர், அந்த வானொலிப் பெட்டி ஒரு வெடி நிகழ்ச்சியால் தற்செயலாக உண்டானது என்று வலியுறுத்தினால், நான் அவரிடம், "நீங்கள் இந்த வானொலிப் பெட்டியைப் பற்றித் தவறாகக் கூறுகிறீர்கள். சிந்திக்கக் கூடிய எவரும் இவ்வித முடிவெடுக்க மாட்டார்கள். இந்த முறையில் ஒரு வானொலிப் பெட்டி உண்டாக முடியும் என்பதை என்னால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது'' என்று சொல்லுவேன். எனது பதிலில் நான் உறுதியாகவே இருப்பேன். பகுத்தறியும் எனது திறமை, வேறு எந்த முடிவுக்கும் இடம் தராது.

மேற்சொன்ன புத்தகம் மற்றும் வானொலிப் பெட்டி பற்றி நாம் உறுதியாக எடுத்த இதே போன்ற முடிவானது, இந்த அண்டத்தைப் பற்றியும் இன்னும் உறுதியாக நாம் மேற்கொள்ளும் முடிவாய் உள்ளது, எந்த ஒரு அறிவியல் வாதமும் அல்லது விளக்கமும், இந்த அண்டமானது ஒன்றுமில்லாமையில் இருந்தோ அல்லது ஒரு பெரிய வெடி நிகழ்ச்சியினால் தற்செயலாகவோ உண்டாயிற்று என்று நம்மை நம்பச் செய்ய முடியாது. ஒருபுத்தகம் அல்லது வானொலிப் பெட்டியைக் காட்டிலும் அதிக நுட்பமாக இந்த அண்டமானது வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒரு புத்தகம் தற்செயலாக உண்டாயிற்று

அல்லது ஒரு வானொலிப் பெட்டியானது வெடி நிகழ்ச்சியால் ஏற்பட்டது என்பதையே நாம் நம்ப முடியாதென்றால், இந்த அண்டம் முழுவதும் ஒன்றுமில்லாமையிலிருந்து உண்டானது அல்லது, இந்த அண்டம் சிந்தனையற்ற பொருட்களின் வெடிநிகழ்ச்சியால் ஏற்பட்டது என்பதை நாம் எப்படி நம்ப முடியும்? இந்த அண்டத்தைப் பற்றிப் படித்துள்ள யாவரும், இது அற்புதமான மற்றும் நுட்பமும் சிக்கலும் நிறைந்த வடிவமைப்பைப் பெற்றுள்ளது என்பதைத் தங்கள் பாடங்களில் இருந்து உணர்ந்துள்ளனர்.

நமது பகுத்தறிவினால் நாம் மேற்கொள்ளும் முடிவை வேதாகமம் உறுதிப்படுத்துகின்றது. சங். 19:1ல், "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது" என்று கூறப்படுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், தெளிவான ஒரு இரவில், வெட்டவெளியில் நாம் உட்கார்ந்து, நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாயத்தை நோக்கினால், நாம் ஒரு அற்புதமான ஆராதனை ஊழியத்தில் இருப்பதை நாமே பார்ப்போம். திரளான நட்சத்திரங் களைக் கொண்ட இருளான ஆகாயமே நமக்குப் பிரசங்கியாராக இருக்கும். நாம் சபையாராக இருப்போம். நாம் உட்கார்ந்திருக்கும் புல்வெளியே சபை கூடிவரும் இடமாக இருக்கும். அந்தப் பிரசங் கியார், நட்சத்திரங்கள் தாமாகவே ஏற்படவில்லை, ஆனால் உண்டாக் கப்பட்டன என்பதை அமைதியாக, ஆனால் சொல் திறமையுடன் அறிவிப்பார். நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாயமானது தேவனுடைய மகிமையை அறிவிக்கும். ஆராதனை ஊழியத்தை முடித்து விட்டு வருகையில் நாம், "இந்தப் பிரசங்கியார் மூலம் நான் கேட்ட செய்தி சரியானதே. இதைத் தவிர வேறுவிதமான செய்தி எதையும் எனது பகுத்தறிவு ஏற்றுக் கொள்ளாது" என்று கூறுவோம்.

*புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களில் ஒருவரான பவுல், "எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை, தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவை களினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை" (ரோமர் 1:20) என்று எழுதினார். இந்த அண்டத்தில் உள்ள காணக் கூடிய, தெளிவாய்த் தெரியக் கூடிய பொருட்கள் யாவும், காணக் கூடாத, பார்வைக்கு மறைவான தேவனுடைய கரம் இருப்பதை நிரூபிக்கின்றன. இவைகள், அவரது சர்வ வல்லமையையும், இயற்கைக்கு மேலான அவரது தன்மையையும் சொல்லுகின்றன. நம்மைச் சுற்றிலும், நமக்கு மேலாகவும் உள்ள இந்த உலகத்தின் பொதுவான வெளிப்பாடுகளின் மூலம், தேவன் இருக்கின்றார் என்பதை நாம் கற்றுக் கொள்ளுகிறோம். மேலும் பவுல், "அவர் நன்மை செய்து வந்து, வானத்திலிருந்து மழைகளையும், செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும், சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, இவ்விதமாய் அவர் தம்மைக் குறித்துச் சாட்சி விளங்கப் பண்ணாதிருந்ததில்லை" என்றும் கூறினார் (அப். 14:17). நாம் வாழும் கிரகமும், இந்த அண்டத்தின் ஒரு பகுதியும் ஆகிய இந்த உலகம், சர்வ வல்லமையுள்ள தேவன் இருக்கின்றார் என்பதற்குச் சாட்சியாக உள்ளன.*

*குழந்தைகளுக்கான புகழ்பெற்ற ஒரு கதையில், ராபின்சன் குருஸோ, கப்பற்சேதத்தில் தப்பி, ஒரு தனிமையான தீவில் ஒதுங் கினார். கப்பற்சேதத்திலிருந்து கரையேறியவுடன் வேறு யாரேனும் உயிர் பிழைத்தார்களா என்று சுற்றிலும் பார்த்தார். ஒருவரும் காணப்படவில்லை. அந்த தீவு முழுவதிலும் யாராவது மனிதர் இருப்பார்களா என்று தேடிப் பார்த்தார், ஆனால் ஒருவரும் அங்கில்லை. தாம் ஒருவர் மட்டுமே அந்தத் தீவில் இருப்பதாக அவர் முடிவுக்கு வந்தார். மரக்கிளைகள் மற்றும் கட்டைகளைக் கொண்டு அவர் தமக்கு ஒரு வீட்டைச் செய்து கொண்டார். அந்தத் தீவில்*

வளர்ந்த காட்டுப் பழங்களைச் சாப்பிட்டு அவர் உயிர் வாழ்ந்தார். தமது உணவு மற்றும் உடைகளுக்காக, காட்டு விலங்குகளைப் பிடித்துக் கொன்றார். ஒருநாள் அவர் கடற்கரை வழியே நடந்து செல்லுகையில், கடற்கரையின் மெல்லிய மணலில் இன்னொரு மனிதக் காலடித் தடம் இருப்பதைப் பார்த்தார். உடனே அவர், பின்வரும் மூன்று முடிவுகளில் ஏதாவது ஒன்று உண்மை என்று அறிந்தார்: யாரேனும் இந்தக் காலடித் தடங்களை ஏற்படுத்தி விட்டுச் சென்றிருக்கலாம். ஒருவேளை இந்தக் காலடித் தடங்களை ஏற்படுத்தியவர் இறந்திருக்கலாம், அந்தத் தீவில் அவரது உடலை குரூஸோ காணலாம். இந்தக் காலடித் தடங்களுக்கு உரியவர் ஒருவேளை இன்னும் அந்தத் தீவிலேயே உயிர் வாழ்ந்து கொண்டிருக் கலாம். அந்தத் தீவில் தன்னைத் தவிர வேறொருவர் இருக்கின்றார் என்ற நினைவு, அவரை மகிழ்ச்சியுடன் குதிக்கச் செய்தது. அந்தக் காலடித் தடங்கள் அதை நிரூபித்தன. அதை அவர் உறுதியாய் நம்ப முடிந்தது. அவர் அந்தத் தீவு முழுவதும் தேடியலைந்து, ஒரு வெள்ளிக் கிழமையன்று, அந்தத் தீவுவாசியொருவர்தான் அந்தக் காலடித் தடங்களை ஏற்படுத்தியிருந்தார் என்பதைக் கண்டறிந்தார். அவனை அவர் கண்டறிந்த அந்த நாளின் நினைவாக அவனுக்கு வெள்ளிக் கிழமை என்று பெயரிட்டார்.

இந்தக் கதைப் புத்தகத்தின் பாத்திரப் படைப்பாகிய ராபின்சன் குரூஸோவைப் போன்றே நாமும் இருக்கிறோம். பூமி, நட்சத்திரங்கள், சூரியன் மற்றும் சந்திரன் முதலிய காலடித் தடங்கள் நமக்கு முன்பாக இருக்கின்றன. இந்தத் தடங்கள் யாவும் சர்வ வல்லமையுள்ள ஒருவரால் ஏற்படுத்தப் பட்டவையாகும். ராபின்சன் குரூஸோ அந்தக் காலடித் தடங்களைப் பார்த்தபோது, அவைகள் யாவும் ஒன்றுமில்லா மையில் இருந்து உண்டானவை என்று முடிவு செய்திருந்தால் அவர் மதியற்றவராய் இருந்திருப்பார். அதுபோலவே, இந்த பூமியும், அண்டம் முழுவதும் தாமாகவே ஏற்பட்டன, இவை யாவும் ஒன்றுமில்லாமையில்

இருந்து வந்தன என்று முடிவு செய்தால், நாமும் பகுத்தறிவற்ற, ஞானமற்றவர்களாகவே இருப்போம்.

நம்மைச் சுற்றியுள்ள உலகமும், நமக்கு மேலே உள்ள உலகமும் ஒரே ஒரு முடிவையே சுட்டிக்காட்டுகின்றன: இந்த இயல்பான உலகத்திற்கும் இயல்பான அண்டத்திற்கும் இதற்கப்பாலும், ஒரு சர்வ வல்லமையுள்ள தேவன் இருக்கின்றார். ஒரு புத்தகமானது தற்செயலாக ஏற்படாது என்பதையும், ஒரு மின்சார வானொலிப் பெட்டியானது வெடி நிகழ்ச்சியின் விளைவாக உண்டாகாது என்பதையும் நாம் எவ்வளவு உறுதியாக நம்புகிறோமோ, அந்த அளவு இதைப் பற்றியும் நாம் உறுதியாக நம்ப முடியும்.

**மனிதனின் ஆதாரம்**

இரண்டாவதாக, மனிதன் இருக்கின்ற ஆதாரத்தின் மூலமாக, தேவன் உண்மையிலேயே இருக்கின்றார் என்று ஊக்கத்துடன் நாம் நம்ப முடியும். மனிதன் இருக்கின்ற செயலானது தேவன் இருக்கின்றார் என்பதை அறிவிக்கின்றது.

இயல்பான இந்த அண்டத்தைக் காட்டிலும் மாபெரும் அதிசயமாக மனிதன் விளங்குகின்றான். மனிதனின் அறிவுக் கூர்மையின் வல்லமைகளைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். அவனால், பகுத்தறியவும், நம்பிக்கை கொள்ளவும். அன்பு காட்டவும், கனவு காணவும், திட்டமிடவும் மற்றும் வடிவமைக்கவும் முடிகின்றது. நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளைச் சரளமாகப் பேசக் கூடிய மக்கள் இருக்கின்றார்கள். இப்பொழுது நாம் செய்யக் கூடிய எந்த ஒரு கணணியைக் காட்டிலும் அதிக நுட்பமான அமைப்பு, ஒரு மனிதனின் மூளையில் உள்ள ஒரு செல்லில் உள்ளதாக அறிவியல் அறிஞர்கள் நமக்குக் கூறுகின்றனர்.

மனிதனுடைய ஆவிக்குரிய நிலையைச் சிந்தித்துப் பாருங்கள். மனிதன் எப்பொழுதுமே தொழுதுகொள்ளும் இயல்புள்ளவனாக

இருக்கின்றான். மிகவும் முற்காலத்தில் இருந்த மக்கள் கூட மேலான சக்தி ஒன்று இருந்ததாக அதை வணங்கியுள்ளனர். இப்படியிருக்க வேண்டும் என்ற அறிவானது மனிதனுக்குள்ளாகவே இருக்கின்றது. சில சமயங்களில் இந்த உள்ளுணர்வானது பக்குவப்பட்ட நிலையில் இல்லை யென்றாலும், இந்த உள்ளுணர்வு இருந்து கொண்டுதான் உள்ளது.

மனிதனின் இயல்பான உடலைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள். மனித உடலின் ஏதாவது ஒரு பாகத்தைப் பற்றி நீங்கள் உங்கள் வாழ்க்கை முழுவதும் படித்துக் கொண்டிருந்தாலும், அந்த ஆராய்ச்சி எப்பொழுதும் முடிக்கப்பட முடியாததாகவே இருக்கும்.

உயிர் வாழ்க்கையையே நீங்கள் சிந்தித்துப் பாருங்கள், நாம் அதை உண்டாக்க முடியாது, இறந்து போகையில் அதை மறுபடியும் உயிர்ப்பிக்கவும் நம்மால் முடியாது. நாம் இதை முழுமையாக விளக்கிக் கூற முடியாது, மற்றும் இதை நம்மால் முழுமையாகக் கட்டுப் படுத்தவும் முடியாது. மனிதனுடைய இந்த அதிசயமானது அவனை உண்டாக்கியவர் இருக்கிறார் என்பதை அறிவிக்கின்றது.

நாம் ஒரு வகுப்பறையில் அமர்ந்து, வாழ்க்கையின் தொடக்கம் பற்றி, தனிச் சிறப்புப் பெற்ற ஒரு பேராசிரியரின் விரிவுரையைக் கேட்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். அவர் பயன்படுத்தும் அறிவியல் கலைச் சொற்கள், விளக்கங்கள் ஆகியவற்றைத் தவிர்த்து விட்டு, அவர் கூறுவதன் சாரத்தை மட்டும் கவனிக்கிறோம்: "ஆதியிலே ஒரு வகையான சிறிய செல் ஒன்று இருந்தது. அது பெருகி, வளர்ந்து, பலுகியது. அதிலிருந்து கடல் வாழ் உயிரினம் ஒன்று தோன்றியது. அது பெருகி, வளர்ந்து, பலுகியது. அதிலிருந்து நிலம் வாழ் உயிரினம் ஒன்று தோன்றியது. அது பெருகி, வளர்ந்து, பலுகியது. இறுதியாக கோடிக்காணக்கான ஆண்டுகளுக்குப் பின்னால் மனித குலம் தோன்றியது."

*நாம் இந்தப் பேராசிரியர் கூறுவதைக் கவனிக்கையில், அவருடைய கோட்பாட்டினால் தீர்த்து வைக்க முடியாத மூன்று பிரச்சனைகளை எதிர் கொள்கிறோம். இந்தப் பிரச்சனைகள் தனிச் சிறப்புள்ளவைகள் அல்லவென்றும், குறிப்பிடத்தக்க மதிப்புள்ள வைகள் அல்லவென்றும் இவைகளை அவர் கடந்து செல்கின்றார். ஆனால் இப்பிரச்சனைகளை அவர் கண்டு கொள்ளாமல் இருக்கும் போது, அது அவரது கோட்பாடு அர்த்தமற்றது என்றும், ஏற்றுக் கொள்ள முடியாதது என்றும் நம்மை நினைக்கச் செய்கிறது. வாழ்க்கையின் தொடக்கம் பற்றிய அவரது விளக்கமே முதலாவது பிரச்சனையாகும். உயிர் வாழ்க்கை, ஒன்றுமில்லாமையிலிருந்து வந்ததாக அவரது கோட்பாடு கருதுகின்றது. ஒரு புத்தகம், ஒன்றுமில்லாமையிலிருந்து வந்தது என்பதையோ, ஒரு வானொலிப் பெட்டியானது வெடி நிகழ்ச்சியால் தானாகவே ஏற்பட்டது என்ப தையோ நம்புவது என்பது எவராலும் முடியாது, உயிர் வாழ்க்கை என்பது ஒரு புத்தகம் அல்லது வானொலிப் பெட்டியைக் காட்டிலும் அதிக நுட்பம் உடையதாகும். மனிதன், ஒரு புத்தகத்தையோ அல்லது ஒரு வானொலிப் பெட்டியையோ உண்டாக்கிவிட முடியும், ஆனால் அவனால் ஒரு உயிர் வாழ்க்கையை உண்டாக்க முடியாது. இருப் பினும் கூட, இந்தப் பேராசிரியர், ஒன்றுமில்லாமையிலிருந்து உயிர் வாழ்க்கை உண்டானது என்று நாம் நம்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்.*

*இயற்கையின் விதி இருப்பதைப் பற்றிய விளக்கமே இரண்டாவது பிரச்சனையாகும். இந்தப் பேராசிரியரின் கோட்பாடு, ஒன்றுமில்லா மையிலிருந்து இயற்கையின் விதி வந்ததாகக் கருதுகின்றது. நீங்கள் சாப்பிடவில்லையென்றாலோ, ஏதாவது ஒரு வழியில் உணவை உட்கொள்ளவில்லையென்றாலோ, இறந்து விடுவீர்கள். இந்த விதியை நீங்கள் கண்டு கொள்ளாமல் இருக்க முடியாது, இதை நீங்கள் தவிர்க்கவும் முடியாது. ஒருவர்கூட இந்த விதியிலிருந்து விலக்குப் பெறவில்லை. நீங்கள் தூங்காமலிருந்தால், உங்கள் உடலானது சீர்கெட்டு, சக்தியை இழந்துவிடும். இயற்கையின் இந்த*

*விதியை நீங்கள் மீறமுடியாது. இறப்பு என்ற இயற்கையின் விதியையும் நீங்கள் ஜெயிக்க முடியாது. மனித குலத்தின் இறப்பு விகிதம் என்பது 100 சதவீதமாய் இருக்கிறது. இதற்கு விதிவிலக்குகள் எதுவுமே இல்லை. இந்தப் பேராசிரியர், இயற்கையின் விதி தற்செயலாக ஏற்பட்டதென்று மறைமுகமாய்க் கூறுகின்றார்.*

*குடும்பம் இருப்பதற்கான விளக்கமே மூன்றாவது பிரச்சனை யாகும். மனித குலம் முழுவதுமே குடும்பங்களால் உண்டானதாகும். குடும்பம் இல்லாத ஒரு காலத்தை வரலாற்றுப் பதிவேடுகளில் நாம் காணவே முடியாது. இந்தப் பேராசிரியர், ஆணுக்கும், பெண்ணுக்கும் திடீரென்று ஒரே சமயத்தில் பக்குவத்தன்மை வந்ததென்று, நாம் நம்ப வேண்டும் என்கிறார். அவர்கள் ஒன்றாயிருப்பதில் உள்ள சந்தோஷத் தைத் தற்செயலாகவே கண்டறிந்தனர் என்றும், பதிவான வரலாறுகள் முழுவதிலும், ஆணும் பெண்ணும் இவ்விதமாகவே குடும்ப உறவு களைக் கட்டி எழுப்பினார்கள் என்றும் அவர் கூறுகின்றார். ஆண் என்பவன் பெண்ணிலிருந்து மாறுபட்டவன், பெண் என்பவள் ஆணில் இருந்து மாறுபட்டவள்; இருந்தாலும், இணைவு மற்றும் தோழமை யில் அவர்கள் ஒரே மாதிரியாகவே இருக்கிறார்கள். இந்தப் பேராசிரியர், இவர்கள் இருவரும் ஒரே வேளையில் பக்குவத்தன்மை அடைந்ததாகவும், அதன் விளைவாகக் குடும்பம் உண்டானது என்றும் கூறுகின்றார். வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், குடும்பம் என்பது ஒன்றுமில்லாமையிலிருந்து வந்தது-அது தற்செயலாகத்தான் நடந்தது என்று இவர் வாதிடுகின்றார்.*

*உயிர் வாழ்க்கை ஒன்றுமில்லாமையிலிருந்து வந்தது என்றோ, இயற்கை விதியானது ஒன்றுமில்லாமையிலிருந்து வந்தது என்றோ மற்றும் குடும்பமானது ஒன்றுமில்லாமையிலிருந்து வந்தது என்றோ நமக்குள் கருத்து தோன்றுவதை நமது சிந்தனையானது அனுமதிக்காது. மனிதன் இருத்தலைக் குறித்து விளக்கக்கூடிய பகுத்தறிவுள்ள ஒரே வழி-சர்வ வல்லமையுள்ளவர் அவனைப் படைத்து, இந்தப் பூமியில் ஒரு விசேஷ நோக்கத்திற்காக அவனை வைத்தார் என்பதே ஆகும்.*

*நமது பகுத்தறிவின்படி நாம் முடிவு செய்ததை, வேதாகமம் தெளிவாக அறிவிக்கின்றது. வேதாகமத்தின் முதல் அதிகாரத்தில், "பின்பு தேவன்: நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனு ஷனை உண்டாக்குவோமாக... என்றார்" (ஆதி. 1:26) என்று நமக்குக் கூறப்பட்டுள்ளது. வேதாகமத்தின்படி, தெய்வீக வாழ்விலிருந்து மனித வாழ்வு வந்தது. மேலும் நமக்கு, "தேவன் தம்முடைய சாயலாக மனு ஷனைச் சிருஷ்டித்தார்; அவனைத் தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். பின்பு தேவன் அவர்களை நோக்கி: 'நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவை களையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்' என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார்" (ஆதி. 1:27, 28) என்றும் கூறப்பட்டுள்ளது. தேவன், தம்மைப் போன்ற ஒரு ஆவியின் இயல்பை மனிதனுக்குக் கொடுத்தார். அவர் ஆணையும், பெண்ணையும் படைத்து, குடும்பத்தை உண்டாக் கினார். பூமியில் உயிர் வாழ்வையெல்லாம் ஆண்டு கொள்ள இயற்கையின் விதிகளையும் அவர் படைத்தார்.*

*சர்வ வல்லமையுள்ள கரத்தினால் மனித வாழ்வானது ஒரு தெய்வீக நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டது என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றே பகுத்தறிவு நம்மை வேண்டிக் கேட்கின்றது. நாம் எவ்விதத் தயக்கமும் இல்லாமல், "நீர் என் உள்ளிந் திரியங்களைக் கைக்கொண்டிருக்கிறீர்; என் தாயின் கர்ப்பத்தில் என்னைக் காப்பாற்றினீர். நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்" (சங். 139:13, 14) என்று கூற முடியும்.*

*ஒரு சுவிசேஷ செய்தியாளர் ஒருமுறை இப்படிக் கூறினார்: "நான் உலகத்தின் பல நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன், ஒவ்வொரு*

நாட்டிலும் நான் ஒரே விதமான அநுபவத்தையே பெற்றேன். எடுத்துக் காட்டாக, குழந்தைகளுக்கு இரண்டும் இரண்டும் நான்கு என்று சொல்லிக் கொடுத்தால், அவர்கள் எப்பொழுதும் அதே மாதிரியாகவே பதில் சொல்லுவார்கள். அவர்கள் அதை நினைத்துப் பார்த்து, பிறகு இது சரிதான் என்று முடிவு செய்கின்றார்கள். அவர்களின் மனதில் இருந்து ஏதோ ஒன்று அந்தக் கருத்தைப் பெற்று அது உண்மை என்று ஏற்றுக் கொள்ளச் செய்கிறது. இது போலவே, இந்த வித்தியாசமான நாடுகள் எல்லாவற்றிலும் உள்ள மக்களுக்கு, இந்த பூமியையும், அண்டத்தையும், மனிதனையும் படைத்தவர் தேவன்தான் என்று போதிக்கும்போது, அவர்கள் இதைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்து, பிறகு இக்கருத்து சரியானதாய்த்தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் முடிவு செய்கின்றார்கள். நான் சென்றுள்ள எல்லா தேசங்கள் மற்றும் நாடுகள் ஆகியவற்றிலும் நான் இதே விதமான பதிலையே பெற்றிருக்கிறேன்."

மனிதன் இருப்பதைப்பற்றி-அவனது வாழ்க்கை, அவனது அறிவுக் கூர்மை, அவனது ஆவிக்குரிய இயல்பு, அவனது ஒழுக்க உணர்வு, மற்றும் அவனது இயல்பான உடல் ஆகியவை பற்றி-நீங்கள் சிந்தித்துப் பார்ப்பீர்கள் என்றால், அவன் தற்செயலாக ஏற்பட்டிருக்க முடியாது, ஆனால், சர்வ வல்லவராலேயே அவன் படைக்கப்பட்டான் என்றே நீங்கள் உறுதியாக முடிவு செய்வீர்கள், தேவன் இருக்கின்றார் என்பதை நீங்கள் உறுதியாக நம்ப முடியும். மனிதன் இருப்பதே அதை நிரூபிக்கின்றது.

**முடிவுரை**

நாம் கவனித்த இரண்டு ஆதாரங்களை-உலகத்தின் ஆதாரம் மற்றும் மனிதனின் ஆதாரம் ஆகியவற்றை-ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள். இவைகள் வேண்டிக் கேட்கின்ற முடிவு உறுதியான தாகவும், மறுக்க முடியாததாகவும் இருக்கின்றது, வேதாகமமும் கூட, "தேவன் இல்லை

*என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான்" (சங். 14:1அ) என்று சொல்லுகிறது.*

*நம்மைப் படைத்த தேவன் ஒரு நாளில் நம்மை நியாயத்தீர்ப்புக்கு அழைத்து, நாம் எப்படிப்பட்ட வாழ்க்கை நடத்தினோம் என்று கணக்கு ஒப்புவிக்கும்படி கேட்பார் என்று நம்புவதும் கூட அறிவுக்கு ஏற்றதாகவே இருக்கிறது. இந்தக் காரணத்திற்காகவே தேவன், இயேசுவை இந்த உலகத்திற்கு அனுப்பினார், மற்றும் வேதாகமத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். நாம் ஏன் இங்கு இருக்கிறோம்? நம்மிடத்தில் எதிர்பார்க்கப்படுவது என்ன? என்பது பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். இயேசு, "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந் தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும்" (யோவா. 12:48) என்று சொன்னார்.*

*தேவன் நம்மைத் தமது பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ள விரும்பு கிறார் என்பதே இயேசுவும், வேதாகமமும் வெளிப்படுத்தும் பெரும் வியப்பான சத்தியமாகும். சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங் களையும், பூமியையும், மற்றும் இந்த அண்டம் முழுவதையும் படைத்தவர், அவருடைய நித்திய குடும்பத்தில் எனது ஐக்கியத்தை விரும்பித் தேடுகிறார்! அவருடைய குமாரனின் சுவிசேஷத்தின் மூலம் அவர் தமது குடும்பத்திற்குள் என்னை அழைத்திருக்கிறார்! இயேசுவில் விசுவாசம் கொண்டு, பாவத்திலிருந்து மனந்திரும்பி, இயேசுவை அறிக்கையிட்டு, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பெற்று அதனால் சுவிசேஷத்திற்கு நான் கீழ்ப்படிகையில், அவருடைய ஆவிக்குரிய குடும்பத்தில் நான் சுவிகார புத்திரனாக ஆகின்றேன் (எபே. 1:6; கலா.4:6). வேதவசனங்களின்படி நீங்கள் தேவன் இருக்கின்றார் என்பதை அறிவது மட்டுமில்லாமல், உண்மையில் நீங்கள் தேவனு டைய பிள்ளையாய் இருக்கிறீர்கள் என்பதையும் அறிகிறீர்கள்!*

# 4. தேவன் யார்? தேவன் என்றால் என்ன? தேவனை நாம் எப்படி அறிந்துகொள்வது?

**தேவன் யார்? - உண்மை**

*தேவனுடைய இருப்பின் உண்மை, படைப்பின் மூலமும் மனிதனின் மனசாட்சியின் மூலமும் மிகவும் தெளிவாக உள்ளது, வேதாகமம் தேவன் இல்லை என்று கூறுகிற நாத்திகனை "மதிகெட்டவன்" என்று அழைக்கிறது (சங்கீதம் 14:1). அதன்படி, தேவன் இருக்கிறார் என்பதை நிரூபிக்க வேதாகமம் ஒருபோதும் முயற்சிப்பதில்லை; மாறாக, அது ஆரம்பத்திலிருந்தே அவருடைய இருப்பைக் கருதுகிறது (ஆதியாகமம் 1:1). வேதாகமம் செய்வது தேவனுடைய தன்மை, பண்பு மற்றும் கிரியையை வெளிப்படுத்துவதாகும்.*

**தேவன் யார்? - வரையறை**

*தேவனைப் பற்றிய தவறான சிந்தனை சிலை வழிபாடு (விக்கிரக ஆராதனை) என்பதால் தேவனைப் பற்றி சரியாக சிந்திப்பது மிகவும் முக்கியம் ஆகும். சங்கீதம் 50:21 இல், கடவுள் இந்த குற்றச்சாட்டைக் கொண்டு பொல்லாத மனிதனைக் கண்டிக்கிறார்: "உன்னைப்போல் நானும் இருப்பேன் என்று நினைவுகொண்டாய்." தேவனைப் பற்றிய ஒரு நல்ல சுருக்கமான வரையறை தொடங்குவதற்கு, "உன்னதமானவர்; எல்லாவற்றையும் உருவாக்கியவர் மற்றும் ஆளுகிறவர்; வல்லமை, நற்குணம் மற்றும் ஞானத்தில் பரிபூரணமாய் இருப்பவர்.*

**தேவன் யார்? - அவரது தன்மை**

*ஒரு காரணத்திற்காக சில விஷயங்கள் தேவனைக்குறித்து மெய்யாய் இருப்பதை நாம் அறிவோம்: அவருடைய இரக்கத்தில் அவர் தனது சில குணங்களை நமக்கு வெளிப்படுத்த ஒப்புக்கொண்டார்.*

*சுபாவத்தில் தேவன் தொட்டுணர முடியாத ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24). தேவன் ஒருவர், ஆனால் அவர் மூன்று நபர்களாக இருக்கிறார்—பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன் (மத்தேயு 3:16-17). தேவன் எல்லையற்றவர் (1 தீமோத்தேயு 1:17), ஒப்பற்றவர் (2 சாமுவேல் 7:22) மற்றும் மாறாதவர் (மல்கியா 3:6). தேவன் எல்லா இடங்களிலும் இருக்கிறார் (சங்கீதம் 139: 7-12), எல்லாவற்றையும் அறிந்தவர் (மத்தேயு 11:21), மற்றும் சர்வ வல்லமையும் அதிகாரமும் உள்ளவர் (எபேசியர் 1; வெளிப்படுத்துதல் 19:6).*

**தேவன் யார்? - அவரது பண்பு**

*வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய சில பண்புகள் இங்கே: தேவன் நீதியுள்ளவர் (அப்போஸ்தலர் 17:31), அன்பானவர் (எபேசியர் 2:4-5), சத்தியமுள்ளவர் (யோவான் 14:6) மற்றும் பரிசுத்தமானவர் (1 யோவான் 1:5). தேவன் மனதுருகிறார் (2 கொரிந்தியர் 1:3), இரக்கமுள்ளவர் (ரோமர் 9:15) மற்றும் கிருபையுள்ளவர் (ரோமர் 5:17). தேவன் பாவத்தை நியாயந்தீர்ப்பார் (சங்கீதம் 5:5) ஆனால் மன்னிப்பையும் அளிக்கிறார் (சங்கீதம் 130:4).*

**தேவன் யார்? - அவரது கிரியை**

*தேவனுடைய கிரியைகளைத் தவிர நம்மால் அவரைப் புரிந்து கொள்ள முடியாது, ஏனென்றால் தேவன் என்ன செய்கிறார் என்பது அவர் யார் என்பதிலிருந்து வருகிறதாய் இருக்கிறது. தேவனுடைய கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தின் கிரியைகள் குறித்ததான சுருக்கமான பட்டியல் இங்கே: தேவன் உலகைப் படைத்தார் (ஆதியாகமம் 1:1; ஏசாயா 42:5); அவர் உலகத்தை தீவிரமாக பராமரிக்கிறார் (கொலோசெயர் 1:17); அவர் தனது நித்திய திட்டத்தை செயல்படுத்துகிறார் (எபேசியர் 1:11) இது பாவம் மற்றும் மரணத்தின் சாபத்திலிருந்து மனிதனுக்கு அவர் வழங்கும் மீட்பையும் உள்ளடக்கியது (கலாத்தியர் 3:13-14); அவர் மக்களை கிறிஸ்துவிடம்*

*கொண்டுவருகிறார் (யோவான் 6:44); அவர் தனது பிள்ளைகளை சீர்பொருந்தப்பண்ணுகிறார் (எபிரெயர் 12:6); அவர் உலகத்தை நியாயந்தீர்ப்பார் (வெளிப்படுத்துதல் 20:11-15).*

**தேவன் யார்? - அவருடனான உறவு**

*குமாரனில், தேவன் மனிதனாக மாம்சத்தில் அவதாரம் எடுத்தார் (யோவான் 1:14). தேவனுடைய குமாரன் மனுஷகுமாரனாக ஆனார், ஆகையால் தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே "பாலம்" ஆனார் (யோவான் 14:6; 1 தீமோத்தேயு 2:5). குமாரனால் மட்டுமே நாம் பாவங்களை மன்னிக்க முடியும் (எபேசியர் 1:7), தேவனுடனான ஒப்புரவாதல் (யோவான் 15:15; ரோமர் 5:10) மற்றும் நித்திய இரட்சிப்பு (2 தீமோத்தேயு 2:10) ஆகியவற்றை வழங்கினார். இயேசு கிறிஸ்துவில் "தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக, அவருக்குள் வாசமாயிருக்கிறது" (கொலோசெயர் 2:9). எனவே, உண்மையில் தேவன் யார் என்பதை அறிய, நாம் செய்ய வேண்டியது எல்லாம் இயேசுவைப் பார்க்க வேண்டியதுதான், அவரே தேவனின் பரிபூரண வெளிப்பாடு.*

# 5. பிதாவாகிய தேவன் யார்?

தேவன். இவரைக்காட்டிலும் உயர்வான நபரோ பொருளோ எதுவும் இல்லை. இவர் ஒருவரே முழுமையான அதிகாரம் உள்ளவராய் இருக்கின்றார். இவர் எல்லாவற்றுக்கும் மேலானவராக இருக்கின்றார்.

மனிதனால் செய்யப்பட்ட கல், மண் மற்றும் மரத்தால் ஆன உருவங்களை வணங்குவது என்ற தவறான பழக்கத்தை மனிதர்கள் பின்பற்றினாலும், "தேவன்" என்ற வார்த்தையானது ஒருவருக்கு மட்டுமே உரிமையுள்ளதாக இருக்கின்றது. ஒரே ஒருவர் மட்டுமே தேவனாக இருக்கின்றார்; அவர் ஒருவரே உண்மையான ஆராதனைக் குரியவர் ஆவார். கற்பனையான வேறொருவருக்கோ அல்லது உயிர் வாழ்பவருக்கோ செய்யப்படும் ஆராதனை எதுவும் தவறான ஆராதனையாகும்.

தேவனுக்குரிய கனத்தை சில வார்த்தைகளில் நாம் விளக்குவதற்கு விரும்பினால், 1 தீமோ. 1:17ஐக் காட்டிலும் மாபெரும் மற்றும் எளிமையான விளக்கத்தை நாம் காண முடியாது: "நித்தியமும், அழிவில்லாமையும், அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென்." பழங்கால இஸ்ரவேல் மக்கள் திரும்பத் திரும்ப மனப்பாடமாய்க் கூறும் பின்வரும் கூற்றில், தேவனைப் பற்றிய உண்மை தொகுத்துக் கூறப்படுகின்றது: "... நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழுப் பலத்தோடும் அன்பு கூருவாயாக" (உபா. 6:4, 5). தேவன் யார் என்பதன் விஷயத்தில், ஒவ்வொரு இருதயத்திலும் நாட்டப்பட வேண்டிய தீர்மானத்தை இயேசு அறிவித்தார்: "... உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" (மத். 4:10ஆ).

வேதவசனங்களில் உண்மையான தேவன் தமது இயல்பில் "மூவராக" இருப்பதாக விளக்கப்படுகின்றார். அதாவது, தேவன் ஒருவரே-ஆயினும் அவர் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், ஆவியானவராகிய தேவன் என்று மூன்று பேர்களாயிருக்கின்றார். தேவத்துவத்தில் உள்ள மூன்று நபர்களும் ஒருவருக்கொருவர் சமமானவர்களாகவும், நித்தியமுள்ளவர்களாகவும் இருக்கின்றனர். ஒவ்வொருவரும் ஒரு தனிச் சிறப்புள்ள நபர்த்துவமும், இயற்கைக்கு மேற்பட்ட ஞானமும், உணர்வும், சித்தமும் உள்ளவர்களா யிருக்கின்றனர்; ஆயினும் அடிப்படை, இயல்பு மற்றும் நோக்கம் ஆகியவற்றில் இவர்கள் ஒன்றாகவே இருக்கின்றனர்.

மூவராயிருந்தாலும் ஒன்றாக இருக்கும் தேவத்துவத்தின் இந்தக் கருத்தானது தேவத்துவம், தெய்வீக குடும்பம் அல்லது திரித்துவம் என்று அழைக்கப்படுகின்றது (அப். 17:29; ரோமர் 1:20; கொலோ. 2:9). இந்த மாபெரும் சத்தியமானது மனிதர்களாகிய நம்முடைய புரிந்துகொள்ளுதலில் இருந்து வெகு தொலைவில் உள்ளது-ஆனாலும் நமது விசுவாசத்திலிருந்து தொலைவில் இருப்பதில்லை, ஏனெனில் இது தேவனுடைய வசனத்தில் தெளிவாகப் போதிக்கப்படுகின்றது. நாம் இதை கற்பனை செய்துள்ளோம் என்பதாலோ, இது உண்மையா யிருக்க முடியும் என்று பகுத்தறிந்திருக்கிறோம் என்பதாலோ, நம்மைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி கற்றறிந்து அதன் மூலம் இந்த சத்தியத்தை கற்றுணர்ந்தோம் என்பதாலோ அல்ல மாறாக, விசுவாசத் தினாலே நாம் இதை ஏற்றுக் கொள்கின்றோம். வேதவசனங்களில் ஏவப்பட்ட எழுத்துக்களின் மூலமாக நமக்குத் தரப்பட்டுள்ளதாலேயே இந்த சத்தியத்தை நாம் ஏற்றுக் கொண்டு விசுவாசிக்கின்றோம்.

தேவன் பிதாவாகவும், குமாரனாகவும், ஆவியானவராகவும் இருக்கின்றார் என்ற கருத்தானது வேதவசனங்களில் நேரடியாக விளக்கப்படவில்லை, ஆனால் மறைமுகமாகக் குறிப்பிடப்படுகின்றது. தேவத்துவத்தைப் பற்றிய கருத்தை வெளிப்படுத்தும் பழைய ஏற்பாட்டின் எழுத்துக்களில் தேவனுடைய பெயராக எபிரெய மொழி

*வார்த்தையாகிய "ஏலோஹிம்" என்பதும் உள்ளடங்கியுள்ளது. இவ்வார்த்தை ஒரு பன்மைப் பெயர் வடிவம் ஆகும். பழைய ஏற்பாட்டின் மற்ற எழுத்துக்களிலும் தேவனைக் குறிப்பதற்குப் பன்மைப் பெயர்ச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது-எடுத்துக் காட்டாக, ஆதி. 1:26ல் "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக..." என்று கூறப்படுகிறது.*

*புதிய ஏற்பாட்டில், தேவத்துவத்தின் மூன்று உறுப்பினர்களைப் பற்றி நாம் வாசிக்கின்றோம். இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, பரிசுத்த ஆவியானவர் புறா வடிவத்தில் அவர் மீது வந்திறங்கினார், அதே சமயத்தில் வானத்திலிருந்து "இவர் என்னுடைய நேசகுமாரன்..." (மத். 3:17) என்று பிதாவானவர் அறிவித்தார். நமது கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்குப் பரிசுத்த ஆவியானவரை அனுப்பு வதாக வாக்குத்தத்தம் செய்தபோது, ஆவியானவர், தேவன் மற்றும் தம்மைப் பற்றியும் குறிப்பிட்டார்: "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்" (யோவா. 15:26).*

*மனிதனுடைய இரட்சிப்புக்கான ஊழியத்தில் தேவத்துவத்தின் மூன்று உறுப்பினர்களும் ஈடுபட வேண்டியதாய் இருக்கின்றது. பேதுரு, "பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியான வரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும், இயேசு கிறிஸ்து வினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் ..." (1 பேது. 1:2) என்று எழுதினார். நாம் ஜெபத்தில் தேவனிடம் நெருங்கும்போதும் தேவத்துவத்தின் இந்தத் தன்மை காணப்படுகின்றது, ஏனென்றால், பவுல், "ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை நாம் இயேசு கிறிஸ்துவின் மூலமாகப் பெற்றிருக்கிறதாக" (எபே. 2:18) சொன்னார்.*

*ஞானஸ்நானமானது திரித்துவத்தின் பெயரால் தரப்படுவதாக பிரதான கட்டளையில் சித்தரிக்கப்படுகின்றது: "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத் தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்றார் (மத். 28:19, 20).*

*வேதாகமம் முழுவதிலும், எப்பொழுதும், பிதாவாகிய தேவன் ஆண்பால் பெயர்ச் சொல்லினாலேயே ("அவர்") குறிப்பிடப் படுகின்றார். அவர் பிதாவாகவும், படைத்தவராகவும், யேகோவா வாகவும் எல்லாம் வல்லவராகவும், கர்த்தராகிய தேவனாகவும் இருக் கின்றார். தேவத்துவத்தின் மூன்று உறுப்பினர்களில் எப்பொழுதும் அவர் முதன்மையானவராகவே நிலை நிற்கின்றார். ஞானம், வல்லமை, அன்பு, கிருபை மற்றும் நீதி ஆகியவற்றில் இவரை எல்லாவற்றிற்கும் மேலானவராகவே வேதாகமம் காண்பிக்கின்றது. இந்த அண்டத்தைத் திட்டமிட்டு, வடிவமைத்து படைத்தவர் என்ற முறையில், அவர் எல்லா வல்லமைகள் மற்றும் அதிகாரங்களுக்கும் மேலான உயர்ந்த அதிகாரத்தையும், ஆட்சி உரிமையையும் கொண்ட அதிபதியாக விளங்குகின்றார். அவரை வணங்கி, கீழ்ப்படிகின்ற எல்லாருக்கும் அவர் தகப்பனாக இருக்கின்றார். மனிதகுலம் உட்பட, படைப்பு முழுவதும் அவருக்குள்ளாகவே பிழைக்கின்றது, அசைகின்றது, இருக்கின்றது (அப். 17:28).*

*தேவன், ஒரே உண்மையான தேவன் என்று எல்லா மக்களாலும், எல்லா நாட்டவராலும், எல்லா இனங்களாலும் ஆராதிக்கப் படத்தக்கவர் ஆவார். இயேசு கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே அவரை அணுக முடியும். தூதர்கள், பரிசுத்தவான்கள் அல்லது உயிருள்ள, இறந்து போன மற்ற எந்த மனிதர்கள் மூலமாகவும்-இவர்கள் எவ்வளவு தான் நல்லவர்களாக இருந்திருப்பினும் அல்லது இருந்தாலும்-நாம்*

*தேவனைச் சென்று அடைய முடியாது. தேவனுக்கும் மனிதனுக்கும் ஒரே மத்தியஸ்தராக இருப்பவர், தேவனுடைய குமாரனாகிய இயேசு மட்டுமே (1 தீமோ. 2:5). பிதாவினிடத்தில் சேரக் கூடுவதற்கு மனித னுக்குள்ள ஒரே வழி இயேசுவே. இயேசு, "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதா வினிடத்தில் வரான்" என்று சொன்னார் (யோவா. 14:6).*

*தேவத்துவத்தின் இரண்டாம் உறுப்பினர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆவார். இவர் மூலமாகவே பிதாவாகிய தேவன் இந்த பூமியையும், மனிதனையும் படைத்தார் (கொலோ. 1:16). மனிதருடன் இவருக்குள்ள உறவின் நிமித்தம் இவர், "மனுஷகுமாரன்" என்று அழைக்கப்படுகின்றார்; தேவனுடன் இவருக்குள்ள உறவினிமித்தம் இவர், "தேவ குமாரன்" என்று அழைக்கப்படுகின்றார். தேவத்துவத்தில் உள்ளவர்களில் இவர் ஒருவரே மனித உருவெடுத்து, இந்த பூமியில் இயல்பான வாழ்க்கையை வாழ்ந்தவர் ஆவார். இவர் மனித குலத்தின் இரட்சகராகவும் மீட்பராகவும் இருக்கின்றார். இவர் எல்லா மக்களாலும் ஆராதிக்கப்படத் தக்கவராகவும், வழிபடத் தக்கவ ராகவும் இருக்கின்றார். இந்த உலகம் முழுவதும் ஆராதனையின் மூலம் பிதாவாகிய தேவனிடத்தில் வந்தடையத்தக்க ஒரு வழியை இவர் கொடுத்துள்ளார்.*

*ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர், பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி. 2:9-11).*

*தேவத்துவத்தின் மூன்றாம் உறுப்பினர் பரிசுத்த ஆவியானவர் ஆவார். இவரும் தேவனைப் போலவும், கிறிஸ்துவைப் போலவும் இயல்பும் அமைப்பும் உள்ளவராயிருக்கின்றார். இவரும், அவர்களைப்*

*போலவே தனிப் பெயர்களால் அழைக்கப்படுகிறார், மற்றும் இவரும் எப்பொழுதும் ஆண்பால் விகுதிச் சொல்லினால் ("அவர்") குறிப்பிடப் படுகின்றார். தேவத்துவத்தின் மற்ற இரு உறுப்பினர்களுடன் தொடர்புபடுத்திப் பேசப்படுகையில் இவர் எப்பொழுதுமே மூன்றாவதாகக் குறிப்பிடப்படுகின்றார். மனிதர்கள் வழி நடத்தப் படுவதற்கும், அறிவுறுத்தப் படுவதற்குமான வழியாக இவர் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகின்றார். வேத வசனங்கள் மூலமாக இவர் நமது தேற்றரவாளனாக இருக்கின்றார். இவரே பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளை எழுதுவதற்கு ஏவினவர் ஆவார்; ஆகவே வேதவசனங் கள் இவர் தமது வேலையைச் செய்யப் பயன்படுத்தும் கருவிகள் என்ற அர்த்தத்தில் "ஆவியின் பட்டயம்" (எபே. 6:17) என்று குறிப்பிடப் படுகின்றார். தேவனுடைய பிள்ளைகளாகின்றவர்களிடத்தில் இவர் வாசம் பண்ணுகின்றார் (தங்கி இருக்கின்றார்) (1 கொரி. 6:19, 20).*

*இவர்கள் மூவரும் நித்தியத்திற்கும் தேவத்துவம் உள்ளவர்களா யிருக்கின்றார்கள். இவர்களைப் பற்றி நாம் அதிமாய் அறியா விட்டாலும், இவர்கள் ஒவ்வொருவரும் இருக்கின்றனர் என்றும், இவர்கள் மூவரும் இணைந்துதான் எல்லா மகிமையும் பொருந்திய திரித்துவத்தை ஏற்படுத்துகின்றனர் என்றும் நாம் உறுதியாய்க் கூறலாம். அவர்கள் ஒன்றாக இணைந்துள்ளனர். அவர்கள் நித்தியமானவர்கள், படைக்கப்பட்ட எல்லாவற்றிலும் இருந்து வேறுபட்டும், தனிச் சிறப்புடனும் இருப்பவர்கள், அவர்கள் தங்கள் சித்தம் மற்றும் நோக்கத்தில் ஒன்றாகவே இருக்கின்றார்கள்.*

*மூன்று நபர்களாயிருக்கிற தேவனின் இந்த இயல்புக்கு அப்பால், பிதாவாகிய தேவனைப் பற்றி நாம் எதை அறிகின்றோம்? இவரைப் பற்றி வேதாகமத்தில் அடிப்படையான, பொதுவான சத்தியம் ஒன்று போதிக்கப்படுகின்றது: இவர் ஒருவரே உண்மையான, உயிருள்ள தேவன், ஒவ்வொரு நபராலும் இவர் ஆராதிக்கப்பட வேண்டும். பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் எந்த பகுதியையும், இந்த*

போதனையின் வலியுறுத்துதல் இல்லாததாக ஒருவர் பார்க்கவோ படிக்கவோ முடியாது.

"பிதாவாகிய தேவன் யார்?'' என்ற கேள்வியை நாம் இன்னும் சற்று ஆழமாகப் பார்ப்போம்.

**நம்மைப் படைத்தவர்**

தேவனே எல்லாவற்றையும் படைத்தார். அவரே எல்லா வற்றையும் உண்டாக்கினார், எல்லாவற்றிற்கும் உரிமையாளர் அவரே. அவர் படைக்காத அல்லது படைக்க அனுமதிக்காத எதுவும் இங்கு இல்லை, இருப்பது ஒவ்வொன்றும் அவருடையதே ஆகும்.

பூமியும், மனித குலமும் தற்செயலாக உண்டாகி விடவில்லை; அவை கிருபையுள்ள தேவனுடைய கரத்தினாலேயே படைக்கப் பட்டன. பூமியின் வயதைப்பற்றிய விஞ்ஞானக் கணக்கீட்டைப் பற்றி நாம் கவலைப்படக் கூடாது என்பதற்குக் காரணம் இதுவே ஆகும். உலகம் ஒரு அற்புதமான தொடக்கத்தைக் கொண்டிருந்தது; இவ்விதமாக அது உண்மையில் இருப்பதைக் காட்டிலும் அதிக பழைமையானது போலக் காணப்படுகின்றது. தேவன், ஓரளவிற்குப் பக்குவமான பூமியையே படைத்தார். அவர் மனிதனை வஞ்சிக்க முயற்சி செய்யவில்லை, ஆனால் மனிதன் இங்கிருப்பதற்கு எல்லா வற்றையும் தரக்கூடிய முழு வளர்ச்சி பெற்ற பூமியை அவர் படைக்க வேண்டியதாயிற்று.

அவர் ஆதாமையும், ஏவாளையும் படைத்தார், முதலில் படைக்கப்பட்ட இந்த ஜோடி, குழந்தைகளா இல்லாமல், வயதடைந்த நிலையிலேயே இருந்தனர். அவர் அவர்களைப் படைத்த நாளில் நானும் நீங்களும் அங்கிருந்திருந்தால், அவர்கள் தங்கள் இருபது வயதுகளில் இருந்த ஜோடியாகவே நமக்குத் தோற்றமளித் திருப்பார்கள்; ஆனால் அப்போதுதான் உயிர் தரப்பட்டவர்களாய் அவர்கள் இருந்தனர். அதே போலவே, தேவனுடைய அற்புதமான

*படைப்பின் மூலம் படைக்கப்பட்ட பூமியானது முழுவதும் வளர்ந்த தாவரங்கள், தண்ணீர், காற்று, வாழ்வின் ஆதாரத்திற்கான மண் ஆகியவற்றைக் கொண்டதாகவே இருந்தது.*

*தேவனே எல்லாவற்றையும் படைத்தார் என்ற இந்த சத்தியத் திலிருந்து, தேவனைப் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டிய மற்ற சத்தியங்கள் வழிந்தோடி வருகின்றன. அவை யாவை?*

**உண்மைத் தன்மைகள் எல்லாவற்றிற்கும் பின்பலமாய் இருப்பவர் அவரே.**

*இருக்கின்றவைகள் எல்லாம் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட முடியும்: தேவனாயிருக்கிறவர் மற்றும் தேவ தன்மையற்றவர்கள். தேவனே முதலாவதும், முக்கியமான அடிப்படை உண்மைத் தன்மை யாகவும் இருக்கின்றார். மற்ற ஒவ்வொன்றும் அவரால் படைக்கப் பட்டதாகவோ அல்லது அவரது அதிகாரத்தின் கீழ் உண்டாக்கப்பட அனுமதிக்கப்பட்ட தாகவோ இருக்கின்றன, ஆகவே அவைகள் தேவ தன்மையற்றவைகளாய் இருக்கின்றன.*

**அவர் நித்தியமானவராய் இருக்கின்றார்.**

*பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர் (சங். 90:2).*

*நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உமது ஆண்டுகள் முடிந்து போவதில்லை (சங். 102:27).*

*தேவன் துவக்கமற்றவராய் இருக்கின்றார், முடிவில்லாதவராகவும் இருப்பார். காலங்களுக்கு முன்பே இருந்த அவர், காலத்தை நித்தியத்தின் கூடுமிடம் ஒன்றில் படைத்திருக்கிறார். இறந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர் காலம் ஆகியவைகளை ஒரு கணப்பொழு தாகக் கொண்டுள்ள அவர் நித்தியத்திற்கும் இருக்கின்றவராக இருக்கின்றார். இப்பொழுது அவர் நித்தியத்திலேயே வாழ்கின்றார்.*

*அவர், இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும், நிகழ் காலத்தைப் போலவே தெளிவாகக் காண்கின்றார். அவர் எப்பொழுதுமே இருந்திருக்கின்றார், இனி எப்பொழுதுமே இருப்பார்.*

**அவர் எல்லாம் வல்லவராய் இருக்கின்றார்.**

*ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்; உம்மாலே செய்யக் கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை (எரே. 32:17).*

*இதோ, நான் மாம்சமான யாவருக்கும் தேவனாகிய கர்த்தர்; என்னாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ? (எரே. 32:27).*

*அவருடைய இயல்புக்குட்பட்ட வகையில் அவரால் எதையும் செய்ய முடியும். ஆனாலும் கூட, அவரால் துன்மார்க்கத்தைக் கருணையுடன் பார்க்க முடியாது, தீமையினால் அவர் சோதிக்கப்பட முடியாது, ஏனென்றால் அவர் தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணனாய் இருக்கின்றார் (ஆப. 1:13). அவர் தமது சொந்த இயல்பை மறுக்க முடியாது, ஏனெனில் அவர் உண்மையுள்ளவராய் இருக்கின்றார் (2 தீமோ. 2:13). அவர் பொய்யுரையாதவராய் இருக்கின்றார் (தீத்து 1:3). இருப்பினும், அவரது இயல்புக்கு உட்பட்டு அவரால் எதையும் செய்ய முடியும். அவருக்கு எதுவுமே கடினமானது அல்ல.*

**அவர் எல்லாம் அறிந்தவராய் இருக்கின்றார்.**

*நான் சமீபத்திற்கு மாத்திரமா தேவன், தூரத்திற்கும் தேவன் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார். யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக் கொள்ளக் கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும், பூமியையும்*

*நிரப்புகிறவர் அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 23:23, 24).*

*கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து, நல்லோரையும் தீயோரையும் நோக்கிப் பார்க்கிறது (நீதி. 15:3).*

*அவர் ஒவ்வொரு விஷயத்தையும் உடனடியாகவும், மிகச் சரியாகவும், முழுமையாகவும் அறிகின்றார். அவர் எதையும் கற்றுக் கொள்ள வேண்டியதில்லை. அவருக்கு ஆலோசகரோ, போதகரோ தகவலோ எதுவுமே தேவையில்லை. அறியப்பட முடிந்த எல்லா வற்றையும் அவர் அறிந்திருக்கின்றார்.*

**அவர் எல்லா இடங்களிலும் இருக்கின்றார்.**

*உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந் தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலது கரம் என்னைப் பிடிக்கும். இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும். உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப் படுத்தாது; இரவும் பகலைப் போல வெளிச்சமாயிருக்கும்; உமக்கு இருளும் வெளிச்சமும் சரி (சங். 139:7-12).*

*அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே, ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம் (. அப்.17:27 28).*

*நாம் எங்கு சென்றாலும், தேவன் அங்கு இருக்கின்றார். நாம் அவருக்கு மறைவாக ஒளிந்து கொள்ளவோ அல்லது எல்லாவற்றையும் பார்க்கும் அவருடைய கண்களுக்கு எதையாவது மறைத்து வைக்கவோ*

*முடியாது. தூரமோ அல்லது இருட்டோ எதுவுமே அவரது பிரசன்னத்திலிருந்து நம்மை நீக்கி வைக்க முடியாது.*

**அவர் ஒருவரே உண்மையுள்ள, உயிருள்ள தேவனாய் இருக்கின்றார்.**

*அவர் உயிருள்ளவராய் இருக்கின்றார் (மத். 16:16), மற்றும் உண்மையானவராய் இருக்கின்றார் (1 தெச. 1:9). ஒரு மகன் தனது தகப்பனைப் போலக் காணப்படுகின்றவாறே, மனித குலம் முழுமையுமே சில வகைகளில் நம்மைப் படைத்த தேவனைப் போல் இருக்கின்றோம். மனிதனைப் போலவே, தேவனும் பார்க்கின்றார், கேட்கின்றார், பேசுகின்றார், உணருகின்றார், சித்தம் கொண்டு, செயல்படுகின்றார். இருப்பினும், தேவன் காணப்பட முடியாதவராக இருக்கின்றார். எல்லா இடங்களிலும் ஒரே சமயத்தில் இருக்கக் கூடிய ஆவியாக அவர் இருக்கின்றார் (யோவா. 4:24).*

*பிதாவாகிய தேவன் யார்? அவர் நித்திய வாசியும், ஒவ்வொன்றையும் படைத்தவரும், இயல்பில் மூன்று பேரும், சகல ஞானமுள்ளவரும், எல்லாம் வல்லவரும், எங்கும் நிறைந்திருப்பவருமாக உள்ளார்.*

*எல்லாவற்றையும் தேவன் படைத்திருப்பதால், ஒவ்வொன்றும் அவருக்குரியதே, அவரே நாம் ஆராதிக்க உகந்தவராகவும் இருக்கின்றார். உலகத்தில் உள்ள பொருட்கள் எல்லாம் அவருக்குச் சொந்தமானவைகளே, பூமியில் படைக்கப்பட்ட எல்லா உயிர்களும் அவருடையவைகளே, பூமியில் உள்ள எல்லா மக்களும் அவருடையவர்களே, நாம் அவரை ஆராதித்து அவருக்கு ஊழியம் செய்வது சரியானதே. வேறு எந்த வகையான கடவுளையாவது நாம் விசேஷமாக கனப்படுத்தி, ஆராதனை செய்தால், நாம் ஒரு பொய்யை ஆராதித்து, அதற்கு ஊழியம் செய்கிறவர்கள் ஆகின்றோம்.*

**நமக்கு எல்லாம் கிடைக்கும்படி செய்பவர்**

*தேவன் இந்த அண்டம் முழுவதையும் படைத்ததோடல்லாமல், இன்றைய நாட்களிலும் கூட இதைப்பற்றி கவனம் செலுத்துகின்றார்.*

*இது விழுந்து விடாதபடிக்குப் பாதுகாக்கின்றார், இது உடைந்து விடாதபடிக்கும், தாம் விரும்புகின்றபடி இது வேலை செய்வதிலிருந்து தவறாதபடிக்கும் கூட பாதுகாக்கின்றார் (கொலோ. 1:16, 17).*

*இந்த உண்மையானது, அறிவு வாதத்தினாலும், வெளிப் படுத்துதலினாலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. தேவன் இந்த பூமியைப் படைத்து, இதை தொடர்ந்து நடத்தி வருகின்றார் என்பதை தர்க்கரீதியான சிந்தனையானது நமக்குக் கூறுகின்றது. இந்த பூமியைச் சார்ந்த எதுவும் தானாகவே தன்னை நடத்திச் செல்லுவதில்லை. எல்லா வல்லமையும் உள்ள ஏதோ ஒரு கரமானது இவைகளை இணைத்துப் பிடித்துள்ளது தெளிவாகின்றது. மனிதன் தன்னையே தான் கவனித்துக் கொள்ள முடியாத நிலையிலேயே இருக்கின்றான். தான் சுவாசிக்கும் காற்றையோ, தான் குடிக்கும் தண்ணீரையோ, அல்லது தனக்குத் தேவையான சூரிய வெளிச்சத்தையோ அவனால் உண்டாக்க முடியாது. பூமியின் சுழற்சி மீதே அவன் முற்றிலும் சார்ந்திருக்கின்றான்.*

*தேவனுடைய வார்த்தையின் வெளிப்பாடாகிய சாட்சியானது, தேவன் இந்த உலகத்தை ஒன்றிணைத்துப் பற்றியுள்ளார் என்கின்றது. வானத்தையும், பூமியையும் படைக்கையில் அவர் தமது உலகமானது தொடர்ந்து இருப்பதற்காக இயற்கையின் விதிகளை இயங்கச் செய்தார்.*

*பின்பு தேவன்: பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாயவிரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும், காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற் காகவும் இருக்கக்கடவது என்றார் (ஆதி. 1:14).*

*பின்னும் தேவன்: இதோ, பூமியின் மேல் எங்கும் விதை தரும் சகலவிதப் பூண்டுகளையும், விதை தரும் கனி மரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகள் உங்களுக்கு*

*ஆகாரமாயிருக்கக் கடவது; பூமியிலுள்ள சகல மிருக ஜீவன்களுக்கும், ஆகாயத்திலுள்ள சகல பறவை களுக்கும், பூமியின்மேல் ஊரும் பிராணிகள் எல்லாவற்றிற்கும் பசுமையான சகல பூண்டுகளையும் ஆகாரமாகக் கொடுத்தேன் என்றார்; அது அப்படியே ஆயிற்று (ஆதி. 1:29, 30).*

*இயற்கை விதிகளைச் செயலாற்றச் செய்ததோடு, இந்த அண்டம் முழுவதையும், இதனுடன் தொடர்புடைய சக்திகள் யாவற்றையும் தமது தெய்வீகப் பராமரிப்புக்குள் அவர் நிலை நிறுத்துகின்றார்.*

*நீர் ஒருவரே கர்த்தர்; நீர் வானங்களையும், வானாதி வானங்களையும், அவைகளுடைய சர்வ சேனைகளையும், பூமியையும் அதிலுள்ள எல்லாவற்றையும், சமுத்திரங்களையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினீர்; அவை களையெல்லாம் நீர் காப்பாற்றுகிறீர்; வான சேனைகள் உம்மைப் பணிந்து கொள்ளுகிறது (நெகே. 9:6).*

*விசேஷமாக, அவர் மனிதனையும் விலங்கு இனங்களையும் பாதுகாக் கின்றார்: "... கர்த்தாவே, மனுஷரையும், மிருகங்களையும் காப்பாற்றுகிறீர் (சங். 36:6). பூமியின் உயிரினங்கள் எல்லாவற்றுக்கும் அவர் உணவூட்டுகின்றார்: "அவர் மிருக ஜீவன்களுக்கும் கூப்பிடுகிற காக்கைக் குஞ்சுகளுக்கும் ஆகாரங் கொடுக்கிறார்" (சங். 147:9). அவர் வானத்துப் பறவைகளை அக்கறையுடன் கண்காணிக்கின்றார்: "ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரம பிதா பிழைப்பூட்டு கிறார்; அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?" (மத். 6:26); "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது" (மத். 10:29). அவர் உலக நாடுகளின் மக்கள் எல்லார் மேலும் ஆளுகை*

செலுத்துகின்றார்: "அவர் ஜாதிகளைப் பெருகவும் அழியவும் பண்ணுகிறார்; அவர் ஜாதிகளைப் பரவவும் குறுகவும் பண்ணுகிறார்" (யோபு 12:23). அவர் நீதிமான்களைப் பாதுகாத்து ஆசீர்வதிக்கின்றார்: "அக்கிரமக்காரர் ஏகமாய் அழிக்கப்படுவார்கள்; அறுப்புண்டு போவதே துன்மார்க்கரின் முடிவு. நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால் வரும்; இக்கட்டுக் காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம்" (சங். 37:38, 39). "உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது" (மத். 10:30). அவரிடத்திற்கு வந்து, அவருக்குக் கீழ்ப்படிகின்றவர்களுக்கு அவர் நித்திய ஜீவனைத் தருகிறார்: "என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவி கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன்; அவைகள் எனக்குப் பின் செல்லுகிறது. நான் அவைகளுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருக்காலும் கெட்டுப் போவதில்லை, ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக் கொள்வதுமில்லை" (யோவா. 10:27, 28).

உலகத்தில் உள்ள அநேக நகரங்களில் மக்களின் போக்கு வரத்திற்கான பலவகைப்பட்ட முறைகள் இருக்கின்றன. இந்தப் போக்குவரத்தில் பயன்படும் வாகனங்கள் பராமரிக்கப் பட வேண்டும் என்பது தெளிவு. எண்ணெய் மாற்றுதல், உடைந்த பாகங்களை மாற்றுதல், பழுதான பாகங்களை மாற்றுதல் முதலியவைகளைச் செய்து அவைகளை ஓடக் கூடிய நிலையில் வைத்துக் கொள்ளவில்லை யென்றால், அவைகளைத் தெருவோரங்களில் விரைவிலேயே விட்டுவிட வேண்டியதாகும். எல்லா இயந்திரங்களும் பராமரிக்கப்பட வேண்டும். பராமரிப்பு தேவையற்ற இயந்திரம் என்று எதுவும் இந்தப் பூமியில் கிடையாது. இந்த பூமியானது ஒரு மாபெரும் இயந்திரத்தைப் போன்றதாகும். இது பராமரிப்பு செய்யப்படுவதுடன், இதற்குத் தேவையான யாவையும் தரப்படவும் வேண்டும். இது பரலோகத்தின் தேவனால் தாங்கப்படுவதாக வேதாகமம் சொல்லுகின்றது (எபி. 1:3).

*நம்மைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டு, நமக்குத் தேவையான எல்லாவற்றையும் கொடுத்துக்கொண்டு இருக்கும் தேவனுக்கு நாம் எவ்வளவு நன்றியுள்ளவர்களாய் இருக்க வேண்டும்! தேவனுடைய அருள் இரக்கம் யாவும் மனிதருடைய நன்மைக்காகத்தான் என்பதில் எவருமே சந்தேகம் கொள்ளக் கூடாது (அப். 14:17), ஏனென்றால் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தமது சூரியனை உதிக்கப் பண்ணு கிறார் (மத். 5:45). அவருக்கு ஊழியம் செய்கின்ற எவரும், விசுவாசத்துடன் வழி நடக்கின்றவர்களுக்கு அவர் தரும் எந்த நன்மையிலும் குறைவு படுவதில்லை (சங். 84:11; ரோமர் 8:28).*

**நமது மீட்பர்**

*தேவன் நமது மீட்பரும், நமது இரட்சகருமாயிருக்கின்றார். அவர் நம்மை நேசிக்கின்றார், பாவத்திலிருந்து நம்மை இரட்சிக்க விரும்பு கின்றார். நமது நித்தியத்திற்கான ஒரே நம்பிக்கை அவருக்குள்தான் இருக்கின்றது.*

*நம்மேல் அவர் கொண்டுள்ள அன்பு விளக்கிக் கூறக் கடின மானதாகும். நாம் அறியும் எந்த மனிதரின் அன்பை விடவும் அது மேலானதாகும். எல்லா மனிதருமே பாவம் செய்து, அவரை விட்டுப் பிரிந்து செல்வதைத் தேர்ந்து கொண்டிருந்தாலும், அவர் அவர்களை இரட்சிக்கும்படியாகத் தேடுகின்றார். அவர் கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பி, அவரது பலியின் மூலமாக நமக்கு இரட்சிப்பை உண்டாக்கினார்.*

*முழுமையான நீதியுள்ளவராகிய தேவன் பாவத்தைக் கண்டு கொள்ளாமல் இருந்து விட முடியாது. நித்திய மரணத்தை அனுபவிக் காமல் நமது பாவத்திற்கான தண்டத்தை நாம் செலுத்தித் தீர்க்க முடியாது. நமது பாவத்திற்கான தண்டனையைப் பெறுவதற்காக இயேசுவை சிலுவையில் மரிக்கும்படியாக தேவன் அனுப்பி வைத்தார். அவரை ஏற்றுக் கொண்டு, அவருடைய இரட்சிப்பின் செய்திக்குக் கீழ்ப்படிகிறதின் மூலம் அவரிடத்தில் வருகிற ஒவ்வொருவரும்*

இயேசுவின் மரணத்தின் நன்மையைப் பெற்றுக் கொள்வார்கள். இவ்விதமாக, இயேசுவை நமது இரட்சகராக விளக்கப்படுத்துவது போலவே *(தீத்து 2:13)*, வேதாகமம் தேவனையும் நமது இரட்சகராக விளக்கப்படுத்துகின்றது *(தீத்து 1:4)*. தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே நமது இரட்சிப்பைத் திட்டமிட்டார் *(1 பேது. 1:20)*. இப்பொழுது அவர், எல்லா மக்களும் மனந்திரும்பி (தங்கள் மனநிலை மற்றும் வாழ்க்கையை மாற்றுதல்) அவருடைய இரட்சிப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ஆவலுடன் காத்திருக்கின்றார் *(2 பேது. 3:9)*.

எப்பொழுதுமே பழி தூற்றுகின்ற தகப்பன் ஒருவருடைய மகனைக் கற்பனை செய்து பாருங்கள். அந்தத் தகப்பன் அந்தப் பையனிடம் பேசுகிறார் என்றால் அது திட்டுவதற்காகவே இருக்கும். அந்தப் பையன் தவறு செய்யும் போதெல்லாம் அவர் அவனை அடிக்கின்றார். தனது தகப்பனுடன் இவ்வித உறவு நிலையில் அநேக ஆண்டுகள் வாழ்ந்த அந்தப் பையன், தனது தகப்பன் ஒரு கடுமையான நீதிபதிதானே தவிர, அன்பு காட்டும் ஒரு தகப்பன் அல்ல என்று எண்ணமிடுகின்றான். அவன் தனது தகப்பனுக்குப் பயப்படுகின்றான். ஆனால் அவன் அவரை நேசிப்பதில்லை. அவருடன் இருப்பதை அவன் ஒரு மகிழ்ச்சியான அனுபவமாகவும் கருதவில்லை. “அப்பா” என்ற வார்த்தையைக் கேட்கும் போதெல்லாம் அடியும் உதையும்தான் அவனுக்கு நினைவில் வருகின்றது. துரதிருஷ்டமான இந்தப் பையன் “அப்பா” என்ற வார்த்தையில் வழங்கப்படும் அன்பான அர்த்தத்தைக் காண்பது மிகவும் கடினமாகின்றது.

சில மக்கள் "தேவன்" என்ற வார்த்தையைப் பற்றி இதே விதமான உணர்வையே பெற்றிருக்கின்றனர். அவர்கள் ஒரு தவறு செய்வதற் காகத் தேவன் காத்திருக்கிறார் என்றும், அப்படித் தவறு செய்யும் போது அவர் அவர்களை நரகத்தில் தள்ளித் தண்டிக்க முடியும், அப்படிப்பட்ட ஒரு நியாயாதிபதியாகவே தேவன் இருக்கிறார் என்றும் அவர்கள் வாழ்க்கை முழுவதுமே போதிக்கப்பட்டிருக் கின்றனர்.

தேவனை நமது தகப்பனாகப் பார்க்கும்படி இயேசு போதித்தார். நாம் ஜெபிக்கும்போது தேவனை "பிதாவே" என்று அழைக்க வேண்டும் என்று அவர் கூறினார் (மத். 6:9). தேவன் நம்மை தியாக உணர்வான அன்போடு நேசிக்கிறார் என்று அவர் கூறினார் (யோவா. 3:16). அவர் நம் மீது கொண்டுள்ள அன்பை விடப் பெரிய அன்பு வேறொன்றைக் கற்பனை செய்து பார்க்கக் கூட முடியாது. அவர் நம்மோடு ஐக்கியமாயிருக்க விரும்புகிறார், நாம் அவருக்குக் கீழ்ப்படியும்போது அவர் நமக்குள் வாசம் பண்ணுகின்றார் (யோவா. 14:23). அவரை விட்டு நாம் விலகிப் போனால், மனந்திரும்பி மறுபடியும் அவரிடத்தில் சேரும்போது அன்புடன் அவர் நம்மை மன்னித்து மறுபடியும் ஏற்றுக் கொள்ளுகிறார் (லூக். 15:19-32).

மற்ற எந்த மனிதரும் நமக்குச் செய்யக் கூடிய எந்தச் செயலுக்கும் மேலான செயலை தேவன் நம் ஒவ்வொருவருக்கும் செய்திருக் கின்றார். அவரது மாபெரும் அன்பிற்கு நாம் எப்படி பதில் செலுத்த வேண்டும்? நாம் திரும்பவும் அவர்மேல் அன்பு செலுத்த வேண்டும், அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவர் ஒருவரே தேவன் என்று ஆராதிப்பதன் மூலம் நமது அன்பை வெளிப்படுத்த வேண்டும். அவருக்கு முன்பாக நாம் பயபக்தியுடனும், கண்ணியத்துடனும் நடக்க வேண்டும்.

**நமது நியாயாதிபதி**

தேவன் ஒரு அன்பான, கிருபையுள்ள தகப்பனாக இருக்கும் அதேவேளையில், அவர் நம்மை நியாயம்தீர்க்கப் போகிறவராகவும் இருக்கின்றார். காலங்களின் முடிவில் அவர் ஒருவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்.

நம்மைப் படைத்தவருக்கு நாம் ஒவ்வொருவரும் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று நம்புவது அறிவுக்கு ஏற்றதாகவே இருக்கிறது- அறிவுடமை நமக்கு கட்டளையிடுவதையே, வேதாகமமும் உண்மையென்று அறிவிக்கின்றது (வெளி. 20:12). தேவன் நம்மை எவ்விதத்தில் நியாயந்தீர்ப்பார்? நாம் ஒவ்வொருவரும்

*கணக்கொப்புவிப்பதற்கேற்ற விதத்தில், அந்த நியாயத்தீர்ப்பும் நம் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டதாகவே இருக்கும் (ரோமர் 14:12). நாம் ஒவ்வொருவரும் பேசிய பேச்சுக்களுக்கு ஏற்ற விதத்தில் அவரது நியாயத்தீர்ப்பு குறிப்பிடத்தக்கதாய் இருக்கும் (மத். 12:36, 37) மற்றும் நமது செய்கைகளுக்கு ஏற்ற விதத்திலும் அது குறிப்பிடத்தக்கதாய் இருக்கும் (2 கொரி. 5:10). எல்லா நாட்டு மக்களும் அவருக்கு முன்னதாகக் கூட்டிச் சேர்க்கப்பட்ட நிலையில் அவரது நியாயத்தீர்ப்பு உலகளாவியதாக இருக்கும் (மத். 25:32).*

*தேவன் நம்மை இயேசு கிறிஸ்துவின் மூலமாகவே நியாயந் தீர்ப்பார். அவருடைய நீதி என்ற அளவையின்படி (அப். 17:30, 31), அவரது நியாயத்தீர்ப்பு இறுதியானதாகவும், நித்தியமானதாகவும் இருக்கும் (மத். 25:46). அவருடைய தீர்ப்பு கொடுக்கப்பட்ட பிறகு, மேல் முறையீடுகள் எதுவும் மேற்கொள்ளப் படாது.*

*இரண்டு வாகனங்கள் மோதியபோது, தள்ளப்பட்டு உணர்வற்ற நிலையடைந்த இளைஞன் ஒருவனைப் பற்றிய கதையொன்று கூறப்படுகிறது. அந்த விபத்தை நேரில் பார்த்த ஒருவர் அந்த வாகனங்கள் தீப்பற்றி வெடிக்கும் முன்பாக அந்த இளைஞனை வெளியே இழுத்து விட்டார். இல்லையென்றால் அந்த இளைஞன் தீப்பிடித்து இறந்திருக்கக் கூடும்.*

*மீட்கப்பட்ட பிறகு, அந்த இளைஞன் மெல்லக் கண் விழித்து, தனது உயிரைக் காப்பாற்றிய மனிதரின் முகத்தைப் பார்த்தான். அந்த முகத்தை அவனால் ஒருபோதும் மறக்க முடியாதிருந்தது. அந்த இளைஞன் அவ்விபத்திலிருந்து காப்பாற்றப்பட்டு அநேக ஆண்டுகள் கடந்து சென்றன. அவன் முதிர்ந்த வயதை அடைந்தபோது, அவன் மிக மோசமான ஆபத்தில் சிக்கிக் கொண்டான். அவன் சட்டத்தை மீறிய குற்றம் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டான். குற்றம் பற்றி விசாரிக்க அவனை ஒரு நீதிபதியின் முன்னால் நிறுத்தியபோது அவன் திகைப்படைந்தான்; ஏனென்றால் அநேக ஆண்டுகளுக்கு முன் அவனை*

விபத்திலிருந்து காப்பற்றியவரே அந்த நீதிபதி என்று அடையாளம் கண்டு கொண்டான். உடனே அவன் சற்றும் தயக்க மில்லாமல், "மேன்மை தாங்கிய நீதிபதியவர்களே, என்னை உங்களுக்கு நினைவிருக்கின்றதா? அநேக வருடங்களுக்கு முன்பு இரண்டு வாகனங்கள் மோதிக் கொள்ளுகையில் அவைகளிலிருந்து என்னை இழுத்துப் போட்டு நீங்கள் எனது உயிரைக் காப்பாற்றி னீர்களே" என்று கதறினான். அந்த நீதிபதி சற்றுச் சிந்தித்து விட்டு, பிறகு, "ஆம், எனக்கு நினைவிருக்கின்றது. நான் மீட்ட அந்த மனித னுக்குச் சிறந்ததைச் செய்ய வேண்டும் என்று நான் விரும்பினேன். நீ உன் வாழ்க்கையைத் தொடர்ந்து வாழும்படி உன்னை அன்று காப்பாற்றியதற்காக மகிழ்ச்சியடைந்தேன். ஆனாலும் நீ பின்வரும் உண்மையை உணர வேண்டும்: அநேக ஆண்டுகளுக்கு முன்பு உன்னை வாகனத்திலிருந்து இழுத்துவிட்ட போது உனக்கு நான் "இரட்சகனாய்" இருந்தேன்; ஆனால் இன்று நான் உனக்கு "நீதிபதியாக" இருக்கின்றேன்" என்று சொன்னார்.

வேதாகமத்தில், தேவன் நமது இரட்சகராகவும், நமது நியாயாதி பதியாகவும் சித்தரிக்கப்படுகின்றார். அவர் நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்குவதற்காகத் தமது குமாரனை அனுப்பினார். அவர் நம்மை இரட்சிப்பதற்காக விலையேறப் பெற்ற பலியைச் செலுத்தி னார். நாம் அதைக் கவனிக்காமல், அவரது இரட்சிப்பைப் புறக்கணித் தால் என்ன நேரிடும்? அவர் நமது நித்திய நியாயாதிபதியாக இருந்து நம்மைத் தண்டிப்பார்.

நமது வாழ்க்கையில் நமக்கு ஒரு பெரிய கடமை இருக்கின்றது. தேவன் யாரென்று நோக்கி, கீழ்ப்படிதலுடன் அவரை வணங்கி, அவரது சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும். அவரே உயிருள்ள உண்மையான தேவன் என்று நாம் அவரை ஆராதிக்க வேண்டும். இப்படிப்பட்ட பதில்செயல் செய்வதற்கு, அவரது வசனத்தைத் திறந்து அதைக் கவனமாகப் படிப்பது அவசியமாகும்.

அவர் நமது நித்திய நியாயாதிபதியாக மட்டுமல்லாது, நமது அன்பான இரட்சகராகவும் இருக்க விரும்புகின்றார்.

**முடிவுரை**

தேவனைப் பற்றிய இந்த உண்மைகளின் வெளிச்சத்தில், நாம் அவரைப் பற்றிய கருத்து எதுவும் இல்லாமல் இருக்க முடியாது. அவரைப் பற்றி நாம் ஒரு தீர்மானம் செய்தாக வேண்டும். அவரே உண்மையான உயிருள்ள தேவன் என்று ஒப்புக்கொண்டு, அவருக்கு விசுவாசத்தோடும் கீழ்ப்படிதலோடும் ஊழியம் செய்வதாக மேற்கொள்ளும் பதில்செயலே அறிவுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

பள்ளி ஆசிரியை ஒருவர் தமது வகுப்பில் ஒருமுறை, "ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்த காரல் ஷீலே மற்றும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஜோசப் பிரீஸ்ட்லீ ஆகிய இரண்டு இரசாயன அறிஞர்களும் 1775 ஆம் ஆண்டு வாக்கில் ஆக்ஸிஜனைக் கண்டு பிடித்தார்கள்" என்று சொன்னார்கள். உடனே வகுப்பில் இருந்த சிறுமி ஒருத்தி கையை உயர்த்தி, "அவர்கள் ஆக்ஸிஜனைக் கண்டுபிடிக்கும் முன்பு நாம் எதை சுவாசித்தோம்?" என்று கேட்டாள். பின்பு அந்த ஆசிரியை, ஆக்ஸிஜன் என்ற வாயு நமது காற்று மண்டலத்தில் எப்போதுமே இருந்துள்ளது. ஆனால் இந்த இரசாயன அறிஞர்கள் அதைக் கண்டுபிடிக்கும் வரையிலும் நாம் தான் அதை அறியாமலும், அதைப் பெயரிட்டு அழைக்காமலும் இருந்தோம் என்று விளக்க வேண்டியிருந்தது.

நமது உலகமானது இரண்டு விதமான உண்மைகளால் ஏற்படுத்தப் பட்டதாய் இருக்கின்றது: அவைகள், நமது கண்களால் காண முடிகின்ற அல்லது நமது இயல்பான கைகள் மூலம் தொட்டு அறியக் கூடிய உண்மைகளும் மற்றும் நம்மால் காண முடியாத அல்லது தொட்டுணர முடியாத சத்தியங்களும் ஆகும். இந்த இரண்டாம் வகை உண்மைகள் நமக்குத் தெளிவாய் இருப்பதில்லை. இவைகளைப் பற்றி நாம் குறைவான அறிவுடையவர்களாகவே இருக்கின்றோம். இவைகள்

இங்கிருக்கின்றன என்று நாம் அறிகின்றோம், ஆனால் சில சமயங்களில் இவை நமது எண்ணங்களின் பின்னணியில் இருக்கின்றன. காற்று மண்டலத்தில் ஐந்தில் ஒரு பகுதி ஆக்ஸிஜனாக இருக்கிறது என்றும் அதை சுவாசிக்காமல் நாம் உயிர் வாழ முடியாது என்றும் நமது எண்ணங்களில் நினைவு இருக்கலாம்-ஆனால் இதைப்பற்றி நினைக்காமலேயே நாம் சாதாரணமாக அதை சுவாசிக்கின்றோம். ஒரு பென்சிலைப் பற்றிய அதிகமான விழிப்புணர்வு நமக்கு உண்டு- ஏனெனில் நாம் அதைக் காண முடிகிறது, அதைக் கையில் எடுத்து எழுத முடிகிறது-காற்றைப் பற்றியோ, காணப்படாத மற்ற உண்மைகளைப் பற்றியோ இந்த அளவுக்கு நமக்கு விழிப்புணர்வு இருப்பதில்லை.

கருத்து இதுதான்: நாம் காணக் கூடாதவைகளாக சில உண்மைகள் இருப்பதால், அவை உண்மையல்ல என்று அர்த்தமாகாது. நாம் காண அல்லது தொட முடியாவிட்டாலும், அவைகளும் நாம் காணுகின்றவைகள் போன்று உண்மையானவைகளே. நாம் காண முடியாத மாபெரும் உண்மையாக தேவன் இருக்கின்றார். அவரை நமது இயல்பான கைகளால் தொட முடியாது, அவரை ஒரு சோதனைக் குழாயில் போட்டு பரிசோதனை செய்ய முடியாது, அல்லது நமது இயல்பான கண்களால் அவரை நாம் காண முடியாது; இருந்தாலும் அவரே மிகவும் மேன்மையான உண்மைப் பொருளா யிருக்கின்றார். காணப்படுகின்ற அல்லது காணப்படாத மற்ற எல்லா உண்மைகளுக்கும் அவரே அடிப்படை ஆதாரமாக இருக்கின்றார்.

ஒரு சுவிசேஷ ஊழியக்காரர், சில மக்களிடத்தில் உண்மையான தேவனைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். அவர், தேவனுடைய மகா பெரிய வல்லமையையும், அவரது அன்பையும் மற்றும் அவரது ஞானத்தையும் பற்றி விளக்கம் கொடுத்தார். வயது முதிர்ந்த மனிதர் ஒருவர் அதை ஆவலுடனும், உற்சாகத்துடனும் கவனித்தார். சில நிமிடங்களுக்குப் பிறகு அந்த மனிதர் எழுந்து நின்று, ‘‘இந்த தேவன் இருக்கிறார் என்று நான் அறிந்தேன், ஆனால் இதுவரைக்கும் அவரது

பெயர் என்னவென்று எனக்குத் தெரியவில்லையே!" என்று ஆச்சரியப்பட்டார்.

தேவன் நம்மைப் படைத்தவர், நமக்கு எல்லாம் தருபவர், நமது மீட்பர் மற்றும் நமது நியாயாதிபதி ஆவார். தேவன் இருக்கின்றார் என்பதை மறுப்பவர்களும், தேவனுக்குக் கீழ்ப்படிதலுடன் ஊழியம் செய்யத் தவறுகின்றவர்களும் மிகப் பெரிய தவறு செய்கின்றவர்கள் ஆவார்கள். அவர்கள் தங்களைப் படைத்தவரைப் புறக்கணிக் கின்றார்கள், மனிதனும் இந்த அண்டமும் இருப்பதற்குப் பின்னணி யில் உள்ள மாபெரும் சத்தியத்தை மறுக்கின்றார்கள். நீங்கள் இந்தத் தவறைச் செய்யாதீர்கள்! தேவனை உண்மையான உயிருள்ள தேவன் என்று ஆராதியுங்கள்; தாழ்மையான கீழ்ப்படிதலுடன் அவருக்கு முன்பாக வணங்குங்கள்.

தேவன் உங்களில் அன்பு கூருகின்றார், தமது குடும்பத்திற்குள் நீங்கள் வருமாறு உங்களை அவர் அன்புடன் அழைக்கின்றார். இந்த வாழ்க்கையில் நீங்கள் ஒவ்வொரு நாளும் அவருடன் ஐக்கியமாகி நடக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். நித்தியத்திற்கும் நீங்கள் அவருடன் வாழ வேண்டும் என்று அவர் விரும்புகின்றார், இந்த நித்திய நகரமே பரலோகம் என்று அழைக்கப்படுகின்றது.

# 6. தேவனை சிருஷ்டித்தவர் யார்? தேவன் எங்கிருந்து வந்தார்?

தேவன் இல்லையென்று கூறுபவர்களும் சந்தேகவாதிகளும் எழுப்புகிற ஒரு பொதுவாக விவாதம் என்னவெனில் எல்லாப் பொருட்களுக்கும் ஒரு மூலக்காரணம் இருக்குமேயானால் தேவனுக்கும் ஒரு மூலக்காரணம் அவசியம் இருக்கவேண்டும் என்பதாகும். முடிவு என்னவென்றால் ஒருவேளை தேவனுக்கு மூலக்காரணம் தேவைப்பட்டால் அவர் தேவனாகவே இருக்க முடியாது. (அப்படி தேவன் தேவனாக இராவிட்டால் தேவனே கிடையாது) "தேவனை யார் சிருஷ்டித்தது?" என்ற அடிப்படை கேள்வியைவிட இது மிகவும் சிக்கலான கேள்வி. ஒன்றுமில்லாமையிலிருந்து எதுவும் வராது என்பது நம் எல்லோருக்கும் தெரியும். 'தேவன் ஏதோ ஒன்றானால்' அவருக்கு மூலக்காரணம் இருக்க வேண்டும் அல்லவா?

இந்த கேள்வி தந்திரமானது ஆகும், ஏனென்றால் தேவன் எங்கிருந்தோ வந்தார் என்ற பொய்யான யூகத்தை உருவாக்கி அது எங்கிருந்திருக்கும் என்றும் கேட்கிறது. இதற்கு பதில் என்னவென்றால் இந்த கேள்வியே முட்டாள்தனமானது என்பதுதான். இது எப்படி இருக்கிறது என்றால் "நீல நிறம் எப்படி மணக்கும்?" என்று கேட்பது போல் இருக்கின்றது. மணக்கக்கூடிய ஒரு வகையான பொருள் அல்ல நீல நிறம். எனவே இந்த கேள்வியே முற்றிலும் தவறானது. அதேபோல தேவன் என்பவர் உண்டாக்கப்படுகின்ற ஒரு பொருளுமல்ல. மூலக்காரணம் உடைய வகையைச் சேர்ந்தவர் அல்ல. தேவன் உருவாக்கப்பட முடியாதவர், மூலக்காரணத்தை உடையவருமில்லை. அவர் இருக்கிறவராகவே இருக்கிறார்.

இது நமக்கு எப்படி தெரியும்? ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றுமில்லாமை வராது. ஒன்றுமில்லாமை என்ற ஒரு காலகட்டம்

இருந்திருக்குமேயானால் நாம் காண்கின்ற எதுவுமே இருந்திருக்காது. ஆனால் இவையெல்லாம் இருக்கின்றதே. ஆகவே எதுவுமே இல்லாத வெறுமை நிலை என்று எதுவும் இருந்திருக்க முடியாது. ஏதோ ஒன்று எப்போதுமே இருந்துக் கொண்டு இருந்திருக்க வேண்டும். அது எப்போதுமே இருந்து கொண்டு இருக்கிற பொருளைத்தான் நாம் தேவன் என்கிறோம். தேவன் என்பவர் மூலக்காரணமில்லாத ஒருவர் ஆவார், அவரிலிருந்துதான் எல்லாமே தோன்றியது. தேவன் என்பவர் உருவாக்கப்படாத சிருஷ்டிகர் ஆவார், அவரே இந்த பிரபஞ்சத்தையும் அதிலுள்ள யாவற்றையும் சிருஷ்டித்தவர்.

# 7. ஒரே மெய்யான தேவன்

*தேவன் ஒருவர் உண்டு என்று நிரூபிக்க வேதம் முயற்சிக்க வில்லை. நித்தியமாய் இருக்கின்ற ஒருவரை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லையே. எனவேதான் "ஆதியிலே தேவன்" என்று வேதாகமம் ஆரம்பிக்கிறது. இந்த தேவன் நித்தியமானவர், எக்காலத்திலும் எப்போதும் வாழ்பவர், வானத்தையும் பூமியையும் இவைகளிலுள்ள யாவற்றையும் சிருஷ்டித்தவர்.*

**I. தேவனைப் பற்றிய பல தவறான கருத்துக்கள்**

**1. இயற்கை பொருள்வாதம் என்ற கொள்கை (MATERIALISM)**

*சிந்தைக்கும் பொருளுக்கும் எவ்வித வேறுபாடும் இல்லை. எல்லா சக்திகளும் ஜடப்பொருட்களின் பகுதிகளேயாகும் என்ற கொள்கை தவறான கொள்கையாகும்.*

**2. பல கடவுள்கள் என்ற கொள்கை (POLYTHEISM)**

*பல கடவுள்களில் நம்பிக்கையுள்ள மக்கள் உண்டு. இதுவும் வேதத்திற்கு முரண்பட்ட போதனை.*

*இஸ்ரவேலே கேள்; நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர் (உபா.6:4)*

*நானே கர்த்தர், வேறொருவர் இல்லை; என்னைத் தவிரத் தேவன் இல்லை (ஏசா.45:5).*

**3. எல்லாமே கடவுள் என்ற கொள்கை (PANTHEISM)**

*கடவுள் எல்லாவற்றிலும் இருக்கிறார்; சர்வமும் கடவுள்தான் என்ற கொள்கை. தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்ற இந்த*

*போதனை தவறானது. இந்தக் கொள்கைக்கு "பேந்திஸம்" என்று பெயர்.*

**4. கடவுள் எங்கோ இருக்கிறார்,நமக்குத் தெரியாது என்ற கொள்கை (DEISM)**

*எல்லாவற்றிற்கும் மேலான ஒரு சக்தி உண்டு. அதுவே கடவுள். அவர் எல்லாவற்றையும் படைத்துவிட்டு எங்கோ போய் விட்டார். அவருடன் நாம் தொடர்புகொள்ள முடியாது. அவருக்கு நமது தேவைகளைப் பற்றி அக்கரையில்லை என்ற தவறான கொள்கை. இந்தக் கொள்கைக்கு "டீஸம்" என்று பெயர்.*

**5. தேவனை யாரும் அறிய முடியாது என்ற கொள்கை (AGNOSTICISM)**

*மனிதனுடைய அறிவினால் தேவனை அறிய முடியாது என்ற கிரேக்கத் தத்துவமும் தவறான ஒன்று. நமது அறிவிற்கு அப்பாற் பட்ட தேவன் தம்மை நமக்கு வெளிப்படுத்தியுள்ளார் என்பது வேதாகம சத்தியம்.*

**II. தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதற்கு ஆதாரங்கள்**

*தேவன் இல்லை என்று நாஸ்திகர்கள் கூறுகின்றனர். இவர்களைக் குறித்து மதிகெட்டவர்கள், புத்தியீனர் என்று வேதம் கூறுகிறது.*

*தேவன் இல்லை என்று மதிகெட்டவன் தன் இருதயத்தில் சொல்லிக் கொள்ளுகிறான். அவர்கள் தங்களைக் கெடுத்து, அருவருப்பான கிரியை களைச் செய்து வருகிறார்கள்; நன்மைசெய்கிறவன் ஒருவனும் இல்லை (சங்.14:1).*

*தேவன் ஒருவர் இருக்கிறார் என்ற சத்தியம் விசுவாசத்தின் அடிப்படையில் வருகின்றது. ஏனெனில் தேவன் ஒருவர் இருக்கின்றார் என்று ஒருவனுக்கு நிரூபித்து, அவனை நம்பவைப்பது வேதத்தின் நோக்கமல்ல.*

*விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபி.11:6).*

*ஆயினும் தேவனை விசுவாசிக்கும் விசுவாசிகளுக்கு உதவியாக சில ஆதாரங்களைக் கூறுவது அவசியம் என உணருகிறோம்.*

*சிருஷ்டிப்பிலிருந்தும், மனிதத் தன்மை, மனித வரலாற்றிலிருந்தும் ஆறு ஆதாரங்களைக் காணலாம்.*

## 1. *சிருஷ்டிப்பு ஓர் ஆதாரம்* (COSMOLOGICAL EVIDENCE)

*நாம் காணும் இந்த பிரமாண்டமான உலகமும் வானமும் அதிலுள்ள கோடான கோடி நட்சத்திரங்களும், இவைகளை உண்டாக்கின சிருஷ்டி கர்த்தர் ஒருவர் உண்டு என தெரிவிக்கின்றன. எந்த ஒரு பொருளைப் பார்த்தாலும் அது எங்கே உருவாக்கப்பட்டது, எங்கே செய்தது என்று எழுதப்பட்டுள்ளது. எந்த ஒரு பொருளும், வீடும், கருவியும் யாராவது ஒருவரால் உண்டாக்கப்பட்டது என்பதை வெளிப்படுத்துகிறது.*

*அப்படியானால் இவ்வளவு பிரமாண்டமான உலகமும் அதிலுள்ள யாவும், வானமும் அதிலுள்ள சூரிய சந்திர நட்சத்திரங்களும் தானாய் வந்தது என்று சொன்னால் எவ்வளவு புத்தியீனமானது.*

*ஒரு நாஸ்திகரும், ஒரு கிறிஸ்தவரும் நண்பர்களாயிருந்தனர். இந்த கிறிஸ்தவர் எவ்வளவு ஆதாரங்களை எடுத்துக் கூறினாலும் அந்த நாஸ்திகர் தேவன் ஒருவர் உண்டு, அவர் எல்லாவற்றையும் படைத்தார் என்பதை நம்ப மறுத்து வந்தார். ஒரு நாள் இந்த கிறிஸ்தவருடைய அலுவலகத்திற்கு அந்த நாஸ்திகர் வந்தபோது மேஜைமேல் உலோகத்தால் செய்யப்பட்ட ஒரு அழகான உலக உருண்டை*

இருந்தது. அதை ரசித்த நாஸ்திகர் இதை செய்தது யார்? மிக அழகாக இருக்கிறதே என்று கேட்டார்.

அதற்கு அந்த கிறிஸ்தவர், இதை யாருமே செய்யவில்லை, இப்படியேதான் இருக்கிறது என்றார். அதற்கு அந்த நாஸ்திகர் அது எப்படி, யாரும் செய்யாமல் இது எப்படி வரும்? என்றார். உடனே கிறிஸ்தவ நண்பர் இவ்வளவு சிறிய சாதாரண இந்த உலக உருண்டையே தானாக வரமுடியாது. இதைச் செய்த ஒருவர் இருக்க வேண்டுமென்பது உண்மையானால் இவ்வளவு பிரமாண்டமான பூமியைப் படைத்தவர் ஒருவருமில்லை என்று நம்புவது எவ்வளவு பெரிய புத்தியீனம் என்று கேட்டபோது, நாஸ்திகர் வாய் அடைபட்டது; அப்போதுதான் அவர் உண்மையை உணர ஆரம்பித்தார். இன்னொரு உதாரணத்தையும் பார்ப்போம்:

தத்துவமேதையாக வேண்டுமென்று மேற்படிப்பு படித்துவந்த ஒருவர் தன் மனைவியைப் பார்த்து, வரவர எனக்கு தேவன்மேல் நம்பிக்கையே இல்லை. ஒரு காலத்தில் தேவன் ஒருவர் உண்டு என்று நம்பினேன். ஆனால் இப்போது எனக்கு அந்த நம்பிக்கை இல்லை என்றார். அவர் மனைவி ஒரு நல்ல விசுவாசி. அவள் தன் கணவனைப் பார்த்து உங்களைப்போல எனக்கு அதிக படிப்பு இல்லை. ஆனால் எனக்கு ஒரு சிறு சந்தேகம் வருகிறது.

*இதோ, இந்த முட்டை எங்கிருந்து வந்தது என்றாள்.

* இது தெரியாதா உனக்கு, கோழியிலிருந்து வந்தது என்றார்.

*கோழி எங்கிருந்து வந்தது?' மனைவி கேட்டாள்.

* 'முட்டையிலிருந்து' என்றார்.

*முதலில் எது இருந்தது? முட்டையா, கோழியா? என்று விபரம் கேட்டாள்.

* 'கோழி' என்றார் கணவன்.

*அப்படியானால் முட்டையிலிருந்து வராத கோழி ஒன்று இருந்திருக்க வேண்டும் என்றாள் மனைவி.

* அதெப்படி, முட்டைதான் முதலில் இருந்தது என்று பிதற்றினார்.

*அப்படியா? அப்போ கோழியிலிருந்து வராத முட்டை ஒன்று இருந்திருக்க வேண்டும் என்றாள் மனைவி.

* இல்லை, கோழிதான் முதலில் இருந்தது என்றார்.

*சரி, முதலில் கோழியிருந்தது, அதிலிருந்து எல்லா முட்டைகளும் கோழிகளும் வந்துள்ளன. அந்த முதல் கோழியை படைத்தவர் யார் என்று ஒருபிடி பிடித்தாள்.

* என்ன சொல்வதென்று தெரியாமல் தத்தளித்த தத்துவஞானி நீ என்னதான் சொல்லுகிறாய் என்று பரிதாபமாகக் கேட்டார்.

* முதல் கோழியைப் படைத்தவர்தான் இந்த உலகத்தையும் படைத்தார். தேவன் படைக்காத கோழி அல்லது முட்டை இதில் எது முதலில் வந்தது? என்று தெளிவாகக் கூறமுடியாத நீங்கள் தேவன் இந்த உலகத்தைப் படைக்காமலேயே தானாக வந்தது என்று கூறுவதை நான் நம்ப வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். இது எவ்வளவு புத்தியீனமானது என்று ஒரு போடு போட்டாள்.

## 2. உலக அமைப்பு ஓர் ஆதாரம் (THE EVIDENCE OF DESIGN)

இந்த உலகத்தை உற்று நோக்கினால் அதில் தெளிவான ஒரு அமைப்பைக் காண முடிகிறது. இந்த உலகம் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது. தன்னைத்தானே சுற்றி வருவதுடன் பிற கோளங் களையும் சுற்றி வருகிறது. இரவும் பகலும் தவறாமல் மாறிமாறி உண்டாகிறது. வளர்பிறை, தேய்பிறை ஒழுங்காக ஏற்படுகிறது. உலகில் சுமார் மூன்று மடங்கு கடல் இருந்தாலும் அது பூமியை

*மூடாமல் அதன் எல்லையில் சீராய் இயங்குகிறது. இயற்கை என்று சொன்னாலும் அது சில விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் உட்பட்டே செயல்படுகிறது. இவை எல்லாவற்றையும் பார்க்கும்போது இவைகளை அமைத்து சீராய் இயக்குபவர் ஒருவர் உண்டு என்று காண முடிகிறதல்லவா?*

*ஒரு கடிகாரத்தை கூர்ந்து கவனித்தால், அல்லது ஒரு கருவியை கவனித்தால் எவ்வளவு சீராய் அது ஓடுகிறது. அந்த கடிகாரத்தின் பாகங்களை யார் செய்தது என்று நாம் நேரில் பார்த்ததில்லை. எப்படி இவ்வளவு ஒழுங்காக ஓடுகிறது என்ற விதிகள் நமக்குத் தெரியாது. ஆனாலும் இதை அமைத்தவர் (Designer) ஒருவர் இருக்க வேண்டும் என்று நாம் உணர்வது அறிவுப்பூர்வமானதல்லவா? இதுபோலவே இந்த அகிலாண்டத் தைப் பார்க்கும்போது இதனை படைத்த ஒருவர் உண்டு என்பதை சிறிது அறிவுள்ளவன்கூட தெளிவாய் அறிந்து உணர்ந்துகொள்ள முடியும்.*

*தேவனைக் குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது; தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.*

*எப்படியென்றால் காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிற வைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும்; ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை*

### 3. மனிதத்தன்மை ஓர் ஆதாரம் (THE EVIDENCE OF MAN'S NATURE)

*மனிதனுக்கு மனச்சாட்சியிருக்கிறது. எது நன்மை, எது தீமை, எது சரி, எது தவறு என்று அவனால் உணர முடிகிறது. அவனுக்கு சுய சித்தமும் இருக்கிறது. எதைச் செய்வது, எதைச் செய்யக் கூடாது என்று அவன் தெரிந்துகொள்ளும் உரிமை இருக்கிறது. அவன் தவறானதையே தெரிந்துகொண்டு செய்தாலும், அதைச் செய்ய*

அவனுக்கு உரிமை இருக்கிறது. ஆனால் அவன் மனச்சாட்சி அவனுக்கு அது தவறு என்று உணர்த்துகிறது. மனிதனுடைய ஒழுக்க நெறியும் மற்ற தன்மைகளும் அவன் தேவ சாயலில் படைக்கப்பட்டவன் என்பதற்கு ஆதாரமாக அமை கின்றன. வேதம் அதையே கூறுகிறது.

## 4. மனித வரலாறு ஓர் ஆதாரம் (THE EVIDENCE OF HUMAN HISTORY)

உலக தோற்ற முதல் தேவன் எவ்வாறு மனித சரித்திரத்தில் ஆளுகை செய்து தமது சித்தத்தை நிறைவேற்றி வருகிறார் என்பதை காண முடிகிறது. தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்துவதே மனித வரலாறு என்று கூறலாம். தேவன் தனிப்பட்ட மனிதர்களுடன் இடைபட்டு எவ்வாறு அவர்களுடைய வாழ்க்கையை புனிதமான வாழ்க்கையாக மாற்றினார் என்று கோடிக்கணக்கான சாட்சிகளைக் கூற முடியும்.

தேவன் ராஜாக்களை உயர்த்தி ராஜாக்களை தாழ்த்தினதை சரித்திரம் கூறுகின்றது. தேவன் இஸ்ரவேலரிடையே சமூக வாழ்வில் நடப்பித்த அற்புத செயல்களை பல்லாயிரம் ஆண்டு சரித்திரம் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. எகிப்திய, அசீரியா, பாபிலோனிய, மேதிய-பெர்சிய, கிரேக்க, ரோம சாம்ராஜ்யங் களின் தேவனுடைய ஆளுகைகளை சரித்திரம் கூறுகிறது (யாத்.9:13-17; ஏசா.10:12-19; எரே 6.50:1-16; ஏசா.44:24-45; தானி.8:1-8:8:7,23).

## 5. உலகளாவிய தெய்வ நம்பிக்கை ஓர் ஆதாரம் (THE EVIDENCE OF UNIVERSAL BELIEF)

கடவுள் என்ற ஒருவர் இருக்கின்றார் என்பதை உலகிலுள்ள பெரும்பான்மையான மக்கள் நம்புகின்றனர். பல கடவுள்களை வணங்குகின்றவர்கள் உண்டு, ஒரே கடவுள் உண்டு என்று நம்புகிறவர்கள் உண்டு. ஆனால் இயற்கைக்கு மேற்பட்ட சக்தியுள்ள ஒரு மேலான கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கையை உலக

*முழுவதிலும் காண முடியும். இல்லாத ஒன்றுக்கு பெயர்வர வாய்ப்பில்லை.*

## 6. தேவனுடைய வல்லமையால் நடைபெறும் அற்புதங்கள் भुकाएं (THE EVIDENCE OF MIRACLES)

*தேவனுடைய நாமத்தில் நடைபெற்ற அற்புதங்களை வேதத்தில் காண்கிறோம். இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கும்போது இன்றும் ஏராளமான அற்புதங்களைக் காண்கிறோம் (யாத்.4:2-5; 1இரா. 18:21; யோவான் 5:36; 20:30,31, அப் 2:22 3:12-16).*

### III. பரிசுத்த வேதாகமம் தேவனைப்பற்றிக் கூறுவது என்ன?

### 1. தேவன் ஆவியாயிருக்கிறார்

*தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார் (யோ.4:24)*

*தேவன் ஆவியாக இருக்கிறார், ஆனால் ஆளத்துவமுடையவர். அவர் அறிகிறார், பார்க்கிறார், கேட்கிறார், பேசுகிறார் (அப். 15:17).*

*கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார் (ஆதி.18:19).*

*அப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன் (யாத்.3:7).*

**2. அவர் ஒருவரே மெய்யான தேவன்**

*கர்த்தரே தேவன்; அவரையல்லாமல் இன்னொரு தேவன் இல்லை.*

*என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம் (யாத்.20:3).*

*கர்த்தரே தேவன், அவரையல்லாமல் வேறொருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு, இது உனக்குக் காட்டப்பட்டது (உபா.4:35)*

*ஆகையால், உயர வானத்திலும் தாழ பூமியிலும் கர்த்தரே தேவன், அவரைத் தவிர ஒருவரும் இல்லை என்பதை நீ இந்நாளில் அறிந்து, உன் மனதிலே சிந்தித்து, (உபா.4:39).*

*(உபா.6:4; 1சாமு.2:2; 2சாமு.9:22; 1இரா.8:60; 2இரா.19:15; நெகே.9:6; ஏசா.44:6-8; 1தீமோ.1:17).*

**3. தேவன் சர்வ வல்லவர் (OMNIPOTENT)**

*தேவன் சகலத்தையும் செய்ய வல்லவர். அவரால் செய்யக் கூடாதது ஒன்றுமில்லை.*

*ஆபிராம் தொண்ணூற்றொன்பது வயதானபோது, கர்த்தர் ஆபிராமுக்குத் தரிசனமாகி: நான் சர்வ வல்லமையுள்ள தேவன்; நீ எனக்கு முன்பாக நடந்து கொண்டு உத்தமனாயிரு (ஆதி.17:1).*

*(ஆதி.1:1;18:14; யாத் .15:7; உபா.3:34; 32:39; 1நாளா.16:25; யோபு 40:2; ஏசா.40:12-15; எரே.32:17; எசே.10:5; தானி.3:17; ஆமோஸ் 4:13; 5:8; சகரி.12:1; மத்.19:26; வெளி.15:3;19:6).*

**4. தேவன் சர்வ வியாபி (OMNIPRESENT)**

*தேவன் எல்லா இடங்களிலும் பிரசன்னமாகியுள்ளார். ஒரு நேரத்தில் அவர் எல்லா இடங்களிலும் பிரசன்னமாயிருப்பார். தூரமும் இடைவெளியும் அவரை கட்டுப்படுத்தாது.*

*உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?*

*நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.*

*நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின் கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும்,*

*அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும் (சங்.139:7-10).*

*(ஆதி.28:15,16; உபா 4:39; யோசுவா 2:11; நீதி 15:3,11; ஏசா.66:1; ஏரே.23:23,24; ஆமோஸ் 9:2-4,6; அப். 7:48,49 ; எபே 1:23)*

**5.தேவன் சர்வ ஞானி (OMNISCIENT)**

*அவருக்கு தெரியாதது, மறைவானது ஒன்றுமில்லை. அவர் கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் தெளிவாக அறிந்தவர்.*

*அவரே ஆழமும் மறைபொருளுமானதை வெளிப்படுத்துகிறவர்; இருளில் இருக்கிறதை அவர் அறிவார்; வெளிச்சம் அவரிடத்தில் தங்கும் (தானி.2:22).*

*(ஆதி.18:18,19; 2 இரா 8:10,13; 1நாளா .28:9; சங்.94:9;139:1-16; 147:4,5; நீதி.15:3; ஏசா.29:15;40:28; எரே.1:4,5; எசே.11:5; தானி.22:28; ஆமோஸ்.4:13;லூக். 16:15 ; அப். 15:8,18;ரோ.8:27,29;1கொரி .3:20; 2 தீமோ.2:19; எபி.4:13; 1 பேதுரு1:2 ; 1யோ.3:20).*

**6. *தேவன் சர்வ ஆளுநர்* (SOVEREIGN)**

*தேவன் தம்முடைய சித்தத்தின்படி தம்முடைய சிருஷ்டிகளை ஆளுகை செய்கிறார்.*

*பூமியின் குடிகளெல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும், பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன் (தானி.4:35). (மத்.20:15;ரோ .9:21).*

**7. தேவன் பரிசுத்தமானவர்**

*நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக.*

*கர்த்தராகிய நான் பரிசுத்தராயிருக்கிறபடியினாலே நீங்களும் எனக்கேற்ற பரிசுத்தவான்களாயிருப்பீர்களாக; நீங்கள் என்னுடையவர்களாயிருக்கும்படிக்கு, உங்களை மற்ற ஜனங்களை விட்டுப் பிரித்தெடுத்தேன் (லேவி.20:26).*

*(லேவி.11:44,45; யாத்.15:11;யோசு.24:19; 1சாமு.2:2; சங்.5:4; 119:9; 145:17; ஏசா.43 :14,15 : ஏரே.23:9; லூக்.1:49 ; யாக்.1:13; 1பேதுரு 1:15,16; வெளி.4:8; 15:3,4).*

**8. தேவன் நீதியானவர்**

*ஆதி. 18:25; ஏசா. 11:3; 30:18; சங்.119 : 142 ; 11 :7*

**9. தேவன் உண்மையுள்ளவர்**

*உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார் (1 தெச.5:24).*

*(யாத்.34:6; எண்.23:19; உபா.4:31; 1சாமு 15:29; எரே.4:28; ஏசா.25:1; எசே.12:25 ; தானி.9:4 ; மீகா 7:20 ; லூக். 18: 7,8; ரோ.3:4 ; 15:8 ; 1கொரி.1:9 ; 10:13 ; 2 தீமோ.2:13 ; எபி.6:18 ; 10:23 ; 1பேதுரு ; 4:19 ; வெளி.15 :3)*

**10. தேவன் இரக்கமுள்ளவர்**

*நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை (புலம். 3:22).*

*(தீத்து 3:5 ; தானி.9:9 ; எரே.3:12 ; சங்.32:5 ; ஏசா.49:13)*

**11. தேவன் அன்புள்ளவர்**

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போ காமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார் *(யோ.3:16).*

*(உபா 2.7:8; எபே.2:4; செப் .3:17; ஏசா.49:15,16; ரோ.8:39;ஓசி.11:4; எபே.31:3; யோ.16:27; 17:23).*

**12. தேவன் நித்தியமானவர்**

*கர்த்தர் சதாகாலங்களாகிய என்றென்றைக்கும் ராஜரீகம் பண்ணுவார் (யாத்.15:18).*

*(ஆதி.21:33; உபா.33:27; நெகே.9:5; சங்.90:2; எரே.10:10; வெளி.4: 8-10)*

**13. தேவன் மாறாதவர்**

*நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை (சங்.102:27).*

*இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் (எபி.13:8).*

**IV. தேவனுடைய திருத்துவம்**

*திருத்துவம் என்ற வார்த்தை வேதத்தில் கூறப்படாவிட்டாலும் பரிசுத்த வேதாகமத்தில் மொத்த போதனையுடன் கருத்திசைவு உள்ள வார்த்தைதான் இது.*

*உறவு, ஐக்கிய, தத்துவ நிலையில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்ற நிலையில் தேவன் தம்மை வெளிப்படுத்தி யுள்ளார். அவர் திருத்துவமுடைய ஒரே தேவன் (மத்.28:19; 2 கொரி 13:14; யோவான் 14:16,17)*

*ஒரு தேவனில் மூன்று ஆளத்துவம் என்ற இந்த அமைப்பை நாம் ஆராய்ந்து பார்த்து விளங்கிக்கொள்ள முடியாது. நமது அறிவிற்கு அப்பாற்பாட்டது. ஆனாலும் தேவனிடமுள்ள இந்த திருத்துவ நிலையை வேத வசனங்கள் தெளிவாக விளக்குகின்றன.*

*மூவரும் ஒன்றாக இருப்பது எப்படி என்பதை விளக்குவதற்கு பல உதாரணங்களை கூறலாம்.*

**தண்ணீர்:**

*தண்ணீர் ஒன்றுதான். ஆயினும் இதற்கு மூன்றுவித வடி வமைப்புகள் உள்ளன. தண்ணீர், பனிக்கட்டி, நீராவி.*

**மின்சாரம்:**

*மின்சாரம் ஒன்றுதான். இது ஒளியைத் தருகிறது, வெப்பத்தைத் தருகிறது, இயக்கும் சக்தியாக செயல்படுகிறது.*

**சூரியன்:**

*சூரியன் ஒன்றுதான். இது ஒளி, வெப்பம், அக்கினியை வெளிப்படுத்துகிறது.*

**முக்கோணம்:**

*மூன்று பகுதிகளிலும் சேர்ந்ததே முக்கோணம்.*

**மனிதத் தன்மை:**

*நமது சாயலாக நமது ரூபத்தின்படியே மனிதனை உண்டாக்குவோமாக என்று கூறிய தேவன் மனிதனை ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று அமைப்பாக உருவாக்கினார்.*

**திருத்துவ உபதேசத்தை சுருக்கிக் கூறுவோம்**

*தேவன் ஒருவரே (உபா.6:4; 1 தீமோ.3:5; யாக்.2:9). அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் என்ற மூன்று ஆளத்துவமுடையவராக இருக்கிறார் (லூக்.1:35; 3:21,22).*

*பிதா தேவனாக இருக்கிறார் (1 பேதுரு 1:2; யோ.6:27). குமாரன் தேவனாக இருக்கிறார் (எபி.1:8; யோ.1:1; 20:28), பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருக்கிறார் (அப்.5:3,4; 1 கொரி.3:16).*

*ஆகிலும் மூன்று தேவர்களல்ல, தேவன் ஒருவரே. இது ஆச்சரியமான, நமது அறிவிற்கு அப்பாற்பட்ட, ஒப்பிட முடியாத கூட்டமைப்பு.*

# 8. தேவனுடைய பண்புகள் யாவை? தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார்?

*தேவனுடைய வார்த்தையாகிய வேதாகமம், தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்றும் அவர் எப்படிப்பட்டவராக இல்லை என்றும் கூறுகிறது. வேதாகமத்தின் அதிகாரத்திற்குட்பட்ட நிலையில் அல்லாமல் தேவனுடைய பண்புகளை விளக்க முயற்சிக்கும் அனைத்து முயற்சிகளும் வெறுமனே ஒரு அபிப்ராயம் அல்லது கருத்து மட்டுமே ஆகும். இது பெரும்பாலும் சரியானதாக இருப்பதில்லை, குறிப்பாக தேவனைக்குறித்து அறிந்துகொள்கிற விஷயத்தில் இந்த அபிப்ராயங்கள் அனைத்தும் தோல்வியையே தழுவுகின்றன (யோபு 42:7). தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள முயற்சிப்பது முக்கியமான காரியம் என்று சொல்வோமானால், அதிலே மாபெரும் குறையரை இருக்கிறது. அப்படி அந்த முயற்சியில் நாம் தோற்றுபோய்விட்டால், அது நம்மை தேவனல்லாதவைகளை பின்பற்றி போய் சோரம்போவதற்கும் தேவனுடைய சித்தத்திற்கு எதிராக செயல்படுவதற்கும் வழிவகுத்துவிடும் (யாத்திராகமம் 20:3-5).*

*தேவன் தம்மைக்குறித்து எந்தெந்த காரியங்களை வெளிப்படுத்தவேண்டும் என்று தெரிந்துகொண்டாரோ அந்த காரியங்களை மட்டுமே அறிந்துகொள்ள முடியும். தேவனுடைய பண்புகளில் அல்லது குணங்களில் ஒன்று "ஒளி", அர்த்தம் அவர் தம்மைத்தாமே வெளிப்படுத்தி அவரைக்குறித்ததான தகவலை அறிவிக்கிறார் (ஏசாயா 60:19; யாக்கோபு 1:17). தேவன் தம்மைக் குறித்த அறிவை வெளிப்படுத்தினதை நாம் அலட்சியப்படுத்தி புறக்கணிக்க கூடாது (எபிரெயர் 4:1). சிருஷ்டி, வேதாகமம், மற்றும் மாம்சமாகிய வார்த்தை (இயேசு கிறிஸ்து) இவை மூன்றும் தேவன்*

எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்பதை நாம் அறிந்துகொள்ள உதவி செய்யும்.

முதலாவதாக தேவன் நமது சிருஷ்டிகர் மற்றும் நாம் அவருடைய சிருஷ்டிப்பில் ஒரு அங்கம் என்பதிலும் அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் போன்ற காரியங்களை புரிந்துகொள்வதில் தொடங்குவோம் (ஆதியாகமம் 1:1; சங்கீதம் 24:1). தேவன் சிருஷ்டித்த எல்லா சிருஷ்டிகளிலும் மனிதனை மேலானவனாகவும் சகலத்தையும் ஆண்டுகொள்ளும்படியாகவும் அவனை வைத்தார் (ஆதியாகமம் 1:26-28). மனிதனுடைய வீழ்ச்சியினாலே சிருஷ்டியானது கேடுத்துப்போடபட்டாலும், தேவனுடைய கிரியைக்குறித்த ஒரு பார்வையை இது கொடுக்கிறது (ஆதியாகமம் 3:17-18; ரோமர் 1:19-20). சிருஷ்டிப்பின் இந்த பரந்தநிலை, அதிலுள்ள எண்ணற்ற சிக்கல்கள், அதன் அழகு, மற்றும் அதின் ஒழுங்குகள் ஆகியவற்றை நிதானித்துப்பார்க்கும்போது, தேவன் ஒரு திகிலை கிளப்பி அச்சமூட்டுகிற நிலையிலுள்ள ஒரு அற்புதமானவர் என்கிற உணர்வு நமக்கு உண்டாயிருக்கும்.

தேவனுடைய சில பெயர்களை நாம் கவனித்துப் பார்ப்போமானால் நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிற தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்னும் ஆய்வுக்கு உதவியாக இருக்கும். கீழே கொடுக்கப்பட்டுள்ள பெயர்களை கவனியுங்கள்:

ஏலோஹிம் - வலிமை வாய்ந்தவர், தெய்வீகமானவர் (ஆதியாகமம் 1:1)

அடோனாய் - கர்த்தர், எஜமானனுக்கும் வேலைக்காரனுக்கும் இடையேயுள்ள உறவை காண்பிக்கிறது (யாத்திராகமம் 4:10, 13)

ஏல் ஏலியோன் - உன்னதமானவர், மகா வலிமை வாய்ந்தவர் (ஆதியாகமம் 14:20)

*ஏல் ரோயீ - என்னை காண்கிற வலிமை வாய்ந்தவர் (ஆதியாகமம் 16:13)*

*ஏல் ஷடாய் - சர்வவல்லமையுள்ள தேவன் (ஆதியாகமம் 17:1)*

*ஏல் ஓலாம் - அநாதி தேவன் (ஏசா 40:28)*

*யாவே - கர்த்தர் "இருக்கிறேன்", அர்த்தம் நித்தியகாலமாக தாமாகவே ஜீவித்துக்கொண்டிருக்கிற நித்திய தேவன் (யாத் 3:13, 14).*

தேவன் *நித்தியமானவர், அர்த்தம் அவருக்கு ஆரம்பம் இல்லை மற்றும் அவர் ஜீவித்திருக்கிற நிலைக்கு முடிவும் வராது. அவர் சாவாமையுள்ளவர் மற்றும் எல்லையற்றவர் (உபாகமம் 33:27; சங்கீதம் 90:2; 1 தீமோத்தேயு 1:17).* தேவன் *மாறாதவர், அர்த்தம் அவர் மாற்றமே இல்லாதவர்; அதாவது அவர் முற்றிலும் நம்பகத்தன்மையுள்ள மற்றும் நம்பகமானவர் (மல்கியா 3:6; எண்ணாகமம் 23:19; சங்கீதம் 102:26-27).* தேவன் *ஒப்பில்லாதவர்; செயலிலும் தன்மையிலும் அவரைப்போல ஒருவரும் இல்லை. அவர் இணையற்றவர் மற்றும் பரிபூரணமானவர் (2 சாமுவேல் 7:22; சங்கீதம் 86:8; ஏசாயா 40:25; மத்தேயு 5:48).* தேவன் *புரிந்துகொள்ள முடியாதவர், ஆழ்ந்து அறியமுடியாதவர், ஆராய்ந்து அறிய முடியாதவர் மற்றும் அவரை முற்றிலும் புரிந்துகொள்ளமுடியாதபடி அதற்கும் அப்பாற்பட்டவர் (ஏசாயா 40:28; சங்கீதம் 145:3; ரோமர் 11:33, 34).*

தேவன் *நீதியுள்ளவர்; மனிதர்களை கண்டு அவர்களில் சிலரை பிரியப்படுத்த ஒருவருக்கொருவர் பாரபட்சம் காண்பிக்கிறவர் அல்ல (உபாகமம் 32:4; சங்கீதம் 18:30).* தேவன் *சர்வவல்லமையுள்ளவர்; அவர் சர்வ வல்லவர், அவர் விரும்புகிற எல்லாவற்றையும் செய்ய வல்லமையுள்ளவர், ஆனாலும் தனது சுபாவ தன்மை மற்றும் குணாதிசயத்திற்கு எதிராக அவர் எதுவும் செய்வதில்லை (வெளிப்படுத்துதல் 19:6; எரேமியா 32:17, 27).* தேவன் *சர்வ வியாபி, அர்த்தம் அவர் எங்கும் இருக்கிறார். அதற்காக எங்குமுள்ள எல்லாமே*

தேவன் என்கிற அர்த்தமல்ல (சங்கீதம் 139:7-13, எரேமியா 23:23). தேவன் சர்வஞானி, அர்த்தம் இறந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலத்தில் உள்ள அனைத்து காரியங்களையும் அறிந்தவர், நம்முடைய சிந்தைகளையும் ஒவ்வொரு தருணத்தின் அசைவையும் அறிந்தவர் (சங்கீதம் 139:1-5; நீதிமொழிகள் 5:21).

தேவன் ஒருவரே; அவரையன்று வேறு தேவனல்ல என்பதுமட்டுமல்ல, அவர் ஒருவரே சகலவற்றிற்கும் போதுமானவரும் பாத்திரருமாய் இருக்கிறார். தேவன் ஒருவரே நமது ஆராதனை மற்றும் தியானத்திற்கு பாத்திரராய் இருக்கிறார் (உபாகமம் 6:4). தேவன் நீதியுள்ளவர், அர்த்தம் தேவன் அநீதியான காரியங்களை விரும்பாதவர் மற்றும் செய்யாதவர். அவர் நீதியும் நியாயமும் உள்ள தேவனாக இருக்கிறபடியினால், நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு வேண்டி, இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக தேவனுடைய நியாயத்தீர்ப்பை சந்தித்தார், தேவனுடைய கோபாக்கினை அவர்மேல் வந்தது (யாத்திராகமம் 9:27; மத்தேயு 27:45-46; ரோமர் 3:21-26).

தேவன் பரமாதிகாரி, அர்த்தம் அவர் உன்னதமானவர். அவர் செய்கின்ற காரியங்களை ஒட்டுமொத்த சிருஷ்டியும் ஒருமித்து வந்தாலும் தடைசெய்யவோ இடையூராகவோ இருக்க முடியாது (சங்கீதம் 93:1; 95:3; எரேமியா 23:20). தேவன் ஆவியாய் இருக்கிறார், அர்த்தம் அவரை நாம் காணமுடியாது (யோவான் 1:18; 4:24). தேவன் திரித்துவமுள்ளவர். திருத்துவம் என்றால் மூன்றில் ஒன்றானவர் என்பதாகும். அதே சமயம் தன்மையில் மூவரும் சமமானவர்கள். மகிமையிலும் வல்லமையிலும் சமமானவர்கள். தேவன் உண்மையுள்ளவர், அவர் பொய்சொல்கிறவரும் அல்ல அவர் கறைபட்டவரும் அல்ல (சங்கீதம் 117:2; 1சாமு 15:29).

தேவன் பரிசுத்தர், எல்லாவித தார்மீக அசுத்தங்களுக்கும் நீங்கலானவரும் அவைகளை வெறுக்கிரவருமாய் இருக்கிறார். அவர்

அநீதிக்கு விலகுகிறவரும் அதை வெறுக்கிறவருமாய் மட்டுமல்லாமல் அவர் தீமையைக்கண்டு கோபம் கொள்கிற தேவனாகவும் இருக்கிறார். தேவன் பட்சிக்கிற அக்கினியாய் இருக்கிறார் என வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஏசாயா 6:3; ஆபகூக் 1:13; யாத்திராகமம் 3:2, 4-5; எபிரெயர் 12:29). தேவன் கிருபை உள்ளவர், அவரது கிருபையானது நற்குணம், தயவு, கருணை மற்றும் அன்பு போன்றவைகளோடு ஒருங்கிணைந்தது ஆகும். ஆவர் கிருபை உள்ளவராக இல்லை என்றால், நாம் அவருடைய சமுகத்தில் ஒருநாளும் பிரவேசிக்க கூடாதபடி நம்மை அவரை விட்டு விலக்கியிருக்கும் அவரது பரிசுத்தம். ஆனால் அப்படியில்லாமல், நம் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட முறையிலே அறிய வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் (யாத்திராகமம் 34:6; சங்கீதம் 31:19; யோவாவான் 3:16; 17:3).

தேவன் ஒரு எல்லையற்றவர் மற்றும் முடிவில்லாதவர் என்பதால், தேவனளவு உள்ள இந்த கேள்விக்கு எந்த மனிதனும் முழுமையாக பதில் சொல்ல முடியாது, ஆனால் தேவனுடைய வார்த்தையின் உதவியால், தேவன் யார் என்பதையும் அவர் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்பதையும் குறித்து நாம் அதிகம் புரிந்துகொள்ள முடியும். நாம் யாவரும் முழு இருதயத்தோடு அவரைத் தொடர்ந்து தேடுவோமாக! (எரேமியா 29:13).

# 9. வேதாகமம் திரித்துவத்தைப் பற்றி என்ன போதிக்கிறது?

*கிறிஸ்தவர்களின் திரித்துவம் குறித்த போதனை போதுமான நிலையில் விளக்குவதற்கு மிகவும் கடினமான காரியமாகும். கிறிஸ்தவ அடிப்படையில் திரித்துவம் பற்றி சரியான விளக்கம் இல்லை. மனிதனால் திரித்துவத்தைப் பற்றி அறிந்து கொள்ளவே இயலாது. தேவன் நம்மெல்லாரிலும் மிகப் பெரியவர், எனவே அவரை முழுமையாக அறிந்து கொள்வது என்பது இயலாத காரியமாகும். வேதாகமம் பிதாவைத் தேவனாகவும், இயேசுவைத் தேவனாகவும், மற்றும் பரிசுத்தாவியை தேவனாகவும் இருக்கிறதாக போதிக்கிறது. வேதாகமம் தேவன் ஒருவரே எனவும் போதிக்கிறது. இம்மூன்றும் ஒன்றோடொன்று இனைந்தவை என நாம் அறிந்தாலும், மனிதனால் இதை விளங்கிக் கொள்ள இயலாது. எப்படியாயினும், திரித்துவம் உண்மைக்கு புறம்பானதல்ல.*

*திரித்துவம் என்றால் ஒரே தேவன் மூன்று ஆள்தன்மைகளில் ஜீவித்திருக்கிறவராக இருக்கிறார். திரித்துவம் மூன்று தேவர்களை குறிப்பதல்ல என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். "திரித்துவம்" என்னும் சொல் வேதாகமத்தில் எங்கும் வருவதில்லை. இந்த வார்த்தை மூன்றில் ஒருவராக இருக்கிற திரியேக தேவனை விளக்க பயன்படுத்தப்படுகிறது. மூன்று ஆள்தன்மைகளில் இவர்கள் மூவரும் ஒன்றாய் இருக்கிறார்கள், நித்தியமாக இருக்கிறார்கள். தேவனுடைய வார்த்தையில் கீழ்கண்ட விதத்தில் திரித்துவத்தைப் பற்றி கூறப்பட்டுள்ளது:*

*1) தேவன் ஒருவரே (உபாகமம் 6:4; 1 கொரிந்தியர் 8:4; கலாத்தியர் 3:20; 1 திமோத்தேயு 2:5).*

*2) திரித்துவத்தில் மூன்று நபர்கள் அடங்கியிருக்கிறார்கள் (ஆதியாகமம் 1:1, 26; 3:22; 11:7; ஏசாயா 6:8; 48:16; 61:1; மத்தேயு 3:16-17; 28:19; 1 கொரிந்தியர் 13:14)*

*ஆதியாகமம் 1:1ல் எபிரேய மொழியில் தேவன் என்று வருகிற சொல் பன்மையாக "ஏலோஹூம்" என்று உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. ஆதியாகமம்1:26; 3:22; 11:7; ஏசாயா 6:8, இவற்றில் பன்மையாக "நாம்" என்று பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஏலோஹீம் என்ற வார்த்தையும், "நாம்" என்ற வார்த்தையும் பன்மையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அப்படியெனில், அது இரண்டைக் காட்டிலும் கூடுதலாக காட்டுகிறது. எனவே திரித்துவத்தில், இது பன்மையைக் குறிக்கிறது. எனவே எபிரேய வார்த்தையில், தேவன், ஏலோஹீம் திரித்துவத்தைக் குறிக்கிறது.*

*ஏசாயா 48:16லும் 61:1லும், குமாரன், பிதாவைக் குறித்தும், பரிசுத்தாவி பற்றியும் பேசுகிறார். ஏசாயா 61:1லிருந்து லூக்கா 4:14-19 ஒப்பிடும்பொழுது, குமாரன் பேசுவதையும், மத்தேயு 3:16-17ல் இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானம் பற்றியும் விளக்குகிறது. மத்தேயு 28:19; 2 கொரிந்தியர் 13:14ல், பரிசுத்தாவி குமாரனில் இறங்குவதையும், பிதா குமாரனில் பிரியமாய் இருப்பதை கூறுவதையும் பார்க்கும்பொழுது, இம்மூவரும் தனித்தனியானவர்கள் என விளங்குகிறது.*

*3) திரித்துவத்திலுள்ள மூவரும் ஒருவரிலொருவர் வேறுபட்ட அல்லது வித்தியாசமானவர்கள் என நாம் அநேக வேதபகுதிகளில் காணலாம். பழையேற்பாட்டில் "யேகோவா" (LORD) என்பது "கர்த்தர்" (Lord) லிருந்து மாறுபட்டது ஆகும். (ஆதியாகமம் 19:24; ஓசியா 1:4) பிதாவுக்கு குமாரன் உண்டு (சங்கீதம் 2:7, 12; நீதிமொழிகள் 30:2-4). பரிசுத்தாவி, பிதாவிலிருந்து வேறுபட்டவர் (எண்ணாகமம் 27:18; சங்கீதம் 51:10-12). பிதா-குமாரன் என்பது, தேவன்-பிதா என்பதிலிருந்து மாறுபட்டது (சங்கீதம் 45:6-7; எபிரேயர் 1:8-9).*

*புதியேற்பாட்டில் இயேசு, பிதாவிடம் சத்திய ஆவியாகிய ஒரு தேற்றவாளனை அனுப்பும்படி பேசுகிறார் (யோவான் 14:16-17). இதிலிருந்து இயேசு தன்னைப் பிதாவாகவோ, பரிசுத்தாவியாகவோ நினைக்கவில்லை. அவ்வாறாக இருந்தாலும் இயேசு-பிதாவாகிய தன்னோடு தான் பேசினாரா? இல்லை. அவர் திரித்துவத்திலுள்ள இன்னொருவரோடு பேசினார்-அதுதான் பிதா.*

*4) திரித்துவத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தேவன். பிதாவாகிய தேவன் (யோவான் 6:27; ரோமர் 1:7; 1 பேதுரு 1:2). குமாரனாகிய தேவன் (யோவான் 1:1, 14, ரோமர் 9:5; கொலோசெயர் 2:9; எபிரெயர் 1:8; 1 யோவான் 5:20). பரிசுத்த ஆவியானவர் தேவன் (அப்போஸ்தலர் 5:3-4; 1 கொரிந்தியர் 3:16).*

*5) திரித்துவத்திற்குள் துணை உள்ளது. பரிசுத்த ஆவியானவர் பிதாவுக்கும் குமாரனுக்கும் கீழ்ப்படிந்துள்ளார், குமாரனும் பிதாவுக்கு கீழ்ப்படிந்துள்ளார் என்பதை வேதவாக்கியம் தெளிவாக காட்டுகிறது. இது ஒரு உள்ளுறவு மூவரிலும் இருக்கிறது மற்றும் எந்த நபரின் தெய்வீகத்தையும் மறுக்கவில்லை. இது வெறுமனே எல்லையற்ற தேவனைப்பற்றிய பற்றிய நமது வரையறையான மனநிலையை புரிந்து கொள்ள முடியாத ஒரு பகுதி. குமாரனைப் பற்றி லூக்கா 22:42, யோவான் 5:36, யோவான் 20:21, 1 யோவான் 4:14 ஆகியவற்றைக் காண்க. பரிசுத்த ஆவியானவர் குறித்து யோவான் 14:16, 14:26, 15:26, 16: 7, மற்றும் குறிப்பாக யோவான் 16: 13-14 ஆகியவற்றைக் காண்க.*

*6) திரித்துவத்தின் தனிப்பட்ட உறுப்பினர்கள் வெவ்வேறு பணிகளைக் கொண்டுள்ளனர். பிதாவானவர் இப்பிரபஞ்சத்தின் இறுதி ஆதாரம் அல்லது காரணம் (1 கொரிந்தியர் 8:6; வெளிப்படுத்துதல் 4:11); தெய்வீக வெளிப்பாடு (வெளிப்படுத்துதல் 1:1); இரட்சிப்பு (யோவான் 3:16-17); மற்றும் இயேசுவின் மனித செயல்கள் (யோவான் 5:17, 14:10). இவைகள் எல்லாவற்றையும் பிதாவானவர் தொடங்குகிறார்.*

*குமாரன் ஒரு பிரதிநிதியாக வைத்து பிதா பின்வரும் செயல்களைச் செய்கிறார்: இந்த பிரபஞ்சத்தின் உருவாக்கம் மற்றும் பராமரிப்பு (1 கொரிந்தியர் 8:6; யோவான் 1: 3; கொலோசெயர் 1:16-17); தெய்வீக வெளிப்பாடு (யோவான் 1:1, 16: 12-15; மத்தேயு 11:27; வெளிப்படுத்துதல் 1:1); இரட்சிப்பு (2 கொரிந்தியர் 5:19, மத்தேயு 1:21, யோவான் 4:42). பிதாவானவர் அனைத்து செயல்களையும் மகன் மூலமாக செய்கிறார்.*

*பரிசுத்த ஆவியானவரை காரணமாக வைத்து பிதாவானவர் பின்வரும் செயல்களைச் செய்கிறார்: பிரபஞ்சத்தின் உருவாக்கம் மற்றும் பராமரிப்பு (ஆதியாகமம் 1:2; யோபு 26:13; சங்கீதம் 104:30); தெய்வீக வெளிப்பாடு (யோவான் 16:12-15; எபேசியர் 3: 5; 2 பேதுரு 1:21); இரட்சிப்பு (யோவான் 3:6; தீத்து 3:5; 1 பேதுரு 1:2); இயேசுவின் செயல்கள் (ஏசாயா 61:1, அப்போஸ்தலர் 10:38). இவ்வாறு பரிசுத்த ஆவியின் வல்லமையால் பிதா எல்லாவற்றையும் செய்கிறார்.*

*திரித்துவத்தின் விளக்கங்களை உருவாக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும், பிரபலமான எடுத்துக்காட்டுகள் முற்றிலும் துல்லியமாக இல்லை. முட்டை (அல்லது ஆப்பிள்), தோல், சதை, மற்றும் ஆப்பிளின் விதைகள், ஆப்பிள் மட்டும் அல்ல, அது போலவே, முட்டை, வெள்ளை மற்றும் மஞ்சள் கரு, முட்டையின் பாகங்களாக இருக்கின்றன. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய பாகங்கள் அல்ல; அவர்கள் ஒவ்வொருவரும் தேவன். நீர் விளக்கம் ஓரளவு சிறப்பாக உள்ளது, ஆனால் அது திரித்துவத்தை விவரிக்கத் தவறிவிட்டது. திரவம், நீராவி மற்றும் பனிக்கட்டி ஆகியவை நீரின் வடிவங்களாகும். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் தேவனின் உருவங்கள் அல்ல, அவை ஒவ்வொன்றும் தேவன். எனவே, இந்த உவமைகள் நமக்கு திரித்துவ படத்தை கொடுக்கலாம், ஆனால் படம் முற்றிலும் துல்லியமாக*

*இல்லை. எல்லையற்ற தேவன் ஒரு வரையறுக்கப்பட்ட விளக்கம் கொண்டு முழுமையாக விவரிக்க முடியாது.*

*திரித்துவத்தின் கோட்பாடு கிறிஸ்தவ சபையின் முழு வரலாற்றிலிருந்தும் பிளவுபட்ட பிரச்சினையாகவே இருக்கிறது. திரித்துவத்தின் முக்கிய அம்சங்கள் தேவனுடைய வார்த்தையில் தெளிவாகக் காட்டப்பட்டாலும், சில பக்க விவகாரங்கள் வெளிப்படையாக தெளிவாக இல்லை. பிதா தேவன், குமாரன் தேவன், பரிசுத்த ஆவியானவர் தேவன், ஆனால் ஒரே ஒரு தேவனாக இருக்கிறார். இதுதான் திரித்துவத்தின் வேதாகம உபதேசமாகும். அதற்கு அப்பால், பிரச்சினைகள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, விவாதத்திற்குரிய மற்றும் அத்தியாவசியமானவை. நமது வரையறுக்கப்பட்ட மனித மனங்களில் திரித்துவத்தை முழுமையாக வரையறுக்க முயலுவதற்கு மாறாக, தேவனுடைய மேன்மையையும் அவருடைய உயர்ந்த தன்மையையும் வலியுறுத்துவதன் மூலம் நாம் சிறப்பாக செயல்படலாம். "ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவாயிருக்கிறது! அவருடைய நியாயத்தீர்ப்புகள் அளவிடப்படாதவைகள், அவருடைய வழிகள் ஆராயப்படாதவைகள்! கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்?" (ரோமர் 11:33-34).*

# 10. திரித்துவத்தை விளக்க முடியுமா?

நமக்கு ஒரே தேவன் உண்டு. அவர் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்று மூன்று நபர்களாகத் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். இம்மூன்று தெய்வீக நபர்கள் ஒரே தேவனுக்குள் மகிமையானதோர் இரகசியமாக அன்பின் ஐசுவரியத்தினால் ஐக்கியப்பட்டுள்ளனர். தெய்வத்துவத்தில் இவர்கள் இவ்விதம் இணைக்கப்பட்டிருந்தாலும் ஆள்தத்துவத்திலும் செயலிலும் தனித்திருக்கிறார்கள்.

தேவனின் திரியேகத்துவத்தை விளக்கும் எடுத்துக்காட்டுகள் வேதத்தில் ஏராளம் உண்டு.

*முதலாவது கிறிஸ்துவின் வாழ்க்கையை நோக்குவோம்-

மரியாள் மீது "ஆவியானவர்" வந்து, உன்னத "தேவனுடைய" பலம் நிழலிட்டதால் "இயேசு" பிறந்தார் (லூக் 1:35).

திருமுழுக்கு பெற்று "இயேசு" வெளிவந்தபோது, "பரிசுத்த ஆவி யானவர்" புறாவைப்போல் அவர்மீது வந்திறங்கினார்; இவர் என் நேச குமாரன் என்று "பிதாவானவர்" சாட்சியிட்டார் (மத் 3:16,17).

"பிதாவானவர்" தமது "குமாரனுக்கு" தமது "ஆவியை" அளவில் லாமல் கொடுத்தார் (யோ 3:34-36).

எழுபது பேர் உற்சாகமாய்த் திரும்பி வந்தபோது "இயேசு" "பரிசுத்த ஆவியில்" களிகூர்ந்து "பிதாவை" ஸ்தோத்திரித்தார் (லூக் 10:21).

"நித்திய ஆவியினாலே" "இயேசு" தம்மைப் "பிதாவாகிய தேவ னுக்கு" ஒப்புக்கொடுத்தார் (எபி 9:14).

"தேவனுடைய" வலது பாரிசத்திற்கு "இயேசு" உயர்த்தப்பட்ட JULL போது, "பிதாவிடமிருந்து" வாக்குத்தத்தின்படி "பரிசுத்த ஆவியைப்"

*பெற்றுத் தமது சீடர்மீது பொழிந்தருளினார் (அப் 2:33; 1:4,5; யோ 15:26).*

**அப்படியே, திரித்துவத்தின் மூன்று நபர்களும் ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்க்கையிலும் தீவிர ஈடுபாடு கொண்டுள்ளனர்*

*"பிதாவாகிய" தேவன் மறு ஜென்ம முழுக்கினாலும் "இயேசு கிறிஸ்து" மூலமாய்ச் சம்பூரணமாய்ப் பொழிந்தருளிய "பரிசுத்த ஆவி யினுடைய" புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார் (தீத் 3:5-7).*

*நாம் "பிதாவாகிய" தேவனுடைய முன்னறிவின்படியே, "ஆவி யானவரின்" பரிசுத்தமாக்குதலினாலே கீழ்ப்படிதலுக்கும், "இயேசு கிறிஸ்துவின்" இரத்தம் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப் பட்டோம் (1 பேது 1:2).*

*நாம் "பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே" ஞானஸ் நானம் பெற்றிருக்கிறோம் (மத் 28:19).*

*"ஒரே பிதா" "ஒரே கர்த்தர்" மற்றும் "ஒரே ஆவி" என்று வெளிப் படுத்தப்பட்டுள்ள "ஒரே தேவன்" மீதுதான் நமது "ஒரே விசுவாசம்" இருக்கிறது (எபே 4:4-6).*

*ஒரே "ஆவியினாலே" "பிதாவினிடத்தில்" சேரும் சிலாக்கி யத்தைக் "கிறிஸ்து" மூலமாய்ப் பெற்றிருக்கிறோம் (எபே 2:18). "பிதாவை" நோக்கி, "கிறிஸ்துவின்" நாமத்தில், "ஆவியானவரின்" உதவியோடு நாம் ஜெபிக்கிறோம். ஆவியானவராகிய தேவன் நமது ஜெபங்களை எழுதுகிறார்; குமாரனாகிய தேவன் நமது ஜெபங்களைச் சமர்ப்பிக்கிறார்; பிதாவாகிய தேவன் நமது ஜெபங்களை ஏற்றுக் கொள்ளுகிறார் என்றார் C.H. ஸ்பர்ஜன்.*

நமக்குக் "கிறிஸ்துவின்" சிந்தை உண்டாயிருக்கும்போது "தேவன்" தமது "ஆவியின்" மூலமாக தமது ஆழங்களை நமக்கு வெளிப் படுத்துகிறார் (1 கொரி 2:10,16).

*அப்படியே ஊழியத்திலும் திரித்துவத்தின் மூன்று நபர்களின் ஈடுபாட்டையும் தெளிவாக அறியலாம்-

"வரங்களில் வித்தியாசங்கள் உண்டு; ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு; கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு; எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே" (1 கொரி 12:4-6).

"தேவன்" தமது "ஆவியினாலே" வாசம்பண்ணுகிறதும், "இயேசு கிறிஸ்துவை" மூலைக்கல்லாகக் கொண்டதுமான பரிசுத்த ஆலயமே சபையாகும் (எபே 2:19-22).

"பிதாவிடமிருந்து" தாம் பெற்ற ஆளும் அதிகாரத்தையும், சிங் காசனத்தில் உட்காரும் உரிமையையும் ஜெயங்கொள்ளுகிறவர் களுக்குக் "கிறிஸ்து" கொடுப்பார் என்று "ஆவியானவர்" சபை களுக்குச் சொல்லுகிறார் (வெளி 2:27-29; 3:21,22).

• தெய்வீகத் தன்மையில் திரித்துவத்தின் மூவரும் சமமென்றா லும் முடிவான அதிகாரமானது பிதாவாகிய தேவனிடமே உண்டு. இதோ சில எடுத்துக்காட்டுகள்-

"என் வலது பக்கத்திலும், என் இடது பக்கத்திலும் உட்கார்ந்திருக் கும்படி என் பிதாவினால் எவர்களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டிருக் கிறதோ அவர்களுக்கேயல்லாமல், மற்றொருவருக்கும் அதை அருளு வது என் காரியமல்ல" (மத் 20:23).

*"பிதாவானவர் தமது ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங் களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" ( அப் 1:7).*

*முடிவில் குமாரனானவர் 'தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு இராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார்... சகலமும் அவருக்குக் கீழ்ப் பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார்" (1 கொரி 15:24,28).*

*திரித்துவத்தின் உபதேசத்தை முற்றிலும் விளங்கிக்கொள்ளமுடி யாத நிலையில் பக்தன் அகஸ்டின் கடற்கரையோரமாய் ஒருநாள் நடந்துகொண்டிருந்தாராம். சிறுவனொருவன் ஒரு பாத்திரத்தில் கடலி லிருந்து தண்ணீர் மொண்டுவந்து ஒரு சிறிய குழியில் திரும்பத் திரும்ப ஊற்றிக்கொண்டிருந்ததைப் பார்த்தார். "தம்பி, என்ன செய்கிறாய்?" என்று வினவினார். "கடல் முழுவதையும் இந்தக் குழிக்குள் ஊற்றிவிடப்போகிறேன்" என்றான் சிறுவன். அளக்கமுடியா தேவனை குறுகிய தனது மூளையறிவுக்குள் அடக்கிவிட முயன்ற தனது தவறு அப்பொழுதுதான் அவருக்கும் புரிந்ததாம்!*

# *11.* பிதாவாகிய தேவன் குறித்த கருத்தை நான் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும்?

*"நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை" (1 யோவான் 3:1). இந்த வசனம் "பாருங்கள்" என்ற கட்டளையுடன் தொடங்குகிறது. பிதாவின் அன்பின் வெளிப்பாடுகளை நாம் கவனிக்க வேண்டும் என்று யோவான் விரும்புகிறார். அவர் முந்தைய அதிகாரத்தில் (1 யோவான் 2:5, 15) தேவனின் அன்பைப் பற்றி அறிமுகப்படுத்தியுள்ளார், அதை சுருக்கமாக இங்கே விவாதித்து, நான்காவது அதிகாரத்தில் முழுமையாக விளக்கியுள்ளார். யோவானின் நோக்கம் தகப்பன் தனது பிள்ளைகளுக்கு கொடுக்கும் "எவ்வளவு பெரிய அன்பு" என்று அன்பை விவரிப்பது ஆகும். "எவ்வளவு பெரியது" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் ஆறு முறை மட்டுமே காணப்படுகிறது மற்றும் அவை எப்போதும் ஆச்சரியத்தையும் போற்றுதலையும் குறிக்கிறது.*

*இங்கே கவனிக்க வேண்டிய சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், "பிதா நம்மை நேசிக்கிறார்" என்று யோவான் சொல்லவில்லை. அவ்வாறு செய்யும்போது, அவர் ஒரு நிபந்தனையை விவரிப்பதாக இருக்கும். அதற்கு பதிலாக, பிதா நம்மீது தமது அன்பை "பாராட்டினார்" என்று அவர் நம்மிடம் கூறுகிறார், இது தேவனின் செயலையும் அவரது அன்பின் அளவையும் சித்தரிக்கிறது. யோவான் "பிதா" என்ற வார்த்தையை வேண்டுமென்றே தேர்ந்தெடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அந்த வார்த்தை தகப்பன்-பிள்ளைக்கு உள்ள உறவைக் குறிக்கிறது. இருப்பினும், தேவன் நம்மை பிள்ளைகளாக ஏற்றுக்கொண்டபோது தகப்பன் ஆகவில்லை.*

*தேவனின் பிதாத்துவம் நித்தியமானது. அவர் நித்தியமாக இயேசு கிறிஸ்துவின் பிதா, மற்றும் இயேசு மூலம் அவர் நம்முடைய பிதா. இயேசுவின் மூலம் நாம் பிதாவின் அன்பைப் பெற்று "தேவனின் பிள்ளைகள்" என்று அழைக்கப்படுகிறோம்.*

*தேவன் நம்மை அவருடைய பிள்ளைகள் என்று அழைப்பது மற்றும் அவருடைய பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்துவுடன் வாரிசுகள் மற்றும் இணை வாரிசுகள் என்று உறுதியளிப்பது எவ்வளவு கனமுள்ளதாய் இருக்கிறது (ரோமர் 8:17). யோவான் தனது நற்செய்தியில், விசுவாசத்தில் கிறிஸ்துவை கர்த்தராகவும் இரட்சகராகவும் பெற்ற அனைவருக்கும் தேவனின் பிள்ளைகளாகும் அதிகாரத்தை தேவன் கொடுக்கிறார் என்றும் கூறுகிறார். (யோவான் 1:12) தேவன் தமது அன்பை தனது குமாரன் இயேசு கிறிஸ்துவுக்கும், அவர் மூலம், தத்தெடுக்கப்பட்ட அனைத்து பிள்ளைகளுக்கும் நீட்டிக்கிறார்.*

*யோவான் நம்மிடம் கூறும்போது "அதுதான் நாம்!" அவர் நம் நிலையின் யதார்த்தத்தை அறிவிக்கிறார். இப்போது, இந்த தருணத்தில், நாம் அவருடைய பிள்ளைகள். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இது எதிர்காலத்தில் தேவன் நிறைவேற்றவிருக்கும் ஒரு வாக்குறுதி அல்ல. அப்படி இல்லை, நாம் ஏற்கனவே தேவனுடைய பிள்ளைகளாக இருக்கிறோம். தேவனை நாம் நம்முடைய தகப்பனாக அறிந்திருப்பதால், தத்தெடுக்கப்பட்ட நாம் அனைத்து உரிமைகளையும் சலுகைகளையும் அனுபவிக்கிறோம். அவருடைய பிள்ளைகளாகிய நாம் அவருடைய அன்பை அனுபவிக்கிறோம். அவருடைய பிள்ளைகளாகிய நாம் அவரை நம் தகப்பனாக ஒப்புக்கொள்கிறோம், ஏனென்றால் நமக்கு தேவன் பற்றிய அனுபவ அறிவு உள்ளது. நம்மை நேசிப்பவர், நமக்கு வழங்குபவர், மற்றும் நமது பூமிக்குரிய தகப்பன்கள் செய்ய வேண்டியதைப் போல நம்மைப் பாதுகாப்பவர் மீது நாம் நம்பிக்கையும் விசுவாசத்தையும் வைக்கிறோம். பூமிக்குரிய தகப்பன்கள் செய்ய வேண்டியதைப் போல, தேவன் அவருடைய பிள்ளைகள் கீழ்ப்படியாதபோது அல்லது அவருடைய கட்டளைகளைப்*

*புறக்கணிக்கும்போது அவர்களை ஒழுங்குபடுத்துகிறார் மற்றும் சீர்பொருந்தப் பண்ணுகிறார். அவர் நம் நன்மைக்காக இதைச் செய்கிறார், அதனால் "அவருடைய பரிசுத்தத்தில் நாமும் பங்குள்ளவர்களாக வேண்டும்" (எபிரெயர் 12:10).*

*தேவனை நேசித்து அவருக்குக் கீழ்ப்படிபவர்களை வேதம் விவரிப்பதற்கு பல வழிகள் உள்ளன. நாம் தேவனின் வாரிசுகள் மற்றும் கிறிஸ்துவுடன் இணை வாரிசுகள் (ரோமர் 8:17); நாம் பரிசுத்த ஆசாரியர்கள் (1 பேதுரு 2:5); நாம் புதிய சிருஷ்டிப்புகள் (2 கொரிந்தியர் 5:17); நாம் திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்கள் (2 பேதுரு 1:4). ஆனாலும் மேலே உள்ள எந்தவொரு தலைப்பையும் அல்லது பதவியையும் விட நாம் தேவனுடைய பிள்ளைகள் மற்றும் அவர் நம் பரலோகப் பிதா என்பது எளிமையான உண்மை.*

# 12. தேவன் ஏன் நல்ல மனிதர்களுக்கு தீமையான காரியங்களை சம்பவிக்கும்படி அனுமதிக்கிறார்?

*நாம் வேதனையும் துன்பமும் உள்ள ஒரு உலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். வாழ்வின் கடுமையான உண்மைகளிலிருந்து பாதிக்கப்படாதவர் எவரும் இல்லை. கேள்வி என்னவென்றால், "நல்ல மனிதர்களுக்கு தீமையான காரியங்கள் ஏன் சம்பவிக்கிறது?" எல்லா இறையியலிலும் இது ஒரு மிகவும் கடினமான கேள்வியாகும். தேவன் இறையாண்மையுள்ளவர், ஆகையால் சம்பவிக்கிற எதுவாக இருந்தாலும் அவரால் நேரடியாக செயல்படுத்தப்படாமல் போனாலும், அது அவரால் நிச்சயமாக அனுமதிக்கப்பட்டாவது இருக்கவேண்டும். மறுவசம், நித்தியமில்லாத, முடிவற்ற மற்றும் சர்வவல்லமையற்ற மனிதர்கள், தேவனுடைய நோக்கங்களையும், வழிகளையும் முழுமையாக புரிந்துகொள்ள முடியாது என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.*

*நல்ல மனிதர்களுக்கு தீமையான காரியங்களை தேவன் ஏன் அனுமதிக்கிறார் என்கிற பிரச்சினையை யோபுவின் புத்தகம் விவரிக்கிறது. யோபு நீதிமானாயிருந்தான் (யோபு 1:1), ஆனாலும் விசுவாசத்திற்கு அப்பாற்பட்ட வழிகளில் அவன் மிகவும் பாடுகளை கடந்து சென்றான்.*

*யோபுவின் உயிரை மாத்திரம் எடுக்காமல் பிற எல்லாவற்றையும் செய்து கொள்ளும்படி சாத்தானுக்கு தேவன் அனுமதி கொடுத்தார். இதற்கு யோபுவின் பதில் என்ன? "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்" (யோபு 13:15). "கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்" என்றான் (யோபு 1:21). தேவன் இந்த காரியங்களை ஏன் அனுமதித்திருக்கிறார் என்பதை யோபு புரிந்து*

*கொள்ளவில்லை, ஆனால் தேவன் நல்லவர் என்பதை மட்டும் அவர் அறிந்திருந்தார், எனவேதான் தேவன்மேல் தொடர்ந்து நம்பிக்கை வைத்துவந்தார். இறுதியில், அதுதான் நம்முடைய அனுகுமுறையாகவும் இருக்க வேண்டும்.*

*நல்ல மனிதர்களுக்கு தீமையான காரியங்கள் ஏன் நடக்கின்றன? ஒப்புக்கொள்வதற்கு கடினமாக இருந்தாலும் இதற்குள்ள வேதத்தின் பதில் என்னவென்றால் 'நல்லவர்' ஒருவருமில்லை என்பதுதான். நாம் எல்லோரும் பாவத்தால் களங்கமடைந்திருக்கிறோம் என்று மிகத் தெளிவாக வேதம் காட்டுகிறது. (பிரசங்கி 7:20; ரோமர் 6:23; 1 யோவான் 1:8).*

*இயேசு சொன்னார், "தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே" (லூக்கா 18:19). நாம் அனைவரும் ஏதோ ஒரு வவகையில் பாவத்தில் விளைவை உணரத்தான் செய்கிறோம். சிலவேளைகளில் நம்முடைய தனிப்பட்ட பாவம், மற்ற வேளைகளில் மற்றவர்களுடைய பாவம். வீழ்ந்துபோன ஒரு உலகத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அதனுடைய விளைவுகளும் அனுபவித்துக்கொண்டிருக்கிறோம். அதிலே ஒரு விளைவுதான் அநீதியும் உணர்வில்லாத வேதனையும்.*

*நல்லவர்களுக்கு தீமையான காரியங்களை தேவன் ஏன் அனுமதிக்கிறார் என்று அதிசயத்து பார்க்கிற வேளையில், சம்பவிக்கிற தீமையான காரியங்களைப் பற்றிய இந்த நான்கு விஷயங்களைக் கருத்தில் கொள்வது நல்லது:*

*1) நல்லவர்களுக்கு தீமையான காரியங்கள் இவ்வுலகில் சம்பவிக்கலாம், ஆனால் இந்த உலகத்தோடு எல்லாம் முடிந்து போகிறதில்லை. கிறிஸ்துவர்களுக்கு ஒரு நித்தியமான முன்னோக்கு உள்ளது: "ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை; எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது*

*நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" (2 கொரிந்தியர் 4:16-18). நமக்கு ஒருநாள் வெகுமதி கிடைக்கும், அது மகிமை உள்ளதாக இருக்கும்.*

*2) நல்லவர்களுக்கு தீமையான காரியங்கள் சம்பவிக்கிறது, ஆனால் அந்த தீமையான காரியங்களை தேவன் இறுதியில், நிலையான நீடித்திருக்கிற நன்மைக்காக அவைகளை பயன்படுத்துகிறார். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28). ஒரு தீங்கும் செய்யாத மற்றும் ஒன்றும் அறியாத யோசேப்பு, கடைசியில் கொடூரமான துன்பங்களை அனுபவித்தபோது, அவைகள் எல்லாவற்றிலும் தேவனுடைய நல்ல திட்டத்தை அவனால் காண முடிந்தது (ஆதியாகமம் 50:19-21 ஐ பார்க்கவும்).*

*3) நல்லவர்களுக்கு தீமையான காரியங்கள் சம்பவிக்கிறது, ஆனால் அந்த தீமையான காரியங்கள் இன்னும் வல்லமையோடு ஊழியத்தில் ஈடுபடுவதற்கு, விசுவாசிகளை அவைகள் கட்டிஎழுப்புகின்றன. "சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர். எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும்*

*பெருகுகிறது" (2 கொரிந்தியர் 1:3-5). போர்க்களங்களில் போராடுபவர்களுக்கு போராடியதால் ஏற்பட்ட போர்க்கள தழும்புகள் உதவிசெய்யும்.*

*4) நல்லவர்களுக்கு தீமையான காரியங்கள் சம்பவிக்கிறது, மிகவும் மோசமான காரியங்கள் சிறந்த நபர்களுக்கு சம்பவிக்கிறது. இயேசு ஒருவர் மட்டுமே மெய்யான நீதிமான், ஆனாலும் நாம் கற்பனை செய்யமுடியாத அளவுக்கு அவர் அவ்வளவு துன்பங்களை அனுபவித்தார். நாம் அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுவோம்: "நீங்கள் குற்றஞ்செய்து அடிக்கப்படும்போது பொறுமையோடே சகித்தால், அதினால் என்ன கீர்த்தியுண்டு? நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்கு முன்பாகப் பிரீதியாயிருக்கும். இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார். அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில்வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2: 20-23). நம்முடைய வேதனைகளை புரிந்துகொள்ளாதபடிக்கு, நம்முடைய வேதனைக்கு இயேசு ஒரு அந்நியர் அல்ல.*

*ரோமர் 5:8 இவ்வாறு கூறுகிறது: "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்". உலகத்திலுள்ள மக்களின் பாவ சுபாவமுள்ளவர்களாக இருக்கின்றபோதிலும், தேவன் இன்றும் நம்மை நேசிக்கிறார். இயேசு நம்மை மிகவும் நேசித்து நம்முடைய பாவங்களுக்கான தம்மேல் ஏற்றுக்கொண்டு மரித்தார் (ரோமர் 6:23). நாம் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டால்*

*(யோவான் 3:16, ரோமர் 10:9)*, நாம் மன்னிக்கப்படுவோம், பரலோகத்தில் ஒரு நித்தியமான வீட்டை நமக்கு வாக்கு பண்ணியிருக்கிறார் *(ரோமர் 8:1)*.

தேவன் ஒரு காரணத்திற்காக காரியங்களை சம்பவிக்க அனுமதிக்கிறார். நாம் அவருடைய காரணங்களை அறிந்துகொண்டோமோ இல்லையோ, தேவன் நல்லவர், நீதியுள்ளவர், அன்புள்ளவர், மற்றும் இரக்கமுள்ளவர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் *(சங்கீதம் 135:3)*. பெரும்பாலும், தீமையான காரியங்கள் சம்பவிக்கும்போது, ஏன் சம்பவிக்கிறது என்று நமக்கு ஒன்றும் புரியாது. தேவனுடைய நற்குணத்தை சந்தேகிப்பதைக்காட்டிலும், அவரையே முழுமையாக நம்பவேண்டும். "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" *(நீதிமொழிகள் 3:5-6)*. நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்.

# 13. தேவன் தீமையை சிருஷ்டித்தாரா?

தேவன்தான் சகலத்தையும் சிருஷ்டித்தார் என்றால், தீமையையும் அவர்தான் சிருஷ்டித்திருக்க வேண்டும் என்பதுபோல எண்ணத் தோன்றும். தீமை என்பது பாறை, மின்சாரம் போன்ற ஒரு “பொருள்” கிடையாது. ஒரு குப்பி நிறைய தீமையை உங்களால் எடுக்க முடியாது. தீமைக்கு தன்னில்தானே தன்னிச்சையாக இருக்கும் தன்மை கிடையாது. நன்மையானது இல்லாதிருக்கும் நிலையில் தான் தீமையின் தோற்றம் அல்லது இருக்கும் தன்மை உண்டாகிறது. உதாரணமாக, துளைகள் என்பது நிஜம் ஆனால் அவைகள் வேறு ஏதோ ஒன்றின் இருக்கும் தன்மையை சார்ந்தே வருகிறது அல்லது இருக்கிறது. நாம் அழுக்கு இல்லாமல் இருப்பதை துளை என்கிறோம், ஆனால் அதை அழுக்கிலிருந்து பிரித்தெடுக்க முடியாது. ஆகவே தேவன் சிருஷ்டித்தபோது, அவர் சிருஷ்டித்த எல்லாமே நல்லதாகவே இருந்தது. தேவன் தேர்ந்தெடுத்துக்கொள்கிற உரிமையை அளித்து சிருஷடிப்பை சிருஷ்டித்தார். அந்த தெரிந்துக்கொள்கிற உரிமை உண்மையாக இருக்க அவர் நன்மையோடு வேறொரு காரியத்தையும் அனுமதித்தார். எனவே தேவன் தேவதூதர்களுக்கும் மனிதர்களுக்கும் நன்மையை தெரிந்துக்கொண்டு தீமையை வெறுத்துவிடுவதை அனுமதித்தார். இரண்டு நல்ல காரியங்களுக்கும் இடையே தவறான உறவு இருக்குமானால் அதை நாம் தீமை என்று சொல்கிறோம். அது தேவனால் உண்டாக்கப்பட்ட ’பொருள்’ ஆகிவிடுவதில்லை.

ஒருவேளை இன்னும் கூடுதல் விளக்கம் கொடுத்தால் புரிந்துக்கொள்ள உதவியாக இருக்கும் என நம்புகிறேன். ஒரு நபரிடம் ’குளிர் இருக்கிறதா? என்று கேட்கும்பொழுது அதற்கு பதில் ’ஆம்’ என்றே இருக்கும். ஆனால் அது தவறு. குளிர் என்பது இருக்கவில்லை. குளிர் என்பது வெப்பம் இல்லாமையினால் வந்ததாகும். அதுபோலவே இருள் என்பது இல்லை. அது ஒளியின்மையினால் வந்ததாகும். தீமை என்பது நன்மை இல்லாதிருப்பது அல்லது தீமை என்பது

*தேவனில்லாதிருப்பது. தேவன் தீமையை உண்டாக்க வேண்டியிருக்கவில்லை. ஆனால் நன்மை இல்லாதிருப்பதை அனுமதிக்க வேண்டியிருந்தது.*

*தேவன் தீமையை சிருஷ்டிக்கவில்லை, ஆனால் நன்மையில்லாமல் இருக்கும்போது தீமை வரத்தக்கதாக அவர் தீமையை அனுமதித்திருந்தார். ஒரு வேளை தேவன் தீமையை அனுமதிக்காமல் இருந்திருந்தால் தேவதூதர்களும் மனிதர்களும் தேவனை கட்டாயத்தின்பேரில்தான் சேவித்திருப்பார்களேயன்றி அவர்களுடைய தெரிந்துகொள்ளுதலின்படி சேவை செய்யாதிருக்க மாட்டார்கள். தேவன் அவர்களை "இயந்திர மனிதர்களைப்போல" தாம் ஏற்கனவே திட்டமிட்ட காரியங்களை மட்டும் செய்கிறவர்களாக அவர்கள் இருக்கவேண்டும் என்று விரும்பவில்லை. தேவன் நாம் உண்மையாகவே நம்முடைய சுயசித்தத்தை உபயோகப்படுத்தி அவருக்கு சேவை செய்ய வேண்டுமா அல்லது வேண்டாமா என தெரிந்து கொள்வதற்காகத்தான் தீமையை அனுமதித்தார்.*

*வரையறைக்குட்பட்ட மனிதர்களாகிய நாம் வரையறைக்கு அப்பாற்பட்ட எல்லையில்லாத தேவனை நம்மால் முழுவதும் புரிந்து கொள்ள முடியாது (ரோமர் 11:33-34). சில நேரங்களில் நாம் தேவன் ஏன் ஒரு காரியத்தைச் செய்தாரென்று புரிந்துகொண்டதாக நினைக்கிறோம். ஆனால் பின்புதான் அது அவ்வாறாக இல்லை வேறு எண்ணத்துடன் தேவன் அதை செய்திருக்கிறாரென்று புரியும். தேவன் காரியங்களை பரிசுத்தம், நித்தியம் என்ற பார்வையில் தான் பார்க்கிறார். நாமோ பாவத்திலிருந்து உலகப்பிரகாரமான நம்முடைய பார்வையில் பார்க்கிறோம்.*

*ஆதாமும், ஏவாளும் பாவம் செய்து அதனிமித்தம் தீமை, மரணம் மற்றும் வேதனைகள் எல்லா மனுகுலத்தின் மீது வரும் என்று அறிந்தும் ஏன் தேவன் மனிதனை பூமியில் வைக்க வேண்டும்? ஏன் தேவன் நம்மை பரிபூரணமுள்ளவர்களாக சிருஷ்டித்து வேதனை இல்லாத*

இடமாகிய பரலோகத்திலேயே நம்மை வைத்திருக்கக்கூடாது? இந்தக் கேள்விகளுக்கு நித்தியத்திற்கு இப்புறமான இந்நிலையில் இருந்து போதுமான விதத்தில் பதில் கிடைக்காது. நாம் என்ன புரிந்து கொள்ளலாம் என்றால், தேவன் செய்கிற எல்லா காரியங்களும் பரிசுத்தமும், பரிபூரணமும் மற்றும் அவரை மகிமைப்படுத்துகிறதாயும் இருக்கும். தேவன் தீமையை அனுமதித்ததன் நோக்கமே நமக்கு அவரை ஆராதிக்க உண்மையான சுயசித்தத்தை கொடுக்க வேண்டும் என்பதற்காகதான். தேவன் தீமையை உண்டாக்கவில்லை, ஆனால் அனுமதித்தார் அவர் அனுமதித்திராவிட்டால் நாம் அவரை சுயசித்தத்தின்படி ஆராதிக்காமல் கட்டாயத்தின்பேரில்தான் ஆராதித்துக்கொண்டிருந்திருப்போம்.

# *14.* தேவன் புதிய ஏற்பாட்டில் இருப்தைக்காட்டிலும் பழைய ஏற்பாட்டில் ஏன் வித்தியாசமானவராக இருக்கிறார்?

*தேவனுடைய சுபாவதன்மையைக் குறித்து பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்பதைக் குறித்த தவறான புரிதல் கொண்டிருக்கிறபடியினால்தான் இப்படிப்பட்ட கேள்வி எழுகிறது. இதை நாம் வேறு விதமாக சொல்வோமானல் ''பழைய ஏற்பாட்டில் தேவன் கோபத்தின் தேவன், புதிய ஏற்பாட்டின் தேவன் அன்பின் தேவன்''. தேவன் தம்மை படிப்படியாக வரலாற்றின் சம்பவங்கள் மூலமாகவும், வரலாற்றில் மனிதர்களுடன் உண்டான உறவின் அடிப்படையிலும் வெளிப்படுத்தியதால் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தேவனை வேறுவிதமாக தவறாக புரிந்து கொள்ளுகிற வாய்ப்பு உள்ளது. ஆகவே ஒருவர் பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளை படிக்கும்போது, தேவன் இரண்டிலும் வித்யாசமானவர் இல்லையென்றும், அவருடைய கோபமும் அன்பும் இரண்டு ஏற்பாடுகளிலும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.*

*உதாரணமாக, பழைய ஏற்பாடு முழுவதிலும் தேவன் ''கர்த்தர் இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுள்ள தேவன்'' (யாத்திராகமம் 34:6, எண்ணாகமம் 14:18, உபாகம் 4:31 நெகேமியா 9:17, சங்கீதம் 86:5, 15, 108:4, 145:8, யோவே 2:13) புதிய ஏற்பாட்டில் தேவனுடைய அன்பும் இரக்கமும் இன்னும் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' (யோவான் 3:16). பழைய ஏற்பாடு*

*முழுவதிலும் இஸ்ரவேல் ஜனங்களை தேவன் ஒரு அன்பான தகப்பன் தன் பிள்ளையை நடத்துவதுபோல நடத்துவதைப் பார்க்க முடியும். அவர்கள் தங்கள் இஷ்டபடி பாவம் செய்து விக்கிரகங்களை வணங்கும்போதுதான் தேவன் அவர்களை தண்டித்தார். ஆனால் அவர்கள் ஒவ்வொருமுறையும் விக்கிரகங்களை விட்டு மனந்திரும்பும்போது அவர்களை விடுவித்தார். இதேபோன்றுதான் புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவர்களையும் தேவன் நடத்துகின்றார். உதாரணமாக எபிரேயர் 12:6 இப்படியாகச் சொல்கிறது, ''கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூறுகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்''*

*இதைப்போலவே பழைய ஏற்பாடு முழுவதிலும் நாம் தேவனுடைய நியாத்தீர்ப்பையும் கோபாக்கினையும் பாவத்தின் மீது ஊற்றப்பட்டதையும் பார்க்கிறோம். அதைப்போலவே புதிய ஏற்பாட்டிலும் தேவனுடைய கோபம் வெளிப்படுகிறது. ''சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கி வைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும், அநியாயத்துக்கும் விரோமாய் தேவக்கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப் பட்டிருக்கிறது''. (ரோமர் 1:18). இதிலிருந்து பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தேவன் வித்தியாசமானவரல்ல என்று தெளிவாகத்தெரிகிறது. தேவனுடைய சுபாவமே அவர் மாறாதவர். நம் வேதவாக்கியங்களில் தேவனுடைய பண்புகளில் ஒரு சுபாவம் மற்றவற்றைக்காட்டிலும் அதிகமாக வெளிப்படுத்தப்படுகிறது, ஆனால் தேவன், அவர் மாறாதவர்.*

*நாம் வேதத்தை படித்து தியானிக்கும்போது, தேவன் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் மாறாதவராயிருக்கிறார் என்பது தெளிவாகிறது. வேதாகம் 66 புத்தகங்களின் தொகுப்பாக, இரண்டு அல்லது மூன்று கண்டங்களில் மூன்று வித்தியாசமான மொழிகளில், சுமார் 1500 வருடங்களாக 40 நபர்களால் எழுதப்பட்டிருந்தபோதிலும், இது தனித்துவம் வாய்ந்ததாகவும் தன்னில்தான் முரண்பாடு எதுவும்*

*இல்லாமல் இருக்கிறது. இதில் எப்படி தேவன் பாவத்திலிருக்கும் மனிதர்களை அன்பும், இரக்கமும், நியாயமுமுள்ள தேவன் நடத்துகிறார் என்று பார்க்கிறோம். மெய்யாகவே வேதாகமம் மனுக்குலத்திற்கு தேவனுடைய அன்பின் கடிதமாக இருக்கிறது. தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பான மனுக்குலத்தின் மீது வைத்திருக்கிற அன்பு எல்லா தேவவாக்கியங்களிலும் தெளிவாக விளங்குகிறது. வேதாகமம் முழுவதிலும் தேவன் மனிதர்களை தன்னுடனான விசேஷித்த உறவிற்கு அவர்களுக்கு தகுதியில்லை என்கிறபோதிலும் அவருடைய இரக்கத்தினாலும் அன்பினாலும் அழைத்திருக்கிறார். இன்னும் நாம் அவரை பரிசுத்தரும், நீதிபரருமான தேவனாகவும், அவருடைய வார்த்தையைக் கீழ்படியாதவர்கள் யாவரையும் நியாயந்தீர்கிறவராயும் மட்டுமே பார்க்கிறோம் (ரோமர் 1).*

*தேவனுடைய நீதி மற்றும் பரிசுத்தத்தினால் எல்லா பாவங்களும் – அதாவது இறந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால பாவங்களும் நியாயந்தீர்க்கப்பட வேண்டும். ஆனாலும் தேவன் அவருடைய அளவில்லாத அன்பினிமித்தம் பாவத்திற்கு ஒரு பரிகாரமும், ஒப்புரவாக்குதலுக்கும் பாவத்திலிருக்கிற மனிதன் கோபாக்கினையிலிருந்து தப்பிக்க ஒரு வழியையும் ஏற்படுத்தியிருக்கிறார். இதை 1 யோவன் 4:10 ''நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது'' என்று பார்க்கிறோம். பழைய ஏற்பாட்டிலும் பாவத்திற்கு ஒரு பலி செலுத்தும் முறைமையைக் கொடுத்து பாவத்திலிருந்து மீட்கப்பட்ட ஒரு வழியை உண்டுபண்ணினார். எனினும் இந்த முறைமை ஒரு தற்காலிகமானதாகும், இயேசு கிறிஸ்து வந்து சிலுவையில் மரித்து மீட்புக்கான முழுமையான வழியை உண்டுபண்ணுவதற்காக எதிர்பார்த்திருந்தது. பழைய ஏற்பாட்டில் வாக்குப்பண்ணபட்ட ஒரு இரட்சகர் புதிய ஏற்பாட்டில் முழுமையாக வெளிப்படுத்தப்பட்டார்.*

*பழைய ஏற்பாட்டில் தரிசனமாக இருந்தது, புதிய ஏற்பாட்டில் தேவனுடைய அன்பின் மொத்த வெளிப்பாடு தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவில் எல்லா மகிமையும் வெளிப்படுத்தப்பட்டது. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் (2திமோ.3:15) ''இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்கதாக'' கொடுக்கப் பட்டிருக்கிறது. இவைகளை நாம் கூர்ந்து படிக்கும்போது நமக்கு ஒரு காரியம் தெளிவாகிறது. ''அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை'' (யாக்கோபு 1:17).*

# 15. தேவன் அன்பாக இருக்கிறார் என்பதன் அர்த்தம் என்ன?

*வேதாகமம் எப்படி அன்பை விளக்குகிறது என்று பார்ப்போம், பிறகு தேவனுடைய அன்பின் சாரத்தைக் குறித்து சில காரியங்களை பார்ப்போம். "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அன்புக்குப் பொறாமையில்லை, அன்பு தன்னை புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதை செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது" (1 கொரிந்தியர் 13:4-8a). இதுதான் அன்பைக்குறித்த தேவனுடைய விளக்கம். ஏனென்றால் தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவான் 4:8), அவர் அப்படியே இருக்கிறார்.*

*அன்பு (தேவன்) யாரையும் வற்புறுத்தாது. அப்படி அவரிடத்தில் வருகிறவர்கள் அவருடைய அன்பிற்கு இணங்கி வருகிறார்கள். அன்பு (தேவன்) எல்லாருக்கும் தயவைக் காண்பிக்கிறது. அன்பு (இயேசு) எல்லாருக்கும் பட்சபாதம் இல்லாமல் நன்மை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார். அன்பு (இயேசு) மற்றவர்களை அபகரிக்கவில்லை. முறுமுறுக்காமல் தாழ்மையான வாழ்வை வாழ்ந்தார். அன்பு (இயேசு) தான் மாம்சத்தில் வெளிப்பட்ட விஷயத்தில் தற்புகழ்ச்சியை நாடாமல் தான் எதிர்கொண்ட ஒருவரையும் ஆளவும்நினைக்கவில்லை. அன்பு (தேவன்) கீழ்படிந்தேயாக வேண்டும் என்று ஒருவரையும் கட்டாயப்படுத்தாது. தேவன் குமாரனை கீழ்படியும்படி கட்டாயப்படுத்தாமலேயே, இயேசு முழுமனதோடு பிதாவிற்கு கீழ்படிந்தார். "நான் பிதாவில் அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்கு கட்டளையிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம்*

*அறியும்படிக்கு" (யோவான் 14:31). அன்பு (இயேசு) இப்போதும் எப்போதும் பிறருடைய நலனையே நினைத்துக் கொண்டிருந்தார்.*

தேவனுடைய *மிகச்சிறந்த அன்பின் வெளிப்பாட்டை யோவான் 3:16ல் காண்கிறோம் (யோவான் 3:16):* "தேவன் *தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுக்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்". ரோமா 5:8ல்* இதே *கருத்து சொல்லப்பட்டுள்ளது, "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே* தேவன் *நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்".* இந்த *வசனங்களிலிருந்து* தேவனுடைய *பெரிதான விருப்பமே நாம் அவருடைய நித்திய வீடாகிய பரலோகத்தில் அவருடன்* சேரவேண்டும் *என்பது தான். அதற்காக ஒரு விலைக்கிரயத்தைச் செலுத்தி ஒரு வழியை உண்டாக்கி வைத்திருக்கிறார். அவர் நம்மை* நேசிக்கிறது *எதற்கென்றால், அவருடைய சித்தத்தின்படி அவர் செய்ய நினைப்பதால்தான். அன்பு மன்னிக்கும். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவான் 1:9).*

*அப்படியானால்,* தேவன் *அன்பாகவே* இருக்கிறார் *என்பதன் அர்த்தம் என்ன? அன்பு* தேவனுடைய *ஒரு பண்பாக* இருக்கிறது. *அவருடைய பண்பு மற்றும் ஆள்தத்துவத்தின் மையமே அன்புதான்.* தேவனுடைய *அன்புக்கும் பரிசுத்தத்திற்கும், நீதிக்கும், நியாயத்திற்கும்,* கோபத்திற்கும் *எந்த ஒரு* வேற்றுமையும் இல்லை. தேவன் *செய்கிற எல்லாமே அன்பினிமித்தமே,* அதேபோல *அவர் நீதியாகவும் நியாயமாகவும் செய்கிறார். உண்மையான அன்பிற்கு உதாரணம்* தேவன் *மட்டுமே! வியக்கத்தக்கவிதமாக* தேவன் *அவருடைய குமாரனாகிய* இயேசுவை *சொந்த இரட்சகராக ஏற்றுக்*

*கொள்கிறவர்களுக்கும் பரிசுத்த ஆவியினாலே அதே அன்போடு நேசிக்க பெலத்தைக் கொடுத்திருக்கிறார் (யோவான் 1:12; 1 யோவான் 3:1, 23-24).*

# *16.* இன்றும் தேவன் நம்மோடு பேசுகிறாரா?

*வேதாகமம் தேவன் மனிதர்களிடம் கேட்கத்தக்க நிலையில் பேசுகிறதை அநேக இடங்களில் பதிவு செய்திருக்கிறது. (யாத்திராகமம் 3:14, யோசுவா 1:1, நியாயாதிபதிகள் 6:18, 1 சாமுவேல் 3:11, 2 சாமுவேல் 2:1, யோபு 40:1, ஏசாயா 7:3, எரேமியா 1:7, அப்போஸ்தலர் நடபடிகள் 8,26, 9:15 - இவை சிறிய மாதிரிகள்தான்). மனிதனுடன் தேவன் பேசமுடியாமல் போவதற்கான, வேதாகமத்தின்படியான காரணங்கள் இல்லை. நூற்றுக்கும் அதிகமான இடங்களில் தேவன் பேசுகிறதை வேதாகமம் பதிவு செய்துள்ளது. மனிதர்களின் வரலாற்றில் ஏறக்குறைய 4000 வருடங்களாக இவை நடக்கிறது. தேவன் கேட்கத்தக்கதாக எல்லா நேரத்திலும் பேச வேண்டும் என்ற அவசியம் கிடையாது. வேதாகமத்தில் தேவன் பேசியதாக பதிவு செய்யப்பட்ட இடங்களில், அது கேட்கத்தக்க சத்தமாக இருந்ததா, உள்மனதின் சத்தமாக இருந்ததா, அல்லது ஒரு ஒரு உள்ளுணர்வாக இருந்ததா என்பது தெளிவாக இல்லை.*

*தேவன் இன்றும் மனிதர்களோடு பேசுகிறார். முதலாவது தேவன் நம்மோடு அவருடைய வார்த்தையின் மூலமாக பேசுகிறார். (2 திமோத்தேயு 3:16,17) ஏசாயா 55:11 இப்படிக் கூறுகிறது "அந்தபடியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல் அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்". வேதாகமம் என்பது தேவனுடைய வார்த்தை, நாம் இரட்சிக்கப்படுவதற்கும், கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கும் தேவையான அனைத்தும் அதில் அடங்கியிருக்கிறது. 2 பேதுரு1:3 இப்படியாகக் கூறுகிறது, "தம்முடைய மகிமையினாலும் காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது தந்தருளினதுமன்றி".*

தேவன் சம்பவங்கள் மூலமாகவும் நம்மோடு "பேசுகிறார்" – அதாவது நம்முடைய சூழ்நிலைகளை சரிசெய்து நடத்துவதன் மூலமாகவும் பேசுகிறார். தேவன் நம்முடைய மனசாட்சியின் மூலமாக சரியான மற்றும் தவறான காரியங்களை நிதானிக்க உதவுகிறார் (1 திமோத்தேயு 1:5, 1 பேதுரு 3:16). தேவன் நம்முடைய மனதை அவருடைய நினைவுகளுக்கு ஒத்ததாக மாற்றுகிற காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறார் (ரோமர் 12:2). தேவன் சில காரியங்களை நம்முடைய வாழ்க்கையில் அனுமதித்து நம்மை மாற்றி ஆவிக்குரிய வளர்ச்சியில் நடத்துகிறார் (யாக்கோபு 1:2-5, எபிரேயர் 12:5-11). 1 பேதுரு 1:6-7 "இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்".

தேவன் சில நேரங்களில் ஜனங்களோடு சத்தமாகப் பேசலாம். இது சந்தேகத்திற்குரியதுதான். ஆனால் அநேக மக்கள் இப்படி நடக்கிறது என்று கூறுகிறார்கள். வேதாகமத்தில் தேவன் சில நேரங்களில்தான் சத்தமாக பேசுகிறார். தேவன் பேசினார் என்று யாராவது சொல்லுகின்ற பட்சத்தில், அதை வேதத்தின் அடிப்படையிலானதா? என்று நிதானியுங்கள். இன்று தேவன் பேசுவாரானால், அவருடைய வார்த்தைக்கு ஒத்ததாகவும், வேதாகமத்தின் அடிப்படையிலும்தான் இருக்கும். (2 தீமோத்தேயு 3:14). தேவன் தனக்குதானே முரண்படமாட்டார்.

# 17. தேவனுக்குப் பயப்படுதல் என்றால் என்ன?

*அவிசுவாசிக்கு, தேவனுக்குப் பயப்படுவது என்பது தேவனுடைய நியாயத்தீர்ப்பிற்கு மற்றும் நித்திய மரணத்திற்கு, அதாவது தேவனிடமிருந்து நித்தியமான பிரிவினைக்கு பயப்படுதல் ஆகும் (லூக்கா 12:5; எபிரெயர் 10:31). விசுவாசிக்கு, தேவனுக்கு பயப்படுதல் என்பது மிகவும் வித்தியாசமானது ஆகும். விசுவாசியின் பயம் தேவனுக்குப் பயபக்தியுடன் உள்ளதாகும். எபிரேயர் 12: 28-29 வரையிலுள்ள வசனங்கள் இதற்கு ஒரு நல்ல விளக்கம் அளிக்கிறது: "ஆதலால், அசைவில்லாத ராஜ்யத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்ளக்கடவோம். நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே." இந்த பயபக்தியும் வியப்பும் தான் கிறிஸ்தவர்களுக்கு தேவனுக்குப் பயப்படுதல் என்பதன் பொருள் ஆகும். இது இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டிகருக்கு சரணடைவதற்கு ஒரு உந்துதல் காரணியாக இருக்கிறது.*

*நீதிமொழிகள் 1:7 இவ்வாறு விளம்புகிறது: "கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்." தேவன் யார் என்பதை நாம் புரிந்துகொண்டு அவருக்கு பயபக்தியாக இருக்கும் சுபாவத்தை வளர்த்துக்கொள்ளும் வரையில் உண்மையான ஞானம் நமக்கு இருக்காது. உண்மையான ஞானம் தேவன் யார் என்று புரிந்துகொள்ளுதலில் இருக்கிறது, அதாவது அவர் பரிசுத்தமானவர், நீதியுள்ளவர், மற்றும் நீதிபரர் என்பதாலேயே வருகிறது. உபாகமம் 10:12, 20-21 குறிப்பிடுகிறது, "இப்பொழுதும் இஸ்ரவேலே, நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளிலெல்லாம் நடந்து, அவரிடத்தில் அன்புகூர்ந்து, உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் தேவனாகிய கர்த்தரைச் சேவித்து, உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவரைச் சேவித்து, அவரைப்*

*பற்றிக்கொண்டிருந்து, அவருடைய நாமத்தைக்கொண்டு ஆணையிடுவாயாக. அவரே உன் புகழ்ச்சி; உன் கண் கண்ட இந்தப் பெரிய பயங்கரமான காரியங்களை உன்னிடத்தில் செய்த உன் தேவன் அவரே.'' தேவனுக்கு பயப்படுகிற பயம் அவரது வழிகளில் நடந்து, அவரைச் சேவித்து, ஆம், அவரில் அன்பு கூறுவதற்கு அடிஸ்தானமாக இருக்கிறது.*

*சிலர் விசுவாசிகளுக்கு தேவனுக்குப் பயப்படுதல் என்பது அவருக்கு "மரியாதை" செலுத்தவேண்டும் என்று புதிய வரையறையைக் கொண்டுவருகிறார்கள். தேவனுக்குப் பயப்படுங்காரியத்தில் மரியாதை நிச்சயமாக உட்பட்டிருக்கிறது என்கிறபோதிலும், அதை விட இன்னும் அதிகமாக அதில் உள்ளது. ஒரு வேதாகம தேவ பயம், விசுவாசிக்கு, தேவன் எந்த அளவிற்கு பாவத்தை வெறுக்கிறார் மற்றும் பாவத்தின் மீதுள்ள அவரது நியாயத்தீர்ப்புக்கு அஞ்சுதல் ஆகும் - இது ஒரு விசுவாசி வாழ்க்கையில் கூட பொருந்தும். எபிரெயர் 12:5-11-ல், விசுவாசியை தேவன் சிட்சை அளித்து திருத்துகிற செயலை விவரிக்கிறது. இது அன்பில் செய்யப்படும் போதும்கூட (எபிரெயர் 12:6), அது இன்னும் ஒரு பயமான காரியமாக இருக்கிறது. பிள்ளைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து ஒழுக்க நடவடிக்கை எடுக்கும்போது, இருக்கிற பயம் அவர்களை சில தீய செயல்களை செய்வதிலிருந்து தடுக்கிறது என்பதில் சந்தேகமில்லை. தேவனோடு நமக்குள்ள உறவில் இதுவே உண்மையாயிருக்கிறது. அவருடைய சிட்சைக்கு நாம் பயந்து, அவரைப் பிரியப்படுத்தும் விதத்தில் நம் வாழ்க்கையை வாழ முயலவேண்டும்.*

*விசுவாசிகள் தேவனைக்கண்டு திகிலடைவதில்லை. அவரைக்கண்டு நாம் திகிலடைவதற்கு ஒரு காரணமும் இல்லை. அவருடைய அன்பிலிருந்து எதுவும் நம்மை பிரிக்க முடியாது என்கிற அவருடைய வாக்குறுதியைப் பெற்றுள்ளோம் (ரோமர் 8:38-39). அவர் நம்மை ஒருபோதும் விட்டு விலகமாட்டார் அல்லது நம்மைக் கைவிட மாட்டார் என்கிற அவருடைய வாக்குறுதியைப் பெற்றிருக்கிறோம்*

*(எபிரெயர் 13:5). தேவனுக்குப் பயப்படுவது என்பது, நாம் அவர்மேல் கொண்டிருக்கிற பயம், நம் வாழ்வை நாம் வாழ்கிற விதத்தில் அது பெரும் பாதிப்பைக் கொண்டிருப்பதைக் குறிக்கிறது. தேவனுக்கு பயப்படுகிற பயம் அவருக்கு மரியாதையையும், அவருக்கு கீழ்ப்படிந்து இருப்பதையும், அவரது சீர்பொருந்தும் ஒழுக்க நடவடிக்கைக்கு பரிபூரணமாக சமர்ப்பித்ததையும், மற்றும் பிரமிப்பில் அவரை வணங்கி நமஸ்கரிப்பதையும் காண்பிக்கிறது.*

# 18. தேவன் அவரது மனதை மாற்றிக்கொள்கிறாரா?

*மல்கியா 3:6 அறிவிக்கிறது: "நான் கர்த்தர் நான் மாறாதவர்; ஆகையால் யாக்கோபின் புத்திரராகிய நீங்கள் நிர்மூலமாகவில்லை." இதேபோல், யாக்கோபு 1:17 நமக்கு சொல்லுகிறது, "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை." இதை எண்ணாகமம் 23:19 இன்னும் தெளிவாக்குகிறது: "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா?" இந்த வசனங்களின் அடிப்படையில், இல்லை, தேவன் மாறமாட்டார். தேவன் மாறாதவரும் மாறக்கூடாதவருமாக இருக்கிறார். அவர் சர்வ ஞானமுள்ளவராகவும் இருக்கிறார். எனவே, அவர் தவறு செய்து, அது தவறு என்று அறிந்து பிறகு அதிலிருந்து பின்மாறி ஒரு புதிய முயற்சி செய்வதன் மூலம் அவர் தனது "மனதை மாற்றிக் கொள்ளவேண்டிய" அவசியம் இல்லை அப்படி செய்யவும் கூடாது.*

*அப்படியானால், தேவன் அவருடைய மனதை மாற்றிக்கொள்ளுகிறார் என்று சொல்லும் வசனங்களை நாம் எவ்வாறு விளக்குவது? ஆதியாகமம் 6:6 போன்ற வசனங்கள், "தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது." மேலும், யாத்திராகமம் 32:14 கூறுகிறது: "அப்பொழுது கர்த்தர் தமது ஜனங்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்குப் பரிதாபங்கொண்டார்." இந்த வசனங்கள் தேவன் சிலவற்றிலிருந்து "மனந்திரும்பினார்" அல்லது*

“பரிதாபங்கொண்டார்” என்று சொல்லுகிறது, தேவன் மாறாதவராக இருக்கிறார் என்கிற உபதேசத்திற்கு முரண்பாடாகத் தோன்றுகிறது.

தேவன் அவரது மனதை மாற்றிக்கொள்ளுவதாக காண்பித்து பயன்படுத்தப்படுகிற மற்றொரு வேதபாகம் யோனாவின் கதையாகும். தேவன் நினிவேக்கு எதிராக அவர் தீர்க்கதரிசி மூலம் இன்னும் நாற்பதுநாள் உண்டு; அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று சொன்னார் (யோனா 3:4). எனினும், நினிவே பட்டணத்தார் அவர்களுடைய பாவங்களை விட்டு மனந்திரும்பினார்கள் (வசனங்கள் 5-9). அசீரியர்களின் மனந்திரும்புதலுக்கு பதிலளிக்கும் விதமாக தேவன் மனஸ்தாபப்பட்டார்: “அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக்குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்” (வசனம் 10).

தேவன் அவரது மனதை மாற்றிகொண்டார் என்று கருதப்படுகின்ற பத்திகளைக் குறித்து இரண்டு முக்கிய கருத்துக்கள் உள்ளன. முதலாவதாக, “தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்” (ஆதியாகமம் 6:6) போன்ற வார்த்தைகள், மனிதர்களுடைய உணர்ச்சிகளை தேவனுடைய உணர்வுகளை அறிந்து கொள்ளுவதற்காக கற்ப்பிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதற்கு எடுத்துக்காட்டுகளாகும். மனித இனத்தின் உணர்வுகள் அல்லது சிந்தனை செயல்முறைகள் எல்லையற்ற தேவனைக் குறிப்பிடுவதற்கு மாந்தவுருவகமாக பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரு மனிதனின் கண்ணோட்டத்தில் தேவனுடைய செயல்களைப் புரிந்துகொள்வதற்கு உதவ இது ஒரு வழியாகும். குறிப்பாக ஆதியாகமம் 6:6-ல், மனிதனின் பாவத்தின் மீது தேவனுடைய துக்கத்தை நாம் புரிந்துகொள்கிறோம். இந்த இடத்தில் தேவன் வெளிப்படையான நிலையில் மனிதன் மீண்டுமாக சிருஷ்டிக்க அவரது முடிவை தலைகீழாக

மாற்றிக்கொள்ளவில்லை. இன்று நாம் உயிருடன் இருக்கிறோம் என்கிற உண்மையானது, தேவன் தமது "மனதை மாற்றிக்கொள்ளவில்லை" என்பதற்கான அத்தாட்சியாக இருக்கிறது.

இரண்டாவதாக, தேவனுடைய நிபந்தனையுள்ள அறிவிப்புகளுக்கும் மற்றும் தேவனுடைய நிபந்தனையற்ற தீர்மானங்களுக்கும் இடையில் ஒரு வேறுபாட்டை நாம் உருவாக்கவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், "இன்னும் நாற்பதுநாள் உண்டு; அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்" என்று தேவன் சொன்னபோது, அவர் அசீரியர்களின் மறுபடியின்மீது நிபந்தனையுடன் பேசினார். அசீரியர்கள் மனந்திரும்பியபடியால், தேவன் கூறியதைச் செய்யவில்லை என்பது நமக்கு தெரியும், உண்மையில், நியாயத்தீர்ப்பை முன்னெடுக்கப்பட்டுள்ளது நமக்கு தெரியும். தேவன் அவரது மனதை மாற்றிக்கொள்ளவில்லை; மாறாக, நினிவேக்கு அவருடைய செய்தி மனந்திரும்புதலைத் தூண்டும் ஒரு எச்சரிக்கையாக இருந்தது, அவருடைய எச்சரிக்கை வெற்றிகரமாக இருந்தது.

தேவன் நிபந்தனையற்ற அறிவிப்பிற்கு ஒரு உதாரணம் தாவீதுக்கு தேவன் அளித்த வாக்குறுதி, "உன் வீடும், உன் ராஜ்யமும், என்றென்றைக்கும் உனக்கு முன்பாக ஸ்திரப்பட்டிருக்கும்; உன் ராஜாசனம் என்றென்றைக்கும் நிலைபெற்றிருக்கும்" (2 சாமுவேல் 7:16). இந்த அறிவிப்பில் எந்தொரு தகுதியும் வெளிப்படுத்தப்படவுமில்லை அல்லது உட்படுத்தப்படவுமில்லை. தாவீது என்ன செய்தாலும் அல்லது செய்யாவிட்டாலும் கர்த்தருடைய வார்த்தை நிறைவேறும்.

தேவன் அவருடைய அறிவிப்புகளின் சில எச்சரிக்கைகள் மற்றும் அவர் நமது விருப்பங்களுக்கேற்ப செயல்படுவார் என்கிற உண்மையையும் நமக்கு சொல்லுகிறார்: "பிடுங்குவேன், இடிப்பேன், அழிப்பேன் என்று நான் ஒரு ஜாதிக்கு விரோதமாகவும், ஒரு

*ராஜ்யத்துக்கு விரோதமாகவும் சொன்னமாத்திரத்தில், நான் விரோதமாய் பேசின அந்த ஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால், நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன். கட்டுவேன், நாட்டுவேன் என்றும், ஒரு ஜாதியையும் ஒரு ராஜ்யத்தையும் குறித்து நான் சொல்லுகிறதுமுண்டு. அவர்கள் என் சத்தத்தைக்கேளாமல், என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால், நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாதபடிக்கு மனம் மாறுவேன். இப்பொழுதும், நீ யூதாவின் மனுஷரையும் எருசலேமின் குடிகளையும் நோக்கி: இதோ, நான் உங்களுக்கு விரோதமாக ஒரு தீங்கை உருவப்படுத்தி, உங்களுக்கு விரோதமாக ஒரு காரியத்தை யோசிக்கிறேன்; ஆகையால், உங்களில் ஒவ்வொருவரும் தன் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பி, உங்கள் வழிகளையும், உங்கள் கிரியைகளையும் சீர்ப்படுத்துங்கள் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல" (எரேமியா 18:7-11). நிபந்தனையுள்ள சொல்லாகிய "என்றால்" (னால்) என்பதை கவனியுங்கள்: "அந்த ஜாதியார் தங்கள் தீங்கைவிட்டுத் திரும்பினால்" [யோனா 3-ஆம் அதிகாரத்தில் அசீரியாவைப்போல்]... நானும் அவர்களுக்குச் செய்ய நினைத்த தீங்கைச் செய்யாதபடிக்கு, மனம் மாறுவேன். மாறாக, தேவன் அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று ஒரு தேசத்திடம் சொல்லலாம், ஆனால் "அவர்கள் தேவனுடைய சத்தத்தைக்கேளாமல், அவர் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்வார்களானால்" [மீகா 1-ஆம் அதிகாரத்தில் இஸ்ரவேலைப் போல]..."நானும் அவர்களுக்கு அருள்செய்வேன் என்று சொன்ன நன்மையைச் செய்யாதபடிக்கு மனம் மாறுவேன்."*

*அடிவரை என்னவென்றால் தேவன் எப்பொழுதும் முற்றிலும் சீரான நிலையில் இருக்கிறார். அவருடைய பரிசுத்தத்தின்படி, தேவன் நினிவே பட்டிணத்தை நியாயந்தீர்க்கப் போகிறார். எனினும், நினிவே மனந்திரும்பி அதன் வழிகளை விட்டு மாறினது. இதன் விளைவாக,*

*தேவன், அவரது பரிசுத்தத்தில், நினிவே மீது இரக்கம் காண்பித்து அவர்களை அழித்துப்போடாமல் காப்பாற்றினார். இந்த "மனதை மாற்றுவது" அவருடைய பண்புடன் முற்றிலும் ஒத்திருக்கிறது. அவரது பரிசுத்தத்தன்மையில் ஒரு ஐயோட்டா (iota) அளவுபோலும் தடுமாற்றம் ஏற்படவில்லை.*

*நம்முடைய விருப்பங்களை பிரதிபலிப்பதன் மூலம் தேவன் தம்மை மாற்றிக்கொள்கிறார் என்கிற உண்மை அவருடைய தன்மைக்கு ஒருபோதும் ஒன்றும் இழைப்பதில்லை. உண்மையில், தேவன் மாறாதவராக இருக்கிறபடியால், அநீதியுள்ளவர்களிடமிருந்து நீதிமான்களை அவர் வித்தியாசமாக நடத்த வேண்டும். யாராவது மனந்திரும்பினால், தேவன் தொடர்ந்து மன்னிக்கிறார்; ஒருவர் மனந்திரும்ப மறுத்தால், தேவன் தொடர்ந்து நியாயந்தீர்க்கிறார். அவர் அவருடைய சுபாவம், அவரது திட்டம், மற்றும் அவரது இருக்கும் தன்மையில் மாறாமல் இருக்கிறார். அவர் நருங்குண்டவர்களால் ஒரு நாள் பிரியமுடனும் நருங்குண்டவர்களால் அடுத்த நாள் கோபமாகவும் அவரால் இருக்க முடியாது. அப்படியிருந்தால், அது அவரை மாறக்கூடிய மற்றும் நம்பத்தகாதவர் என்றே காண்பிக்கும். தேவன் நினிவேயிடம், "நான் உன்னை நியாயந்தீர்க்கப் போகிறேன்" என்று சொல்லிவிட்டு, பின்னர் (அவர்கள் மனந்திரும்பிய பிறகு) அவர்களை நியாயந்தீர்க்காமல் மறுக்கும் செயல் தேவன் அவரது மனதை மாற்றிகொண்டார் என்பதுபோல் இருக்கலாம். உண்மையில், தேவன் வெறுமனே அவரது பண்பிற்கு ஏற்றபடி உண்மையான நிலையிலே தங்கியிருக்கிறார். அவர் இரக்கத்தை நேசித்து நொறுங்குண்டவர்களை மன்னிக்கிறார். "தேவன் இரக்கஞ்செய்ய மறந்தாரோ?" (சங்கீதம் 77:9). பதில், இல்லை.*

*ஒரு சமயத்தில் நாம் நமது பாவத்தின் காரணமாக தேவனுக்கு எதிரிகளாக இருந்தோம் (ரோமர் 8:7). பாவத்தின் சம்பளத்தை எடுத்துரைத்து (ரோமர் 6:23) நம்மை மனந்திரும்பும்படி தேவன் எச்சரித்தார். நாம் மனந்திரும்பி, இரட்சிப்புக்காக கிறிஸ்துவை*

நம்பியபோது, தேவன் நமக்கு செய்யவேண்டியதை செய்யாமல் "அவருடைய மனதை மாற்றிக்கொண்டார்", இப்போது நாம் அவருக்கு எதிரிகள் அல்ல, மாறாக அவருடைய அன்பான பிள்ளைகளாக இருக்கிறோம் (யோவான் 1:12). நாம் நமது பாவத்தில் தொடர்ந்திருந்தால் நம்மை தண்டிக்காமல் இருப்பது தேவனுடைய குணாதிசயத்திற்கு முரணாக இருப்பதுபோல, நாம் நமது பாவத்திலிருந்து மனந்திரும்பிய பிறகு நம்மை தேவன் தண்டிப்பதும் அவருடைய குணாதிசயத்திற்கு முரணாக இருக்கும். நம்முடைய மனதை மாற்றிக்கொள்ளுவது தேவனை மாற்றுவதாக அர்த்தப்படுத்துகிறதா? இல்லை, ஏதாவது இருந்தால், நம்முடைய இரட்சிப்பு தேவன் மாறாதவர் என்கிற உண்மையை சுட்டிக்காட்டுகிறது, ஏனென்றால், கிறிஸ்துவின் நிமித்தமாக அவர் நம்மைக் காப்பாற்றவில்லையென்றால், அவர் தமது பண்பிற்கு முரணாக இருந்திருப்பார்.

# *19.* தேவன் எல்லோரையும் நேசிக்கிறாரா அல்லது கிறிஸ்தவர்களை மட்டும் நேசிக்கிறாரா?

*ஒரு வகையில் பார்த்தோமானால் உலகிலுள்ள அனைவரையும் தேவன் நேசிக்கிறார் (யோவான் 3:16; 1 யோவான் 2:2; ரோமர் 5:8). இந்த அன்பு நிபந்தனையுள்ளதல்ல - அது தேவனுடைய குணாதிசயமாக இருக்கிறது, அதன் அடிப்படையில் அவர் ஒரு அன்பின் தேவனாக இருக்கிறார் (1 யோவான் 4:8, 16). எல்லோருக்கும் தேவனுடைய அன்பு இருக்கிறது என்பது அவருடைய "இரக்கமுள்ள அன்பாக" கருதப்படுகிறது, ஏனென்றால் தேவன் உடனடியாக ஜனங்களை அவர்களுடைய பாவங்களுக்காக தண்டிக்கவில்லை என்கிற சத்தியத்தைக் காண்பிக்கிறது (ரோமர் 3:23; 6:23). "பரலோகத்திலிருக்கிற உங்கள் பரம பிதா...தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்" (மத்தேயு 5:45). இது அனைவருக்குமுள்ள தேவனுடைய அன்பின் மற்றொரு உதாரணம் - அவருடைய இரக்கமுள்ள அன்பு, அவருடைய தாராளமான இரக்கத்தை அனைவருக்கும் நீட்டிகிறார், கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல.*

*உலகின்மேல் இருக்கிற தேவனுடைய இரக்கமுள்ள அன்பு, தேவன் அவர்கள் மனந்திரும்ப வாய்ப்பு கொடுக்கிறது என்பதை வெளிப்படுத்தப்பட்டுள்ளது: "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேதுரு 3:9). தேவனுடைய நிபந்தனையற்ற அன்பு இரட்சிப்பிற்காக அவரது பொதுவான அழைப்புடன் தொடர்புள்ளதாகவும் மற்றும் பெரும்பாலும் அவரால்*

அனுமதிக்கப்பட்ட அல்லது பரிபூரண சித்தம் - அது அவரது விருப்பம் என்னவென்பதை வரையறுக்கிறதாகவும் மற்றும் அவரது சுபாவத்தை வெளிப்படுத்துகிறதுமான தேவனுடைய சித்தத்தின் அம்சமாக இருக்கிறது.

இருப்பினும், தேவனுடைய அன்பு அனைவருக்கும் உள்ளது என்பதற்காக எல்லோரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று அர்த்தமில்லை (மத்தேயு 25:46). தேவன் பாவத்தை கண்டுகொள்ளாமல் விட்டுவிட மாட்டார், ஏனென்றால் அவர் நீதியுள்ள தேவனாக இருக்கிறார் (2 தெசலோனிக்கேயர் 1:6). பாவம் என்றென்றைக்குமாய் தண்டனைப்பெறாமல் போவதில்லை (ரோமர் 3:25-26). தேவன் வெறுமனே பாவத்தை ஒரு பொருட்டாக கருதாமல் புறக்கணித்து அதை நிரந்தரமாக விட்டு பேரழிவை தொடர்ந்து அனுமதிப்பாரானால், அவர் அன்புள்ளவராக இருக்கமுடியாது. தேவனுடைய இரக்கமுள்ள அன்பை புறக்கணித்து, கிறிஸ்துவை நிராகரித்து அல்லது நம்மை இரட்சிக்கிற இரட்சகரை மறுதலிக்கும் (2 பேதுரு 2:1) செயல் நித்தியமாக தேவனுடைய கோபத்திற்கு நம்மை கீழ்ப்படுத்துகிறோம் (ரோமர் 1:18), அவருடைய அன்பிற்கு அல்ல.

பாவிகளை நீதிமானாக்கும் தேவனுடைய அன்பு எல்லோருக்கும் நீட்டிக்கப்படவில்லை, அது இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறவர்களுக்கு மட்டுமே (ரோமர் 5:1). ஜனங்களை தம்மோடு நெருக்கமாக உள்ள தொடர்பிற்கு கொண்டுவருகிற தேவனுடைய அன்பு எல்லோருக்கும் நீட்டிக்கப்படாது, அது தேவனுடைய குமாரனை நேசிக்கிறவர்களுக்கு மட்டுமே (யோவான் 14:21). இந்த அன்பை தேவனுடைய "உடன்படிக்கையின் அன்பாக" கருதலாம், அதாவது இயேசுவின் இரட்சிப்புக்காக அவரில் விசுவாசம் வைப்பவர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட நிபந்தனை இதிலடங்கும் (யோவான் 3:36). கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசிக்கிறவர்கள் நிபந்தனையற்ற, பாதுகாப்பான, என்றென்றுமுள்ள நேசத்தால் நேசிக்கப்படுகிறார்கள்.

*தேவன் எல்லோரையும் நேசிக்கிறாரா? ஆம், அவர் எல்லோருக்கும் தமது இரக்கம் மற்றும் கருணையைக் காண்பிக்கிறார். தேவன் கிறிஸ்தவரல்லாதவர்களை நேசிப்பதைக்காட்டிலும் கிறிஸ்தவர்களை அதிகம் நேசிக்கிறாரா? அவருடைய இரக்கமுள்ள அன்பைப் பொறுத்தமட்டில், இல்லை. தேவன் கிறிஸ்தவரல்லாதவர்களை நேசிப்பதைப்போலில்லாமல் கிறிஸ்தவர்களை வேறு விதத்தில் நேசிக்கிறாரா? ஆம்; விசுவாசிகள் தேவனுடைய குமாரனில் தங்கள் விசுவாசத்தை வைத்திருக்கிறார்கள், அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள். தேவன் கிறிஸ்தவர்களோடு பிரத்யே உறவைக் கொண்டிருக்கிறார், அதில் தேவனுடைய நித்திய கிருபையின் அடிப்படையில் கிறிஸ்துவர்கள் மட்டுமே மன்னிப்பை பெற்றிருக்கிறார்கள். அனைவருக்கும் தேவன் கொண்டிருக்கிற நிபந்தனையற்ற, இரக்கமுள்ள அன்பு எல்லோரையும் விசுவாசத்திற்குக் கொண்டுவரவேண்டும், நிபந்தனையுள்ள நன்றியறிவுள்ள நிலையில் ஏற்றுக்கொள்ளவேண்டும், இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்பவர்களுக்கு அவர் உடன்படிக்கையின் அன்பை அளிக்கிறார்.*

# *20.* தேவன் ஒரு பாவி / அவிசுவாசியின் ஜெபங்களைக் கேட்கிறாரா / பதிலளிக்கிறாரா?

*யோவான் 9:31 தெரிவிக்கிறது, "பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்." "பாவிகளிடமிருந்து தேவன் கேட்கிற ஒரே ஜெபம் இரட்சிப்பின் ஜெபமேயாகும் என்றும் சொல்லப்படுகிறது. இதன் விளைவாக, சிலர் தேவன் அவிசுவாசியின் ஜெபங்களுக்கு ஒருபோதும் பதில் சொல்லமாட்டார் என்று நம்புகிறார்கள். யோவான் 9:31ன் பின்னணி சந்தர்ப்பத்தில் தேவன் அவிசுவாசிகள் மூலம் அற்புதங்களை செய்வதில்லை என்று கூறுகிறது. தேவனுடைய சித்தத்தின்படி ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டாதா அல்லது இல்லையா என்பதன் அடிப்படையில் தேவன் ஜெபங்களுக்கு பதிலளிக்கிறார் என்று முதல் யோவான் 5: 14-15 சொல்கிறது. இந்த பிரமாணம் ஒருவேளை, அவிசுவாசிகளுக்கு பொருந்தும். ஒரு அவிசுவாசி அவருடைய சித்தத்தின்படி ஜெபத்தில் கேட்கும்போது, அந்த ஜெபத்தைக் கேட்காமல் இருப்பதற்கு தேவனை ஒன்றும் தடைவதில்லை - தேவனுடைய சித்தத்தின்படி கேட்போமானால்.*

*சில வேதவாக்கியங்கள் தேவன் அவிசுவாசிகளுடைய ஜெபங்கககளைக் கேட்டு பதிலளிப்பதை விவரிக்கின்றன. இந்த நிகழ்வுகளில் பெரும்பாலானவைகளில், ஜெபம் சம்பந்தப்பட்டிருந்தது. ஒன்று அல்லது இரண்டில், தேவன் இதயத்தின் கூப்பிடுதலுக்கு பதிலளித்தார் (அந்த அழுகை தேவனை நோக்கி இருந்ததா என்பது தெரியவில்லை). சில சமயங்களில், ஜெபமானது மனந்திரும்புதலுடன் இணைக்கப்பட்டுள்ளது. ஆனால் மற்ற சந்தர்ப்பங்களில், ஜெபமானது பூமிக்குரிய தேவையையோ ஆசீர்வாதத்தையோ வெறுமனே குறிக்கிறதாயிருக்கிறது. தேவன் சில சமயங்களில் அந்த ஜெபங்களின்*

*உண்மையான தேடலைக்கண்டு அல்லது அந்த நபரின் விசுவாச பிரதிபலிப்பைக்கண்டு பதிலளிக்கிறார். ஒரு அவிசுவாசியின் ஜெபத்தைக் குறித்து கூறுகிற சில வேதபாகங்கள் இதோ:*

*நினிவே மக்கள் நினிவே அழிக்கப்படாதபடிக்கு விடுபட வேண்டும் என்று ஜெபித்தார்கள் (யோனா 3:5-10). தேவன் இந்த ஜெபத்திற்கு பதிலளித்தார், நினிவே நகரத்தை அவர் அச்சுறுத்தியபடி அழிக்கவில்லை.*

*ஆகார் தன் குமாரனாகிய இஸ்மவேலைக் காப்பாற்றும்படி தேவனிடம் கேட்டாள் (ஆதியாகமம் 21:14-19). தேவன் ஈசாக்கை பாதுகாத்ததோடு மட்டுமில்லாமல், அவனை மிகவும் ஆசீர்வதித்தார்.*

*1 ராஜாக்கள் 21:17-29 ல், குறிப்பாக 27-29 வரையிலுள்ள வசனங்களில், ஆகாப் தன் சம்பத்தைப் பற்றிய எலியாவின் தீர்க்கதரிசனத்தின் நிமித்தம் உபவாசித்து துக்கப்படுகிறார். தேவன் ஆகாபின் காலத்தில் அந்த பேரழிவைக் கொண்டு வராததன் மூலம் அவனுக்கு பதிலளிக்கிறார்.*

*தீரு மற்றும் சீதோன் பகுதிகளிலிருந்த புறஜாதிய ஸ்திரீ இயேசு தன் மகளைப் பிசாசிலிருந்து விடுவிக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டாள் (மாற்கு 7:24-30). இயேசு அந்த ஸ்திரீயின் மகளிடமிருந்து பிசாசை துரத்தினார்.*

*அப்போஸ்தலர் 10-ஆம் அதிகாரத்திலுள்ள ரோம நூற்றுக்கதிபதியாகிய கொர்நேலியு, நீதிமானாக இருந்து தேவனிடத்தில் வேண்டிக்கொண்டபடியால் பேதுருவை தேவன் அவனிடத்திற்கு அனுப்பி கொர்நேலியுவுக்கு பதிலளித்தார். கொர்நேலியு "எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்" என்று அப்போஸ்தலர் 10: 2 நமக்கு சொல்லுகிறது.*

எரேமியா 29:13-ஐ போல, தேவன் இரட்சிக்கப்பட்டவர்கள் மற்றும் இரட்சிக்கப்படாதவர்கள் என்கிற வித்தியாசம் இல்லாமல் எல்லாருக்குமுள்ள வாக்குத்தத்தங்களை அளிக்கிறார்: "உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்." அப்போஸ்தலருடைய நடபடிகள் 10:1-6ல் கொர்நேலியுவின் காரியமும் இப்படியே இருந்தது. ஆனால் சில வேதகாகங்களில் அதன் பின்னணியின்படி, கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே உரிய பல வாக்குறுதிகளும் உள்ளன. கிறிஸ்தவர்கள் இயேசுவை தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொண்டபடியால், அவர்களுக்கு உதவி தேவைப்படுகையில் உதவிப் பெறுவதற்காக தைரியமாக கிருபாசனத்தண்டை வரும்படி அவர்கள் ஊக்கப்படுத்தப்படுகிறார்கள் (எபிரெயர் 4:14-16).

நாம் தேவனுடைய சித்தத்தின்படி எதையாவது கேட்கும்பொழுது, அவர் அதைக்கேட்டு, நாம் கேட்கிறதை நமக்குக் கொடுக்கிறார் (1 யோவான் 5:14-15) என்று அறிவுருத்தப்பட்டுள்ளோம். ஜெபத்தைக் குறித்து கிறிஸ்தவர்களுக்கு மற்ற பல வாக்குறுதிகளும் உள்ளன (மத்தேயு 21:22; யோவான் 14:13; 15:7). எனவே, ஆம், தேவன் ஒரு அவிசுவாசியின் ஜெபத்திற்கு பதில் கொடுக்காத தருணங்கள் இருக்கிறது. அதே சமயத்தில், தேவன் அவருடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், அவர்களுடைய ஜெபங்களுக்கு பதிலளித்து அவிசுவாசிகளின் வாழ்க்கையில் தலையிட முடியும்.

# 21. தேவன் ஏன் எரிச்சலுள்ள தேவனாக இருக்கிறார்?

*"எரிச்சல்" என்கிற வார்த்தை எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை புரிந்துகொள்வது முக்கியமாகும். தேவன் விவரிப்பதற்காக யாத்திராகமம் 20:5-ல் பயன்படுத்தப்பட்டுள்ள அதன் பயன்பாடு பொறாமையின் பாவத்தை விவரிக்க எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதிலிருந்து (கலாத்தியர் 5:20) வேறுபடுகிறதாய் இருக்கிறது. நாம் "எரிச்சல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்போது, நமக்கு இல்லாத ஒன்றைக் கொண்டிருப்பவர்மேல் நாம் பொறாமைப்படுகிறோம் என்கிறதாய் அர்த்தப்படுகிறது. ஒரு நபர் வேறொரு நபர்மேல் எரிச்சல் அல்லது பொறாமைப்படலாம், ஏனெனில் அவருக்கு நல்ல கார் அல்லது வீடு (உடைமைகள்) உள்ளது. அல்லது ஒரு நபர் மற்ற நபருடைய திறன் (தடகளத்திறன் போன்ற திறன்) அல்லது திறமை காரணமாக அந்த நபர்மேல் பொறாமை அல்லது எரிச்சலுடன் இருக்கலாம். மற்றொரு உதாரணம் ஒருவர் மற்றொருவர் (ஆண்/பெண்) அழகைக் கண்டு அவர்மேல் எரிச்சல் அல்லது பொறாமைப்படலாம்.*

*யாத்திராகமம் 20:5-ல், யாரோ ஒருவர் ஏதோவொன்றை விரும்புகிறார் அல்லது தேவைப்படுகிறார் என்பதற்காக தேவன் எரிச்சலோ அல்லது பொறாமையோ கொள்ளுகிறதில்லை. யாத்திராகமம் 20:4-5 கூறுகிறது, "மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்."*

தேவனுக்கு சொந்தமானதை அல்லது அவருக்கு கொடுக்கவேண்டியதை பிறனுக்கு ஒருவர் கொடுக்கும் தேவன் எரிச்சலுள்ள தேவனாகிறார் என்பதைக் கவனியுங்கள்.

இந்த வசனங்களில், ஜனங்கள் தங்களுக்கு சிலைகளை உருவாக்கி, தேவனுக்கு சொந்தமான ஆராதனையை அவருக்குக் கொடுக்காமல், விக்கிரகங்களை வணங்கி நமஸ்கரித்து வழிபடுவதைப் பற்றித் தேவன் இங்கே பேசுகிறார். தேவன் வழிபாடு மற்றும் ஆராதனைக்கு சொந்தமானவர், தமக்குச் சொந்தமான இந்த இறைவணக்கத்தை அவர் ஒருபோதும் யாருக்கும் விட்டுக்கொடுப்பதில்லை. தேவன் ஒருவரைத் தவிர வேறு எதையும் வணங்குவதற்கோ அல்லது சேவை செய்வதற்கோ (தேவன் இதைக் கட்டளையில் சுட்டிக்காட்டுகிறது போல) அவர் அனுமதிக்கிறதில்லை, அப்படிச்செய்தல் ஒரு பாவமாக கருதப்படுகிறது. நம்மிடத்தில் இல்லாதது வேறொருவரிடத்தில் இருப்பதைக்கண்டு, நாம் அதனை விரும்பும்போது அல்லது நாம் எரிச்சல் அல்லது பொறாமை கொள்ளும்போது அது ஒரு பாவச்செயலாக மாறுகிறது. தேவன் எரிச்சலுள்ளவர் என்கிறபோது அது "எரிச்சல்" என்கிற வார்த்தை வேறுபட்ட பயன்பாட்டை கொண்டதாக இருக்கிறது. அவர் பொறாமை அல்லது எரிச்சல் கொள்ளுகிற காரியம் என்ன? இறைவணக்கம் மற்றும் ஆராதனை, இது அவருக்கு மட்டுமே சொந்தமானது, மற்றும் இது அவருக்கு மட்டுமே கொடுக்கப்பட வேண்டும்.

ஒருவேளை நடைமுறையான ஒரு உதாரணம் இந்த வேறுபாட்டை புரிந்துகொள்ள நமக்கு உதவிச்செய்யும். ஒரு கணவன் தன் மனைவியுடன் சுற்றித்திரியும் மற்றொரு மனிதரைப் பார்த்தால், அவன்மேல் எரிச்சல்கொள்வது சரியானதுதான், ஏனெனில் அவனுடைய மனைவியிடம் அவனுக்கு மட்டுமே சுற்றித்திரிய உரிமை உண்டு. இந்த வகை எரிச்சல் அல்லது பொறாமை பாவம் அல்ல. மாறாக, அது முற்றிலும் பொருத்தமானதாக இருக்கிறது. தேவன் உன்னுடையது என்று அறிவிக்கிற ஒரு காரியத்தில் நீங்கள் எரிச்சல்

*படுவது அல்லது பொறாமைப்படுவது நல்லது மற்றும் சரியானது ஆகும். உங்களுடையதல்லாத ஒரு காரியத்திற்காக விருப்பமாக இருக்கும் போது வருகிற எரிச்சல் அல்லது பொறாமை ஒரு பாவம் ஆகும். ஆராதனை, துதி, கனம் மற்றும் வழிபாடு தேவனுக்கு மட்டுமே உரியது, அவர் மட்டுமே அவைகளுக்கு உண்மையிலேயே தகுதியுடையவர். எனவே, ஆராதனை, துதி, கனம் மற்றும் வழிபாடு ஆகியவற்றை விக்கிரகங்களுக்குக் கொடுக்கும்போது தேவன் எரிச்சல்/கோபப்படுகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் 2 கொரிந்தியர் 11:2-ல் பொறாமை விவரித்துள்ளார், "உங்களுக்காக தேவவைராக்கியமான வைராக்கியங்கொண்டிருக்கிறேன்."*

# 22. தேவன் ஆணா அல்லது பெண்ணா?

*வேதவாக்கியங்களை கவனமாக ஆராய்ந்து பார்ப்போமானால், இரண்டு உண்மைகள் தெளிவாக விளங்கும். முதலாவதாக, தேவன் ஒரு ஆவியாக இருக்கிறார், அவருக்கு மனித குணாதிசயங்கள் அல்லது வரம்புகள் எதுவும் இல்லை. இரண்டாவதாக, தேவனைக்குறித்து வேதாகமத்தில் மனுக்குலத்திற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து ஆதாரங்களும் அவரை ஆண் உருவிலேயே தம்மை வெளிப்படுத்தியதாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. துவக்கமாக, தேவனுடைய உண்மையான இயல்பு என்ன என்பதை சரியாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது. தேவன் ஆள்தன்மையுள்ள ஒரு நபர், ஆகவே ஒரு நபருக்கு இருக்கவேண்டிய அனைத்து பண்புகளையும் அவர் வெளிப்படுத்துகிறார்: தேவனுக்கு ஒரு மனது, சித்தம், அறிவு, மற்றும் உணர்வுகள் இருக்கின்றன. தேவன் தொடர்பு கொள்கிறார் மற்றும் அவருக்கு எல்லா உறவுகளும் இருக்கின்றன. மேலும் தேவனுடைய தனிப்பட்ட நடவடிக்கைகள் வேதவாக்கியங்களில் சாட்சிகளாக இருக்கின்றன.*

*யோவான் 4:24 கூறுகிறது போல, "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்." தேவன் ஒரு ஆவியாக இருக்கிறபடியினால், அவர் மனித உடலின் குணாதிசயங்களைக் கொண்டிருக்கவில்லை. இருப்பினும், வேதாகமத்தில் சில சமயங்களில் தேவனை மனிதன் புரிந்துகொள்வதற்கு மனித குணாதிசயங்கள் தேவனுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. தேவனை விவரிக்க இப்படி மனித குணாதிசயங்களைப் பயன்படுத்துவதை "மனிதஉருவியல்" (anthropomorphism) என்று அழைக்கப்படுகிறது. இந்த மனிதஉருவியல் ஆவியாயிருக்கிற தேவன் தம்மைக்குறித்த தன்மையின் உண்மைகளை மனிதோடு தொடர்புகொள்வதற்காக மனிதனின் குணங்களைப் பயன்படுத்தும் ஒரு வழிமுறையாகும். மனித இனம் உடல் ரீதியான*

இயல்பைக் கொண்டிருப்பதால், உடல்நிலைக்கு அப்பால் உள்ள விஷயங்களைப் புரிந்துகொள்வதில் நாம் குறைவுள்ளவர்களாக இருக்கிறோம்; எனவே, வேதாகமத்தில் காணப்படுகின்ற மனிதஉருவியல் தேவன் யார் என்பதை புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவுகிறது.

தேவனுடைய சாயலில் மனித இனம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்வதில் சில சிரமங்கள் வருகிறது. ஆதியாகமம் 1:26-27 வரையுள்ள வசனங்கள் இவ்வாறு கூறுகிறது, "பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்."

தேவனுடைய சாயலில் மனிதனும் ஸ்திரீயும் இருவரும் படைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தேவனைப்போல இருக்கிற படியினால், மற்ற எல்லா படைப்புகளையும் விட அவர்கள் மேலானவர்களாக மனது, சித்தம், அறிவாற்றல், உணர்ச்சிகள், மற்றும் தார்மீக திறன் ஆகியவைகளைக் கொண்டிருக்கிறார்கள். விலங்குகள் தார்மீகத் திறனைக் கொண்டிருக்கவில்லை, மேலும் மனிதகுலத்தைப் போன்று காணக்கூடாத பகுதிகளைக் அவைகள் கொண்டிருக்கவில்லை. தேவனுடைய சாயல் என்பது மனிதகுலத்திற்கு மட்டுமே சொந்தமான ஆவிக்குரிய அங்கமாகும். தேவன் மனிதனோடு ஒரு உறவை ஏற்படுத்திக்கொள்ளவே அவனைப் படைத்தார். அந்த நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட ஒரே படைப்பு மனிதஇனம் மட்டுமேயாகும்.

தேவனுடைய சாயலின்படி மனிதன் மற்றும் ஸ்திரீயானவள் வடிவமைக்கப்பட்டுள்ளனர் - மற்றபடி அவர்கள் தேவனுடைய சிறிய "பிரதிகள்" அல்ல. ஆண்களும் பெண்களும் என படைக்கப்பட்ட மனித இனம் தேவனையும் ஆணாக அல்லது பெண்ணாக இருக்கிற பண்புகளோடு அவரைத் தேடவேண்டிய அவசியம் இல்லை. தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டது என்பது உடல் ரீதியாக உள்ள பண்புகளோடு எந்தஒரு சம்பந்தமும் இல்லை என்பதை நினைவில் வைத்து கொள்ளுங்கள்.

தேவன் ஒரு ஆவிக்குரிய நிலையில் இருக்கிறபடியினால் அவர் உடல் ரீதியான பண்புகள் இல்லாதவர் என்பது நமக்கு நன்குத்தெரியும். இருப்பினும், தேவன் மனிதகுலத்திற்கு தன்னை வெளிப்படுத்துவதற்கு எப்படி தெரிந்துகொள்ளலாம் என்பதை இது வரையறுக்காது. தேவன் தம்மைப்பற்றி மனிதகுலத்திற்கு அளித்த அனைத்து வெளிப்பாடுகளையும் வேதாகமம் தன்னில் கொண்டுள்ளது, இது தேவனைப்பற்றிய ஒரு புறநிலையான ஆதாரமாகும். வேதாகமம் நமக்கு எதைக் கூறுகிறது என்பதை கவனிப்போமானால், தேவன் மனிதகுலத்திற்கு தன்னை வெளிப்படுத்திய வடிவத்தில் பல சான்றுகள் உள்ளன.

வேதாகமம் "பிதா" என்று சுமார் 170 குறிப்புகளைக் கொண்டிருக்கிறது. அவசியப்படுகிற நிலையில், ஒரு ஆணைத் தவிர வேறே எவரும் ஒரு பிதாவாக இருக்க முடியாது. ஒருவேளை தேவன் ஒரு பெண் வடிவத்தில் மனிதனுக்கு தன்னை வெளிப்படுத்தியிருந்தால், "பிதா" என்றில்லாமல் "பிதா" என்று வருகிற இடங்களிலெல்லாம் "அம்மா" என்றே சொல்லப்பட்டிருந்திருக்கும். பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில், ஆண்பால் பெயர்ச்சொற்களே தேவனுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்து தேவனை பிதாவாக பல முறை குறிப்பிட்டுள்ளார், மற்ற சமயங்களில் தேவனைக் குறிப்பிடும்போதெல்லாம் ஆண்பால்

*பெயர்ச்சொற்களையே பயன்படுத்தியிருக்கிறார். சுவிசேஷங்களில் மட்டும், "பிதா" என்ற வார்த்தையை கிறிஸ்து நேரடியாக 160 முறை தேவனுக்காக பயன்படுத்துகிறார். யோவான் 10:30-ல் விசேஷித்த நிலையில் கிறிஸ்து தம்மைக்குறித்து குறிப்பிட்டது என்னவென்றால்: "நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்." உலகத்தின் பாவங்களுக்காக சிலுவையில் மரிப்பதற்கு ஒரு மனிதனின் மனித உருவில் இயேசு கிறிஸ்து தோன்றினார் என்பது தெளிவாகிறது. பிதாவாகிய தேவனைப்போலவே, இயேசுவும் மனிதகுலத்திற்கு ஒரு ஆண் வடிவத்தில் வெளிப்படுத்தினார். வேதாகமத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அநேக சம்பவங்களில், கிறிஸ்து ஆண் பெயர்ச்சொற்களை தேவனைக் குறித்து பேசும்போதெல்லாம் மேற்கோள் காட்டுகிறார்.*

*புதிய ஏற்பாட்டு நிருபங்கள் (அப்போஸ்தலரிலிருந்து வெளிப்படுத்துதல் வரை) 900-க்கும் அதிகமான வசனங்களில் "தெயோஸ்" என்ற கிரேக்க வார்த்தையானது கிரேக்கத்தில் ஒரு ஆண்பால் பெயர்ச்சொல்லுக்கான பெயர்ச்சொல்லில் வருகிறது - இந்த வார்த்தை தேவனுக்கு நேரடியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வேதவாக்கியங்களில் தேவனைக் குறிப்பிடுகிற எண்ணற்ற குறிப்புகளில், அவருடைய தலைப்புகள், பெயர்ச்சொற்கள், மற்றும் பிரதிப்பெயர்ச்சொற்கள் யாவும் ஆண்பாலில் குறிப்பிடப்பட்டிருப்பது ஒரு உறுதியான வகையில் தெளிவாக உள்ளது. தேவன் ஒரு மனிதன் இல்லை என்றாலும், அவர் மனிதனுக்கு தன்னை வெளிப்படுத்தும் பொருட்டு ஒரு ஆண்பால் வடிவத்தை தேர்வு செய்தார். அவ்வாறே, இயேசு கிறிஸ்துவும், பூமியில் வாழ்ந்திருந்த நாட்களில் ஆண்பாலின் தலைப்புகள், பெயர்ச்சொற்கள் மற்றும் பிரதிப்பெயர்ச்சொற்கள் ஆகியவற்றால் குறிப்பிடப்படுகிறார். பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகளும் புதிய ஏற்பாட்டின் அப்போஸ்தலர்களும் தேவனையும் இயேசு கிறிஸ்துவையும் குறிப்பிடும்போது ஆண்பால் பெயர்களையும் தலைப்புகளையுமே குறிப்பிடுகிறார்கள். தேவன் யார் என்பதை எளிதாக புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக தேவன் தம்மை*

இந்த வடிவத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்று தேர்வு செய்தார். தேவனைப் புரிந்துகொள்ள உதவும்படி தேவன் நமக்கு சலுகைகளைக் கொடுத்திருக்கிறார், அதேவேளையில் நாம் ஒருபோதும் அதற்கு மிஞ்சி எண்ணுவதற்கும் 'தேவனை ஒரு பெட்டியிலேயே அடைத்து'' அவருடைய தன்மைக்கு ஏற்றநிலையில் இல்லாமல் அவரை ஒரு எல்லைக்குள் குறுகிய நிலைக்குள் வரையறுக்காதபடிக்கு இருக்கவேண்டியது மிகவும் முக்கியமான காரியமாகும்.

# 23. தேவன் / வேதாகமம் பாலியல் சார்பியமுள்ளதா?

*பாலியல் சார்பியம் என்பது ஒரு பாலினம், பொதுவாக ஆண் பாலினம், பிற பாலினத்தை ஆட்கொண்டு ஆதிக்கம் கொண்டிருப்பது, பொதுவாக பெண் மீது ஆண் ஆதிக்கம் செலுத்துகிறதைக் குறிக்கிறது. பெண்களைப் பற்றிய பல குறிப்புகள் வேதாகமத்தில் உள்ளன, அது நமது நவீன மனநிலையானது பெண்கள் மீது பாகுபாடு காண்பிக்கிறதாக கருதுகின்றது. ஆனால், வேதாகமம் ஒரு செயலை விவரிக்கும்போது, அந்த செயலை வேதாகமத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுவதாக அர்த்தமில்லை. சொத்துக்களைக் காட்டிலும் பெண்களுக்கு குறைவான நிலையில் நடத்துவதாக வேதாகமம் விவரிக்கிறது, அதற்காக அந்த செயலை தேவன் அங்கீகரிக்கிறார் என்று அர்த்தமல்ல. நம்முடைய சமுதாயங்களைவிட நம்முடைய ஆத்மாக்களை சீர்திருத்துவதில் தான் வேதாகமம் அதிக கவனம் செலுத்துகிறது. மாற்றப்பட்ட இருதயம் ஒரு மாற்றப்பட்ட நடத்தைக்கு வழிவகுக்கும் என்பதை தேவன் அறிந்திருக்கிறார்.*

*பழைய ஏற்பாட்டு காலங்களில், உலகம் முழுவதிலும் கிட்டத்தட்ட ஒவ்வொரு கலாச்சாரமும் ஆணாதிக்க கட்டமைப்பில் இருந்தது. வரலாற்றின் இந்த அந்தஸ்து மிகவும் தெளிவாக இருக்கிறது - இது வேதாகமத்தில் மட்டுமல்லாமல் பெரும்பாலான சமுதாயங்களையும் ஆளுகின்ற விதிகளாக இருந்தன. நவீன மதிப்பமைப்புகள் மற்றும் உலக மனிதனின் கண்ணோட்டத்தில், இவர்கள் "பாலியல் சார்பியமுள்ளவர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள். சமுதாயத்தில் ஒழுங்கை தேவன் கட்டளையிட்டார், மனிதனல்ல, அதிகாரத்தின் நடைமுறை பிரமாணங்களை ஸ்தாபித்தவர் தேவனே ஆவார். எனினும், எல்லாவற்றையும் போலவே, விழுந்துபோன மனிதன் இந்த ஒழுங்கையும் சிதைத்துவிட்டான். இது வரலாறு முழுவதிலும் ஆண்கள்*

*மற்றும் பெண்கள் என்கிற சமத்துவமின்மையை விளைவித்துள்ளது. இன்று நம்முடைய உலகில் நாம் காணும் விலக்கம் மற்றும் பாகுபாடு புதியதல்ல. இது மனிதனின் வீழ்ச்சி மற்றும் பாவத்தின் அறிமுகம் ஆகியவற்றின் விளைவாகும். ஆகையால், பதம் மற்றும் செயல்படுத்துதலாகிய "பாலியல் சார்பியம்" என்பது பாவத்தின் விளைவாகத்தான் இருக்கிறது என்று நாம் சரியாக சொல்ல முடியும். வேதாகமத்தின் படிப்படியாகவுள்ள வெளிப்பாடு, பாலியல் சார்பியம் மற்றும் உண்மையில் மனித இனத்தின் அனைத்து பாவம் பழக்கவழக்கங்களுக்கும் குணப்படுத்துவதற்கு வழிவகுக்கிறது.*

*தேவனால் நியமிக்கப்பட்ட அதிகார பதவிகளுக்கு இடையே ஒரு ஆவிக்குரிய சமநிலையை கண்டுபிடித்து பராமரிக்க, நாம் வேதவாக்கியத்தையே பார்க்க வேண்டும். புதிய ஏற்பாடானது பழைய ஏற்பாட்டின் நிறைவேறுதலாக இருக்கிறது, அதில் பாவத்திற்கான தீர்வையும் சரியான வரையின் அதிகாரத்தை சொல்லுகிற சகல மனிதகுலத்தின் தீமைகளையும், மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாடுகளையும் உள்ளடக்கிய பிரமாணங்களையும் கண்டுபிடிக்கிறோம்.*

*கிறிஸ்துவின் சிலுவை பெரிய சமன்படுத்தியாக இருக்கிறது. யோவான் 3:16 கூறுகிறது, "விசுவாசிக்கிறவன் எவனோ," அது சமுதாயத்தின் நிலை, மனநிலை அல்லது பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் எல்லாரையும் உட்படுத்திய ஒரு முழுமையான அறிக்கை ஆகும். இரட்சிப்புக்கான சமமான வாய்ப்பைப் பற்றி பேசுகிற வசனங்களை கலாத்தியர் நிருபத்தில் காணலாம். "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக, ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து*

*இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்'' (கலாத்தியர் 3:26-28). சிலுவையில் பாலியல் சார்பியம் இல்லை.*

*ஆண்கள், பெண்கள் ஆகியோரின் பாவங்களைப் பற்றிய விளைவுகளில் அதன் துல்லியமான சித்தரிப்புகளில் வேதாகமம் பாலியல் சார்பியமுள்ளது அல்ல. வேதாகமம் எல்லா வகையான பாவத்தையும் பதிவு செய்கிறது: அடிமைத்தனம், மற்றும் மிகப்பெரிய கதாநாயகர்களின் தோல்விகள். ஆனால், அதேவேளையில் தேவன் மீதும் அவருடைய ஒழுங்குமுறை மீதும் அந்தப் பாவங்களுக்கான தீர்வை நமக்கு அளிக்கிறது - தேவனுடன் இருக்கிற ஒரு சரியான உறவு. பழைய ஏற்பாடு மிக உயர்ந்த ஒரு பலியை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது, ஒவ்வொரு முறையும் பாவத்திற்கு ஒரு பலி செலுத்தப்பட்டபோது, தேவனோடு ஒரு நல்லிணக்கம் அவசியமாக இருக்கிறது என்று அது போதிக்கிறது. புதிய ஏற்பாட்டில், "உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற ஒரு ஆட்டுக்குட்டி" பிறந்தார், மரித்தார், அடக்கம் பண்ணப்பட்டார் மற்றும் மீண்டும் உயர்ந்தது, பின்னர் பரலோகத்திலுள்ள அவரது இடத்திற்கு ஏறிச்சென்றார், அங்கு அவர் நமக்காக பரிந்து பேசுகிறார். பாலியல் சார்பியம் உட்பட பாவத்திலிருந்துள்ள தீர்வு அவரில் விசுவாசிப்பதன் மூலமாக வருகிறது.*

*வேதாகமத்தில் பாலியல் சார்பியத்தின் குற்றச்சாட்டு வேதவாக்கியத்தைக் குறித்த சரியான அறிவில்லாமையே ஆகும். எல்லா வயதினரிலுமுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் தங்கள் தேவனால் நியமிக்கப்பட்ட இடங்களை எடுத்துக்கொண்டு, "கர்த்தராகிய ஆண்டவர் கூறுகிறபடி'' வாழ்ந்தால், பின்னர் பாலினங்களுக்கு இடையே ஒரு அற்புதமான சமநிலை உண்டாயிருக்கும். அந்த சமநிலையை தேவனே தொடங்கினார், அதை அவர் முடியவும் பண்ணுவார். பாவத்தின் வேருக்கு கவனம் செலுத்தி அதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அதனுடைய விளைவாக உண்டாகும் பல்வேறு பொருட்களுக்கு கூடுதல் கவனம் கொடுக்கப்படுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம்*

தேவனோடு தனிப்பட்ட நல்லிணக்கம் இருக்கும்போது மட்டுமே இந்த உண்மையான சமத்துவம் கிடைக்கிறது. "சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்'' (யோவான் 8:32).

வேதாகமம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வெவ்வேறான பங்குகளை விவரிக்கிறது பாலியல் சார்பியத்தையல்ல என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியமாகும். திருச்சபையிலும் வீட்டிலும் தலைமைத்துவ பொறுப்பை ஆண்கள் எடுத்துக் கொள்ளும்படி தேவன் எதிர்பார்க்கிறார் என வேதாகமம் மிகவும் தெளிவான நிலையில் தெளிவுபடுத்துகிறது. இது பெண்களை சிறுமைப்படுத்துகிறதா? நிச்சயமாக இல்லை. இது பெண்களுக்கு குறைவான புத்திசாலித்தனம், குறைவான திறன், அல்லது தேவனுடைய பார்வையில் குறைவாகவே கருதப்படுகிறதா? நிச்சயமாக இல்லை! அதனுடைய அர்த்தம் என்னவென்றால், நம்முடைய பாவக் கறைபட்ட உலகில், கட்டமைப்பு மற்றும் அதிகாரம் இருக்க வேண்டும் என்பதாகும். நம்முடைய நன்மைக்காக தேவன் அதிகாரங்களை படைத்திருக்கிறார். பாலியியல் சார்பியம் இந்த பாத்திரங்களின் துஷ்பிரயோகம் ஆகும், இந்த பாத்திரங்களின் இருப்பு அல்ல.

# 24. தேவன் இன்றும் அற்புதங்களைச் செய்கிறாரா?

*அநேகர் தேவன் அவர்களுக்கு அற்புதங்களைச் செய்து அவர் தேவன் தான் என்பதை நிரூபிக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். "தேவன் ஒரு அதிசயம், அடையாளம், அல்லது ஆச்சரியத்தை செய்தால், நான் நம்புவேன்!" இந்த எண்ணம் வேதவாக்கியம் கூறுகிறதற்கு முரண்படுகின்றது என்கிறபோதிலும், இஸ்ரவேலருக்கு தேவன் அற்புதங்களையும் ஆச்சரியங்களையும் செய்தபோது, அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்தார்களா? இல்லை, எல்லா அற்புதங்களையும் பார்த்தபோதிலும் இஸ்ரவேலர்கள் தொடர்ந்து கீழ்ப்படியாமல் தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்தார்கள். தேவன் செங்கடலை இரண்டாக பிளந்ததைப் பார்த்த அதே ஜனங்கள், வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தின் குடிமக்களை வெற்றிக்கொண்டு தேசத்தைக் கைப்பற்ற முடியுமா என்று சந்தேகப்பட்டார்கள். இந்த சத்தியம் லூக்கா 16:19-31-ல் விளக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தில், பாதாளத்தில் இருக்கிற ஒரு மனிதன் ஆபிரகாமிடம் தன்னுடைய சகோதரர்களை எச்சரிப்பதற்காக மரித்தோரிலிருந்து லாசருவைத் திரும்ப அனுப்பும்படி கேட்கிறார். ஆபிரகாம் அந்த மனிதனிடம், "அவர்கள் மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடாவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்துபோனாலும், நம்பமாட்டார்களென்று" (லூக்கா 16:31) என்று சொன்னார்.*

*இயேசு எண்ணற்ற அற்புதங்களைச் செய்தார், ஆனாலும் பெரும்பாலோனோர் அவரை நம்பவில்லை. கடந்த காலங்களில் தேவன் செய்ததுபோலவே அற்புதங்களை இந்நாட்களிலும் செய்திருந்தால், அதன் பலன் ஒரேமாதிரியாகத்தான் இருக்கும். ஜனங்கள் அற்புதங்களைக் கண்டு ஆச்சரியப்பட்டு கொஞ்ச காலத்திற்கு தேவனை நம்புவார்கள். அந்த விசுவாசம் ஆழமற்றதாக இருக்கிறபடியினால், எதிர்பாராத அல்லது பயமுறுத்தும் ஏதாவது சம்பவிக்கும்போது அந்த நம்பிக்கை அவர்களை விட்டு மறைந்துவிடும்.*

*அற்புதங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு விசுவாசம் முதிர்ந்த விசுவாசம் அல்ல. மனிதனாக வந்த இயேசு நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்தார் (ரோமர் 5:8), அதன் நிமித்தம் நாம் இரட்சிக்கப்படுவதற்காக (யோவான் 3:16), இதுதான் தேவன் பூமியில் செய்த எல்லா அற்புதங்களையும் விட மேலான மாபெரும் அற்புதமாகும். தேவன் இன்றும் அற்புதங்களைச் செய்கிறார் - ஆனால் அவைகள் அநேகரால் வெறுமனே கவனிக்கப்படாமலும் அல்லது மறுதலிக்கப்பட்டும் போகின்றன. இருப்பினும், நமக்கு இன்று அதிகமான அற்புதங்கள் தேவையில்லை. நாம் செய்யவேண்டியதெல்லாம் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அதன் மூலம் பெரும் இரட்சிப்பின் அதிசயத்தை விசுவாசிப்பதே நமக்கு தேவையாயிருக்கிறது.*

*அற்புதங்களின் நோக்கம் அற்புதங்கள் செய்கிறவரின் செயல்திறனையும் அதிகாரத்தையும் அங்கீகரிப்பதாகும். அப்போஸ்தலர் 2:22 சொல்லுகிறது, "இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள்; நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைத் தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்." அப்போஸ்தலர்களைப் பற்றியும் இதே காரியம் கூறப்படுகிறது, "அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே" (2 கொரிந்தியர் 12:12). நற்செய்தியைக் குறித்துப் பேசிய எபிரெயர் 2:4 கூறுகிறது, "அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சிகொடுத்திருக்கிறார்." வேதவாக்கியத்தில் பதிவு செய்யப்பட்ட இயேசுவின் சத்தியம்*

*இப்போது நமக்கு இருக்கிறது. வேதவசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அப்போஸ்தலர்களின் எழுத்துக்களும் இப்போது நமக்குள் இருக்கின்றன. இயேசுவும் அவரது அப்போஸ்தலர்களும், வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, நம்முடைய விசுவாசத்தின் மூலக்கல்லும் அஸ்திபாரமுகாக இருக்கிறார்கள் (எபேசியர் 2:20). இந்த அர்த்தத்தில், அற்புதங்கள் இனி அவசியம் இல்லை, காரணம் இயேசுவின் மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் செய்தி ஏற்கெனவே வேதாகமத்தில் சேர்க்கப்பட்டு அது மிகவும் துல்லியமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆம், தேவன் இன்றும் அற்புதங்களைச் செய்கிறார். அதே சமயத்தில், வேதாகம காலங்களில் சம்பவித்தது போலவே இன்றும் அற்புதங்கள் நடக்கவேண்டும் என்று நாம் எதிர்பார்க்க கூடாது.*

# 25. தேவன் இன்று எல்லாரையும் சுகமாக்குகிறாரா?

*தேவன் குணமாக்குகிறவர். "யேகோவா-ரப்பா" என்று அவர் தம்மை வெளிப்படுத்தினார் (யாத் 15:26). அவர் மாறவில்லை. அவ ரது வல்லமையும் குறையவில்லை.*

*தமது குமாரனது பூவுலக ஊழியக் காலத்தில் தேவனது குண மாக்கும் வல்லமை நிகரற்ற வகையில் வெளிப்பட்டது. எல்லாவிதப் பிணியாளிகளையும் அவர் சுகப்படுத்தினார். அவரைத் தொட்ட யாவரும் சுகம் பெற்றனர். "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என் றும் மாறாதவராயிருக்கிறார்" (எபி 13:8). சிலுவையில் நமது பாவங் களையும் ரோகங்களையும் இயேசு சுமந்தார் (ஏசா 53:4,5; மத் 8: 16,17). அவரது இரத்தத்தால் கழுவப்படுகிறோம்; அவரது தழும்பு களால் குணமாகிறோம்.*

*தொடர்ந்து இன்றும் செயலாற்றும்படி ஆவியானவர் சபைக்குக் குணமாக்கும் வரங்களைத் தந்துள்ளார் (1 கொரி 12:9,28).*

*ஆனால் நமது உடல் சாவுக்கேதுவானதே. இன்னும் நாம் மரணத் திற்கு உட்பட்டிருக்கிறோம் (1 கொரி 15:26). இனி வேதனையோ துக்கமோ இல்லை எனும் அந்நாள் வரும்வரை மனிதருக்கு நேரிடும் நோய்களால் நாம் பாதிக்கப்படலாம் (வெளி 21:4).*

*விசுவாசியொருவன் வியாதிப்படும்போது ஜெபிக்கவேண்டும். சபையின் மூப்பர்களை வரவழைத்து "விசுவாச ஜெபம்" ஏறெடுக்கச் செய்யவேண்டும். பாவமேதுமுண்டோ என்று தற்பரிசோதனை செய்ய வேண்டும். பொதுவாக, அவன் சுகம் பெறுவான் (யாக் 5:14-16).*

*ஆனால் தேவன் சுகமாக்காது விடும் வேளைகளுமுண்டு. அவருக்குமுன் உத்தமமாய் நடந்தும் சுகம் பெறாத பலரை வேதம் குறிப்பிடுகிறது. பவுல் தனது "மாம்சத்தில்" இருந்த முள்ளுடன்*

சமாளிக்கவேண்டியிருந்தது. போதுமான கிருபையை தேவன் அவனுக்களித்தார் *(2 கொரி 12:7-10)*. தீமோத்தேயுவின் வயிறு "அடிக்கடி" பலவீனப்பட்டது *(1 தீமோ 5:23)*. எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டு மரணத்திற்குச் சமீபமாயிருந்தான் *(பிலி 2:25-27)*. அத்தனை அற்புதங்களைச் செய்த எலிசா தீர்க்கதரிசி வியாதியில் மரித்தான் *(2 இரா 13:14)*. சுகமடையாத பரிசுத்தர் சரித்திரத்திலும் ஏராளம். சாகும்வரை குருடாயிருந்த ஃபேன்னி கிராஸ்பி என்ற அம்மையார் கிறிஸ்தவ உலகிற்கு 8000 பாடல்களைத் தந்துள்ளார். அதில் ஒன்றுதான் *"Blessed Assurance"* என்ற பாடல்!

நன்மையான யாவும் தேவனிடமிருந்து வருகிறது. அவர் வியாதிக்குக் காரணரல்ல. ஆனால் அவர் அதை சிட்சையின் பிரம்பாகவோ, நாம் விளக்கமுடியாத ஏதோவொரு காரணத்திற்காகவோ பயன்படுத்துகிறார். அவர் சர்வ வல்லவர். ஆனால் முடிவாக, நன்மையாக அல்லது தீமையாகத் தோன்றும் சகலமும் அவரது பிள்ளைகளுக்கு நன்மைக்கேதுவாகவே இருக்கும் *(ரோ 8:28)*.

# 26. பூகம்பங்கள், சூறாவளிகள் மற்றும் சுனாமிகள் போன்ற இயற்கை பேரழிவுகளை தேவன் ஏன் அனுமதிக்கிறார்?

*பூமியதிர்ச்சிகள், சூறாவளிகள், சுழற்காற்றுகள், சுனாமிகள், புயற்காற்றுகள், நிலச்சரிவுகள் மற்றும் பிற இயற்கை பேரழிவுகளை தேவன் ஏன் அனுமதிக்கிறார்? ஆசியாவில் 2004 ஆம் ஆண்டின் பிந்தைய காலத்தில் சுனாமியின் துயர சம்பவம், 2005 ஆம் ஆண்டில் தென்கிழக்கு அமெரிக்காவில் கத்ரீனா சூறாவளி, மற்றும் மியான்மரில் 2008 ஆம் ஆண்டின் சூறாவளி எண்ணற்ற ஜனம் தேவனுடைய நற்குணத்தை கேள்விக்குள்ளாக்கியது. இயற்கையின் பேரழிவுகள் பெரும்பாலும் "தேவனுடைய செயல்கள்" எனவும், பல ஆண்டுகள், பல தசாப்தங்கள் அல்லது பல நூற்றாண்டுகளாக சமாதானமான அமைதியான காலநிலையுடன் இந்த உலகம் சென்றதற்காக தேவனுக்கு அதேகேற்ற "நன்மதிப்பு" அளிக்கப்படவில்லை என்பது மெய்யாகவே வேதனையளிக்கிறது. தேவன் இந்த முழு பிரபஞ்சத்தையும் இயற்கையின் சட்டங்களையும் படைத்தார் (ஆதியாகமம் 1: 1). பெரும்பாலான இயற்கைப் பேரழிவுகள் இந்தச் சட்டங்களின் விளைவாகும். சூறாவளி, புயற்காற்று, மற்றும் சுழற்காற்று ஆகியவை காலநிலை மோதல் மாறுபாடுகளின் விளைவுகள் ஆகும். பூமிக்குரிய தட்டு கட்டமைப்பு மாறுவதன் விளைவாக பூகம்பங்கள் ஏற்படுகின்றன. சுனாமி நீருக்கடியில் உண்டாகும் பூகம்பத்தால் ஏற்படுகிறது.*

*இயற்கையின் இயல்புகள் எல்லாமும் இயேசு கிறிஸ்துவுக்குள் நிலைநிற்கிறது என்று வேதாகமம் கூறுகிறது (கொலோசெயர் 1:16-17). இயற்கை பேரழிவுகளை தேவன் தடுக்க முடியுமா? நிச்சயமாக! தேவன் சில நேரங்களில் வானிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறாரா? உபாகமம் 11:17 மற்றும் யாக்கோபு 5:17*

ஆகியவற்றில் நாம் பார்க்கிறபடி, ஆம். தேவன் சில சமயங்களில் பாவத்திற்கு எதிரான தீர்ப்பாக இயற்கை பேரழிவுகள் உண்டாகும்படி செய்கிறார் என எண்ணாகமம் 16:30-34 வரையிலுள்ள வசனங்கள் காண்பிக்கிறது. இயற்கை நிகழ்வுகள் என விவரிக்கப்படும் பல நிகழ்வுகளை வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் விவரிக்கிறது (வெளிப்படுத்துதல் 6, 8, மற்றும் 16). ஒவ்வொரு இயற்கை பேரழிவும் தேவனிடமிருந்து வரும் தண்டனையா? நிச்சயமாக இல்லை.

தீய ஜனங்கள் தீய செயல்களைச் செய்ய தேவன் அனுமதிக்கிறதுபோலவே பாவத்தின் நிமித்தம் சபிக்கப்பட்ட பூமியும் அதன் விளைவாக உள்ள பேரழிவுகளை ஏற்படும்படி பூமியை அவர் அனுமதிக்கிறார். ரோமர் 8:19-21 வரையிலுள்ள வசனங்கள் நமக்கு சொல்லுகிறது, “மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது. அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே, அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.” பாவத்தில் வீழ்ந்துபோன மனிதகுலத்தின் வீழ்ச்சி நாம் வாழ்ந்துகொண்டிருக்கிற இந்த உலகம் உட்பட எல்லாவற்றையும் பாதிக்கின்றது. சிருஷ்டிப்பில் எல்லாமே "ஏமாற்றம்" மற்றும் "சிதைவு" ஆகியவற்றுக்கு உட்பட்டுள்ளன. பாவம் தான் இந்த இயற்கை பேரழிவுகளுக்கு இறுதி காரணமாக இருக்கிறது, மரணம், நோய், மற்றும் துன்பம் ஆகியவற்றிற்கு பாவம்தான் காரணமாக இருக்கிறது.

இயற்கை பேரழிவுகள் ஏன் ஏற்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும். நாம் புரிந்துகொள்ள இயலாதது தேவன் ஏன் அவைகளை அனுமதிக்கிறார் என்பதே. சுனாமி ஆசியாவில் 225,000 ஜனங்களைக் கொல்லும்படியாக தேவன் ஏன் அனுமதித்தார்? கத்ரீனா சூறாவளி ஆயிரக்கணக்கான ஜனங்களின் வீடுகளை நாசமாக்கும்படி

தேவன் ஏன் அனுமதித்தார்? ஒன்று, இத்தகைய சம்பவங்கள் இந்த வாழ்க்கையில் உள்ள நம் நம்பிக்கையை குலைத்து, நித்தியத்தைப் பற்றி சிந்திக்கும்படி நம்மை கட்டாயப்படுத்துகின்றன. வழக்கமாக பேரழிவுகளுக்குப் பிறகு திருச்சபைகளில் ஜனங்கள் நிரம்பியுள்ளனர். அவர்கள் தங்கள் வாழ்க்கையை எவ்வளவு மோசமாக இருக்கிறது மற்றும் சீக்கிரமாக கடந்துபோகிறது என்பதை உணர்கிறார்கள். நாம் அறிந்திருப்பது இதுதான்: தேவன் நல்லவர்! இயற்கை பேரழிவுகளின் போது பல அதிசயமான அற்புதங்கள் நிகழ்ந்தன.

சில இயற்கை பேரழிவுகளின்போது மரணங்கள் அதிகம் நேரிடாதபடி தடுக்கப்பட்டுள்ளது. மில்லியன் கணக்கான மக்களின் வாழ்க்கையில் தங்கள் முன்னுரிமைகளை மறுபரிசீலனை செய்யும்படிக்கு மாற்றியுள்ளது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்ய நூற்றுக்கணக்கான மில்லியன் டாலர்கள் உதவி அனுப்பப்படுகிறது. கிறிஸ்தவ ஊழியங்களுக்கு உதவி செய்ய, சேவிக்க, ஆலோசனை அளிக்க, ஜெபிக்க, மற்றும் கிறிஸ்துவில் இரட்சிக்கப்படும் நம்பிக்கைக்குள் நடத்த வாய்ப்புகளை பெற்றிருக்கின்றன! தேவனால் பயங்கரமான துயர சம்பவங்களிலிருந்து மாபெரும் நல்ல காரியங்களைக் கொண்டுவர முடியும், கொண்டு வருவார் (ரோமர் 8:28).

# 27. தேவன் இருப்பாரேயானால், அவர் ஏன் இவ்வளவு உபத்திரவங்களை அனுமதிக்கின்றார்?

*பெரு என்ற நாட்டில் நிலச்சரிவு ஏற்பட்டு ஆயிரக்கணக்கில் ஜனங்கள் இடிபாடுகளின் சகதியின் கீழ் புதையுண்டு மரித்தனர். மெக்ஸிகோவில் ஒரு நில நடுக்கம் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்றது. பங்களாதேஷில் ஒரு புயல் காற்றும், கடலும் கிராமங்களை முற்றிலும் அழித்து, நூறாயிரக்கணக்கானவர் களைக் கொன்றது. வியாட்நாமில் யுத்தத்தின் கொடுமை யினால் அப்பாவிப் பெண்களும், குழந்தைகளும் மரித்தனர். ஆஸ்திரேலியாவில் எட்டு வயதேயான விக்கி காணாமற் போனாள்; ஒரு வருடத்திற்குப் பின், அவளது பிணம் அழுகிப் போன நிலையில் கண்டு பிடிக்கப்பட்டது; அவள் வன்மை யாய்த் தாக்கி கொலை செய்யப்பட்டாள். இன்னொரு மனிதனின் குரூரமான இச்சைக்குப் பலியானாள்.*

*தேவன் இருப்பாரேயானால், அவர் ஏன் உலகில் இவ்வளவு உபத்திரவங்களை அனுமதிக்கின்றார்? சிந்தனையுணர்வு மிக்க ஜனங்கள், ஒரு குழந்தையின் உபத்திரம், யுத்தத்தின் பயங்கரம் ஆகியவற்றைப் பார்த்துவிட்டு, "நிச்சயமாகவே தேவன் இல்லை, இருந்தால் அவர் இவ்வளவு உபத்திரவங்களை அனு மதிக்க மாட்டார்" என்று முடிவு செய்கின்றனர்.*

*வேதம் இக்கேள்வியைப் பகுத்தாய்வு செய்கிறது. யோபுவின் புத்தகம் "நீதிமான் ஏன் உபத்திரவப்படுகிறான்?" என்ற கேள்வியைக் கேட்கிறது. சங். 73ல் சங்கீதக்காரர், துன்மார்க்கருடைய சுக வாழ்வைப் பற்றிக் குறிப்பிட்டு, நீதிமானாக வாழ முயற்சி செய்வது பயனற்றது என்றும் முடிக்கின்றார் (வ. 3, 12, 13). ஆபகூக், "துன்மார்க்கன் தன்னைப் பார்க்கிலும் நீதிமானை விழுங்கும் போது" தேவன் மௌனமாயிருக்கிறது முடியுமா? என்று கேட்கிறார் (ஆப.*

1:13). அல்லது, சிலர் கூறுகிறபடி, "துன்மார்க்கர் ஆர்ப்பரிக்கையில் தேவன் ஏன் மௌனமாயிருக்கிறார்?"

புதிய ஏற்பாட்டில், பிறவிக் குருடனாயிருந்தவனைப் பற்றி, "ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ" என்று இயேசுவிடம் கேட்கப்பட்டது (யோவா. 9:2). துன்பங் கள் நேர்கையில், நாம் பெரும்பாலும் "யார் பாவம் செய்தது?" என்றே கேட்கின்றோம்.

இதற்கு பதில் என்ன? ஒரு மனிதன் ஏன் குருடனாய்ப் பிறக்க வேண்டும்? துன்மார்க்கமான ஒரு தேசத்தார், அதிக நீதியுள்ள ஒரு தேசத்தை மேற்கொள்ளுவதைத் தேவன் ஏன் அனுமதிக்கிறார்? துன்மார்க்கன் செழிப்பது ஏன்? நீதிமான் உபத்திரவப்படுவது ஏன்?

எல்லாவற்றிற்கும் நாம் பதிலை அறியாவிட்டாலும், நமது விசுவாசத்தைப் பலப்படுத்த சில பதில்கள் காணப்படுகின்றன.

**அப்பாவி மனிதர்கள் உபத்திரவப் படுவது ஏன்?**

அப்பாவி மனிதர்கள் ஏன் உபத்திரவப்படுகிறார்கள் என்று புரிந்துகொள்வதில்தான் உண்மையான பிரச்சனை உள்ளது. துன்மார்க்கன் உபத்திரவப்படும்போது, நாம் குறை கூறுவ தில்லை. "தேவன் இருப்பது உண்மையென்றால், ஹிட்லர் உபத்திரவப்படும்படி ஏன் அவர் அனுமதித்தார்?" என்று யாரும் கூறியதை நான் என்றுமே கேட்டதில்லை.

அப்பாவிகளின் உபத்திரவம் என்ற பிரச்சனை வித்தியாச மானதாகும். நாம் நீதியின் அடிப்படையில் சிந்தித்து, அப்பாவி கள் தண்டிக்கப்படுவது அநீதியானதென்று காண்கிறோம். நீதிமான் ஏன் உபத்திரவப்பட வேண்டும்? இதில் அநேக காரணிகள் உள்ளடங்கியுள்ளன.

*முதலாவதாக, உபத்திரப்படுதலில் சில மதிப்பீடுகள் உள்ளதால், ஒன்றுமறியாத அப்பாவிகள் உபத்திரவப்படலாம். சங்கீதக்காரர், "நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது; அதனால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகின்றேன்" (சங். 119:71; இணை வசனம் எபி. 12:11) என்று எழுதினார். சில சமயங்களில், சுகமாயிருப்பதிலும், வியாதிப்பட்டிருப்பது நமக்கு நலமாயிருக்கலாம், சந்தோஷத்தைக் காட்டிலும் வருத்தம் நலமானதாயிருக்கலாம். உபத்திரவமானது நமது ஒழுக்கத்தை வளர்த்து, இரக்கவுணர்வைத் தூண்டி, உலகப் பொருள்களின் மேல் உள்ள இச்சையைக் குறைத்து, நம்மை தேவனை நோக்கிச் செலுத்தக் கூடும். தங்கள் ஊனமுற்ற நிலையிலும் மாபெரும் சாதனைகள் புரிந்த உடல் ஊனமுற்ற வர்களைப்பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஒருவேளை சில சமயங்களில், அவர்கள் உடல் ஊனத்துடன் இருப்பதா லேயே அந்த மாபெரும் செயல்களைச் செய்ய முடிந்தது என்றுகூட நினைத்திருப்போம். எழுத்தாளரும், விரிவுரையா ளருமான ஹெலன் கெல்லர், இந்த நூற்றாண்டின் எழுச்சிமிகு நபர்களில் ஒருவராக ஆனார். பார்வையின்மை, கேட்குந்திறன் இன்மை மற்றும் பேசும் திறன் இன்மை ஆகியவை இருந்தும் கூட அவர் இப்படி உயர்ந்தார் என்று சொல்லாமல், அப்படிப் பட்ட குறைபாடுகள் இருந்ததால் அவர் இப்படி உயர்ந்தார் என்று சொல்லலாம். உபத்திரவமானது நல்லொழுக்கத்தின் வாசலாகத்தான் கருதப்படல் வேண்டும்.*

*இரண்டாவதாக, அவர்கள் பாவத்தின் விளைவால் உபத்திரவப்படலாம். பாவத்தின் காரணமாக உலகத்தில் உபத் திரவம் உண்டாயிற்று, இந்த உபத்திரவம் பாவத்தின் காரண மாக தொடர்ந்து மனிதகுலத்தை பாதித்துக் கொண்டுள்ளது. யோபு 4:8ல் எலிப்பாஸ், "நான் கண்டிருக்கிறபடி, அநியா யத்தை உழுது, தீவினையை விதைத்தவர்கள் அதையே அறுக்கி றார்கள்" என்று கூறும்போது, பொதுவான ஒரு உண்மையை நிலை நாட்டுகின்றார். புதிய ஏற்பாடும் கூட இதை ஏற்றுக் கொள்ளுகிறது: "மோசம் போகாதிருங்கள், தேவன்*

*தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலா. 6:7). துன்மார்க்கர் இவ்வாழ்க்கையில் உபத்திரவப்படாவிட்டாலும், அவர்களின் பாவத்தின் காரணமாக மறுவாழ்க்கையில் உபத்திரவப் படுவார்கள் (ரோமர் 6:23).*

*குற்றமிழைத்தவர்களோடு, ஒன்றுமறியாத அப்பாவிகளும் உபத்திரவப்படுவதே பாவத்தின் மிகத் துன்பமான நிலை யாகும். உபா. 5:9ல் தேவன் பாவத்தின் தொடர் செயலைப் பற்றிக் கூறினார். அவர், பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும், விசாரிக்கிறவராயிருக்கிறார். பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் கவனியுங்கள்: முதலாவது, ஒரு தகப்பன் குடிகாரனாயிருக்*

*கிறான், அவன் தனது பிள்ளைகளை தன்னடக்கமற்ற, ஒழுக்கக் கேடான சூழ்நிலையில் வளர்க்கிறான். அவனுடைய பாவத்தி னால் எத்தனை தலைமுறைகள் பாதிக்கப்படுகிறது! வியாதி, ஏழ்மை, அகால மரணம், மனோவியாதிகள் ஆகியவை அவனது பிள்ளைகளையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும் பாதிக்கின் றது. இரண்டாவதாக, டெக்ஸாஸின் அபிலைன் நகரத்தில், ஒரு இளவயது வாலிபன், பிரான்ஸில் ஊழியக்காரியாயிருந்த ஒரு நல்ல இளம் பெண் உட்பட மூன்று பேர் மேல் தனது வாகனத்தை ஏற்றிக் கொன்று விட்டான். அவன் மதுபானம் அருந்தியிருந்ததால், தனது வாகனத்தை வேகமாக ஓட்டினான், அவனிடம் ஓட்டுநர் உரிமம் கூட இருக்கவில்லை. ஒன்றுமறி யாத அந்த மூவர் எதனால் பாதிக்கப்பட்டனர்? அந்த இளை ஞனின் பாவத்தினால் தான்! மூன்றாவதாக, யுத்தத்தில், குற்றம் செய்கிறவர்களோடு கூட ஒன்றுமறியாத அப்பாவி ஜனங்களும் உபத்திரவப்படுகின்றனர்.*

*பாவமே உபத்திரவத்திற்குக் காரணமாகிறது – அது குற்றமிழைத்தவர்கள் மற்றும் குற்றமிழைக்காத அப்பாவிகள் ஆகிய யாவருக்கும் உபத்திரவமாய் அமைகிறது.*

*மூன்றாவதாக, மனிதனின் தவறிழைக்கும் தன்மையினா லும், பலவீனத்தினாலும், ஒன்றும் அறியாதவர்கள் உபத்திரவப் படலாம். பாவம் எப்பொழுதுமே உபத்திரவத்திற்குக் காரணமாகின்றது, ஆனால் எல்லா உபத்திரவமும் பாவத்தின் விளைவாக மட்டும் இருப்பதில்லை. பார்வையற்ற மனிதன் ஒருவனைப் பற்றிய கேள்விக்கு விடையளிக்கும்போது இயேசு இதை விளக்கிக் காட்டினார்: "அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான்" (யோவா. 9:3). பாவத்தின் விளைவாகவே எல்லா உபத்திரவங்களும் உண்டாகின்றன என்ற தவறான கருத்தை யூதர் கொண்டிருந்தனர், ஆனால் அப்படியல்லவென்று இயேசு கூறினார்.*

*மனிதனின் தவறான முடிவினால் சில உபத்திரவங்கள் உண்டாகின்றன. அவன் தன்னால் எவ்வளவு தூரம் நீந்த முடியும் என்பதை முடிவு செய்வதில் தவறு செய்கின்றபோது, அதன் விளைவாக அவன் நீரில் மூழ்கி விடுகிறான். இதில் அவன் பாவம் ஒன்றும் செய்வதில்லை – ஆனால் மனிதனின் தவறான கருத்துக்களே அவனது உபத்திரவங்களுக்கு வழியாய் அமைந்து விடுகிறது. ஆஸ்திரேலியாவில் ஏற்பட்ட இரயில் விபத்து ஒன்றில் ஒன்பது பேர் கொல்லப்பட்டனர். "மனிதனின் தவறு" தான் இவ்விபத்திற்குக் காரணம் என்று குற்றம் சாட்டப் பட்டது, அத்தவறினால் ஒன்றும் அறியாதவர்கள் உபத்திரவப் பட்டனர்.*

*முழுமையற்ற, விபத்துக்குக் காரணமாகின்ற மனிதர்களால் நிறைந்துள்ள இவ்வுலகத்தில் நாம் வாழ்கின்ற வரையில், ஒன்றும் அறியாதவர்களையும், குற்றம் செய்கின்றவர்களையும் ஒருசேர துன்பப்படுத்தும் தவறுகளை நாம் எதிர்கொள்ள வேண்டியதாயிருக்கிறது.*

*நான்காவதாக, இயற்கையின் விதிகளுக்கு முரண்படும் போது, ஒன்றும் அறியாதவர்கள் உபத்திரவப்படலாம். உண்மையில், நாம் இயற்கையின் விதிகளை சிதைப்பதில்லை; நாம் அவற்றுக்குக் கீழ்ப்படியாமல் போகும்போது அவைகள் நம்மைச் சிதைக்கின்றன! புவியீர்ப்பு விசையை நீங்கள் மீறி நடந்தால், அது உங்களைச் சிதைத்துவிடும்.*

*ஆனால், பூமியதிர்ச்சி, சுழல் காற்று போன்றவை மூலமாக ஒன்றுமறியாதவர்கள் உபத்திரவப்படுதல் அல்லது கொல்லப் படுதல் - அவர்கள் இயற்கையின் விதிகளை மீறாமலிருக்கும் பொழுது ஏன் நடக்கிறது?*

*நமது அண்டத்தை ஒரு பெரிய இயந்திரமாகக் கற்பனை செய்து பாருங்கள். அதன் சக்கரங்களும். சுழற்றிகளும் ஓயாது இயங்கிக் கொண்டுள்ளன. கட்டுப்படுத்தப்பட்ட வெடிப்பு நிகழ்ச்சிகளும், அதிக வேக இயக்கமுள்ள பிஸ்ட்டன்களும், குளிர்விக்கும் மற்றும் வெப்ப மூட்டும் அமைப்புகளும் அதில் இருக்கின்றன. நம்ப முடியாத அளவில் சக்தியானது உண்டாகி, மாற்றப்பட்டு, பயனாகி மற்றும் வீணாகின்றது. இவை யாவும் நாம் அறிந்துள்ள மற்றும் அறியாத சில சட்டங்கள் மூலம் நடந்து கொண்டிருக்கின்றன.*

*இந்த இயந்திரத்தைச் சுற்றியோ அல்லது அதன் மேலோ நாம் நடக்காமல், இதன் உள்ளாக நாம் நடந்து கொண்டிருக் கின்றோம். சில சட்டங்கள், சில விதிகள், சில துன்பங்கள் இவற்றை நாம் அறிந்துள்ளபடியால், இவ்வியக்குச் சக்கரங் களின் மாற்றத்திலிருந்தும், பிஸ்டன்களின் அடியிலிருந்தும் நம்மைத் தவிர்த்துக் கொள்ள முடிகிறது. ஆனால் அவைகள் எல்லாவற்றையும் நாம் அறிந்து வைத்திருப்பதில்லை, நாம் எல்லாத் துன்பங்களையும் தவிர்த்து விட முடிவதில்லை. இதன் விளைவாக, இம்மாபெரும் சுழற் சக்கரங்களின் இடையில் நாம் வரவேண்டியதாகி விடுகிறது, அல்லது*

*நம்மையறியாமல் அதன் சுழற்றிகள் ஒன்றில் கால் வைத்து விடுகின்றோம் அல்லது வெடிப்பு நிகழ்ச்சிகள் ஒன்றின் நடுவே நாம் நுழைந்து விடுகின்றோம். இது நடக்கும் போது, நாம் செய்த தவறு என்ன? இவ்வண்டத்தின் இயக்கத்தினூடே நுழைந்ததைத் தவிர வேறு ஒரு தவறும் நாம் செய்யவில்லை!*

*பூமியதிர்ச்சியில் கொல்லப்பட்ட ஜனங்களால் செய்யப் பட்ட "தவறு" இது ஒன்றுதான். சில மாபெரும் உள்ளான சக்திகள் பூமியை வலுக்கட்டாயமாய்க் குலுக்குகின்றன, இயற்கையின் இந்த சக்திகளினூடே அவர்கள் இருந்ததின் காரணமாக மட்டுமே அவர்கள் மரிக்கின்றனர்.*

*இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், "இவ்வுலகத்தை நிறுத் துங்கள்! நான் தப்பிக்க விரும்புகிறேன்" என்று சொல்ல நமக்கு ஏதேனும் உரிமையுள்ளதா? இயற்கையின் விதிகள் தொடர்ந்து செயலாற்றுகின்றன, நாம் அதன் வழியில் இருந்தாலும், இல்லையென்றாலும் தொடர்ந்து அதன் இயக்கம் நடை பெறுகின்றது. இதன் விளைவாக ஒன்றுமறியாதவர்கள் உட்பட, மனிதர்கள் உபத்திரவப்படுகின்றனர்.*

**தேவன் ஏன் இடைப்படுவதில்லை?**

*இப்பொழுது சொல்லப்பட்டதை சிலர் ஒத்துக் கொள்வதில்லை. ஒன்றுமறியாதவர்கள் மேலே தரப்பட்ட காரணங்களினால் உபத்திரவப்படுகின்றனர். ஆனால் ஒரு கேள்வி இதன் பின் வருகிறது: "தேவன் ஒருவர் இருப்பாரே யானால், ஏன் அவர் உபத்திரவத்தைத் தடை செய்வதில்லை?" "துன்மார்க்கர், ஒன்றும் அறியாதவர்களைத் துன்புறுத்துவதை அவர் ஏன் தடை செய்வதில்லை"? நல்ல மனிதர்கள் தவறு செய்வதையும், ஒன்றுமறியாதவர்கள், மற்றவர்களின் தவறுகளி னால் உபத்திரவப்படுவதையும் ஏன் அவர் தடை செய்கிற தில்லை? இயற்கையின் சக்திகளினால் ஒன்றுமறியாதவர்கள் பாதிக்கப்படாதபடி*

*இந்த அண்டத்தை அவர் ஏன் கட்டுப் படுத்துவதில்லை? இதற்கேற்ற இரண்டு பதில்களைக் கவனியுங்கள்.*

*மனிதனின் இயல்புக்கு தேவன் மதிப்பளிக்க வேண்டுவதால், அவர் இடைப்படுவதில்லை. மனிதன் ஒழுக்க ரீதியாக சுதந்திரவாளியாக இருக்கிறான். அவனது செயல்பாடுகள் அவனைப் பொறுத்தவையாக உள்ளன; அவனுடைய தெரிவுகள் முன் தீர்மானிக்கப்பட்டவை அல்ல. தவறானதைத் தெரிந்து கொள்வதோ, அவன் தன்னையோ மற்றவர்களையோ உபத்திரவத்திற்கு உட்படுத்திக் கொள்வதோ அவனுடைய விருப்பத் தேர்வாக உள்ளது. மனிதன் முழு மனிதனாயிருக்க இந்தச் சுதந்திரத்தை தேவன் அனுமதிக்க வேண்டியதாய் உள்ளது.*

*தேவன் இத்தகைய சுதந்திரத்தை மனிதனின் சொந்த நலனிற்காகவே அனுமதிக்கிறார். நீங்கள் ஒரு எந்திர மனிதனா கவோ, ஆட்டுவிக்கப்படும் பொம்மையாகவோ இருக்க விரும்புவீர்களா? மற்றவர்களின் நலனிற்காக அவர் இந்த சுதந்திரத்தை அனுமதிக்கிறார். நமது சுதந்திரம் என்பது, நமது தியாகம், அன்பு, மற்றவர்க்குத் தொண்டு செய்தல் ஆகியவற்றில் தான் முழுப் பொருள் தருவதாய் உள்ளது. தேவன், இந்த சுதந்திரத்தை தம்முடைய மகிமைக்காகவும் அனுமதிக்கிறார். தேவன், மனிதன் தம்மை மகிமைப்படுத்தவே படைத்தார், ஆனால் மனிதனுக்கு மாற்று செயல்பாடுகள் இல்லையென்றால், தன்னை சிருஷ்டித்தவருக்கு அவன் செய்யும் ஊழியத்தில் மகிமையொன்றும் இல்லை.*

*இவ்வண்டத்தின் இயல்புக்கு தேவன் மதிப்பளிக்க வேண்டியதால், அவர் இடைப்படுவதில்லை. தேவன் நீதியுள்ள வர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார் (மத். 5:45). இவ்விதமாக நீதியுள்ள வர்கள் போலவே துன்மார்க்கரும் இயற்கையின் மூலம் பலனடைகின்றனர், துன்மார்க்கர் போலவே*

நீதியுள்ளவர் களும் இயற்கைச் சக்திகளினால் உபத்திரவம் அடைகின்றனர்.

தேவன் இவ்விரு சாராரையும் ஒன்று போலவே ஆசீர்வதிக் கவும், சபிக்கவும் இயற்கையை அனுமதிப்பது ஏன்? ஏனெனில், முதலாவது, நாம் விதிகளால் ஆளப்படுகின்ற ஒரு அண்டத்தில் வாழ்கின்றோம். ஒருவேளை தேவன் இவ்வண்டத்தின் விதிகளை நீதியுள்ளவர்களுக்கு மாத்திரம் சாதகமாக, மனம் போனபடி நிர்ணயிப்பாரேயாகில் அதன் விளைவாகக் குழப்பமே ஏற்படும். விதிகளால் அல்ல மாறாக திடீர்க் கருத்தினால் ஆளப்படும் ஒரு அண்டத்தையே நாம் பெற்றிருப்போம். அதை நாம் விரும்புவோமா?

தேவன் இரு சாராருக்கும் ஆசீர்வாதம் மற்றும் சாபம் இவற்றை அளிக்க இயற்கையை அனுமதிக்கிறார் என்பதற் குள்ள இரண்டாவது காரணம் என்னவென்றால், சிலருக்கு உபத்திரவம் வராமல் அவர் தடுப்பாரேயானால், பலருக்கு அது உபத்திரவத்தைக் கொண்டுவரும்படியாகும். ஜனங்களை மூழ்கடிக்கின்ற அதே வெள்ளமானது ஆயிரக்கணக்கான வாய்க்கால்கள் மூலமாக பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும் பயனாகின்றது. தேவன் ஒருவேளை சிலரை அந்த வெள்ளத்தி லிருந்து காப்பாரேயானால், அது பஞ்சத்தின் விளைவாக ஆயிரக்கணக்கானவர்கள் பட்டினியினால் வாடும் விளைவை உண்டாக்கி விடும்.

தேவன் இவ்விரு சாராரையும் ஒன்று போலவே ஆசீர்வதிக்கவும், சபிக்கவும் இயற்கையை அனுமதிக்கிறார் என்பதற்குள்ள மூன்றாவது காரணம், நீதியுள்ளவர்களுக்கு மட்டும் அவர் நன்மை செய்வாரேயானால், அது அநேகர் தவறான நோக்கத்திற்காக அவருக்கு ஊழியம் செய்யக் காரணமாகிவிடும். ஒரு வேளை, துன்மார்க்கர் மட்டும் உபத்திரவமும், நீதியுள்ளவர்கள் எப்போதும் வளமையும் பெறுவார்களேயானால், யாரெல்லாம் கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள்? நிச்சயமாய் ஒவ்வொருவரும் ஊழியம் செய்வார்கள்!

ஆனால் எதற்காக? "அப்பத்திற்காகவும், மீன்களுக்காகவும்" மட்டுமே! தமக்கு ஜனங்கள் சரியான நோக்கத்திற்காக ஊழியம் செய்து மகிமைப்படுத்த வேண்டு மென்றுதான் தேவன் விரும்புகிறார்.

தேவன் தாம் படைத்த இவ்வண்டத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் - இவ்வண்டம் அவரால் விதிக்கப்பட்ட சட்டங் களால் ஆளப்படுகிறது. அவர், ஒன்றுமறியாதவர்களைக் காப்ப தற்காக இவ்விதிகளை மீறமுடியாது.

தேவன் ஏன் இவ்வித அண்டத்தை சிருஷ்டித்தார்? இயற்கை அழிவுகளே ஏற்படாத ஒரு உலகத்தை ஏன் அவர் சிருஷ்டிக்கவில்லை? இந்தக் கேள்விக்கு அநேக பதில்கள் உள்ளன, ஆனால் அவைகளில் ஒன்று மட்டும் இங்கு தரப்படுகிறது: "ஒரு அண்டத்தை சிருஷ்டிப்பதுபற்றி அந்த அளவு நீங்கள் அறிந்திருந்தால், நீங்களே சொந்தமாக ஒன்றை ஏன் சிருஷ்டிக்கக் கூடாது?" தேவன் செய்வதை நாம் செய்ய இயலாத வரையிலும், தேவன் அறியக் கூடியதை நாம் அறியக்கூடாத வரையிலும் தேவன் செய்திருப்பதை நாம் விமர்சனம் செய்யக் கூடாது.

"தேவன் ஏன் இடைப்படுவதில்லை?" என்ற கேள்விக்கு இன்னொரு பதில்: தேவன் இடைப்பட்டுள்ளார்! தேவன் இடைப்படுகிறார்!

மனிதர்கள் ஒருவரையொருவர் அன்பு செய்ய உபதேசிக்கும்படி தமது குமாரனை அனுப்பியதன் மூலம் தேவன் இடைப்பட்டிருக்கிறார். கிறிஸ்துவின் உபதேசத்தை பின்பற்றுவோரின் செயல்பாடுகள் மூலம் மனிதகுலத்திற்கு உண்டான உபத்திரவங்களிலிருந்து சுகத்தை பெற அவர் உதவுகிறார். தேவன் தமது பிள்ளைகளின் ஜெபங்களினால் இன்றும் இடைப்படுகிறார். எசேக்கியாவை எண்ணிப் பாருங் கள் - அவர் தாம் மரிக்கப் போவதை அறிந்தபோது, தேவனிடம் ஜெபித்தார். தேவன் அவருக்கு ஆயுளில் பதினைந்து வருடங்கள் அதிகமாகக் கொடுத்தார் (2 இரா. 20:1-6). புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நடந்தது

போல இந்நாட்களில் தேவன் அற்புதங்களின் மூலம் பதில் தருவதில்லை. ஆனால் அவரிடத் தில் ஜெபிப்பவர்களுக்கு அவர் உதவுகிறார். அவர் எத்தனை தரம் நமது ஜெபத்திற்குப் பதில் தந்துள்ளார் என்பதை நித்திய ராஜ்யமே நமக்கு வெளிப்படுத்தும். தேவன் இந்த அண்டத் தைத் தானாகவே இயங்கும்படி விட்டு விடவில்லை. இன்னும் அது கிறிஸ்துவால் தாங்கப்படுகிறது. தேவன் இன்னும் ஜெபத்திற்குப் பதில் அளிக்கிறார்.

ஒவ்வொரு ஜெபத்திற்கும் தேவன் ஏன் பதில் அளிப்ப தில்லை? ஏனென்றால் அது எப்பொழுதுமே அவருடைய சித்தமல்ல. சில வேளைகளில் அவர் நேசிக்கின்ற ஒருவர், சுகமடையாமல் போவது அவரது நோக்கங்களுக்காகச் சிறந்ததாய் இருக்கலாம். எனவே இயேசுவைப் போலவே நாமும் "என்னுடைய சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது'' என்று ஜெபிக்கிறோம். தேவன் தமது நோக்கத்தை நிறைவேற்ற எது சிறந்ததோ அதைச் செய்வார் என்று நாம் நம்புகின்றோம்.

ஆனால் மூன்றாவது கேள்வியொன்று நமது வாயில் வருகின்றது: காரணமற்ற இத்தனை உபத்திரவங்கள் நம்மைச் சூழ்ந்துள்ளதால், சிலவேளைகளில் தேவன் நம் மேல் கரிசனை கொள்வதில்லை என்று காணப்படுவதால் நாம் கேட்கிறோம்:

### தேவனை நாம் ஏன் நம்ப வேண்டும்?

வேறு ஒரு மாற்று வழியும் இல்லாததினால் நாம் தேவனை நம்பியே ஆக வேண்டும்!

இவ்வுலகத்தில் உள்ள எல்லா உபத்திரவங்களுக்கும் தேவன் இல்லாமல், திருப்தியளிக்கும் விளக்கத்தைப் பெற முடியாது. இயற்கையின் குருட்டாட்ட சக்திகளின் மூலமாகவும், முரட்டுத்தனமான விதிகளின் மூலமாகவும் அர்த்தமற்றதையே எதிர்நோக்கும் வாழ்க்கையின் மூலமாகவும்தான் உபத்திரவம் உண்டாகின்றது என்று

நாத்திகவாதி நம்பியாக வேண்டும். ஆனால் இந்த விளக்கம் திருப்தியளிப்பதில்லை! தேவனைப் பற்றிய கருத்தை மறுப்பவர்கள் கூட இதன் பொருளை அறிய பதிலைத் தேடுகின்றனர்.

மேலும், இவ்வுலகத்தின் எல்லா ஆசீர்வாதங்களுக்கும் தேவன் இன்றி, ஒரு விளக்கம் கிடையவே கிடையாது. இதை சிட்னி ஹாரிஸ் என்ற பத்திரிகையாளர் பின் வருமாறு எழுதுகிறார்:

நோக்கங்கள் நிறைந்த தேவன் உள்ளார் என்ற கருத்தை மறுப்பவர்கள் தங்களுக்குச் சாதகமாக இவ்வுலகத்தில் உள்ள எல்லாத் தீமைகளையும் முன்வைத்து வாதிடுகின்றனர். "உதவி செய்யக் கூடிய ஒரு தேவன் இவ்வளவு மோசங்களும் ஏற்பட்டுப் பெருக எவ்விதம் அனுமதிக்கக் கூடும்?" என்று அவர்கள் கேட்கின்றனர்.

இக்கேள்வியை அப்படியே திருப்பி, "நன்மையின் பிரச்சனை" என்று நான் அழைக்கும் கருத்தை முன் வைத்து இக்கேள்விக்கு பதில் அளிக்க நான் எப்போதும் முன் வருவதுண்டு. இவ்வுலகில் உள்ள ஏராளமான நன்மையைப் பற்றி இவர்கள் கூறுவதென்ன? மனிதன் அன்பின் சிகரத்தை எட்டியது எப்படி? சுயநலமற்றவனாய் தன்னையே தியாகம் செய்பவனாய் அவன் மாறியது எப்படி? அவன் தனது சிநேகிதனுக்காய் ஜீவனைத் தர முடிந்தது எப்படி? மற்றவர்கள் நலனிற்காய் அவன் தனது நலத்தைத் தியாகம் செய்ய முடிந்தது எப்படி? பல வீரர்களையும், வீரமரணம் அடைந்தவர் களையும் மனிதகுல வரலாறு வெளிச்சம் போட்டுக் காண்பிப்பது ஏன்? அவர்கள் தங்களை காட்டிலும் மேலான ஒரு நோக்கத்திற்காக மரித்ததை மேன்மைப் படுத்துவது ஏன்?

மனித குலத்தின் நற்பண்புகளை மட்டுமே எடுத்துக் கொண்டு, குற்றங்களை விலக்கிவிட நாம் பழகி விட்டோம், ஆனால் தேள் அல்லது வேறு விஷ ஜந்துக்களுக்கொப்பான தன்மைக்கு அப்பால், மனிதனிடம் இந்த நற்பண்புகள் ஏன் உள்ளன? மனிதனின் நிறைவற்ற

*தன்மையை வெளிப்படுத்துவதைக் காட்டிலும், தேவனின் நற்பண்புகளுக்காய் களி கூருவதற்குக் காரணங்கள் பல உள்ளன.*

*இது உண்மையல்லவா? நாம் அதிசயிக்கும் அளவு இவ்வுலகத்தில் பல நன்மைகள் உண்டல்லவா? உண்மையிலே நாம் பல ஆசீர்வாதங்களை அனுபவிப்பதினாலேயே உபத்திரவங்களை அடையாளம் காண முடிகிறது! நீங்கள் வெளிச்சத்தை அறியாவிட்டால், இருளை இருள் என்று அடையாளம் காண முடியாது. நீங்கள் அநுபவித்தாலன்றி, வலியை வலியென்று நீங்கள் அறிய முடியாது. நீங்கள் ஆரோக்கியமாய் இருந்திருந்தாலன்றி, வியாதிப்பட்ட நிலையை அறிய முடியாது. உண்மையில் நாம் ஏராளமான ஆசீர்வாதங்களைப் பெற்றிருப்பதினாலேயே நமது உபத்திரவங்களைப் பற்றி குறைப்படுகின்றோம்!*

*கேள்வி இதுதான்: இந்த ஆசீர்வாதங்கள் யாவும் எங்கிருந்து வருகின்றன? அர்த்தமற்ற ஒரு அண்டத்திலிருந்து அதிர்ஷ்ட வசமாகவா? முடியாது! இவைகள் யாவும் தேவனிடமிருந்தே வரவேண்டும்! கிறிஸ்தவர்களைக் காட்டிலும் கடினமான பிரச்சனையை நாத்திகவாதி பெற்றுள்ளார்: அவர் நம்மிடம், "தேவன் இருப்பாரேயானால் ஏன் இவ்வளவு உபத்திரவம் உள்ளது?" என்று கேட்கிறார். நாம் அவரை, "தேவன் இல்லை யென்றால், இவ்வளவு ஆசீர்வாதங்கள் எங்கிருந்து வந்தன? உண்மையில், இவ்வுலகில் நன்மையானது என்று ஒன்று இருப்பது எப்படி?" என்று கேட்கிறோம்.*

*நாம் பார்க்கின்ற இக்கேள்விக்கு கிறிஸ்தவர்களிடம் எப்பொழுதுமே நிறைவான பதில் ஒன்று உண்டு: அதை இப்பொழுது நாம் அறியாதிருக்கலாம், ஆனால் கூடிய விரைவில் அறிவோம். ஒரு நாளில் அதைப் புரிந்து கொள்வோம். தேவன் எல்லாவற்றையும் நன்கு அறிவார் என்று நாம் நம்புகின்றோம். அவர் சகலத்தையும் நன்மைக் கேதுவாக நடத்துகிறார் என்று நாம் நம்புகின்றோம் (ரோமர் 8:28).*

*விசுவாசத்தின் மூலமாகவே நாம் வாழ்வின் நன்மை மற்றும் தீமைகளில் நிலைத்து நிற்க முடிகிறது.*

**முடிவுரை**

*கிறிஸ்தவர்களின் விசுவாசமே அவர்களை வாழ்க்கையின் சோதனைகள், அவநம்பிக்கைகள், மற்றும் உபத்திரவங்களில் பலப்படுத்துகின்றது. உங்களின் விசுவாசக் குறைவு உங்களுக்கு என்னத்தைச் செய்தது? உங்கள் சந்தேகம் உங்களை நிலைப்படுத்தியதா? உங்கள் அவநம்பிக்கை உங்களை வாழ்க்கையின் உபத்திரவங்களின் மத்தியில் வளமாகவும், வெற்றிகரமாகவும் வாழ வைத்ததா?*

*உங்களேயே நீங்கள் தேவனுக்கென்று கொடுக்க இது சமயமல்லவா? விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதல் மூலம் உங்களையே நீங்கள் அவருக்கு ஒப்புக் கொடுங்கள், அவர் நிச்சயம் உங்களை விசாரிப்பார். அதன்பின்பு, சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கின்றதென்ற உறுதிப்பாடு உங்களுக் குண்டாகும். அதாவது நீங்கள் எவ்வித உபத்திரவத்தில் இருப்பினும் தேவனோடு கூட நித்தியத்தில் ஒரு இடத்தைப் பெறுவீர்கள் ... அந்த ஒருநாளில் அவர் எல்லாவற்றையும் நீக்கிவிடுவார்.*

# 28. தேவனைக் கேள்வி கேட்பது தவறா?

நாம் தேவனைக் கேள்வி கேட்கலாமா, இல்லையா என்பதில் அல்ல மாறாக எந்த விதத்தில், எந்த காரணத்திற்காக நாம் அவரைக் கேள்வி கேட்கிறோம் என்பதுதான் விஷயமாக இருக்கிறது. தேவனைக் கேள்வி கேட்பது என்பது தவறு அல்ல. கர்த்தருடைய திட்டத்தின் நேரம் மற்றும் அமைப்பு பற்றிய விஷயத்தில் தீர்க்கதரிசியான ஆபகூக் தேவனிடம் கேள்விகளைக் கேட்டார். ஆபகூக் கேட்டக் கேள்விகளுக்கு தேவன் கடிந்துகொள்ளாமல் அவருடைய கேள்விகளுக்குக் பொறுமையாக பதில் அளிக்கிறார், மற்றும் தீர்க்கதரிசி தன்னுடைய புத்தகத்தின் இறுதியில் தேவனைப் புகழ்ந்து பாடுகிறார். சங்கீத புத்தகத்தில் பல கேள்விகள் தேவனுக்கு முன்பாக வைக்கப்படுகின்றன (சங்கீதம் 10, 44, 74, 77). இவைகள், தேவனுடைய தலையீட்டிற்கும் இரட்சிப்புக்குமாயுள்ள துன்புறுத்துதலின் கூக்குரல்கள் ஆகும். நாம் கேட்கிற எல்லா கேள்விகளுக்கும் தேவன் நாம் விரும்புகிற விதத்தில் பதிலளிப்பதில்லை என்றாலும், ஆழ்ந்த இதயத்திலிருந்து கேட்கப்படுகிற ஒரு நேர்மையான கேள்வியானது தேவனால் வரவேற்பைப் பெறுகிறது என்று நாம் முடிவுக்கு வரலாம்.

நேர்மையற்ற கேள்விகள், அல்லது ஒரு மாய்மாலமுள்ள இதயத்திலிருந்து வரும் கேள்விகள் என்பது வேறு விஷயம். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத்தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" (எபிரெயர் 11:6). சவுல் ராஜா தேவனுக்கு கீழ்ப்படியாமல் போன பிறகு, அவருடைய கேள்விகள் யாவும் பதிலளிக்கப்படாதவைகளாக போயின (1 சாமுவேல் 28:6). தேவனுடைய நற்குணத்தை நேரடியாகக் கேள்வி கேட்பதைவிட தேவன் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை ஏன் அனுமதித்திருக்கிறார் என்பது முற்றிலும் வித்தியாசமாக இருக்கிறது. சந்தேகங்களைக்

*கொண்டிருப்பது என்பது தேவனுடைய இறையாண்மையைக் கேள்விக்குட்படுத்தி அவருடைய பண்புகளை சந்தேகிப்பது என்பதிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். சுருக்கமாக, ஒரு நேர்மையான கேள்வி பாவம் அல்ல, ஆனால் ஒரு கசப்பான, நம்பத்தகாத, அல்லது கலகத்தனமான இதயம் பாவமாக இருக்கிறது. கேள்விகளால் தேவன் பயமுறுத்தப்படவில்லை. அவருடன் நெருங்கிய ஐக்கியத்தை அனுபவிக்க தேவன் நம்மை அழைக்கிறார். நாம் "தேவனைக் கேள்விக்கேட்கும்போது" அது மனத்தாழ்மையுள்ள மனநிலையிலிருந்தும் வெளிப்படையான மனநிலையிலிருந்தும் வரவேண்டும். நாம் தேவனைக் கேள்வி கேட்கலாம், ஆனால் அவருடைய பதிலில் நாம் உண்மையிலேயே அக்கறை காட்டாவிட்டால், நாம் ஒரு பதிலையும் எதிர்பார்க்கக்கூடாது. தேவன் நம் இதயங்களை அறிந்திருக்கிறார், நமக்கு உண்மையிலேயே அவரைத்தேடி நமக்கு வெளிச்சம் அளிக்கும்படி கேட்கிறோமா என்பதை அவர் அறிந்திருக்கிறார். நம்முடைய இதய மனப்பான்மை தான் நாம் தேவனைக் கேள்வி கேட்பது சரியானதா அல்லது தவறா என்பதை தீர்மானிக்கிறது.*

# 29. யாராவது தேவனை எப்பொழுதாவது பார்த்திருக்கிறார்களா?

*தேவனை ஒருவனும் ஒருக்காலுங் கண்டதில்லை என்று வேதாகமம் சொல்லுகிறது (யோவான் 1:18). யாத்திராகமம் 33:20-ல், “நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார்” என்று தேவன் உரைக்கிறார். இந்த வேதவாக்குகள், தேவனைக் "காணும்" அநேக ஜனங்களை விவரிக்கும் மற்ற வேதவாக்கியங்களோடு முரண்படுகின்றன. உதாரணமாக, மோசே தேவனை "முகமுகமாய்" பேசுவதை யாத்திராகமம் 33:11 விவரிக்கிறது.*

*தேவனுடைய முகத்தை யாரும் பார்க்க முடியாதென்றால் மோசே எவ்வாறு தேவனை "முகமுகமாய்" பேச முடிந்தது மற்றும் உயிரோடு இருக்க முடிந்தது? இந்த நிகழ்வில், "முகமுகமாய்" என்கிற சொற்றொடர், அவர்கள் மிக நெருக்கமான ஐக்கியத்தில் இருப்பதை சுட்டிக்காட்டும் ஒரு பேச்சு உருவகம் ஆகும். இரண்டு மனிதர்கள் நெருங்கி உரையாடுவதைப்போலவே தேவனும் மோசேயும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்தார்கள்.*

*ஆதியாகமம் 32:30 ல், யாக்கோபு தேவன் ஒரு தேவதூதனாக தோன்றியதைக் கண்டார்; அவர் உண்மையிலேயே தேவனைக் காணவில்லை. சிம்சோனின் பெற்றோர் தாங்கள் தேவனைக் கண்டிருந்ததை உணர்ந்தபோது மிகவும் பயந்தார்கள் (நியாயாதிபதிகள் 13:22), ஆனால் அவர்கள் அவரை ஒரு தேவதூதராகத் தோன்றியதையே கண்டார்கள். இயேசு மாம்சத்தில் தேவனாய் இருந்தார் (யோவான் 1:1, 14) எனவே ஜனங்கள் அவரைக் கண்டபோது தேவனைக் கண்டார்கள். எனவே, ஆம், தேவன் "காணப்பட்டார்" மற்றும் பலர் தேவனை "கண்டார்கள்".*

*அதே நேரத்தில், தேவன் தம்முடைய மகிமை முழுவதையும் உடையவராக இருந்த நிலையில் ஒருவரும் அவரைக் கண்டதில்லை. நம்முடைய விழுந்துப்போன இந்த பாவமான மனித நிலைமையில், தேவன் தம்மை முழுமையாக வெளிப்படுத்தியிருந்தால், நாம் பட்சிக்கப்பட்டு அழிக்கப்பட்டு போயிருப்போம். ஆகையால், தேவன் தமக்குத்தாமே ஒரு திரையை அமைத்துக்கொண்டு தமது பரிபூரணமான மகிமையை மறைத்துக் கொண்டு, நாம் அவரை "பார்க்க" முடிகிற வடிவங்களில் தோன்றுகிறார். இருப்பினும், தேவனை அவரது மகிமையும் பரிசுத்தமும் பொருந்தினவராக காண்பதைக்காட்டிலும் இது வித்தியாசமானது ஆகும். தேவனுடைய தரிசனங்கள், உருவங்கள், மற்றும் தோற்றங்களை ஜனங்கள் கண்டார்கள், ஆனால் ஒருவரும் அவரை அவருடைய முழுமையான நிலையில் சகல மகிமையோடும் கண்டதில்லை (யாத்திராகமம் 33:20).*

# 30. தேவனிடத்தில் கோபமாக இருப்பது தவறா?

*தேவன் மீது கோபம் கொள்வது என்பது பல மக்கள், விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் என இரு தரப்பினரும் காலம் முழுவதும் போராடுகிற ஒரு காரியமாகும். நம் வாழ்வில் ஏதாவது துயரம் நிகழும்போது, தேவனிடம், "ஏன்?" என்ற கேள்வியைக் கேட்கிறோம். ஏனெனில் அது நமது இயல்பான மாறுத்திரமாக இருக்கிறது. உண்மையில் நாம் அவரிடம் கேட்பது, "ஏன் தேவனே?" "எனக்கு ஏன் தேவனே?" இந்த பதில் நம் சிந்தனையில் உள்ள இரண்டு குறைபாடுகளைக் குறிக்கிறது. முதலில், விசுவாசிகளாகிய நாம் வாழ்க்கை எளிதாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுகிறோம், மேலும் தேவன் நமக்கு துயரம் ஏற்படாமல் தடுக்க வேண்டும். அவர் அவ்வாறு செய்யாதபோது, நாம் அவரிடம் கோபப்படுகிறோம். இரண்டாவதாக, தேவனுடைய ராஜ்யபாரத்தின் அளவை நாம் புரிந்து கொள்ளாதபோது, சூழ்நிலைகள், மற்றவர்கள் மற்றும் அவைகள் நம்மை பாதிக்கும் விதம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அவரது திறனில் நாம் நம்பிக்கையை இழக்கிறோம். நாம் தேவன் மீது கோபம் கொள்கிறோம், ஏனெனில் அவர் பிரபஞ்சத்தின் கட்டுப்பாட்டை இழந்துவிட்டதாகவும், குறிப்பாக நம் வாழ்வின் கட்டுப்பாட்டை இழந்துவிட்டதாகவும் நமக்கு தெரிகிறதே அதற்கு காரணம். நாம் தேவனுடைய ராஜ்யபாரத்தில் நம்பிக்கையை இழக்கும்போது, அது நமது பலவீனமான மனித மாம்சம் நம் சொந்த விரக்தி மற்றும் நிகழ்வுகள் மீதான நமது கட்டுப்பாடு இல்லாததால் போராடுகிறது. நல்ல விஷயங்கள் நடக்கும்போது, நாம் அனைவரும் அடிக்கடி அதை நம் சொந்த சாதனைகள் மற்றும் வெற்றிகொண்டவை என்பதாக கூறுகிறோம். தீய விஷயங்கள் நடக்கும்போது, நாம் உடனே தேவனைக் குற்றம் சாட்டுகிறோம், அதைத் தடுக்காததால் நாம் அவரிடம் கோபப்படுகிறோம், இது நம் சிந்தனையின் முதல்*

*குறைபாட்டைக் குறிக்கிறது அதாவது விரும்பத்தகாத சூழ்நிலைகளில் இருந்து நாம் தப்பிக்க தகுதியானவர்கள்.*

*நாம் பொறுப்பாளிகள் இல்லை என்கிற பரிதாபகரமான உண்மையை துயரங்கள் வீட்டிற்கு கொண்டு வருகின்றன. சூழ்நிலைகளின் விளைவுகளை நம்மால் கட்டுப்படுத்த முடியும் என்று நாம் அனைவரும் ஒரு நேரத்தில் அல்லது இன்னொரு நேரத்தில் நினைக்கிறோம், ஆனால் உண்மையில் தேவன்தான் அவருடைய சிருஷ்டிப்பு அனைத்திற்கும் பொறுப்பாக இருக்கிறார். சம்பவிக்கும் சம்பவங்கள் அனைத்தும் தேவனால் நடந்தேறுபவை அல்லது அவரால் அனுமதிக்கப்பட்டவை ஆகும். தேவனை அறியாமல் ஒரு அடைக்கலான் குருவி போலும் தரையில் விழுவதில்லை அல்லது நம் தலையில் இருந்து ஒரு முடியும் விழுவதில்லை (மத்தேயு 10:29-31). என்ன சம்பவிக்கிறது என்பதற்காக நாம் தேவனிடம் குறை தெரிவிக்கலாம், கோபமடையலாம், மற்றும் குற்றம் சாட்டலாம். இருந்தபோதிலும் நாம் அவரை நம்பி நம் கசப்பையும் வலியையும் அவருக்கு அளித்தால், நம்முடைய சொந்த விருப்பத்தை அவர் மீது திணிக்க முயலும் பெருமையின் பாவத்தை ஒப்புக்கொண்டால், அவர் எந்த ஒரு கடினமான சூழ்நிலையிலும் நாம் கடந்துபோகத்தக்கதாக சமாதானத்தையும் பெலனையும் அளிக்க முடியும் (1 கொரிந்தியர் 10:13). இந்த உண்மையை இயேசு கிறிஸ்துவில் விசுவாசிக்கிற பல விசுவாசிகள் சாட்சியாக கூற முடியும். பல காரணங்களுக்காக நாம் தேவன் மீது கோபம் கொள்ள முடியும், ஆனாலும் நம்மால் கட்டுப்படுத்த முடியாத அல்லது புரிந்துகொள்ள முடியாத விஷயங்கள் உள்ளன என்பதை நாம் அனைவரும் ஒரு கட்டத்தில் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.*

*எல்லா சூழ்நிலைகளிலும் தேவனுடைய ராஜ்யபாரத்தைப் புரிந்துகொள்வது அவருடைய மற்ற பண்புகளைப் புரிந்துகொள்வதிலும் இசைந்திருக்க வேண்டும்: அன்பு, இரக்கம், தயவு, நற்குணம், நீதி, நியாயம் மற்றும் பரிசுத்தம். தேவனுடைய*

வார்த்தையின் சத்தியத்தின் மூலம் நம் கஷ்டங்களை நாம் காணும்போது, நம்முடைய அன்பும் பரிசுத்தமுமுள்ள தேவன் நம் நன்மைக்காக சகலத்தையும் நடந்தேறச் செய்கிறார் (ரோமர் 8:28) என்றும், மேலும் அவர் நமக்கு வைத்திருக்கும் ஒரு சரியான திட்டத்தையும் நோக்கத்தையும் யாராலும் முறியடிக்க முடியாது என்றும் தெளிவாகிறது (ஏசாயா 14:24, 46:9-10), இதனிமித்தம் நாம் நமது பிரச்சினைகளை வேறு கோணத்தில் பார்க்கத் தொடங்குகிறோம். இந்த வாழ்க்கையானது ஒருபோதும் தொடர்ச்சியாக மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் கொண்டதில்லை என்பதையும் வேதத்திலிருந்து நாம் அறிகிறோம். மாறாக, "அக்கினிப்பொறிகள் மேலே பறக்கிறதுபோல, மனுஷன் வருத்தம் அநுபவிக்கப் பிறந்திருக்கிறான்" (யோபு 5:7) என்றும் மற்றும் மனிதன் "வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்" என்று யோபு நமக்கு நினைவூட்டுகிறார் (யோபு 14:1). பாவத்திலிருந்து கிடைக்கும் இரட்சிப்புக்காக நாம் கிறிஸ்துவிடம் வருவது, நமக்கு பிரச்சனைகளற்ற வாழ்வுக்கு உத்தரவாதம் அளிக்கிறது என்று அர்த்தமல்ல. உண்மையில், இயேசு சொன்னார், " உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு", ஆனால் அவர் "உலகத்தை ஜெயித்துவிட்டார்" (யோவான் 16:33), இது நம்மைச் சுற்றி புயல்காற்று இருந்தபோதிலும், நமக்குள் அமைதி பெற உதவுகிறது (யோவான் 14:27).

ஒன்று நிச்சயம்: பொருத்தமற்ற கோபம் பாவம் (கலாத்தியர் 5:20; எபேசியர் 4:26-27, 31; கொலோசெயர் 3:8). தேவபக்தியற்ற கோபம் தன்னைத் தானே தோற்கடித்து, பிசாசுக்கு நம் வாழ்வில் ஒரு இடத்தைக் கொடுக்கிறது, மேலும் நாம் அதில் தொடர்ந்து இருந்தால் பிசாசால் நம் மகிழ்ச்சியையும் அமைதியையும் அழிக்க முடியும். நமது கோபத்தைத் தக்கவைத்துக்கொள்வது கசப்பையும் ஆத்திரத்தையும் நம் இதயங்களில் பொங்கிவர அனுமதிக்கும். நாம் அதை தேவனிடத்தில் ஒப்புக் கொள்ள வேண்டும், பின்னர் அவருடைய மன்னிப்பில், அந்த

உணர்வுகளை அவரிடம் விட்டுவிடலாம். நம்முடைய துக்கத்திலும், கோபத்திலும், வேதனையிலும் நாம் அடிக்கடி ஜெபத்தில் தேவனிடம் செல்ல வேண்டும். 2 சாமுவேல் 12:15-23 ல் வேதாகமம் நமக்கு சொல்லுகிறது, தாவீது தனது வியாதிபட்ட குழந்தைக்காக கிருபையின் சிங்காசனத்திற்கு முன் சென்றார், உபவாசம் இருந்தார், அழுதார், குழைந்தை பிழைக்க வேண்டுதல் செய்தார். குழந்தை மரித்தவுடன், தாவீது எழுந்து தேவனைத் தொழுதுகொண்டார், பின்னர் தனது சேவகர்களிடம் தனது குழந்தை எங்கே இருக்கிறது என்று தனக்குத் தெரியும் என்றும், ஒருநாள் அவரும் அங்கே தேவனுடைய சமுகத்தில் அதனோடு இருப்பார் என்றும் கூறினார். குழந்தை வியாதிப்பட்ட போது தாவீது தேவனிடத்தில் மன்றாடினார், அதன் பிறகு அவர் தேவனை ஆராதித்து தொழுதுகொண்டார். அது ஒரு அற்புதமான சாட்சி. தேவன் நம் இதயங்களை அறிந்திருக்கிறார், நாம் உண்மையில் எப்படி உணர்கிறோம் என்பதை மறைக்க முயற்சிப்பது அர்த்தமற்றது, எனவே அவரிடம் வெளிப்படையாக பேசுவதுதான் நம் துயரத்தை கையாள சிறந்த வழிகளில் ஒன்றாகும். நாம் மனத்தாழ்மையுடன், நம் இதயங்களை அவரிடம் ஊற்றினால், அவர் நம் மூலம் செயல்படுவார், மேலும் செயல்முறையில், நம்மை அவரைப் போலாக்குவார்.

முக்கியமான விஷயம் என்னவெனில், நாம் எல்லாவற்றிலும், நம் வாழ்க்கையிலும், நம் அன்புக்குரியவர்களின் வாழ்க்கையிலும் தேவனை நம்ப முடியுமா? நிச்சயமாக நம்மால் முடியும்! நம் தேவன் இரக்கமுள்ளவர், கிருபையும் அன்பும் நிறைந்தவர், கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம் அவரை எல்லாவற்றிலும் நம்பலாம். நமக்கு துயரங்கள் ஏற்படும்போது, தேவன் நம்மை அவரிடம் நெருங்கி வரவும், நம் விசுவாசத்தை மேலும் வலுப்படுத்தவும், நம்மை முதிர்ச்சியையும் முழுமையுமாக கொண்டு வர அவைகளை பயன்படுத்த முடியும் என்பதை நாம் அறிவோம் (சங்கீதம் 34:18; யாக்கோபு 1:2-4). பிறகு, நாம் மற்றவர்களுக்கு ஆறுதலான சாட்சியாக இருக்க முடியும் (2 கொரிந்தியர் 1:3-5). இருப்பினும், இதைச் சொல்வதை விட

எளிதானது. தேவனுடைய வார்த்தையில் காணப்பட்ட அவரது பண்புகளை உண்மையாகப் படிப்பது, அதிகமாக ஜெபம் செய்வது, பின்னர் நாம் கற்றதை நம்முடைய சொந்த சூழ்நிலையில் நடைமுறைப்படுத்துவதாகும், அவ்வாறு செய்வதன் மூலம், நமது நம்பிக்கை படிப்படியாக வளர்ந்து, முதிர்ச்சியடையும், மேலும் நிச்சயமாக சம்பவிக்கும் அடுத்த துயரத்தின் மூலம் நாம் அவரை நம்புவதை எளிதாக்குகிறது.

எனவே, கேள்விக்கு நேரடியாக பதிலளித்தோமானால், ஆம், தேவன் மீது கோபம் கொள்வது தவறு. தேவனின் மீதான கோபம், அவர் என்ன செய்கிறார் என்பது நமக்குப் புரியவில்லை என்கிறபோதிலும் தேவனை நம்புவதற்கான நமது இயலாமை அல்லது விருப்பமின்மையின் விளைவாகும். தேவன் மீதான கோபம் என்பது, தேவனிடம் அவர் ஏதோ தவறு செய்துவிட்டார் என்று சொல்வதாகும், ஆனால் அவர் அப்படி ஒருபோதும் செய்வதில்லை. நாம் தேவனிடம் கோபமாக, விரக்தியாக அல்லது ஏமாற்றமாக இருக்கும்போது அவர் புரிந்துகொள்கிறாரா? ஆம், அவர் நம் இதயங்களை அறிவார், இந்த உலகில் வாழ்க்கையானது எவ்வளவு கடினமானது மற்றும் வேதனையானது என்பதையும் அவர் அறிவார். தேவன் மீது கோபப்படுவது சரியா? முற்றிலும் இல்லை. தேவனிடம் கோபப்படுவதற்குப் பதிலாக, நாம் நம் இதயங்களை தேவனிடம் ஜெபத்தில் ஊற்ற வேண்டும், பின்னர் அவர் சகலத்தையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டிருக்கிறார் என்றும் அவருடைய திட்டம் சரியானது என்றும் நாம் நம்ப வேண்டும்.

# 31. தேவனிடம் ஏமாற்றத்தை உணர்வது தவறா?

தேவனிடம் ஏமாற்றம் என்பது தவறாகவோ அல்லது பாவமாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை; மாறாக, இது மனித நிலையின் ஒரு பகுதியாகும். ஏமாற்றம் என்ற வார்த்தையின் அர்த்தம் "ஒருவரின் நம்பிக்கைகள், ஆசைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் நிறைவேறாதபோது ஏற்படுகிற அதிருப்தி உணர்வு" ஆகும். தேவன் நம் நம்பிக்கையை பூர்த்தி செய்யத் தவறினால் அல்லது நம் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யாதபோது, ஏமாற்றம் தவிர்க்க முடியாமல் வரும். நாம் நினைக்கும் விதத்தில் தேவன் செயல்படவில்லை என்றால், நாம் அவர் மீது ஏமாற்றமடைந்து அவருடைய செயலில் அதிருப்தி அடைவோம். இது தேவன், குறிப்பாக அவரது ராஜ்யபாரம் மற்றும் அவரது நற்குணத்தின் மீது இருக்கும் விசுவாசத்தை அசைக்க வழிவகுக்கும்.

தேவன் செயல்பட வேண்டும் என்று நாம் நினைக்கும் போது அவர் அவ்வாறு செயல்படாதது, அவரால் அதைச் செய்ய முடியாததால் அல்ல. மாறாக, அவர் வெறுமனே வேண்டாம் என்று தேர்வு செய்கிறார். இது அவரின் தன்னிச்சையான அல்லது சலன புத்தியுள்ள செயலாகத் தோன்றினாலும், உண்மையானது அதற்கு நேர் எதிராகும். தேவன் தனது நேர்மையான நோக்கங்களைக் கொண்டுவருவதற்காக அவருடைய பரிபூரணமான மற்றும் பரிசுத்தமான சித்தத்தின்படி செயல்பட அல்லது செயல்படத் தேர்வு செய்கிறார். தேவனுடைய திட்டத்திற்கு வெளியே எதுவும் நடக்காது. பிரபஞ்சத்தில் மிதக்கும் ஒவ்வொரு மூலக்கூறையும் அவர் கட்டுப்படுத்துகிறார், மேலும் தேவனுடைய விருப்பம் உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு நபரும் எடுக்கும் ஒவ்வொரு செயலையும் முடிவையும் உள்ளடக்கியது ஆகும். ஏசாயா 46:11 ல் அவர் நமக்குச் சொல்லுகிறார், "உராய்ஞ்சுகிற ஒரு பட்சியைக் கிழக்கிலிருந்தும், என் ஆலோசனையை நிறைவேற்றும் மனுஷனை தூரதேசத்திலிருந்தும் வரவழைக்கிறவராயிருக்கிறேன்; அதைச் சொன்னேன், அதை நிறைவேற்றுவேன்; அதைத்

திட்டம்பண்ணினேன். அதைச் செய்து முடிப்பேன்." பறவைகள் கூட அவருடைய முன்கூட்டிய தீர்மானித்த திட்டத்தின் ஒரு பகுதியாகும். மேலும், அவருடைய திட்டங்களை நமக்குத் தெரியப்படுத்த அவர் தேர்ந்தெடுக்கும் நேரங்களும் உள்ளன (ஏசாயா 46:10), அவர் அப்படிச் செய்யாத நேரங்களும் உள்ளன. சில நேரங்களில் அவர் என்ன செய்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்; சில நேரங்களில் நம்மால் புரிந்துகொள்ளமுடிவதில்லை (ஏசாயா 55:9). ஒரு காரியம் மட்டும் நமக்கு உறுதியாகத் தெரியும்: நாம் அவருக்குச் சொந்தமானவர்களானால், அவர் என்ன செய்தாலும் அதை நாம் புரிந்து கொண்டாலும் இல்லாவிட்டாலும் அது நமக்குப் பயனளிக்கும், (ரோமர் 8:28).

தேவனுடனான ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கான முக்கிய காரியம் என்னவென்றால், நம்முடைய விருப்பங்களை அவருடைய சித்தத்திற்கு விட்டுவிடுவது மற்றும் எல்லா விஷயங்களிலும் அவருடைய சித்தத்திற்கு அடிபணிவதே ஆகும். அவ்வாறு செய்வது தேவனால் நம்மை ஏமாற்றமடையச் செய்வதோடு மட்டுமல்லாமல், நம் வாழ்வில் நிகழும் நிகழ்வுகளைப் பற்றி முறுமுறுப்பதையும் குறை சொல்வதையும் தடுக்கிறது. தேவன் செங்கடலைப் பிளந்தபோது அவரது வல்லமையின் அற்புதக் காட்சிகள், வனாந்திரத்தில் மன்னா மற்றும் காடையை வழங்குதல் மற்றும் தேவனின் மகிமையை அக்கினி தூணின் வடிவத்தில் பார்த்த போதிலும், வனாந்திரத்தில் இஸ்ரவேலர்கள் தேவனை பல சமயங்களில் இறுக்கி முறுமுறுத்து கலகம் பண்ணினார்கள் (யாத்திராகமம் 15-16; எண்கள் 14:2-37). தேவன் தமது மக்களுக்கு தொடர்ந்து விசுவாசமாக இருந்தபோதிலும், அவர்கள் நினைத்தபடி அவர் செயல்படவில்லை என்பதால் அவர்கள் தேவனிடத்தில் முறுமுறுத்தனர் மற்றும் ஏமாற்றத்தை வெளிப்படுத்தினர். அவருடைய விருப்பத்திற்கு அடிபணிந்து அவரை நம்புவதை விட, அவர்கள் தொடர்ந்து கலகம் மற்றும் குழப்பத்தில் இருந்தனர்.

*நாம் தேவனுடைய சித்தத்துடன் நமது விருப்பங்களை சீரமைக்கும் போது, "என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று இயேசுவினோடு சேர்ந்து கூறும்போது (லூக்கா 22:42), 1 தீமோத்தேயு 6:6-10 மற்றும் பிலிப்பியர் 4:11-12 இல் பவுல் பேசிய மனரம்மியத்தைக் காண்கிறோம். தேவன் தமது வழியில் அனுப்பியதில் திருப்தி அடைய பவுல் கற்றுக்கொண்டார். அவர் தேவனை நம்பினார் மற்றும் அவருடைய சித்தத்திற்கு அடிபணிந்தார், ஒரு பரிசுத்தமான, நீதியுள்ள, பரிபூரணமான, அன்பான, மற்றும் இரக்கமுள்ள தேவன் தமது நன்மைக்காக எல்லாவற்றையும் செய்வார் என்பதை அறிந்திருந்தார், ஏனென்றால் அவர் வாக்குறுதியளித்ததே அதுதான். அந்த வெளிச்சத்தில் நாம் தேவனைக் காணும்போது, நாம் அவரிடம் ஏமாற்றம் அடைய முடியாது. மாறாக, நம்முடைய பரலோகத் தகப்பனுக்கு அவருடைய விருப்பம் சரியானது என்பதையும், அவர் நம் வாழ்வில் நிறைவேற்றும் அனைத்தும் நம்முடைய நன்மைக்காகவும் அவருடைய மகிமைக்காகவும் இருப்பதை அறிந்தும் மனப்பூர்வமாக சமர்ப்பிக்கிறோம்.*

# 32. தேவனுடைய மகிமை என்றால் என்ன?

*தேவனுடைய மகிமை அவருடைய ஆவியின் அழகு. இது ஒரு அழகியல் அழகு அல்லது ஒரு சரீரப்பிரகாரமான அழகு அல்ல, ஆனால் அது அவருடைய குணாதிசயத்திலிருந்து, அவர் இருக்கும் எல்லாவற்றிலிருந்தும் வெளிப்படும் அழகாகும். யாக்கோபு 1:10-ல் ஒரு ஐசுவரியவானை "தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மைபாராட்ட" அழைக்கிறார், இது செல்வம் அல்லது வலிமை அல்லது சரீர அழகு என்று அர்த்தமல்ல. இந்த மகிமை மனிதனுக்கு முடிசூட்டலாம் அல்லது பூமியை நிரப்பலாம். இது மனிதனுக்குள்ளும் பூமியிலும் காணப்படுகிறது, ஆனால் அது அவர்களுடையது அல்ல; அது தேவனுடையது. மனிதனின் மகிமை என்பது மனிதனின் ஆவியின் அழகாகும், இது தவறிழைத்து இறுதியில் ஒன்றுமில்லாமல் மறைந்துவிடும், அதனால் தான் அது தாழ்த்தப்பட்டதாக இருக்கிறது என்று வசனம் நமக்குச் சொல்லுகிறது. ஆனால் தேவனின் மகிமை, அவருடைய அனைத்து பண்புகளிலும் ஒன்றாக வெளிப்படுகிறது, அது ஒருபோதும் மறைந்துவிடாது. அது நித்தியமானது.*

*ஏசாயா 43:7 வது வசனம் தேவன் நம்மை அவருடைய மகிமைக்காக சிருஷ்டித்தார் என்று கூறுகிறது. மற்ற வசனங்களின் பின்னணியில், மனிதன் தேவனை "மகிமைப்படுத்துகிறான்" என்று கூறலாம், ஏனென்றால் மனிதனின் மூலமாக, தேவனுடைய மகிமையானது அன்பு, இசை, வீரம் போன்றவற்றில் காணப்படுகிறது அதாவது தேவனுக்குச் சொந்தமான காரியங்களை நாம் "மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" (2 கொரிந்தியர் 4:7). நாம் அவருடைய மகிமையைக் கொண்டிருக்கும் பாத்திரங்கள். நாம் செய்யக்கூடிய மற்றும் அவரின் மூலத்தைக் காணக்கூடிய அனைத்து விஷயங்களும். தேவன் இயற்கையுடன் அதே வழியில் தொடர்பு கொள்கிறார். இயற்கை அவரது மகிமையை வெளிப்படுத்துகிறது. அவரது மகிமை மனிதனின் மனதிற்கு உலகத்தின் மூலம் பல வழிகளில்*

வெளிப்படுத்தப்படுகிறது, மேலும் பல்வேறு வழிகளில் வெவ்வேறு நிலைகளில். மலைகளைப் பார்த்து ஒருவர் பரவசமடையலாம், இன்னொருவர் கடலின் அழகை ரசித்து விரும்பலாம். ஆனால் அவை இரண்டுக்கும் பின்னால் இருப்பது (தேவனின் மகிமை) இருவகை மக்களிடமும் பேசி அவர்களை தேவனுடன் இணைக்கிறது. இவ்வகையில், மனிதர்களின் இனம், பாரம்பரியம் அல்லது அவர்களது இருப்பிடம் எதுவாக இருந்தாலும், எல்லா மனிதர்களுக்கும் தேவன் தம்மை வெளிப்படுத்த முடிகிறது. சங்கீதம் 19:1-4 சொல்வது போல், "வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாயவிரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கிறது. பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக்கிறது. அவைகளுக்குப் பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை, அவைகளின் சத்தம் கேட்கப்படுவதுமில்லை. ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார்."

சங்கீதம் 73:24-வது வசனம் பரலோகத்தை "மகிமை" என்று அழைக்கிறது. இந்த சங்கீதத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சொற்றொடரான "மகிமையில் ஏற்றுக்கொள்வீர்" என்று பேசுவது கிறிஸ்தவர்கள் மரணத்தை குறிப்பிடுவதற்கு கூறும் வழக்கமாக இருந்தது. கிறிஸ்தவர்கள் மரிக்கும் போது, அவர்கள் தேவனுடைய சமூகத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள், அவருடைய சமூகத்தில் இயற்கையாகவே தேவனின் மகிமையால் சூழப்பட்டிருக்கும். தேவனின் அழகு உண்மையில் வசிக்கும் இடத்திற்கு நாம் அழைத்துச் செல்லப்படுவோம் - அவருடைய ஆவியின் அழகு அங்கே இருக்கும், ஏனென்றால் அவர் அங்கு இருப்பார். மீண்டும், அவருடைய ஆவியின் அழகு (அல்லது அவர் யார் என்பதன் சாரம்சம்) அவருடைய "மகிமை" ஆகும். அந்த இடத்தில், அவருடைய மகிமை மனிதர் மூலமாக அல்லது இயற்கையின் மூலம் வரத் தேவையில்லை, மாறாக அது தெளிவாகக்

காணப்படும், 1 கொரிந்தியர் 13:12 சொல்வது போல், "இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே, அறிந்துகொள்ளுவேன்."

மனித/பூமிக்குரிய அர்த்தத்தில், மகிமை என்பது பூமியிலுள்ள பொருளின் மீது தங்கியிருக்கும் ஒரு அழகு அல்லது துடிப்பானது ஆகும் (சங்கீதம் 37:20, சங்கீதம் 49:17), அந்த வகையில் அது மங்கிவிடும். ஆனால் அது மங்குவதற்கான காரணம், உலகப்பொருள் நீடிக்காது. அவை இறந்து வாடிப்போய்விடுகின்றன, ஆனால் அவைகளில் இருக்கும் மகிமை தேவனுக்குச் சொந்தமானது, ஆகவே அவை மறித்து சிதைவுரும்பொது மகிமையானது அவரிடம் திரும்பிச் செல்லும். யாக்கோபு புத்தகத்தில் முன்பு குறிப்பிட்ட ஐசுவரியவானை நினைத்துப் பாருங்கள். அந்த வசனம் கூறுகிறது, "ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மைபாராட்டக்கடவன்; ஏனெனில் அவன் புல்லின் பூவைப்போல் ஒழிந்துபோவான்." இதற்கு என்ன அர்த்தம்? இந்த வசனம் ஐசுவரியவானுக்கு தனது செல்வமும் வலிமையையும் அழகும் தேவனிடமிருந்து வந்தது என்பதை உணரும்படி அறிவுறுத்துகிறது, மேலும் தேவன் அவனை என்னவாக ஆக்குகிறார் என்பதை உணர்ந்து தாழ்மையுடன் இருக்கவும், அவனிடம் உள்ள அனைத்தையும் கொடுக்கவும் வேண்டுமென வலியுறுத்துகிறது. மேலும் அவன் புல்லைப் போன்று கடந்து செல்வான் என்ற அறிவே அவனைப் மகிமைப் பெறச் செய்யும் தேவன். தேவனின் மகிமைதான் ஆதாரம், அதுவே எல்லா சிறிய மகிமைகளும் ஓடும் ஊற்று.

தேவன் ஒருவரிடம் இருந்தே மகிமை வருகிறது என்பதால், மகிமை மனிதனிடமிருந்தோ அல்லது மனித உருவங்களிலிருந்தோ அல்லது இயற்கையிலிருந்தோ வருகிறது என்ற கூற்றை அவர் ஒருபோதும் நிலைநிறுத்த மாட்டார். ஏசாயா 42:8 இல், தேவன் தம் மகிமை மீது வைராக்கியம் கொண்ட ஒரு உதாரணத்தை நாம் காண்கிறோம். அவரது சொந்த மகிமைக்கான இந்த வைராக்கியம், ரோமர் 1:21-25-

ல் பவுல், சிருஷ்டிகரை விட மக்கள் சிருஷ்டியை வழிபடும் முறைகளைப் பற்றி பேசுகிறார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர்கள் தேவனின் மகிமை வரும் பொருள்களைப் பார்த்தார்கள், தேவனுக்குரிய மகிமையை அவருக்கு கொடுப்பதற்குப் பதிலாக, விலங்குகள், ஊறும் பிராணிகள் அல்லது மரம் அல்லது மனிதனை அவை கொண்டிருக்கும் அழகை கண்டு அவை தன்னிச்சையாக அவற்றினுள் இருந்து தோன்றியது போல் எண்ணிக்கொண்டு அவற்றை வணங்கினார்கள். இது உருவ வழிபாட்டின் மிகவும் பொதுவான செயலும் மற்றும் இது மிகவும் பொதுவான நிகழ்வுமாய் இருந்தது. இதுவரை வாழ்ந்த ஒவ்வொருவரும் இந்த தவறை ஒரு முறையாவது நிச்சயம் செய்திருக்கிறார்கள். நாம் அனைவரும் "மனிதனின் மகிமைக்கு" ஆதரவாக தேவனின் மகிமையை "மாற்றினோம்".

பலரும் செய்யும் தவறு இதுதான்: பூமிக்குரிய காரியங்கள், பூமிக்குரிய உறவுகள், தங்கள் சொந்த வலிமைகள் அல்லது திறமைகள் அல்லது அழகு அல்லது மற்றவர்களிடம் அவர்கள் காணும் நற்குணங்களை நம்புதல் ஆகும். ஆனால் இந்த விஷயங்கள் மங்கும்போது மற்றும் தோல்வியடையும் போது தவிர்க்க முடியாமல் (பெரிய மகிமை தங்கள் சரீரங்களில் சுமக்கும் தற்காலிக சுமப்பாளர்கள் மட்டுமே), இந்த மக்கள் இப்படிப்பட்ட காரியங்களை செய்வார்கள் மற்றும் விரக்தியடைகிறார்கள். நாம் அனைவரும் உணர வேண்டியது என்னவென்றால், தேவனின் மகிமை நிலையானது, நாம் வாழ்க்கையில் பயணிக்கும்போது, அது அங்கும் இங்கும், இந்த நபர் அல்லது அந்த காட்டில் அல்லது அன்பு அல்லது வீரம், புனைவு அல்லது புனைகதை அல்லாத கதையில் வெளிப்படுவதைக் காண்போம். அல்லது நம் சொந்த வாழ்க்கையில் காண்போம். ஆனால் இறுதியில் எல்லாமே தேவனிடம் செல்கிறது. தேவனிடத்திற்கு செல்லும் ஒரே வழி அவருடைய குமாரன் இயேசு கிறிஸ்து. நாம் கிறிஸ்துவில் இருந்தால், அவரிடம், பரலோகத்தில், எல்லா அழகின் மூலத்தையும் நாம்

*காண்போம். நமக்கு எதுவும் இழக்கப்படாது. வாழ்க்கையில் மங்கிப்போன மற்றும் இழந்துபோன எல்லாவற்றையும் நாம் அவரில் மீண்டும் காண்போம்.*

# 33. தேவன் நித்தியமானவர் என்பதன் அர்த்தம் என்ன?

*நித்தியம் என்ற வார்த்தைக்கு "ஆரம்பமும் முடிவும் இல்லாத நித்தியமானது" என்று பொருள். சங்கீதம் 90:2 தேவனின் நித்தியத்தைப் பற்றி நமக்குச் சொல்கிறது: "பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்." மனிதர்கள் எல்லாவற்றையும் சரியான காலத்திற்கு உட்பட்டு அளவிடுவதால், ஆரம்பம் இல்லாத, ஆனால் எப்போதும் இருந்த, மற்றும் என்றென்றும் தொடரும் ஒன்றை நாம் கருதுவது மிகவும் கடினம். இருப்பினும், வேதாகமம் தேவனின் இருப்பை அல்லது அவரது நித்தியத்தை நிரூபிக்க முயற்சிக்கவில்லை, மாறாக "ஆதியிலே தேவன்..." (ஆதியாகமம் 1:1) என்ற அறிக்கையுடன் தொடங்குகிறது, பதிவு செய்யப்பட்ட காலத்தின் ஆதியில், தேவன் ஏற்கனவே இருந்தார் என்று குறிப்பிடுகிறது. கால வரம்பில்லாமல் பின்னோக்கி நீட்டிக்கொண்டே கால வரம்பில்லாமல் நீட்டிக்கப்படும் காலத்திலிருந்து நித்திய யுகங்கள் முதல் நித்திய யுகங்கள் வரை, தேவன் என்றென்றுமாய் இருக்கிறார்.*

*மோசே தேவனால் கட்டளையிடப்பட்டபோது, அவரிடமிருந்து ஒரு செய்தியுடன் இஸ்ரவேலர்களிடம் செல்ல, தேவனுடைய பெயர் என்ன என்று கேட்டால் அவர்களிடம் என்ன சொல்வது என்று மோசே யோசித்தார். அப்போது தேவன் தந்த பதில் மாபெரும் வெளிப்பாடு ஆகும்: "அதற்குத் தேவன்: இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்" (யாத்திராகமம் 3:14). இது தேவனுடைய உண்மையான இருப்பையும், அவரது சுய இருப்பையும், அவர் உயிரினங்களுக்கெல்லாம் தலையாய இருப்பாக உள்ளதையும்*

குறிக்கிறது. இது அவரது நித்தியம் மற்றும் மாறாத தன்மையையும், அவருடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அவரது நிலைத்தன்மையையும் உண்மையையும் விவரிக்கிறது, ஏனென்றால் அது எல்லா நேரத்திலும், கடந்த காலத்திலும், நிகழ்காலத்திலும், எதிர்காலத்திலும் உள்ளவற்றை உள்ளடக்கியது. நான் என்னவாக இருக்கிறேன் என்பது மட்டுமல்ல நான் நானாக இருந்திருக்கிறேன், நான் என்னவாக இருப்பேன் ஆகியவற்றையும் காண்பிக்கிறது. அவருடைய நித்தியத்தைப் பற்றி தேவனின் சொந்த வார்த்தைகள் வேதத்தின் பக்கங்களிலிருந்து நம்முடன் பேசுகின்றன.

தேவன் அவதாரம் எடுத்த இயேசு கிறிஸ்து தனது தெய்வத்துவத்தையும், அவருடைய நித்தியத்தையும், "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்பது வாயிலாக அறிவித்தார். இந்த அறிக்கையை கேட்ட யூதர்கள் அவரை கல்லால் அடித்து கொல்ல முயன்றதால், மாம்சத்தில் வந்த இயேசு தம்மை தேவன் என்று கூறிக்கொண்டார் என்பது தெளிவாகிறது. யூதர்களுக்கு, தன்னை ஒருவன் நித்திய தேவன் என்று அறிவிப்பது தேவதூஷணம் மற்றும் மரணத்திற்கு தகுதியான செயலாகும் (லேவியராகமம் 24:16). இயேசு நித்தியமானவர் என்று கூறிக்கொண்டிருந்தார், அவருடைய பிதா நித்தியமானவர். அப்போஸ்தலனாகிய யோவான் கிறிஸ்துவின் தன்மையைப் பற்றிய இந்த உண்மையையும் அறிவித்தார்: "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது" (யோவான் 1:1). இயேசுவும் அவருடைய பிதாவும் சாராம்சத்தில் ஒன்று, அவர்கள் காலம் கடந்த காலத்திற்கு உட்படாமல் இருக்கிறார்கள், அவர்கள் நித்தியத்தின் பண்புகளில் சமமாகப் பங்கு கொள்கிறார்கள்.

*ரோமர் 1:20 தேவனுடைய நித்திய தன்மையையும் அவருடைய நித்திய வல்லமையையும் அவருடைய சிருஷ்டிப்பின் மூலம் நமக்கு வெளிப்படுகிறது என்று கூறுகிறது. எல்லா மனிதர்களும் தேவனின் தன்மையின் இந்த அம்சத்தை உருவாக்கிய ஒழுங்கின் பல்வேறு அம்சங்களின் சாட்சிகளால் பார்க்கிறார்கள் மற்றும் புரிந்துகொள்கிறார்கள். சூரியனும் வானத்திலுள்ளவைகளும் நூற்றாண்டுகளாகத் தங்கள் சுற்றுப்பாதையில் தொடர்கின்றன. பருவங்கள் அவற்றின் நியமிக்கப்பட்ட நேரத்தில் வந்து செல்கின்றன; மரங்கள் வசந்த காலத்தில் இலைகளை தளிர்த்து இலையுதிர்காலத்தில் விழச் செய்கின்றன. ஆண்டுக்கு ஆண்டு இவை தொடர்கின்றன, அவற்றைத் தடுக்கவோ அல்லது தேவனின் திட்டத்தை மாற்றவோ யாராலும் முடியாது. இவை அனைத்தும் தேவனின் நித்திய வல்லமை மற்றும் அவரின் பூமியின் திட்டத்திற்கு சான்றளிக்கிறது. ஒரு நாள், அவர் ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைப்பார், அவரைப் போலவே அவைகளும் நித்தியத்தில் நீடிக்கும். தேவனின் சாயலில் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிற நாமும் விசுவாசத்தின் மூலம் கிறிஸ்துவைச் சேர்ந்த நாம் நித்தியத்தில் தொடருவோம்.*

# 34. தேவன் நேர்மையானவரா?

*அதிர்ஷ்டவசமாக நம்மைப் பொறுத்தவரை, தேவன் நேர்மையானவர் அல்ல. நேர்மை என்பது ஒவ்வொருவரும் அவருக்குரிய தகுதியைப் பெறுகிறார் என்று அர்த்தம். பலரின் மனதில், நேர்மை என்பது எல்லோரும் ஒன்றுபோலவே சமமாக நடத்தப்படுகிறது ஆகும். தேவன் முற்றிலும் நேர்மையானவராக இருந்தால், நாம் அனைவரும் நம்முடைய பாவத்திற்காக நம்முடைய நித்தியத்தை நரகத்தில் தான் செலவிடுவோம், அதுதான் நமக்கு தகுதியானது. நாம் அனைவரும் தேவனுக்கு எதிராக பாவம் செய்தோம் (ரோமர் 3:23) எனவே நித்திய மரணத்திற்கு தகுதியானவர்கள் (ரோமர் 6:23). நாம் தகுதியானதைப் பெற்றோமானால், நாம் அக்கினி கடலில் முடிவடைவோம் (வெளிப்படுத்துதல் 20:14-15). ஆனால் தேவன் நேர்மையானவர் அல்ல; அதற்கு பதிலாக, அவர் இரக்கமுள்ளவராகவும் நல்லவராகவும் இருக்கிறார், எனவே அவர் இயேசு கிறிஸ்துவை நம் இடத்தில் சிலுவையில் மரிக்கும்படி அனுப்பினார், நமக்குத் தகுதியான நாம் அடையவேண்டிய தண்டனையை அவர் எடுத்துக் கொண்டார் (2 கொரிந்தியர் 5:21). நாம் செய்ய வேண்டியது எல்லாம் அவரை நம்பி விசுவாசிப்பதுதான், அப்படி நம்புவதால் நாம் இரட்சிக்கப்படுவோம், மன்னிக்கப்படுவோம், மேலும் பரலோகத்தில் நித்திய வீட்டையும் பெறுவோம் (யோவான் 3:16).*

*இருப்பினும், தேவனின் அன்பான கிருபை இருந்தபோதிலும், யாரும் அவரை தன்னிச்சையாக நம்ப மாட்டார்கள் (ரோமர் 3:10-18). நாம் நம்புவதற்கு தேவன் நம்மை அவரிடமாக இழுத்துக்கொள்ள வேண்டும் (யோவான் 6:44). தேவன் அனைவரையும் ஈர்க்கவில்லை, ஆனால் அவர் சர்வ ஆளுமையினால் தேர்ந்தெடுத்த சில நபர்களை மட்டுமே தம்மிடமாக இழுத்துக் கொள்ளுகிறார் (ரோமர் 8:29-30; எபேசியர் 1:5, 11). இது நம் பார்வையில் "நேர்மையானது" அல்ல, ஏனென்றால் தேவன் எல்லா மக்களையும் சமமாக நடத்துவதில்லை என்று*

*தோன்றுகிறது. இருப்பினும், தேவன் யாரையும் தேர்ந்தெடுக்க வேண்டியதில்லை. மீண்டும், எல்லோரும் நரகத்தில் நித்தியத்தை செலவிடுவது தான் முற்றிலும் நியாயமானது. சிலரை மட்டும் தேவன் இரட்சிப்பது அவர்கள் தங்களுக்குத் தகுதியில்லாதைப் பெறுவதால், இரட்சிக்கப்படாமல் இருப்பவர்களுக்கு அது நேர்மையானது இல்லை.*

*தேவன் தேர்ந்தெடுத்தவர்கள் தேவனுடைய அன்பையும் கிருபையையும் பெறுகிறார்கள். ஆனால், தேவன் நம் இதயங்களை ஈர்க்கும்போது, நம் மனதைத் திறக்கும்போது, சிருஷ்டிப்பின் வெளிப்பாட்டிற்கு நாம் அனைவரும் பதிலளிக்க வாய்ப்பு உள்ளது (சங்கீதம் 19:1-3), அதே போல் தேவன் நமக்குள் வைத்த மனசாட்சியும் (ரோமர் 2:15) மற்றும் தேவனிடம் திரும்பவும் வழி வகுக்கிறது. அப்படி தேவனிடத்திற்கு திரும்பாதவர்கள் அவரை நிராகரித்ததால் அவர்களுக்குத் தகுதியானதைப் பெறுவார்கள். அவரை நிராகரிப்பவர்கள் நியாயமான தண்டனையைப் பெறுகிறார்கள் (யோவான் 3:18, 36). நம்புபவர்கள் தங்களுக்குத் தகுந்ததை விட மிக அதிகமாக, மிகச் சிறப்பாகப் பெறுகிறார்கள். இருப்பினும், யாரும் அவருக்கு தகுதியானதை விட அதிகமாக தண்டிக்கப்படுவதில்லை. தேவன் நேர்மையானவரா? இல்லை. அதிர்ஷ்டவசமாக, தேவன் நேர்மையானவர் என்பதைவிட மிகவும் மேலானவர்! தேவன் இரக்கமுள்ளவர், கிருபையுள்ளவர், மற்றும் மன்னிப்பவர் - ஆனால் பரிசுத்தமானவர், நியாயமானவர், மற்றும் நீதியுள்ளவர்.*

# 35. தேவன் எல்லையற்றவர் என்பதன் அர்த்தம் என்ன?

*தேவனுடைய எல்லையற்ற தன்மை வெறுமனே தேவன் வெளியில் இருக்கிறார் மற்றும் காலம் அல்லது இடத்தால் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதில்லை. மாறாக எல்லையற்றது என்றால் "வரம்புகள் இல்லாமல்" என்று பொருள். நாம் தேவனை "எல்லையற்றவர்" என்று குறிப்பிடும்போது, நாம் பொதுவாக அவரை சர்வ ஞானி, சர்வ வல்லமையுள்ளவர், சர்வ வியாபி போன்ற சொற்களைக் கொண்டு குறிப்பிடுகிறோம்.*

*சர்வஞானி என்றால் தேவன் அனைத்தையும் அறிந்தவர் அல்லது அவருக்கு எல்லையற்ற அறிவு உள்ளது என்பதாகும். அவருடைய எல்லையற்ற அறிவே அவரை சர்வ ஆளுமையுள்ளவராக அனைத்து விஷயங்களிலும் நியாயந்தீர்க்கவும் தகுதி பெற்றவராய் வெளிப்படுத்துகிறது. நடக்கப்போகும் அனைத்தையும் தேவன் அறிவது மட்டுமல்லாமல், நடக்கக்கூடிய எல்லாவற்றையும் அவர் அறிவார். தேவனை எதுவும் ஆச்சரியப்படுத்தாது, அவரிடமிருந்து பாவத்தை யாராலும் மறைக்க முடியாது. வேதாகமத்தில் தேவன் தமது தன்மையின் இந்த அம்சத்தை வெளிப்படுத்தும் பல வசனங்கள் உள்ளன. அத்தகைய ஒரு வசனம் 1 யோவான் 3:20: "...தேவன் நம்முடைய இருதயத்திலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார்."*

*சர்வ வல்லமையுள்ளவர் என்றால் தேவன் எல்லாம் வல்லவர் அல்லது அவருக்கு எல்லையற்ற வல்லமை உள்ளது என்பதாகும். தேவனுடைய சர்வ ஆளுமையை நிறைவேற்றும் திறனை அது நிலைநிறுத்துவதால் அனைத்து அதிகாரமும் இருப்பது குறிப்பிடத்தக்கது. தேவன் சர்வ வல்லமையுள்ளவர் மற்றும் எல்லையற்ற வல்லமையைக் கொண்டிருப்பதால், அவருடைய*

ஆணையை நடக்காமல் எதுவும் தடுக்க முடியாது, மேலும் அவருடைய தெய்வீக நோக்கங்கள் நிறைவேறாமல் முறியடிக்கவோ அல்லது தடுக்கவோ முடியாது. வேதாகமத்தில் தேவன் தமது தன்மையின் இந்த அம்சத்தை வெளிப்படுத்தும் பல வசனங்கள் உள்ளன. அத்தகைய ஒரு வசனம் சங்கீதம் *115:3*: "நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார்; தமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்." அல்லது "அப்படியானால் யார் ரட்சிக்கப்படக்கூடும்?" என்ற இயேசுவின் சீஷர்களின் கேள்விக்கு பதிலளிக்கும் போது (மத்தேயு 19:25), இயேசு கூறுகிறார், "மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும்" என்றார் (மத்தேயு 19:26).

சர்வவியாபி என்றால் தேவன் எப்போதும் இருக்கிறார் என்பதாகும். தேவனுடைய சமூகத்திலிருந்து நீங்கள் தப்பித்துச் செல்லக்கூடிய ஒரு இடம் இல்லை. தேவன் காலம் அல்லது இடத்தால் மட்டுப்படுத்தப்படவில்லை. அவர் காலம் மற்றும் இடத்தின் ஒவ்வொரு புள்ளியிலும் இருக்கிறார். தேவனுடைய எல்லையற்ற இருப்பு மிக முக்கியமானது, ஏனென்றால் தேவன் நித்தியமானவர் என்பதை அது நிறுவுகிறது. கடவுள் எப்போதும் இருந்தார், எப்போதும் இருப்பார். காலம் தொடங்குவதற்கு முன், தேவன் இருந்தார். உலகம் அல்லது பொருள் கூட உருவாக்கப்படுவதற்கு முன்பு, தேவன் இருந்தார். அவருக்கு தொடக்கமோ முடிவோ இல்லை, அவர் இல்லாத காலமும் இல்லை, அவர் இருப்பதை நிறுத்தும் காலமும் இருக்காது. மீண்டும், வேதாகமத்தில் உள்ள பல வசனங்கள் தேவனுடைய தன்மையின் இந்த அம்சத்தை நமக்கு வெளிப்படுத்துகின்றன, அவற்றில் ஒன்று சங்கீதம் 139:7-10: "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர். நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து, சமுத்திரத்தின்

கடையாந்தரங்களிலே போய்த் தங்கினாலும், அங்கேயும் உமது கை என்னை நடத்தும், உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்.”

தேவன் எல்லையற்றவர் என்பதால், அவர் எல்லை கடந்தவர் என்றும் கூறப்படுகிறது, இதன் பொருள் தேவன் சிருஷ்டிப்பை விட மிகவும் மேலானவராக இருக்கிறார் மற்றும் சிருஷ்டிப்பை விட பெரியவர் மற்றும் சுயாதீனமானவர் என்பதாகும். இதன் பொருள் என்னவென்றால், தேவன் நம்மை விட மேலானவர் மற்றும் அதற்கும் அப்பால் இருக்கிறார் மற்றும் அதை முழுமையாகப் புரிந்துகொள்ளும் திறன், அவர் தன்னை வெளிப்படுத்தாவிட்டால், அவர் எப்படி இருக்கிறார் என்பது நமக்குத் தெரியாது அல்லது புரியாது. ஆனால், அதிர்ஷ்டவசமாக, தேவன் தம்மைப் பற்றி நம்மை அறியாமலிருக்க விடவில்லை. அதற்கு பதிலாக, அவர் பொதுவான வெளிப்பாடு (சிருஷ்டிப்பு மற்றும் நம் மனசாட்சி) மற்றும் சிறப்பு வெளிப்பாடு (தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையாகிய வேதாகமம் மற்றும் தேவனுடைய ஜீவிக்கிற வார்த்தையாகிய இயேசு கிறிஸ்து) ஆகிய இரண்டின் மூலமும் தம்மை வெளிப்படுத்தினார். ஆகையால், நாம் தேவனை அறிய முடியும், அவருடன் எப்படி ஒப்புரவாகிறது மற்றும் அவருடைய சித்தத்தின்படி எப்படி வாழ்வது என்பதை நாம் அறிந்து கொள்ள முடியும். நாம் ஒரு எல்லைக்கு உட்பட்டு வரையறுக்கப்பட்டவர்கள் மற்றும் தேவன் எல்லையற்றவர் என்கிற போதிலும், அவர் தம்மை வெளிப்படுத்தியதால் நாம் தேவனை அறிந்து புரிந்து கொள்ள முடியும்.

# 36. தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார்?

*தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24), எனவே அவரது தோற்றம் நாம் விவரிக்கக்கூடிய எதையும் போல் இல்லை. யாத்திராகமம் 33:20 நமக்கு சொல்கிறது, "நீ என் முகத்தைக் காணமாட்டாய், ஒரு மனுஷனும் என்னைக் கண்டு உயிரோடிருக்கக் கூடாது என்றார்." பாவமுள்ள மனிதர்களாகிய நாம் தேவனை அவருடைய எல்லா மகிமையிலும் உள்ளவராக பார்க்க இயலாது. அவரது தோற்றம் முற்றிலும் கற்பனை செய்ய முடியாதது மற்றும் மிகவும் மகிமைப் பொருந்தியது, பாவியாக இருக்கும் மனிதனால் அவ்வளவு பாதுகாப்பாக கண்டுணர முடியாது.*

*தேவன் பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்களுக்கு தோன்றுவதாக வேதாகமம் விவரிக்கிறது. இந்த நிகழ்வுகள் யாவும் தேவன் எப்படி இருக்கிறார் என்பதை விவரிக்கிறது என்று நாம் எடுத்துக்கொள்ள அல்லது புரிந்து கொள்ளக்கூடாது, மாறாக அவை தேவன் நமக்கு புரியும் வகையில் தன்னை வெளிப்படுத்துகிறார் என்பதை அறிந்துகொள்ளவேண்டும். தேவன் எப்படி இருக்கிறார் என்பது நாம் புரிந்துகொள்வதற்கும் விவரிப்பதற்கும் அப்பாற்பட்டது ஆகும். தேவன் நம்மைப் பற்றிய உண்மைகளை நமக்கு கற்பிக்க அவர் எப்படி இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறார், அதற்காக அவரை நம் மனதில் இப்படித்தாய் இருக்கிறார் என ஒரு உருவமாக்கிவிட முடியாது. தேவனுடைய அற்புதமான தோற்றத்தை மிகவும் சக்திவாய்ந்த முறையில் விவரிக்கும் இரண்டு வேதப்பகுதிகள் எசேக்கியேல் 1:26-28 மற்றும் வெளிப்படுத்துதல் 1:14-16 ஆகும்.*

*எசேக்கியேல் 1:26-28 அறிவிக்கிறது, " அவைகளின் தலைகளுக்குமேலுள்ள மண்டலத்தின்மீதில் நீலரத்தினம்போல விளங்கும் ஒரு சிங்காசனத்தின் சாயலும், அந்தச் சிங்காசனத்தின் சாயலின்மேல் மனுஷசாயலுக்கு ஒத்த ஒரு சாயலும் இருந்தது.*

*அவருடைய இடுப்பாகக் காணப்பட்டதுமுதல் மேலெல்லாம் உட்புறம் சுற்றிலும் அக்கினிமயமான சொகுசாவின் நிறமாயிருக்கக்கண்டேன்; அவருடைய இடுப்பாகக் காணப்பட்டதுமுதல் கீழெல்லாம் அக்கினிமயமாகவும், அதைச் சுற்றிலும் பிரகாசமாகவும் இருக்கக்கண்டேன். மழைபெய்யும் நாளில் மேகத்தில் வானவில் எப்படிக் காணப்படுகிறதோ, அப்படியே சுற்றிலுமுள்ள அந்தப் பிரகாசம் காணப்பட்டது; இதுவே கர்த்தருடைய மகிமையின் சாயலுக்குரிய தரிசனமாயிருந்தது; அதை நான் கண்டபோது முகங்குப்புற விழுந்தேன்; அப்பொழுது பேசுகிற ஒருவருடைய சத்தத்தைக் கேட்டேன்.'' வெளி. 1:14-16 கூறுகிறது, "அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப்போலவும் உறைந்த மழையைப்போலவும் வெண்மையாயிருந்தது; அவருடைய கண்கள் அக்கினிஜுவாலையைப் போலிருந்தது; அவருடைய பாதங்கள் உலைக்களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம்போலிருந்தது; அவருடைய சத்தம் பெருவெள்ளத்து இரைச்சலைப்போலிருந்தது. தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்; அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது; அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது.''*

*இந்த வேதப்பகுதிகள் தேவனுடைய தோற்றத்தை விவரிக்கும் எசேக்கியல் மற்றும் யோவானின் சிறந்த முயற்சிகளைக் குறிக்கின்றன. தேவனை விவரிக்க மனித மொழியில் வார்த்தைகள் இல்லை என்பதாள் அவர்கள் குறியீட்டு மொழியைப் பயன்படுத்த வேண்டியதாயிருந்தது; அதாவது, "அப்படி தோன்றியது," "தோற்றத்தைப் போல", "அவர் தோற்றமளித்தார்," முதலியன. நாம் பரலோகத்தில் இருக்கும்போது, "அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்போம்" (1 யோவான் 3:2). இனி பாவம் இருக்காது, தேவனை அவருடைய சகல மகிமையிலும் நம்மால் உணர முடியும்.*

# 37. தேவன் சர்வ வல்லமையுள்ளவர் என்பதன் அர்த்தம் என்ன?

*சர்வவல்லமை என்ற சொல் ஓம்னி (omni) - அர்த்தம் "சர்வ" மற்றும் பொட்டென்ட் (potent) அர்த்தம் "வல்லமை" என்பதிலிருந்து வருகிறது. சர்வஞானி மற்றும் சர்வவியாபி ஆகிய பண்புகளைப் போலவே, தேவன் எல்லையற்றவராக இருந்தால், நமக்கு தெரிந்தது போல அவர் சர்வ ஆளுமையுள்ளவராக இருந்தால், அவர் சர்வ வல்லமையுள்ளவராக இருக்க வேண்டும். அவர் எல்லா காலங்களிலும் எல்லா வழிகளிலும் எல்லாப் பொருட்களின் மீதும் எல்லா வல்லமையையும் கொண்டிருக்கிறார்.*

*யோபு 42:2 இல் தேவனுடைய வல்லமையைப் பற்றி யோபு கூறுகிறார்: "தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்." யோபு அவருடைய திட்டங்களை நிறைவேற்றுவதில் தேவனுடைய சர்வ வல்லமையை ஒப்புக்கொண்டார். மோசேயும், இஸ்ரவேலர்களைப் பற்றிய தனது நோக்கங்களை நிறைவு செய்ய அவருக்கு எல்லா அதிகாரமும் உண்டு என்பதை தேவன் மோசேயிக்கு நினைவூட்டினார்: "அதற்குக் கர்த்தர் மோசேயை நோக்கி: கர்த்தருடைய கை குறுகியிருக்கிறதோ? என் வார்த்தையின்படி நடக்குமோ? நடவாதோ என்று, நீ இப்பொழுது காண்பாய் என்றார்" (எண்ணாகமம் 11:23).*

*தேவனுடைய சர்வ வல்லமையானது அவர் சிருஷ்டித்த சிருஷ்டிப்பை விட தெளிவாக வேறு எங்கும் காணப்படவில்லை என்று சொன்னால் அது மிகையாகாது. தேவன் சொன்னார், "உண்டாகக்கடவது..." அது அப்படியே ஆயிற்று (ஆதியாகமம் 1:3, 6, 9, முதலிய வசனங்கள்). மனிதனுக்கு ஒரு பொருளை உருவாக்க கருவிகள் மற்றும் பொருட்கள் தேவை; ஆனால் தேவனோ வெறுமனே கட்டளையிட்டார், அவருடைய வார்த்தையின் வல்லமையால்,*

*எல்லாம் ஒன்றுமில்லாமையில் இருந்து உருவாக்கப்பட்டது. "கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது" (சங்கீதம் 33:6).*

*அவருடைய சிருஷ்டிப்பைப் பாதுகாப்பதில் தேவனுடைய வல்லமையும் காணப்படுகிறது. தேவன் உணவு, உடை மற்றும் தங்குமிடம் ஆகியவற்றிற்குத் தேவையான அனைத்தையும் வழங்கவில்லை என்றால், பூமியிலுள்ள அனைத்து உயிர்களும் அழிந்துபோகும், மனிதனையும் மிருகத்தையும் அவரது வல்லமையால் பாதுகாக்கிறார் (சங்கீதம் 36:6). பூமியின் பெரும்பகுதியை உள்ளடக்கியது சமுத்திரங்கள், மற்றும் நமக்கு அவற்றின் மீது எவ்வித அதிகாரமும் இல்லை, ஆனால் தேவன் அவற்றிற்கு வரம்புகளை குறித்து தடை செய்யாவிட்டால் அவை நம்மை மூழ்கடிக்கும் (யோபு 38:8-11).*

*தேவனுடைய சர்வ வல்லமை அரசாங்கங்களுக்கும் தலைவர்களுக்கும் நீட்டிக்கப்படுகிறது (தானியேல் 2:21), ஏனெனில் அவர் அவர்களைத் தடுக்கிறார் அல்லது அவருடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களின்படியே அவர்கள் வழியில் செல்ல அனுமதிக்கிறார். சாத்தான் மற்றும் அவனது பிசாசுகளைப் பொறுத்தவரை அவருடைய வல்லமை வரம்பற்றது. யோபு மீதான சாத்தானின் தாக்குதல் சில செயல்களுக்கு மட்டுமே. தேவனுடைய வரம்பற்ற வல்லமையால் அவன் கட்டுப்படுத்தப்பட்டான் (யோபு 1:12; 2:6). இயேசு பிலாத்துவுக்கு எல்லா வல்லமையும் தேவனால் வழங்கப்படாவிட்டால் அவனுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதை நினைவுபடுத்தினார் (யோவான் 19:11).*

*சர்வ வல்லமையுள்ளவராக இருப்பதால், தேவன் எதையும் செய்ய முடியும். இருப்பினும், சில காரியங்களை அவரால் செய்ய முடியாது என்று வேதாகமம் சொல்லும்போது தேவன் தனது சர்வ வல்லமையை இழந்துவிட்டார் என்று அர்த்தமல்ல. உதாரணமாக, அவரால் பொய்*

யாவே / யாஹ்வே / யேகோவா: "கர்த்தர்" (LORD) (உபாகமம் 6:4; தானியேல் 9:14) - கண்டிப்பாகச் சொன்னால், தேவனுக்கு ஒரே சரியான பெயர். ஆங்கில வேதாகம மொழிப்பெயர்ப்புகளில் "கர்த்தர்" (அனைத்தும் பெரிய எழுத்துக்கள்) அடோனாய், "கர்த்தர்" என்பதிலிருந்து வேறுபடுத்தி காட்டப்படுகிறது. பெயரின் வெளிப்பாடு முதலில் மோசேக்கு வழங்கப்பட்டது "நான் இருக்கிறவராக இருக்கிறேன்" (யாத்திராகமம் 3:14). இந்த பெயர் உடனடி, பிரசன்னத்தைக் குறிப்பிடுகிறது. யேகோவா இருக்கிறார், அணுகலாம், அவரை தங்களை விடுவிப்பதற்காக (சங்கீதம் 107:13), மன்னிப்புக்காக (சங்கீதம் 25:11) மற்றும் வழிகாட்டுதளுக்காக (சங்கீதம் 31:3) அழைப்பவர்களுக்கு அவர் அருகில் இருக்கிறார்.

யேகோவா-யீரே: "கர்த்தர் பார்த்துகொள்வார்" (ஆதியாகமம் 22:14)-தேவன் ஈசாக்கிற்குப் பதிலாக பலியிடப்படும் ஆட்டுக்கடாவை வழங்கியபோது ஆபிரகாமால் நினைவுகூரப்பட்ட பெயர்.

யேகோவா-ராஃபா: "பரிகாரியாகிய கர்த்தர்" (யாத்திராகமம் 15:26)- "நான் உன்னை குணமாக்கும் யேகோவா" உடலிலும் உள்ளத்திலும். உடலில், நோய்களிலிருந்து பாதுகாப்பதன் மூலம் மற்றும் குணப்படுத்துவதன் மூலம், மற்றும் ஆத்துமாவில், அக்கிரமங்களை மன்னிப்பதன் மூலம்.

யேகோவா-நிசி: "எங்களுக்காய் யுத்தம் பண்ணுகிற கர்த்தர்" (யாத்திராகமம் 17:15), அங்கு சேனை ஒன்று திரளும் இடமாக விளங்குகிறது. இந்த பெயர் யாத்திராகமம் 17 இல் அமலேக்கியர்களுக்கு எதிரான வனாந்திர வெற்றியை நினைவூட்டுகிறது.

யேகோவா-மக்காடேஷ்: "பரிசுத்தமாக்குகிற கர்த்தர்" (லேவியராகமம் 20:8; எசேக்கியேல் 37:28)-தேவன் மட்டுமே அவரால், நியாயப்பிரமாணத்தினால் அல்ல, மக்களை பரிசுத்தப்படுத்தி அவர்களை பரிசுத்தமாக்க முடியும் என்பதை தெளிவுபடுத்துகிறார்.

யேகோவா-ஷாலோம்: "கர்த்தர் நம் சமாதானம்" (நியாயாதிபதிகள் 6:24)-தேவனுடைய தூதனைப் பார்த்த பிறகு அவன் நினைத்தபடி அவன் மரிக்கமாட்டான் என்று உறுதியளித்த பிறகு அவன் கட்டிய பலிபீடத்திற்கு கிதியோன் கொடுத்த பெயர்.

யேகோவா-ஏலோஹிம்: "கர்த்தராகிய தேவன்" (ஆதியாகமம் 2:4; சங்கீதம் 59:5)-கடவுளின் தனித்துவமான பெயர் யாவே மற்றும் பொதுவான "கர்த்தர்" ஆகியவற்றின் கலவையாகும், அவர் கர்த்தராகிய தேவன் என்பதைக் குறிக்கிறது.

யேகோவா-திஷ்கெனு: "நம்முடைய நீதியாயிருக்கிற கர்த்தர்" (எரேமியா 33:16)-யேகோவா-மக்காடேஷ் போலவே, தேவன் மட்டுமே மனிதனுக்கு நீதியை வழங்குகிறார், இறுதியில் அவருடைய குமாரன், இயேசு கிறிஸ்துவின் என்னும் நபராலே, "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு" பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரிந்தியர் 5:21).

யேகோவா-ரோஹி: "கர்த்தர் எங்கள் மேய்ப்பர்" (சங்கீதம் 23:1)-தாவீது தனது ஆடுகளுக்கு மேய்ப்பனாக தனது உறவைப் பற்றி யோசித்த பிறகு, தேவன் அவருடன் சரியாக உறவு வைத்திருப்பதை

*உணர்ந்தார், அதனால் அவர் கூறினார், " யேகோவா-ரோஹி என் மேய்ப்பராக இருக்கிறார். நான் தாழ்ச்சியடையேன்" (சங்கீதம் 23:1).*

*யேகோவா-ஷம்மா: "கர்த்தர் இருக்கிறார்" (எசேக்கியேல் 48:35)- எருசலேம் மற்றும் அங்குள்ள தேவாலயத்திற்கு பெயரிடப்பட்டது, இது தேவனுடைய ஒருமுறை சென்ற மகிமை (எசேக்கியேல் 8-11) திரும்பி வந்ததைக் குறிக்கிறது (எசேக்கியல் 44:1 -4).*

*யேகோவா-சாபோத்: "சேனைகளின் கர்த்தர்" (ஏசாயா 1:24; சங்கீதம் 46:7)-தேவதூதர்கள் மற்றும் மனிதர்கள் இருவருக்கும் "இனங்கள்" என்று பொருள். அவர் பரலோகத்தின் சேனை மற்றும் பூமியின் குடிமக்கள், யூதர்கள் மற்றும் புறஜாதியினர், ஐசுவரியவான்கள் மற்றும் ஏழைகள், எஜமான்கள் மற்றும் அடிமைகள் ஆகியோரின் தேவன். இந்த பெயர் தேவனுடைய மகத்துவம், வல்லமை மற்றும் அதிகாரத்தை வெளிப்படுத்துகிறது மற்றும் அவர் என்ன செய்ய விரும்புகிறாரோ அதை அவரால் நிறைவேற்ற முடியும் என்பதை காட்டுகிறது.*

*ஏல் ஏலியோன்: "உன்னதமானவர்" (உபாகமம் 26:19) - "மேலே செல்" அல்லது "ஏறு" என்னும் எபிரேய சொற்களின் மூலத்திலிருந்து பெறப்பட்டது, எனவே இதன் உட்பொருள் மிகவும் உயர்ந்தது என்பதாகும். ஏல் எலியோன் உயர்த்தப்பட்ட நிலையைக் குறிக்கிறது மற்றும் முழுமையான கர்த்தத்துவத்தைப் பற்றி பேசுகிறது.*

*ஏல் ரோய்: "காண்கின்ற தேவன்" (ஆதியாகமம் 16:13)-சாராவால் விரட்டப்பட்ட பிறகு வனாந்திரத்தில் தனியாகவும் பரிதவிக்கப்பட்ட நிலையிலும் இருந்த ஆகாரால் தேவனுக்கு வழங்கப்பட்ட பெயர் (ஆதியாகமம் 16:1-14). கர்த்தருடைய தூதனை ஆகார் சந்தித்தபோது, அவள் தேவனே தனக்குத் தூதன் வடிவில் தோன்றினதைப் பார்த்ததாக உணர்ந்தாள். ஏல் ரோய் அவளது துயரத்தில் இருப்பதைக் கண்டார், மேலும் அவர் ஜீவிக்கிற மற்றும் காண்கின்ற தேவன் என்று சாட்சியம் அளித்தாள்.*

*ஏல்-ஓலாம்: "நித்தியமான தேவன்" (சங்கீதம் 90:1-3)-கடவுளின் தன்மை ஆதியும் அல்லது அந்தமும் இல்லாதவர், வரைமுறைக்குட்பட்ட காலத்தின் அனைத்து தடைகளிலிருந்தும் விடுபட்டு அதற்கும் அப்புறமாய் உள்ளவர், மேலும் அவர் காலத்தின் காரணத்தை தன்னுள் கொண்டிருக்கிறார். "நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்."*

*ஏல்-கிபோர்: "வல்லமையுள்ள தேவன்" (ஏசாயா 9:6)-ஏசாயாவின் இந்த தீர்க்கதரிசனப் பகுதியில் மேசியா, கிறிஸ்து இயேசு என்று விவரிக்கும் பெயர். ஒரு வல்லமையுள்ள மற்றும் வலிமைமிக்க போர்வீரராக, மேசியா, வல்லமையுள்ள தேவன், தேவனுடைய எதிரிகளை அழித்து, இரும்புக் கோலால் ஆட்சி செய்வார் (வெளிப்படுத்துதல் 19:15).*

# *48.* தேவன் இப்போது எங்கே இருக்கிறார்? வேதனையில் இருக்கும்போது போது தேவன் எங்கே?

*தேவன் பரலோகத்தில் அவருடைய பரிசுத்த சிங்காசனத்திலிருந்து தேசங்களை ஆளுகிறார் என்று வேதாகமம் கற்பிக்கிறது (சங்கீதம் 47:8; ஏசாயா 6:1, 66:1; எபிரேயர் 4:16). தேவனுடைய இருப்பு பரலோகத்தில் ஏதோ ஒரு வகையில் தனித்துவமானது என்பதை நாம் அறிந்திருந்தாலும், வேதத்தின் போதனைகள் தேவன் எங்கும் நிறைந்திருப்பதை தெளிவுபடுத்துகின்றன (அதாவது எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில் இருக்கும் நிலை). வேதத்தின் ஆரம்பத்தில் இருந்து, தேவன் பூமியின் மேல் இருப்பதை நாம் காண்கிறோம், பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது; ஆழத்தின்மேல் இருள் இருந்தது; தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார் (ஆதியாகமம் 1:2). தேவன் தனது படைப்பால் உலகை நிரப்பினார், அவருடைய இருப்பு மற்றும் மகிமை முழு பூமியிலும் தொடர்ந்து வாழ்கிறது (எண்கள் 14:21). தேவனுடைய பிரசன்னம் பூமியில் அசைவாடி, அவருடைய படைப்புடன் தொடர்புகொள்வதற்கான பல எடுத்துக்காட்டுகள் உள்ளன (ஆதியாகமம் 3:8; உபாகமம் 23:14; யாத்திராகமம் 3:2; 1 ராஜாக்கள் 19:11-18; லூக்கா 1:35; அப்போஸ்தலர் 16:7). எபிரெயர் 4:13 கூறுகிறது, " அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்." எரேமியா 23:24, "யாவனாகிலும் தன்னை நான் காணாதபடிக்கு மறைவிடங்களில் ஒளித்துக்கொள்ளக்கூடுமோ என்று கர்த்தர் சொல்லுகிறார்; நான் வானத்தையும் பூமியையும் நிரப்புகிறவர்*

*அல்லவோ என்று கர்த்தர் சொல்லுகிறார்." சங்கீதம் 139 தேவனுடைய சர்வ வியாபத்தில் ஒரு அற்புதமான ஆய்வு.*

**தேவன் எங்கே?**

*நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவராக இருந்தால், தேவன் உங்களுடன், உங்களுக்கு அருகில், உங்களுக்கு மேலே, உங்களுக்குள் இருக்கிறார். தேவனுடைய இருப்பு மற்றும் கவனிப்பு உங்களை ஒருபோதும் விட்டுவிடாது. நீங்கள் இயேசு கிறிஸ்துவின் விசுவாசியாக இல்லாவிட்டால், தேவன் உங்களுக்கு முன்னால் இருக்கிறார், உங்களை அழைக்கிறார், உங்கள் அருகில் வருகிறார், அவர் உங்களுக்கு கொடுக்க விரும்பும் அன்பு, இரக்கம் மற்றும் கிருபையை உங்களுக்கு வழங்குகிறார். இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுடனான உங்கள் உறவு பற்றி உங்களுக்குத் தெரியாவிட்டால், தயவுசெய்து "தேவனுடன் ஒப்புரவாகுங்கள்" பற்றிய எங்கள் கட்டுரையைப் படியுங்கள். "தேவன் எங்கே?" என்பதை விட ஒரு சிறந்த கேள்வி. "தேவனுடனான உறவில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?" என்பதாகும்.*

**வேதனையின் போது தேவன் எங்கே?**

*வேதனைமிகுந்த சோதனைகள் மற்றும் சந்தேகத்தின் தாக்குதல்களை எதிர்கொள்ளும் போது இந்த கேள்விக்கான பதிலை நாம் அறிய விரும்புகிறோம். இயேசு கூட, சிலுவையில் அறையப்பட்டபோது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்?" (மத்தேயு 27:46) என்று பலத்த சத்தமாய் கேட்டபோது அக்காலத்து பார்வையாளர்களுக்கும், அவரது ஜீவ சரிதையை முதலில் படித்தவர்களுக்கும், தேவன் இயேசுவை கைவிட்டார் என்பதுபோல தோன்றுகிறது, எனவே நம் இருண்ட தருணங்களில் அவர் நம்மையும் கைவிடுவார் என்று நாம் வெளிப்படையாக முடிவு செய்கிறோம். ஆயினும், சிலுவையில் அறையப்பட்ட பிறகு நிகழ்ந்த நிகழ்வுகளை*

தொடர்ந்து கவனித்தபின், தேவனுடைய அன்பிலிருந்து நம்மை எதுவும் பிரிக்க முடியாது என்னும் உண்மை தெரியவருகிறது, மரணம் கூட நம்மை தேவனை விட்டு பிரிக்க முடியாது (ரோமர் 8:37-39). இயேசு சிலுவையில் அறையப்பட்ட பிறகு, அவர் மகிமைப்படுத்தப்பட்டார் (1 பேதுரு 1:21; மாற்கு 16:6, 19; ரோமர் 4:24-25). இந்த உதாரணத்திலிருந்து மட்டும் நாம் நம் வேதனையின் மத்தியில் தேவனுடைய இருப்பை உணரவில்லை என்றாலும் கூட, அவர் நம்மை ஒருபோதும் விட்டுவிலகமாட்டார் அல்லது கைவிட மாட்டார் என்ற அவருடைய வாக்குறுதியை நாம் இன்னும் நம்ப முடியும் (எபிரேயர் 13:5). "தேவன் விரும்புவதை நிறைவேற்றுவதற்காக அவர் வெறுப்பதை சில நேரங்களில் அனுமதிக்கிறார்" (ஜோனி எரிக்சன் தடா).

தேவன் பொய் சொல்ல மாட்டார், அவர் மாறமாட்டார், அவருடைய வார்த்தை என்றென்றும் உண்மையாகவே இருக்கும் என்பதில் நாம் மிகுந்த நம்பிக்கை வைக்கிறோம் (எண்கள் 23:19; 1 சாமுவேல் 15:29; சங்கீதம் 110:4; மல்கியா 3:6; எபிரெயர் 7:21; 13:8, யாக்கோபு 1:17; 1 பேதுரு 1:25). வேதனையான சூழ்நிலைகளில் நாம் இதயத்தை இழக்கவில்லை, ஏனென்றால் தேவனுடைய வாயிலிருந்து தோன்றிய ஒவ்வொரு வார்த்தையிலும் நாம் நம்பிக்கையுடன் வாழ்கிறோம், காணப்பட்ட அல்லது உணரப்பட்டவற்றில் நம்பிக்கை வைக்கவில்லை. இந்த பூமியில் நாம் அனுபவிக்கும் அனைத்து துன்பங்களையும் விட நம்முடைய இலகுவான மற்றும் கொஞ்சகால பிரச்சனைகள் நமக்கு ஒரு நித்திய மகிமையை வைத்திருக்கின்றன என்று நாம் தேவனை நம்புகிறோம். எனவே, நாம் கான்கின்றவை தற்காலிகமானது என்று நாம் அறிந்தும் நம்புவதால், காணக்கூடாதவை மீது அல்ல, கண்ணுக்குத் தெரியாதவற்றின் மீதே நம் கண்களை வைக்கிறோம் (2 கொரிந்தியர் 4:16-18; 5:7). தேவனுடைய வார்த்தையையும் நாம் நம்புகிறோம், அவருடைய நோக்கத்தின்படி அழைக்கப்படுகிற அவரை நேசிப்பவர்களின் நன்மைக்காக அவர்

*தொடர்ந்து ஒன்றாக கிரியை செய்கிறார் (ரோமர் 8:28).* தேவனுடைய *காரியங்களைச் செய்யும் நல்ல முடிவை நாம் எப்போதும் காணாவிட்டாலும், நாம் புரிந்துகொண்டு இன்னும் தெளிவாகப் பார்க்கும் ஒரு காலம் வரும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.*

*நம் வாழ்க்கை ஒரு மெத்தைப் போன்றது. நீங்கள் ஒரு மெத்தையின் பின்புறத்தைப் பார்த்தால், நீங்கள் பார்ப்பது முடிச்சுகள் மற்றும் தளர்வான முனைகள் முழுவதும் தொங்குவது. இது மிகவும் அழகற்றது, மேலும் வேலைக்கு மோனை அல்லது காரணம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும், நீங்கள் மெத்தையை திருப்பிப் பார்க்கும்போது, தயாரிப்பாளர் எவ்வாறு ஒரு நம்பிக்கையாளரின் வாழ்க்கையைப் போலவே ஒரு அழகிய படைப்பை உருவாக்க ஒவ்வொரு இழையையும் ஒன்றாகச் சேர்ந்து நெய்திருக்கிறார் என்பதை நீங்கள் காண்கிறீர்கள் (ஏசாயா 64:8). நாம் தேவனுடைய விஷயங்களைப் பற்றிய வரையறுக்கப்பட்ட புரிதலுடன் வாழ்கிறோம், ஆனால் நாம் எல்லாவற்றையும் அறிந்து புரிந்து கொள்ளும் ஒரு நாள் வருகிறது (யோபு 37:5; ஏசாயா 40:28; பிரசங்கி 11:5; 1 கொரிந்தியர் 13:12; 1 யோவான் 3:2). வேதனையுறும் போது தேவன் எங்கே? கடினமான காலங்களில் உங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டிய செய்தி என்னவென்றால், நீங்கள் அவருடைய கையைப் பார்க்க முடியாதபோது, அவருடைய இதயத்தை நம்புங்கள், அவர் உங்களைக் கைவிடவில்லை என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு உங்கள் சொந்த வலிமை இல்லை என்று தோன்றும்போது, அப்போதுதான் நீங்கள் அவருடைய சமுகத்தில் முழுமையாக ஓய்வெடுக்க முடியும் மற்றும் உங்கள் பலவீனத்தில் அவருடைய பலம் பரிபூரணமானது என்பதை அறிய முடியும் (2 கொரிந்தியர் 12:9-10).*

# *49.* தேவனுடைய கோபத்தைப் பற்றிய வேதாகமப் புரிதல் என்ன?

*"கோபம்," "உள்ளான கொதிப்பு," "ஆத்திரம்" அல்லது "எரிச்சல்" என அடிக்கடி மொழிபெயர்க்கப்படும் "தவறு மற்றும் அநீதிக்கு உணர்ச்சியின் மாறுத்திரம்" என கோபம் வரையறுக்கப்படுகிறது. மனிதர்களும் தேவனும் கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால் தேவனுடைய கோபத்திற்கும் மனிதனுடைய கோபத்திற்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. தேவனுடைய கோபம் பரிசுத்தமானது மற்றும் எப்போதும் நியாயமானது; மனிதன் ஒருபோதும் பரிசுத்தமானவன் அல்ல, அரிதாகவே அவனது கோபம் நியாயப்படுத்தப்படுகின்றன.*

*பழைய ஏற்பாட்டில், தேவனுடைய கோபம் மனித பாவம் மற்றும் கீழ்ப்படியாமைக்கு ஒரு தெய்வீக பதில் ஆகும். விக்கிரக ஆராதனை பெரும்பாலும் தெய்வீக கோபத்திற்கான சந்தர்ப்பமாக இருந்தது. சங்கீதம் 78:56-66 இஸ்ரவேலின் விக்கிரக ஆராதனையை விவரிக்கிறது. தேவனுடைய கோபம் அவருடைய சித்தத்தைப் பின்பற்றாதவர்களை நோக்கி தொடர்ந்து இயக்கப்படுகிறதாய் இருந்தது (உபாகமம் 1:26-46; யோசுவா 7:1; சங்கீதம் 2:1-6). பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் இனி வருகிரதான ஒரு நாளாக "உக்கிரத்தின் நாள்" என்று எழுதினார்கள் (செப்பனியா 1:14-15). பாவம் மற்றும் கீழ்ப்படியாமைக்கு எதிரான தேவனுடைய கோபம் முற்றிலும் நியாயமானது, ஏனென்றால் மனிதகுலத்திற்கான அவருடைய திட்டம் பரிசுத்தமானது மற்றும் பரிபூரணமானது, அதேபோல தேவனும் பரிசுத்தமானவர் மற்றும் பரிபூரணமானவர். தேவன் தெய்வீக தயவைப் பெற ஒரு வழியை வழங்கினார்—மனந்திரும்புதல்—இது தேவனுடைய கோபத்தை பாவிகளிடமிருந்து விலக்குகிறது. அந்த சரியான திட்டத்தை நிராகரிப்பது தேவனுடைய அன்பு, இரக்கம்,*

கிருபை மற்றும் தயவை நிராகரித்து அவருடைய நீதியான கோபத்தை கொண்டுவருவதாகும்.

புதிய ஏற்பாடு தேவன் பாவத்தை நியாயந்தீர்க்கும் கோபத்தின் தேவன் என்ற கருத்தை ஆதரிக்கிறது. ஐசுவரியவான் மற்றும் லாசருவின் கதை தேவனுடைய நியாயத்தீர்ப்பு மற்றும் மனந்திரும்பாத பாவிக்கு கடுமையான விளைவுகளைப் பற்றி பேசுகிறது (லூக்கா 16:19-31). யோவான் 3:36 கூறுகிறது, "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்." குமாரனை நம்புகிறவன் தன் பாவத்திற்காக தேவனுடைய கோபத்தை அனுபவிக்க மாட்டான், ஏனென்றால் இயேசு சிலுவையில் நம் இடத்தில் மரணம் அடைந்தபோது குமாரன் தேவனுடைய கோபத்தை தன் மீது ஏற்றுக் கொண்டார் (ரோமர் 5:6-11). குமாரனை விசுவாசியாதவர்கள், அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள், கோபத்தின் நாளில் நியாயந்தீர்க்கப்படுவார்கள் (ரோமர் 2:5-6).

மாறாக, ரோமர் 12:19, எபேசியர் 4:26 மற்றும் கொலோசெயர் 3:8-10 ஆகியவற்றில் மனிதக் கோபம் எச்சரிக்கப்பட்டுள்ளது. தேவன் மட்டுமே பதில் செய்ய முடியும், ஏனென்றால் அவருடைய பழிவாங்கல் சரியானது மற்றும் பரிசுத்தமானது, அதேசமயம் மனிதனுடைய கோபம் பாவமானது, அது அவனை பிசாசின் செல்வாக்கிற்கு வழி திறக்கிறது. கிறிஸ்தவரைப் பொறுத்தவரை, கோபமும் உக்கிரமும் நமது புதிய சுபாவத்துடன் பொருந்தாது, இது கிறிஸ்துவின் சுபாவம் (2 கொரிந்தியர் 5:17). கோபத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையை உணர, விசுவாசிக்கு கோபத்தையும் உக்கிரத்தையும் உணர்வுகளைப் புனிதப்படுத்தவும் தூய்மைப்படுத்தவும் பரிசுத்த ஆவி தேவையாய் இருக்கிறார். ரோமர் 8-ஆம் அதிகாரத்தில் ஆவியானவரின் ஆளுகைக்குள்ளாக வாழும் ஒருவரின் வாழ்க்கையில் பாவத்தின் மீது உண்டாகும் வெற்றியைக் காட்டுகிறது (ரோமர் 8:5-8). ஆவியால்

*கட்டுப்படுத்தப்படும் மனம் சமாதானத்தால் நிரம்பியிருப்பதாக பிலிப்பியர் 4:4-7 கூறுகிறது.*

*தேவனுடைய கோபம் ஒரு பயங்கரமான மற்றும் திகிலூட்டும் விஷயம். சிலுவையில் நமக்காக சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தத்தால் மூடப்பட்டவர்கள் மட்டுமே, தேவனுடைய கோபம் அவர்கள் மீது ஒருபோதும் வராது என்று உறுதியளிக்க முடியும். "இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே!" (ரோமர் 5:9).*

# 50. மனிதன், தேவனுடைய மாதிரியிலிருந்து எப்பொழுது, எவ்விதம் விலகிச் சென்றான்?

*முதல் மனிதனாகிய ஆதாம், பூரணப்பட்டவராக உண்டாக்கப்பட்டும் - அவர் பாவம் செய்தபோது (ஆதி. 3; ரோமர் 5:12) - விலகிச் செல்பவரானார். அதே போல, நமது கர்த்தருடைய சபையானது, குற்றமற்ற, பிழையற்ற அப்போஸ் தலர்களின் வழிநடத்துதலில் (யோவா. 16:13) தொடக்கப் பட்டிருந்தாலும், இந்த அமைப்பிலும் விசுவாச விலக்கம் உண்டாகும் என்பது பரிசுத்த ஆவியானவரால் முன்னறியப்பட்டிருந்தது. (அப். 20:29, 30; 1தீமோ. 4:1, 3; 2தெச . 2:1-10). முதலில் இம்மாபெரும் சபை விரைவில் வளரக்கூடும் (தானி. 2:35, 44; மத். 13:31-33), இருப்பினும் அது தனது மேன்மை யிலிருந்து விழுந்து விலகிச் செல்லக்கூடும்.*

*சபையானது, தனது ஒழுக்கம், ஆராதனை இன்னும் மற்ற அநேக வழிகளிலிருந்து விலகிச் சென்றிருந்தாலும் வேதா கமத்தின் மாதிரியான சபை அரசாங்கத்திலிருந்து, அது எப்படி விலகிச் சென்றது என்பதில் இங்கு நாம் கவனம் செலுத்துவோம்.*

*பூரணப்பட்டிருந்த காலத்தில், தேவனுடைய சபையின் சரியான முறையிலான அரசாங்கம்பற்றிய அப்போஸ்தலரு டைய உபதேசத்தில், பரிசுத்த ஆவியானவர் வழிநடத்திய வேளையில், ஒவ்வொரு பிராந்திய சபையும் மூப்பர்களையும் அவர்களுக்கு உதவிக்காரர்களையும் கொண்டிருந்தது. இந்த மூப்பர்கள் வேதாகமத்தில், "மேய்ப்பர்கள்" அல்லது "கண்காணிகள்" என்று அழைக்கப்பட்டனர் (அப். 20:17, 28; தீத்து 1:5-7). தேவனுடைய ஏற்பாட்டில் மூப்பர்களுக்கிடையில் எவ்வித வேறுபாடு இன்றியும், ஒருவர் மற்ற எல்லாருக்கும் மேலாக இல்லாமலும் இருந்தது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இப்படிப்பட்ட ஒரு ஏற்பாடுதான் இருந்தது. ஆனால் சபை அரசாங்கத்தில் இருந்து முதன் முதலாக விலக்கம் ஏற்படும்*

வரையில்தான் இந்நிலை நீடித்தது. கி.பி. 110ல், இக்னேஷியஸ் என்பவர் தனியாக ஆளக்கூடிய மூப்பரைப்பற்றி எழுதினார். சபையில் இவ்வினோதமான அதிகாரி யார்? ஒரு மூப்பரை "ஆயர்" என்று நியமித்து, மற்றவர்கள் எல்லாம் "மூப்பர்கள்" என்ற நிலையில் இருப்பதற்கு ஒரு வேறுபாடு நிலை தருவிக்கப் பட்டது. ஆயருக்கும் அதிக அதிகாரங்கள் தரப்பட்டு, அவர், "தனியாக ஆளக்கூடிய ஆயர்" என்று ஆனார். சில ஆண்டுகளுக் குள்ளாகவே, தேவனுடைய சபையின் தலைமைத்துவமானது, ஒன்றுக்கு மேற்பட்ட மூப்பர்களால் ஆன அரசாங்கம் என்ற நிலையிலிருந்து, "மேய்ப்பர் அமைப்பு" என்ற நிலைக்கு மாறியது. இது சிறிய அளவிலான போப்பின் ஆளுகையாக, ஒரு மனிதனால் ஆளப்படக் கூடியதாக இருந்தது. சபையின் அரசாங்கத்தில் ஏற்பட்ட இந்நிலையானது, மனிதன், தேவனு டைய அமைப்பிலிருந்து விலகிச் சென்றதாகும். "தனி ஒரு நபராக ஆளுகை செய்யும் மூப்பர் உள்ள நிலையானது, கண்காணிகள் அல்லது மூப்பர்களை பன்மையில் பெற்றிருக்கும் நிலைக்கு ஒத்திசைய முடியாது.2

புதிய ஏற்பாட்டில் உள்ள எழுதப்பட்ட பதிவுகளிலிருந்து ஆதியில் தாங்கள் விலகிச் சென்றதை நவீன கத்தோலிக்க சபை ஏற்றுக்கொள்ளுகிறது. ரோமன் கத்தோலிக்க வரலாற்று ஆய்வாளரான ஜார்ஜ் ஸ்டெப்பிங் என்பவர், கத்தோலிக்க சபையின் வரலாறு என்ற தம் நூலில்,

புனித. இக்னேஷியஸ் என்பவர் எழுதியவைகளில் நாம் முதன்முதலாக ஆயர்கள், குருக்கள் (மூப்பர்கள்) மற்றும் உதவிக்காரர்கள் ஆகியோர் இருப்பது பேசப்படுவதாகக் காண்கிறோம்.... நமது கர்த்தரே அவர்களது பதவியில் அமர்த்தினார் என்பதில் சந்தேகமில்லை, ஆனால் சபையின் பாரம்பரியத்தில் நாம் நமது எஞ்சியுள்ள நம்பிக்கையை வைக்க வேண்டுமே தவிர, புதிய ஏற்பாட்டின் வார்த்தைகளில் அல்ல, ஏனென்றால்

அவைகளின்படியான விஷயங்களை நாம் காணப்போவதில்லை என்று கூறினார்.

இப்படிப்பட்ட ஒரு பின்னணியில், சபையின் அரசாங்கத்தி லிருந்து விலகும் அடுத்த படியானது வியப்புக்குரியதாகாது. தனியாக ஆட்சி செய்த மூப்பர், ஒரு சபையை ஆளுகை செய்வதோடு திருப்தியடைய முடியாமற் போயிற்று. விரைவிலேயே, தனியான ஆளுகை செய்த இம்மூப்பருக்குக் கீழ், அநேக சபைகள் வந்து சேர்ந்தன. பிறகு, "நகரியத் தலைமையில் அமைந்த அநேக மேற்றிராசனங்கள் என்ற நிறுவனங்கள் பல மாகாணத் தலைநகரங்களில் இருந்த ஆயர்களைத் தலைவர்களாகக் கொண்டு வளர்ந்தன."3 அடுத்தபடியாக, "முதல் தரமான நகரியங்கள்" (அலெக்சான் டிரியா, அந்தியோகு, எருசலேம், ரோம் மற்றும் கான்ஸ்டான்டி நோப்பிள்) ஆகியவைகளில் இருந்த தலைவர்கள் "முற்பிதாக் கள்" என்று அழைக்கப்பட்டனர். இந்த முற்பிதாக்கள் தங்கள் பகுதிகளில் இருந்த கிறிஸ்தவர்கள்மேல் அதிகாரமுள்ளவர் களாயிருந்தும், ஒருவரும், மற்ற எவருக்கும் மேலானவர்களா யிருந்ததில்லை. உண்மையிலேயே நாலாம் நூற்றாண்டில், இதில் ஒரு ஆயர் உலகளாவிய அதிகாரமுடையவராயிருப் பதற்குப் பதில், ரோமாபுரியின் ராஜாவாகிய கான்ஸ்டன் டைன், எல்லா சபைகளின்மேலும் தனக்கு "மேலான அதிகாரம்" உள்ளதாக எண்ணினார். இவர்தான் கி.பி. 325ல் முதன்முதலாக நீசியாவில், 318 ஆயர்களைக் கூட்டி முதலாம் பொதுச் சங்கத்தைக் கூட்டினார். இருப்பினும், பதவி ஆசையானது ராஜாக்களிடம் மட்டுமின்றி, மனம்மாறாத பிரசங்கியார்களிடமும் காணப்பட்டது. கி.பி. 595ல், கான்ஸ்டான்டிநோப்பிளின் முற்பிதாவாக இருந்த ஜான் ஃபாஸ்டர் என்பவர், எல்லா ஆயர்கள் மற்றும் முற்பிதாக் களுக்கு மேலான அதிகாரம் உடையவராக விரும்பி, தம்மை அகில உலகின் ஆயர் என்று அழைத்துக் கொண்டார். அப்போது, ரோமாபுரியின் ஆயராக இருந்த கிரகோரி என்பவர் மிகுந்த கோபம் கொண்டு, ராஜாவுக்குப் பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினார்: "அகில

உலகின் குரு என்று தன்னை அழைத்துக்கொள்பவர் அல்லது அவ்வாறு அழைக்கப்பட விரும்புகின்றவர் யாராக இருப்பினும், அவர் தமது சொந்த சந்தோஷத்திற்காக அப்படிச் செய்வதால், தமது கர்வத்தின் காரணமாக மற்றவர்களுக்கு மேலாக தம்மை உயர்த்துவதால் அப்படிப்பட்டவரே முன் சபிக்கப்பட்ட அந்திகிறிஸ்து ஆவார் என்று நான் உறுதியாகக் கூறுகின்றேன்."6

தமக்கு அடுத்து ஆயரான மூன்றாம் பானிப்பஸ் உட்பட பின்னாளில் வந்த போப்புகளுக்கு எதிராக கிரகோரி சிறிதளவே அறிந்து பேசினார். ரோமாபுரி ஆயராக இருந்த கிரகோரி தமது மரணம்வரை எதிர்ப்புத் தெரிவித்தும், கான்ஸ்டான்டி நோப்பிளின் முற்பிதா, கூட்டமைப்பின் ஆயர் என்ற பட்டத்தைத் தொடர்ந்து தரித்துக் கொண்டிருந்தார். ரோமாபுரியின் புதிய ஆயராக மூன்றாம் பானிப்பஸ் பதவிக்கு வந்தபோது, கான்ஸ்டான்டிநோப்பிளின் உரிமை கோரலை மறுப்பதற்கும் மேலாக ஒன்றைச் செய்தார். கொலைகார ராஜாவான போகாஸ் என்பவனின் நட்பைப் பெற்ற அவர், அந்தப் பட்டத்தை கான்ஸ்டான்டிநோப்பிளின் எல்லைகளி லிருந்து நீக்கிவிடும்படியும், அதை ரோமாபுரியில் நிலை நிறுத்தும்படியும் இராஜாவைக் கேட்டுக்கொண்டார். ஜான் மோஷேய்ம் என்பவர் இவ்விஷயத்தை பரோனியுஸ் என்ப வரின் அதிகாரத்திற்குத் தாக்கல் செய்யும்போது, இவ்விஷய மானது "கற்றறிந்த, பண்டைய ஆய்வில் உள்ள அறிவிற்காகக் குறிப்பிடத்தக்கவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது" என்று கூறினார்.' இதை எதிர்த்த கான்ஸ்டான்டிநோப்பிளின் ஆயர்கள், தங்களின் கண்காணிப்புப் பகுதியானது, "மேன்மை மற்றும் அதிகாரத்தில் ரோமாபுரிக்குச் சமானமாய்" இருப்ப தோடு, "எல்லாக் கிறிஸ்துவின் சபைகளுக்கும்" மேம்பட்டதாய் இருப்பதாக கூறினார். இந்த மறுப்பை போக்கஸ் கவனிக்க வில்லை, ஆனால் உயர்ந்த கனத்தை ரோமாபுரி ஆயருக்கு அளித்தான், "இவ்விதமாக போப்பின் மேலான அதிகாரம் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது."8

ரோமாபுரியால் இன்னும் இச்சிக்கப்பட்டதாயுள்ள இப்பட்டம் தேவபக்தியுள்ள கிறிஸ்தவர்களால் அல்ல, ஆனால் சுய இச்சையுடைய போகாஸ் என்ற ராஜாவால் தரப்பட்டது, "மௌரீஷியஸ் என்ற சக்கரவர்த்தியின் ரத்தத்தின்மூலம் ராஜ சிம்மாசனத்திற்கு வந்த போகாஸ் ஒரு அருவருக்கப்பட்டவன் ஆவான்."9

இந்நாள் வரைக்கும் தொடர்ந்துகொண்டிருக்கும் விசுவாச விலக்கங்களைப்பற்றி விவாதம் செய்ய இடம் போதாது. ஏவப்பட்ட எழுத்தாளர்கள் முன்னுரைத்தபடியே மிகச் சரியாக விசுவாச விலக்கம் நேரிட்டுள்ளது என்று கூறுவது போதுமா னதாகும்.

# 51. தேவன் மனிதரானாரா?

புதிய ஏற்பாட்டின் முதல் நான்கு புத்தகங்கள் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்), கூறப்படுபவைகளிலேயே ஆச்சரியமான வரலாற்றை நமக்குக் கூறகின்றன. தேவன் எப்படி மனிதராக வந்தார் என்பதை அவை நமக்கு வெளிப்படுத்துகின்றன. அவைகள், தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து ஒரு மனிதராக இந்தப் பூமிக்கு வந்து, நமது பாவங்களுக்காக மரித்து, இரட்சிப்பு அல்லது நமது பாவங்களுக்கு மன்னிப்பு, மற்றும் நித்திய வாழ்வு ஆகியவைகளை-யாரெல்லாம் பெற்றுக் கொள்கின்றார்களோ அவர்களுக்காக-கொண்டு வந்தார் என்று சொல்லுகின்றன.

புதிய ஏற்பாடானது இரட்சிப்பின் பாடமாகவே இருக்கின்றதே தவிர, அந்த அளவுக்கு அது ஒரு வரலாற்று புத்தகமாக இருப்ப தில்லை, தேவனுடைய குமாரன் நம்மை இரட்சிப்பதற்காக எப்படி நம்மில் ஒருவராகவே வந்தார் என்பதே இதன் இருதயம் போன்ற மையப் பகுதியாக இருக்கின்றது. ஆகவே, மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியவை கர்த்தருடைய வாழ்க்கையைப் பற்றிய பாடங்களாக மட்டும் இல்லை. அவைகள் ஊழியச் செய்திகளை அதிகம் கொண்டுள்ளன. மனிதனுக்கு இரட்சிப்புக் கொண்டு வருதல் தொடர்பான திறவுகோல் நிகழ்ச்சிகளை மட்டும் "தேர்ந்தெடுத்த வரலாறாக" இவைகள் நமக்குத் தருகின்றன. இவ்விதமாக, யோவா. 21:25ல் "இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகள் ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புத்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்" என்று கூறப்படுகின்றது.

இயேசு நமக்கு இரட்சிப்பை அருளிச் செய்தது பற்றிப் புதிய ஏற்பாட்டில் கூறப்படும் இந்த முக்கிய நிகழ்ச்சிகள் என்ன? இயேசுவைப் பற்றிய சத்தியம் என்ன?

**இயேசு தேவனாக இருந்தார்/இருக்கின்றார்**

*இயேசு தேவனாக இருந்தார்/இருக்கின்றார் என்பதே அவரைப் பற்றி நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய முதலாவது சத்தியமாகும்.*

*இவரது பிறப்பு இவரது தொடக்கமாக இருந்ததா? இல்லை. பெத்லகேமில் நமது கர்த்தர் பிறந்தது இவர் இருக்கத் தொடங்கிய ஒரு நிகழ்ச்சியல்ல. ஒரு இயல்பான உடலை எடுத்து மனிதனாக ஆனதே இவரது பிறப்பாக இருந்தது.*

*"தேவன்" என்பது ஒரு குடும்பப் பெயரைப் போன்றதாகும். உங்கள் குடும்பப் பெயரானது உங்கள் குடும்பத்தின் மற்ற உறுப்பினர் களுடன் உங்களை அடையாளப்படுத்துகின்றது. தனித்தனியான குடும்ப உறுப்பினர்களை ஒரே குடும்ப அலகாக இணைக்கும் இணைப்பாக இது இருக்கின்றது. இதே போலவே, "தேவன்" என்பதும் ஒரு குடும்பப் பெயராக இருக்கின்றது. வேதவசனங்களில் நாம் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், பரிசுத்த ஆவியாகிய தேவன் என்று காணுகின்றோம். இந்த தேவத்துவத்தின் இரண்டாம் நபராகிய இயேசு நமக்காக மனிதன் ஆனார்.*

*இயேசு நித்திய தேவனாக இருக்கின்றார் என்பதைத் தெளிவாக அறிவிக்கும் ஒரு வேதவசனப் பகுதி யோவா. 1:1-5 ஆகும். இயேசு தேவனாக இருக்கின்றார் என்று யோவான் சொன்னார், இவர் எப்பொழுதுமே தேவனாகவே இருந்திருக்கின்றார்.*

*ஆதியிலே வார்த்தை' இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனா யிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியா யிருந்தது. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.*

*இந்த வசனப்பகுதியிலிருந்து வருகின்ற நான்கு மாபெரும் சத்தியங்களை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியது தேவை:*

*(1) இயேசு படைக்கப்பட்டவரல்ல என்று நாம் காணுகின்றோம்: இயேசு முன்பே இருந்திருக்காவிட்டால் இவர் எப்படி ஒரு மனிதராக வந்திருக்க முடியும்? வேறு எந்த நபரிடத்திலும் இவரது பிறப்பு மற்றும் தொடக்கம் பற்றிய இந்த வித்தியாசத்தை நாம் காணவோ அல்லது அந்த நபர் கர்ப்பம் தரிக்கையில் அவரது வாழ்வு தொடங்கவில்லை என்று கூறவோ முடியாது, ஆனால் இயேசுவைப் பற்றி இவ்வாறு நாம் கூற முடியும். இவர் பிறக்கும் போதோ அல்லது மரித்தோரிலிருந்து உயிர்த்த போதுதானோ தேவனுடைய குமாரனாகவில்லை. இவர் தேவனாக, துவக்கம் என்ற ஒன்றில்லாத உயர்வானவராக இருக்கின்றார். இவர் எப்பொழுதுமே இருந்திருக்கின்றார், இனி எப்பொழுதுமே இருப்பார்.*

*இவர், உலகமுண்டாவதற்கு முன்பு பிதாவோடு தமக்கிருந்த மகிமையைப் பற்றிப் பேசினார் (யோவா. 17:5). இவர், "... நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேனென்று... நான் பிதாவினிடத் திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்தேன் ..." (யோவா. 16:27, 28) என்று கூறினார். மேலும் இவர், "பிதாவே, உலகத் தோற்றத்துக்கு முன் நீர் என்னில் அன்பாயிருந்தபடியினால்..." (யோவா. 17:24அ) என்றும் கூறினார். மற்ற ஒவ்வொரு நபருமே, இயல்பான பிறப்பினால் வாழ்க் கையில் நுழைகின்றனர், ஆனால் இயேசுவோ நாட்களின் துவக்கமும், ஜீவனின் முடிவும் அறியாதவராய் இருக்கின்றார் (எபி. 7:3). இவர் முற்றிலும் நித்தியமானவர் மற்றும் முற்றிலும் தேவனானவர்.*

*நம்மைப் போலின்றி, இவர் தாம் பிறப்பதையும், வாழ்க்கை அனு பவத்தில் பிரவேசிப்பதையும் தாமே தேர்ந்து கொண்டார். இவர் பூமியில் தமது வாழ்வின் போது, தமது தெய்வீகத்தை ஒதுக்கி வைத்து விடவில்லை, ஆனால் தேவன் என்ற தமது பண்பு நலன்களை சுயமாகப் பயன்படுத்துவதை மட்டுமே ஒதுக்கி வைத்தார். எந்த*

*நேரத்திலும், இவர் தமது எந்த தெய்வீக வல்லமையையும் பெற்றிருக்கவும், தமக்கிருந்த தெய்வீகத் தேர்ந்து கொள்ளுதல்களைப் பயன்படுத்தவும் முடிந்திருந்தது (பிலி 2:6).*

*(2)* தேவன் *இந்த உலகத்தை இயேசுவின் மூலமாகவே படைத்தார் என்று நாம் காணுகின்றோம். இவரே இந்த அண்டம் முழுவதற்கும் கர்த்தராக இருக்கின்றார். 1 கொரி. 8:6 இதைக் கூறுகின்றது: "பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது; அவருக்கென்று நாமும் உண்டாயிருக்கிறோம். இயேசு கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு; அவர் மூலமாய்ச் சகலமும் உண்டாயிருக்கிறது. அவர் மூலமாய் நாமும் உண்டாயிருக்கிறோம்." கொலோ. 1:16ம் இதைக் கூறுகின்றது: "ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமாகிய சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது."*

*(3) இயேசு உயிருள்ளவர்களுக்கு ஜீவனைக் கொடுக்கிறார் என்றும், மரித்தவர்களை உயிர்ப்பிக்கவும் இவரால் முடியுமென்றும் நாம் காணுகின்றோம் (யோவா. 11:25ஐக் காணவும்). இவரே ஜீவனைப் படைப்பவராக இருக்கின்றார்.*

*(4) இவரே ஜீவனுக்கும் மரணத்திற்கும் கர்த்தராக இருக்கின்றார் என்று நாம் முடிவு செய்ய வேண்டும். இவர் எல்லாவற்றையும் படைத்து, எல்லாவற்றையும் பராமரித்து, ஜீவனைக் கொடுத்து, மரணத்தின் மேல் ஆளுகை செய்கின்றவராய் இருக்கின்றார்.*

*கர்த்தருடைய பூமிக்குரிய வாழ்க்கையைப் பற்றிய ஒவ்வொன்றையும் நாம் புரிந்து கொள்ள முடியுமா? ஐயத்திற்கிடமின்றி நம்மால்*

முடியாது. மனிதன் எப்படி தேவனை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியும்? ஒரு சத்தியத்தை விசுவாசிப்பதற்கு அதை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டுவதில்லை. தேவன் இந்த உலகத்தை எப்படிப் படைத்தார் என்று நான் புரிந்து கொள்ளவில்லை, ஆனால் அவர் அதைப் படைத்தார் என்று நான் விசுவாசிக்கின்றேன். இயேசு மரித்தோரிலிருந்து எவ்விதம் எழுந்தார் என்று நான் புரிந்து கொள்ளுவதில்லை, ஆனால் இவர் அதைச் செய்தார் என்று நான் விசுவாசிக்கின்றேன். அதே போலவே, தேவனாகிய இயேசு கிறிஸ்து எப்படி மனிதனாக முடிந்தது என்று நான் புரிந்து கொள்ளவில்லை, ஆனால் இவர் அதைச் செய்தார் என்று நான் விசுவாசிக்கின்றேன்.

**தேவனுடைய குமாரனாகிய இயேசு மனிதரானார்**

இயேசுவைப் பற்றி நாம் சிந்திக்கத் தேவையான அடுத்த சத்தியம், அவர் முழுமையாகவே மனிதராக வந்தார் என்பதாகும். இந்த சத்தியம் நமது சிந்தனையில் உட்புக அனுமதிப்போம்; தேவனுடைய குமாரனாகிய இயேசு மாம்சத்தில் வந்தார்! இயேசு, தேவனுடைய குமாரனாக இருந்தார், இருக்கின்றார், இனி எப்போதும் இருப்பார்; ஆனால் இவரது பிறப்பின்போது இவர் மனுஷ குமாரனானார்.

இயேசு பூமிக்கு வருவதற்காகப் பரலோகத்தை விட்டது எப்படி என்று பவுல் விளக்கப்படுத்தினார் (பிலி. 2:5-8). இயேசு நம்மைப் போல் ஒருவராவதற்கு பரலோகத்திலிருந்து எப்படிக் கீழே வந்தார் என்பதைக் கவனியுங்கள்.

முதலாவதாக, இவர் பரலோகத்தை விட்டார். இவர் தமது பிதாவின் பிரசன்னத்திலிருக்கும் நிறைவான அன்பை விட்டார். இவர் பகைமை நிலவாத ஒரு இடத்திலிருந்து வெளியேறி வந்தார்-விரோதம், பொறாமை மற்றும் சந்தேகம் ஆகியவை இல்லாத இடம் அது. இவர் பரலோகத்தின் அழகுமிக்க இணக்கத்தை விட்டு வந்தார்-அந்த இடம், கருத்து வேறுபாடு, முரண்பாடுகள் அல்லது விவாதங்கள் ஆகியவை இல்லாத ஒரு இடமாகும், தவறான புரிந்து கொள்ளுதலோ அல்லது

குழப்பமோ இல்லாத ஒரு இடமாகும். இவர் பரலோகத்தின் ஏராளமான ஆசீர்வாதங்களை விட்டு வந்தார். நிதிப் பற்றாக் குறையோ, ஏழ்மையினால் ஒருவர் பாதிக்கப்படும் நிலைமையோ அல்லது ஒருவராவது பசி தாகத்துடன் இருக்கும் நிலைமையோ இவை எதுவும் இல்லாத ஓரிடத்தை விட்டு வர இவர் தேர்ந்து கொண்டார்.

இரண்டாவதாக, இவர் மனிதரானார். இவரது பிறப்பு இவரின் தோற்றத்தைக் குறிப்பதில்லை, ஆனால் காலத்தின் மேடையில் இவர் மனிதராகத் தோன்றியதையே குறிக்கின்றது. நித்தியமும், காலமும் சந்திக்கும் இடமாக தெய்வீகமும் மனுஷீகமும் இணைந்தவராக, பரலோகத்திற்கும் பூலோகத்திற்கும் இணைப்பாக இயேசு விளங்கு கின்றார். பிறப்பதற்கு மட்டுமின்றி, முழுமையான மனிதராயிருந்து மரணமடையவும் இவர் சம்மதித்தார். தேவனாகவே இவர் மனித ரானார். இவர் தேவனுடைய குமாரனாயிருந்தவர், ஆனால் மனுஷ குமாரனானார்.

இது கிறிஸ்தவத்தின் மாபெரும் சத்தியமாய் இருக்கின்றது. இந்த சத்தியத்தை நீங்கள் விசுவாசிக்க முடியுமென்றால், கிறிஸ்தவத்தில் உள்ள மற்ற ஒவ்வொரு சத்தியத்தையும் நீங்கள் விசுவாசிக்க முடியும். ஆம், தேவனாக இருந்தவரே நாசரேத்தூர் இயேசு என்ற மனிதர் ஆனார் என்பதே கிறிஸ்தவத்தில் உள்ள இடறலடையக் கூடிய சத்தியமாகும்-இவர் தமது தெய்வீகத்தை இழந்து விடாமல் மனித உருவெடுத்தார், அதன் மூலம் இவர் உண்மையாகவும் முழுமை யாகவும் தேவனாக மற்றும் மனிதராக இருந்தார். கிறிஸ்தவத்தின் இந்தப் பகுதியை விசுவாசிக்கும் எவரும் இதன் மற்ற பகுதிகளை விசுவாசிப்பதில் எவ்வித இடறலும் அடைவதில்லை.

யோவான், "அந்த வார்த்தை மாம்சமாகி ... நமக்குள்ளே வாசம் பண்ணினார்'' (யோவா. 1:14அ) என்று எழுதினார். வேறு வார்த்தை களில் சொல்லுவதானால், தேவன் மனிதரானார்; தெய்வீக மகன் ஒரு யூதரானார்; சர்வ வல்லமையுள்ளவர் இப்பூமியில் உதவியற்ற ஒரு

குழந்தையாகி, தனது படுக்கையில் படுத்திருப்பதைத் தவிர எதுவும் செய்ய இயலாதவராகி, திறந்த விழிகளுடன் பார்த்து, வளைந்து நெளிந்து மற்றும் சத்தமிட்டுக் கொண்டிருந்தார். மற்ற குழந்தைகளைப் போலவே இவருக்கும் உணவு ஊட்டப்படவும், உடைகள் மாற்றப் படவும், பேசுவதற்குக் கற்றுக் கொடுக்கவும் தேவையாயிருந்தது. இது ஒரு மாயையோ அல்லது வஞ்சனையோ அல்ல; தேவகுமாரனுடைய குழந்தைப் பருவம் ஒரு உண்மை நிகழ்ச்சியாகும். இதைப் பற்றி நீங்கள் எவ்வளவு அதிகமாய்ச் சிந்திக்கின்றீர்களோ, அவ்வளவு அதிகமாய் இது ஆச்சரியப்படக் கூடியதாய் ஆகின்றது. இந்தத் திரு அவதாரத்தைப் பற்றி மக்கள் தங்கள் தவறான நம்பிக்கையாலும்-அல்லது குறைந்த பட்சம் போதிய நம்பிக்கை இல்லாமையாலும்-சுவிசேஷ வரலாற்றின் மற்ற சத்தியங்களை நம்புவதில் சிரமம் அடைகின்றார்கள். இந்தத் திரு அவதாரமானது உண்மை என்று புரிந்து கொள்ளப்பட்டு விட்டால், மற்ற சிரமங்கள் யாவும் நீங்கி விடுகின்றன.

மூன்றாவதாக, இவர் மனிதர்களுக்கு ஊழியக்காரராக வந்தார். இவர் அரண்மனையில் ஒரு அரசராக வாழவில்லை, ஆனால் ஏழ்மை யில் ஒரு ஊழியக்காரராக வாழ்ந்தார். இவர் ஊழியம் பெறும்படிக்கு வராமல், ஊழியம் செய்வதற்கென்றே வந்தார். தேவன் எப்படி யிருக்கிறார் என்றும் உண்மையான மனிதத்துவம் எப்படி இருக்க வேண்டும் என்றும் காண்பிப்பதற்காகவே இவர் வந்தார் (மாற். 10:45).

நான்காவதாக, இவர் தம்மை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தார். இவர் மரணத்திற்குத் தம்மை ஒப்புக் கொடுக்காமல் முழுமையான மனிதராக முடியாதிருந்தது. மனிதரோடு தம்மை நிறைவாகவே அடையாளப்படுத்திக் கொண்டார். மிகவும் மோசமான மரணத்திற்கு, சிலுவையின் மீது அடையும் மரணத்திற்குக் கூட தம்மை இவர் ஒப்புக் கொடுத்தார். நான் என்னுடைய தூக்கத்திலேயே மரிக்க விரும்பு கின்றேன். உங்களைப் பற்றிய நிலை என்ன? இந்த வகையில் நாம் இயேசுவைப் போல் இருப்பதில்லை. சித்திரவதையும், வலியும் மிகுந்த

ஒரு மரணத்திற்கு இவர்-விருப்பத்துடன், சுயமாக எவ்விதமான வற்புறுத்துதலுமின்றி-தம்மை ஒப்புக் கொடுத்தார்.

**இவர் தேவ-மனிதராக நம் மத்தியில் வாழ்ந்தார்**

இயேசுவைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய இன்னொரு சத்தியம், இவர் தேவ-மனிதராக நம்மிடையே வாழ்ந்தார் என்பதேயாகும்.

தேவ-மனிதராக இப்பூமியில் வாழ்வது என்பது வழக்கத்திற்கு மாறானதாயிருக்கும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடும். தேவ-மனிதர் என்பவர் மற்ற எல்லா மக்களிலும் இருந்து மாறுபட்டவராய் இருக்கக் கூடும். இவ்வுலகில் வாழ்ந்த எந்த மனிதருக்கும் மேலானவராகவே இவரது வாழ்வு இருந்தது என்பதை மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகிய நற்செய்தி புத்தகங்களில் நாம் காணுவதில் வியப்படையக் கூடாது.

தேவன் மனிதரானார் என்றால் ஒரு விசேஷித்த பிறப்பு தேவையாய் இருந்திருக்கும். இவர் அப்படிப்பட்ட பிறப்பையே பெற்றிருந்தார்; மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோரின் நற்செய்திப் புத்தகங்களில் மரியாள் என்ற கன்னிப் பெண்ணிடத்தில் இவர் பிறந்ததாகக் கூறப்படுகின்றது. இவர் பூமிக்குரிய ஒரு தாயைப் பெற்றிருந்தார் ஆனால் இவருக்கு பூமிக்குரிய தகப்பன் யாரும் இல்லை, ஏனென்றால் இவர் பரிசுத்த ஆவியானவரால் கருத்தரிக்கப் பட்டார் (மத். 1:20).

இவரது வாழ்க்கையானது அழியக் கூடிய மனிதனிடத்திலிருந்து வந்திராத தெய்வீக உபதேசத்தினால் அடையாளப் படுத்தப்பட்டு, முழுநிறைவானதாயிருக்கும் என்றும் நாம் எதிர்பார்க்கக் கூடும். இவர் பேசியதைப் போல வேறு எவரும் பேசியதில்லை என்று நாம் படிப்பதில் (யோவா. 7:46) வியப்பேதும் இல்லை. இவரைச் சந்தித்த

மற்றும் இவரது உபதேசத்தைக் கேட்ட மக்கள் அனைவரும் இவரது வாழ்வு மற்றும் செய்தியைக் குறித்து மிகவும் ஆச்சரியமடைந்தனர்.

இவர் மாம்சத்தில் வந்த தேவனாயிருப்பாரென்றால், மனிதத் திறமைகளுக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள் மற்றும் புதுமைகளினால் இவர் தமது வல்லமையை வெளிப்படுத்தியது பற்றி நாம் ஏன் ஆச்சரி யப்பட வேண்டும்? இவரது தெளிவான அற்புதங்கள், இவருடைய விரோதிகளாலேயே கூட, இயற்கையின் விதிகளுக்கு அப்பாற்பட்ட வையாக மதிக்கப்பட்டன என்றும் நமக்குக் கூறப்பட்டுள்ளது. இவர் மரித்தவனை உயிரோடு எழுப்பினார் (யோவா. 11:43, 44). குருடனைக் குணமாக்கினார் (மாற். 8), அப்பத்தையும், மீனையும் பலுகச் செய்தார் (யோவா. 6). இப்படிப்பட்ட வல்லமையை இவர் பெற்றிருந்தது நமக்கு விநோதமாயிருக்கக் கூடாது. இவர் எல்லாவற்றையும் படைத்து அவைகளைப் பராமரிக்கின்றவர் அல்லவா?

உலக வரலாற்றில் இவரது மரணம் ஒரு வகையானது என்று நாம் எதிர்பார்ப்பதில்லையா? தேவன் ஒரு சிலுவையில் மரிப்பது என்பது எல்லாக் காலங்களிலும் ஆச்சரியமான ஒரு நிகழ்ச்சியல்லவா? நற்செய்திப் புத்தகங்கள் இப்படி நடந்ததாகவே காண்பிக்கின்றன. இயேசுவின் மரணத்தின் போது, வானம் கறுத்தது, பூமியதிர்ச்சி ஏற்பட்டது, தேவாலயத்தின் திரைச் சீலை கிழிந்தது, கல்லறைகள் திறந்தன, மரித்திருந்த அநேக பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்து இவர் உயிர்த்தெழுந்த பின்பும் கூட எருசலேமில் பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டார்கள் (மத். 27:50-53). தேவ-மனிதர் மரித்தபோது, ஒரு விசேஷ நிகழ்ச்சி-உலகம் உண்டான நாள் முதலாய் திட்டமிடப்பட்டி ருந்த ஒரு நிகழ்ச்சி-நடந்தேறியது.

தேவ-மனிதருக்கு மரணத்தின் மீதும் வல்லமை உண்டு என்று நாம் எதிர்பார்ப்பதில்லையா? இவர் மரித்தோரிலிருந்து உயிர்த் தெழுந்தாரே. இவரது வாழ்வைப் பற்றிக் கூறப்பட்டுள்ள தெளிவான சத்தியங்களில் இதுவும் ஒரு சத்தியமாகும். சுவிசேஷ எழுத்தாளர்கள்

நான்கு பேருமே இவரது உயிர்த்தெழுதலை மாபெரும் விபரங் களுடன் விளக்கப்படுத்துகின்றார்கள். இவர் நமது பாவங்களுக்காகத் தம்மையே கொடுத்தார், ஆனால் இவர் உண்மையிலேயே தெய்வீக மானவர் என்பதை நாம் அறிந்து கொள்ளும்படியாக மரித்தோரி லிருந்து உயிரோடு எழுந்தார்.

**முடிவுரை**

இயேசுவைப் பற்றி நாம் மறக்க முடியாத மூன்று சத்தியங்கள் இங்கு இருக்கின்றன: இவர் தேவனாக இருந்தார், இருக்கின்றார், இவர் மனிதரானார், இவர் நம் மத்தியில் தேவ-மனிதராக வாழ்ந்தார்.

இயேசுவைப் பற்றிய இந்த மூன்று சத்தியங்கள் நம்மை இரண்டு வழிகளில் ஊக்கப்படுத்த முடியும். முதலாவது, இவைகள் நமது இரட்சகர், உதவியற்ற ஒரு மனிதரல்ல, ஆனால் தேவன்-எல்லாம் வல்லவர், நித்தியமானவர், படைத்து பராமரிக்கின்ற தேவன் என்பதை நமக்கு நினைப்பூட்டுகின்றன.

இரண்டாவது, இவருடைய முன்னிருந்த நிலையில், மனித குலத்திற்கான இவரது அன்பின் சத்தியத்தை நாம் காணுகின்றோம். இவர் பூமிக்கு வந்து நமது பாவங்களுக்காக மரித்தது நமது இரட்சிப்புக்கான ஒரே நம்பிக்கையைத் தருவதற்காகவே. இயேசு இங்கு வரவும், நமக்கு அந்த நம்பிக்கையைத் தரவும் சித்தமானார். நமது இரட்சிப்புக்காக இவர் தம்மையே தந்தார், ஆனால் பூமியில் உள்ள மக்கள் அந்த செய்தியை ஏற்று இரட்சிக்கப்படுவார்களா? ஒரு சிறிய பதில் செயலுக்காகவே இயேசு எல்லாவற்றையும் விட்டு விட்டாரா? இயேசு நமக்காகவே இந்த இடர்ப்பாட்டை ஏற்றுக்கொள்ளச் சித்தமானார். வேறு எவரும் நம்மை இரட்சிக்க முடியாது. இவர் வந்திருக்கவில்லையென்றால், நாம் நம்பிக்கையற்ற வர்களாகவே இருந்திருப்போம்.

ஒரு எறும்பாக நீங்கள் ஆவது பற்றிக் கற்பனை செய்ய உங்களால் முடியுமா? மனிதராக இருக்கும் நிலையில் உங்களுக்கிருக்கும் அநேக செல்வங்களான உங்கள் மனித உடல், உங்கள் பலம் மற்றும் உங்கள் திறமைகள் ஆகியவற்றை நீங்கள் விட்டுவிட வேண்டியிருக்கும். ஒரு எறும்புக்கு உள்ள வரையறைக்குள் நீங்கள் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கும். இயேசு ஒரு எறும்பாக ஆகவில்லை, ஆனால் பரலோகத்தில் இவருக்குள்ள மேன்மையான நிலையில் இருந்து இறங்கி, பலஸ்தீனத்தின் ஒரு மனிதராக இவர் ஆனதென்பது, ஒரு மனிதன் எறும்பாக ஆகும் செயலை விடவும் எவ்வளவோ மேலான தாழ்மையுடைய செயலாகும். ஆம், நாம் தேவனுடைய பிள்ளைகளா கும்படி இயேசு மனிதரானார்."

இயேசு நமக்காகச் செய்த இந்தச் செயலுக்காக நாம் களிகூர்ந்து, இப்பொழுதே இவருக்குக் கீழ்ப்படியவும், இவரைப் பின்பற்றவும் தீர்மானம் செய்வோம்.

# 52. இயேசு தேவனா? இயேசு தாம் தேவன் என்று எப்பொழுதாவது கூறினாரா?

*“நான் தேவனாக இருக்கிறேன்” என்று இயேசு நேரடியாக கூறியதாக வேதாகமத்தில், எந்த இடத்திலும் பதிவு செய்யப்படவில்லை. அதற்காக அவர் தான் தேவன் என்று எந்த இடத்திலும் எடுத்துரைக்கவில்லை என்று அர்த்தமல்ல. உதாரணமாக இயேசு கிறிஸ்து என்ன சொல்கிறார் என்று பாருங்கள், “நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம்” (யோவான் 10:30). சாதாரணமாக இதை பார்ப்பதற்கு, இயேசு தன்னைக் குறித்து தேவன் என்று சொன்னதாக இவ்வசனத்தில் தெரியாமல் போகலாம். ஆனால் இயேசு இப்படி சொன்னதும் அதற்கு யூதர்கள் எடுத்துக்கொண்ட விதம் மற்றும் யூதர்களின் பிரதிபலிப்பை கவனியுங்கள்: 'யூதர்கள் அவருக்கு பிரதியுத்தரமாக, நற்கிரியையினிமித்தமாக நாங்கள் உன் மேல் கல்லெறிகிறதில்லை - நீ மனிதனாயிருக்க உன்னை தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவ தூஷணம் சொல்லுகிறபடியினால், உன் மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்" (யோவான் 10:33). இந்த வாக்கியத்தை இயேசு கிறிஸ்து கூறியது மூலம், தன்னை தேவனென்று குறிப்பிட்டதாக யூதர்கள் புரிந்து கொண்டார்கள். அவர்கள் இப்படி பிரதிபலித்ததால், இயேசு அதை மறுக்கவோ, மாறுத்தரம் சொல்லவோ இல்லை. இதிலிருந்து “நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம்” என்று இயேசு கூறியது அவர் தேவனாக இருக்கிறார் என்பதை தெளிவுபடுத்துவதற்குத்தான் என்பது தெளிவாகிறது. மற்றொரு உதாரணம் யோவான் 8:58, “ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நானிருக்கிறேன் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்". இங்கேயும் யூதர்கள் அவர் மேல் கல்லெறிந்து கொலை செய்யும்படி கல்லுகளை எடுத்துக்*

*கொண்டார்கள், காரணம் மோசேயின் பிரமாணத்தின்படி இது தேவதூஷணம் ஆகும் (லேவியராகமம் 24:15).*

*"அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்றும் "அந்த வார்த்தை மாம்சமாகி" என்றும் (யோவான் 1:1, 14) குறிப்பிட்டு அப்போஸ்தலனாகிய இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தை யோவான் மீண்டும் வலியுறுத்தி கூறுகிறார். இந்த வசனங்கள் இயேசு கிறிஸ்துவே, மாம்சத்தில் வந்த தேவன் என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது. "ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்" என்று அப்போஸ்தலர் 20:28 கூறுகிறது. அப்போஸ்தலர் 20:28, தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபை, என்று சூளுரைக்கிறது. ஆகவே, இயேசு தேவனாக இருக்கிறார்.*

*இயேசுகிறிஸ்துவின் சீஷனாகிய தோமா "என் ஆண்டவரே, என் தேவனே" என்று அழைக்கிறார் (யோவான் 20:28). இயேசுகிறிஸ்து அதைத் திருத்தவில்லை மாறாக அதை ஏற்றுக்கொண்டவராகவே இருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுகிறிஸ்துவைக் குறித்து "மகாதேவனும், நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து" என்று தீத்து 2:13ல் குறிப்பிடுகிறார். அப்போஸ்தலனாகிய பேதுரு "நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து" என்று 2 பேதுரு 1:1ல் குறிப்பிடுகிறார். பிதாவாகிய தேவனும் இயேசுவின் தெய்வீகத்திற்கு சாட்சியாக இருக்கிறார். "குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது" (எபிரெயர் 1:8). பிதாவாகிய தேவன் இயேசுவை இங்கே "தேவனே" என்று*

குறிப்பிடுவதிலிருந்து மெய்யாகவே இயேசு தேவனாக இருக்கிறார் என்பது தெளிவாகிறது.

வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவதூதன் அப்போஸ்தலனாகிய யோவானை நோக்கி, தேவன் ஒருவரையே ஆராதனை செய்வாயாக என்று கூறுவதைப் பார்க்கிறோம் (வெளி. 19:10). வேதாகமத்தின் பல பகுதிகளில் இயேசுகிறிஸ்து ஆராதிக்கப்படுவதையும் ஆராதனையை அவர் ஏற்றுக்கொள்வதையும் பார்க்கிறோம் (மத்தேயு 2:11; 14:33; 28:9, 17; லூக்கா 24:52; யோவான் 9:38). அவரை ஆராதித்ததற்காக ஒருவரையும் அவர் கடிந்துகொள்ளவில்லை. இயேசு தேவன் இல்லையென்றால், வெளிப்படுத்தின விசேஷத்தில் தேவதூதன் யோவானிடம் கூறியதுபோல, இயேசுவும் என்னை ஆராதிக்க வேண்டாம் தேவனை ஆராதியுங்கள் என்று கூறியிருக்கலாம். இவைகள் மட்டுமன்றி, இயேசுவின் தெய்வீகத்தைக் குறித்து இன்னும் பல வேத வசனங்கள் குறிப்பிடுகின்றன.

இயேசு தேவனாக இருக்கவேண்டும் என்பதற்கு மிக முக்கியமான காரணமென்னவெனில், அவர் தேவனாக இல்லாவிட்டால், அவரது மரணம் உலகத்தின் பாவத்தை போக்குவதற்கு விலைக்கிரயமாக செலுத்தப்பட்டிருக்க முடியாது (1 யோவான் 2:2). தேவனாலேயல்லாமல் ஒரு சிருஷ்டியினால் நித்தியமான தண்டனைக்குரிய விலையை செலுத்த முடியாது. அப்படி செலுத்தப்பட்டது என்றால் அது தேவன் ஒருவரால் மட்டுமே சாத்தியம் (2 கொரிந்தியர் 5:21). அப்படியென்றால் இயேசு கிறிஸ்து தேவனாக இருக்க வேண்டும். மரித்த இயேசு மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்து, பாவம் மற்றும் மரணத்தின் மேல் வெற்றி சிறந்து நிரூபித்தார்.

# 53. இயேசு கிறிஸ்து யார்?

*தேவன் இருக்கிறாரா? என்கிற கேள்வியைப்போல் அல்லாமல், ஒரு சிலர் மட்டுமே இயேசு கிறிஸ்து ஜீவித்திருந்தாரா? என்று கேள்வியை எழுப்புகிறார்கள். இயேசு கிறிஸ்து உண்மையாகவே ஒரு மனிதன் என்றும் இஸ்ரவேல் தேசத்தில் ஏறத்தாழ 2000 ஆண்டுகட்கு முன் வாழ்ந்தவர் என்றும் பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தாகும். இயேசுவின் முழுமையான தனித்துவத்தைக் கூறும்போது தான் விவாதமே வருகிறது. உலகில் உள்ள எல்லா பெரிய மதங்களும் இயேசு கிறிஸ்துவை ஒரு பெரிய தீர்க்கதரிசி அல்லது ஒரு நல்ல போதகர் அல்லது ஒரு தேவ மனிதன் என்று போதிக்கின்றன. ஆனால் வேதாகமம் மட்டும்தான் அவரை தீர்க்கதரிசியிலும், நல்ல போதகரிலும் மற்றும் ஒரு தேவ மனிதன் என்பதிலும் மேலானவராக எடுத்துரைக்கிறது.*

*சி.எஸ்.லூயிஸ், "வெறும் கிறிஸ்தவம்" (Mere Christianity) என்கிற தமது புத்தகத்தில் பின்வருமாறு எழுதுகிறார்: "இயேசுவைப் பற்றி மக்கள் எப்போதுமே சொல்லும் முட்டாள்தனமான காரியத்தை அப்படி யாரும் சொல்லக்கூடாது என இங்கே தடைபோட விரும்புகிறேன்: 'இயேசுவை ஒரு பெரிய ஒழுக்கநெறி போதகராக ஏற்றுக்கொள்ள நான் தயாராய் இருக்கிறேன், ஆனால் அவர் தேவனாக இருப்பதாக கோருவதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை'. நாம் சொல்லக்கூடாத காரியம் இது ஒன்றுதான். ஒரு மனிதன் வெறும் மனிதனாக இயேசு சொன்ன காரியங்களை கூறினால், அவர் ஒரு பெரிய தார்மீக போதகராக இருப்பதில்லை. அவர் ஒரு பைத்தியக்காரத்தனமானவராக இருக்க வேண்டும், அதாவது அவர் ஒரு வேட்டையாடப்பட்ட முட்டை அல்லது அவர் நரகத்தில் இருக்கிற பிசாசாக இருப்பார். நீங்கள் தெரிவு செய்ய வேண்டும். இந்த மனிதன் தான், தேவனுடைய குமாரனாக இருந்தார் மற்றும் இருக்கிறார் அல்லது இந்த மனிதன் ஒரு பைத்தியக்காரனன் அல்லது மோசமானவன். அவரை முட்டாள் என*

*கருதி வாயை அடைத்துபோடலாம், அவர்மேல் துப்பலாம், பிசாசு என்று கூறி கொலையும் பண்ணலாம் அல்லது நீங்கள் அவருடைய காலடியில் விழுந்து அவரை கர்த்தர் என்றும் தேவன் என்றும் அழைக்கலாம். ஆகையால், அவர் ஒரு போதகர் மட்டும்தான் எனக்கூறிக்கொண்டு முட்டாள்தனமா ஆதரவு அளிக்க முன்வரக்கூடாது. அவர் அந்த தெரிந்துகொள்ளுதலை நமக்கு அளிக்கவில்லை. அவர் அதை விரும்பவுமில்லை.*

*அப்படியென்றால் இயேசு கிறிஸ்து தன்னை யாரென்று உரிமை கோரினார்? வேதாகமம் அவர் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்று சொல்கிறது? முதலாவதாக நாம் இயேசு கிறிஸ்து என்ன சொல்கிறார் என்று பார்ப்போம். "நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம்" (யோவான் 10:30). சாதாரணமாக இதை பார்ப்பதற்கு, இயேசு தன்னைக் குறித்து தேவன் என்று சொன்னதாக இவ்வசனத்தில் தெரியாமல் போகலாம். ஆனால் இயேசு இப்படி சொன்னதும் அதற்கு யூதர்கள் எடுத்துக்கொண்ட விதம் மற்றும் யூதர்களின் பிரதிபலிப்பை கவனியுங்கள்: 'யூதர்கள் அவருக்கு பிரதியுத்தரமாக, நற்கிரியையினிமித்தமாக நாங்கள் உன் மேல் கல்லெறிகிறதில்லை – நீ மனிதனாயிருக்க உன்னை தேவன் என்று சொல்லி இவ்விதமாக தேவ தூஷணம் சொல்லுகிறபடியினால், உன் மேல் கல்லெறிகிறோம் என்றார்கள்" (யோவான் 10:33). இந்த வாக்கியத்தை இயேசு கிறிஸ்து கூறியது மூலம், தன்னை தேவனென்று குறிப்பிட்டதாக யூதர்கள் புரிந்து கொண்டார்கள். அவர்கள் இப்படி பிரதிபலித்ததால், இயேசு அதை மறுக்கவோ, மாறுத்தரம் சொல்லவோ இல்லை. இதிலிருந்து "நானும் பிதாவும் ஒன்றாக இருக்கிறோம்" என்று இயேசு கூறியது அவர் தேவனாக இருக்கிறார் என்பதை தெளிவுபடுத்துவதற்குத்தான் என்பது தெளிவாகிறது. மற்றொரு உதாரணம் யோவான் 8:58, "ஆபிரகாம் உண்டாவதற்கு முன்னமே நானிருக்கிறேன் என்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்றார்". இங்கேயும் யூதர்கள் அவர் மேல் கல்லெறியும்படி கல்லுகளை எடுத்துக்*

*கொண்டார்கள் (யோவான் 8:59). இயேசு தன்னைக் குறித்து குறிப்பிடும் பொழுது, 'நான்" என்று குறிப்பிடுவதை பார்க்கலாம். அது பழைய ஏற்பாட்டில் தேவன் தன்னைக் குறித்து தமது நாமத்தை வெளிப்படுத்தியதிற்கு ஒப்பாயிருக்கிறது (யாத்திராகமம் 3:14). இயேசு கிறிஸ்து தேவன் என்று சொல்லாவிட்டால், யூதர்கள் அவர மேல் கல்லெறியும் படி ஏன் கற்களை எடுத்துக் கொள்ளவேண்டும்?*

*"அந்த வார்த்தை தேவனாயிருந்தது" என்று யோவான் 1:1 சொல்லுகிறது. "அந்த வார்த்தை மாம்சமாகி" என்று யோவான் 1:14 குறிப்பிடுகிறது. இவைகள் இயேசு கிறிஸ்துவே, மாம்சத்தில் வந்த தேவன் என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறது. இயேசுகிறிஸ்துவின் சீஷனாகிய தோமா "என் ஆண்டவரே, என் தேவனே" என்று அழைக்கிறார் (யோவான் 20:28). இயேசுகிறிஸ்து இங்கேயும் அதைத் திருத்தவில்லை மாறாக அதை ஏற்றுக்கொண்டவராகவே இருக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுகிறிஸ்துவைக் குறித்து "மகாதேவனும், நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து" என்று தீத்து 2:13ல் குறிப்பிடுகிறார். அப்போஸ்தலனாகிய பேதுரு "நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து" என்று 2 பேதுரு 1:1ல் குறிப்பிடுகிறார். பிதாவாகிய தேவனும் இயேசுவின் தெய்வீகத்திற்கு சாட்சியாக இருக்கிறார். "குமாரனை நோக்கி: தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது" (சங்கீதம் 45:6; எபிரெயர் 1:8). பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை சூளுரைக்கிறது. "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" (ஏசாயா 9:6).*

ஆகவேதான் இயேசு கிறிஸ்து வெறும் ஒரு நல்ல போதகர் மட்டும்தான் என்கிற கூற்றை சி.எஸ். லூயிஸ் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்.

இயேசுகிறிஸ்து தெளிவாக தன்னை மறுக்க முடியாத அளவில் தேவனென்று அறிக்கையிடுகிறார். அவர் தேவனாக இல்லாமலிருப்பாரானால் அவர் வெறும் பொய்யராக இருப்பார். அதுமட்டுமன்றி அவர் தீர்க்கதரிசியிலும், போதகரிலும் இருந்து வேறுபடுகிறவராகவும் இருப்பார். நவீன காலத்து பண்டிதர்கள் இயேசு சொன்ன கூற்றில் இருந்து இயேசுகிறிஸ்துவை தேவனாக எடுத்துக்கொள்ள விருப்பமற்று, அவரை வரலாற்று மனிதராக அங்கிகரீக்கிற அவர்கள், அவர் உரைத்த காரியங்களை மாத்திரம் அவர் கூறியது அல்ல என மறுதலித்து வாதிடுகிறார்கள்.

வின் வாழ்க்கையை அபத்தமாக்கும்படியாக. உண்மையான வரலாற்று நாயகனான இயேசு சொன்னதாக வேதாகமம் சொல்கிற அநேக காரியங்களை சொல்லவில்லை என்று கருத்து தெரிவிக்கிறார்கள்.

இயேசு எந்த காரியங்களை கூறினார் அல்லது செய்தார் என்று வேதாகமம் கூறுகிற விஷயத்தில் அதற்கு எதிராக கேள்வி கேட்க நாம் யார்? இயேசுவோடு வசித்த, வாழ்ந்த, ஊழியம் செய்த சீஷர்களைக் காட்டிலும் (யோவான் 14:26) மேலாக இரண்டாயிரம் வருடத்திற்கு பின்பாக வந்த இந்த காலத்தில்லுள்ள பண்டிதர்களால் இயேசு கிறிஸ்து என்ன செய்தார் மற்றும் என்ன சொன்னார் என்கிற காரியங்களை எப்படி அறிந்து கொள்ள முடியும்?

இயேசுகிறிஸ்துவின் தனித்துவம் மற்றும் உண்மையான அடையாளங்களுக்கடுத்த கேள்வி ஏன் இத்தனை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது? இயேசுகிறிஸ்து தேவனா? இல்லையா? என்கிற காரியம் ஏன் முக்கியத்துவப்படுத்தப்பட வேண்டும்? ஏனென்றல் இயேசு கிறிஸ்து தேவனாக இல்லாமல்

*இருப்பாரேயானால், உலகத்தின் பாவத்திற்கான பரிகாரமாக அவர் சிந்திய இரத்தம் போதுமானதாக இருந்திருக்காது (1 யோவான் 2:2). தேவன் ஒருவர் மாத்திரமே ஒரு நித்திய பரிகாரத்தை செய்ய முடியும் (ரோமர் 5:8; 2 கொரி. 5:21). நமது பாவ கடன்களை தீர்க்க இயேசு கிறிஸ்து தேவனாக இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. மேலும் இயேசுகிறிஸ்து நம்முடைய பாவத்திற்காக மரிக்கவேண்டுமானால் அவர் மனிதனாக இருக்கவேண்டியதும் அவசியமாக இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின்மேல் வைக்கிற விசுவாசத்தின் மூலமாக மட்டுமே நாம் இரட்சிக்கப்பட முடியும். இயேசு தெய்வீகத்தன்மையுள்ளவராக இருக்கிறார் என்கிற காரியமே அவர் ஒருவரே இரட்சிப்பின் வழியாக இருக்கிறார் என்பதற்கும் காரணமாக இருக்கிறது. இயேசு தெய்வீகத்தன்மையுள்ளவராக இருக்கிறபடியினால்தான், "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று அவரால் பறைசாற்ற முடிந்தது.*

# 54. வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தையா?

இந்த கேள்விக்கு நாம் கொடுக்கிற பதில் வேதாகமத்தை நாம் எந்த கண்ணோட்டத்தில் பார்க்கிறோம் மற்றும் அது நம் வாழ்விற்கு எவ்வளவு முக்கியத்துவமானது என்பதை முடிவு செய்வது மட்டுமல்ல மாறாக அது நித்தியமான மாற்றம் மற்றும் அழுத்தத்தை நமக்கு கொடுக்கிறதாயும் இருக்கிறது. வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தை என்றால், நாம் அதைப்பற்றிக்கொண்டு, அதை படித்து, அதற்கு கீழ்படிந்து முழுவதுமாய் அதை நம்ப வேண்டும். வேதாகமம் தேவனுடைய வார்த்தையென்றால், அதை நிராகரிப்பது தேவனையே நிராகரிப்பதற்கு சமமாகும்.

தேவன் நமக்கு வேதாகமத்தை கொடுத்ததின் நோக்கம் என்னவென்பது, அவர் நம்மேல் வைத்திருக்கிற அன்பின் தெளிவு மற்றும் எடுத்துக்காட்டில் தெளிவாக விளங்குகிறது. "வெளிப்பாடு" என்கிற வார்த்தையின் அர்த்தம் தேவன் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்பதை மனுமக்களோடு பகிர்ந்து கொள்ளவும் நாம் அவரோடு சரியான நிலையில் ஐக்கியப்பட்டு இருக்கவுமே ஆகும். தேவன் இவைகளை வேதாகமத்தில் வெளிப்படுத்தாதிருந்தால் தேவனைப்பற்றிய இந்த தெய்வீக சத்தியங்களை நாம் அறிந்திருக்க முடியாது. ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு மேலாக தேவன் தம்மை கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்தி வேதாகமம் பரிபூரணமாக கிடைக்கப்பெற்றாலும், எல்லா காலத்தும் தேவனுடைய வெளிப்பாடு போதுமானதாகவும் அதினிமித்தம் மனுமக்கள் அவரோடு உறவு பூண்டு ஐக்கியப்படிருக்கும்படியாகவும் அமைந்தது. வேதாகமம் தேவனுடைய வார்த்தை என்பது மெய்யானால், அதுவே நம்முடைய தனிப்பட்ட காரியங்களுக்கும், விசுவாச சம்மந்தபட்ட காரியங்களுக்கும் முழு அதிகாரம் நிறைந்ததாய் இருக்க வேண்டும்.

நமக்கு நாமே வினவிக்கொள்கிற கேள்வி என்னவென்றால், வேதாகமமானது ஏதோ ஒரு நல்ல புத்தகம் என்கிற நிலையில் அல்லாமல் தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது என்பதை நாம் எப்படி அறிந்து கொள்வது? இதுவரையில் எழுதப்பட்ட எல்லா மத புத்தகங்களைக் காட்டிலும் வேதாகமம் எந்த வகையில் சிறந்து விளங்குகிறது? வேதாகமம் தேவனுடைய வார்த்தை, தெய்வீக உந்துதலால் அருளப்பட்டவை மற்றும் எல்லா விசுவாசம் மற்றும் நடைமுறை காரியங்களுக்கும் போதுமானதாக இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்கு இப்படிப்பட்ட கேள்விகள் கவனமாக ஆராயப்பட வேண்டியவைகளாகும்.

வேதாகமம் தன்னில்தானே தேவனுடைய வார்த்தை என அறிவுறுத்துகிறதா என்கிற கேள்விக்கு இடமே இல்லாமல் மிகத்தெளிவாக எடுத்துரைக்கிறது. வேதாகமம் தேவனுடைய வார்த்தை தான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு கூறிய காரியத்தில் மிகத்தெளிவாக எடுத்துரைக்கிறார்: “கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயதுமுதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது” (2 தீமோத்தேயு 3:15-17).

வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தை தான் என்பதற்கான உள்ளான மற்றும் புறம்பான ஆதாரங்கள் இருக்கின்றன. உள்ளான ஆதாரங்கள் என்பது வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தைதான் என்பதற்கு வேதாகமத்தின் உள்ளிலிருக்கிறவைகள் ஆகும். வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய

வார்த்தைதான் என்பதற்கான முதல் உள்ளான ஆதாரம், அதனுடைய "ஒற்றுமை". வேதாகமமானது 66 தனித்தனி புத்தகங்களாக இருந்தாலும், மூன்று கண்டங்களில் எழுதப்பட்டிருந்தாலும், மூன்று வெவ்வேறு மொழிகளில் எழுதப்பட்டிருந்தாலும், 1500க்கும் மேற்பட்ட ஆண்டு காலளவில் எழுதப்பட்டிருந்தாலும், பல்வேறு பின்னணி மற்றும் கலாச்சாரம் கொண்ட 40க்கும் மேற்பட்ட எழுதாளர்களாலே எழுதப்பட்டிருந்தாலும், வேதாகமம் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரேயொரு புத்தகமாக ஒன்றுக்கொன்று முரண்படாமல் இருக்கிறது. ஆக தேவனே மனிதர்களை கொண்டு இந்த புத்தகங்களை எழுதினார் என்பதற்கான தெளிவாக இந்த ஒற்றுமை விளங்குகிறது.

வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தைதான் என்பதற்கான அடுத்த உள்ளான ஆதாரம் என்னவென்றால், அவற்றுள் அடங்கியிருக்கிற "தீர்க்கதரிசனங்கள்" ஆகும். வேதாகமத்தில் எதிர்காலத்தோடு தொடர்புபடுத்தி இஸ்ரவேலர்களைக் குறித்தும், சில பட்டணங்களைக் குறித்தும், மனித வர்க்கத்தை குறித்தும் நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசனங்கள் உள்ளன. மற்ற தீர்க்கதரிசனங்கள் யாவரும் விசுவாசிக்க தக்கதான இரட்சகரும் வருகிறவராகிய மேசியாவுமானவரைக் குறித்து கூறுகின்றன. மற்ற வேதங்களில் காணப்படுகிற தெளிவற்ற தீர்க்கதரிசனங்களைப் போன்று அல்லாமல் தெளிவான விவரணங்களோடு குறிப்பிடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்துவைக் குறித்ததான 300கும் அதிகமான தீர்ர்க்கதரிசனங்கள் பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர் எங்கே பிறப்பார் மற்றும் குடும்ப வம்சாவளி என்பது மட்டுமல்ல அவர் எப்படி மரிப்பார் மற்றும் உயிரோடு எழுந்திருப்பார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன. இப்படி நிறைவேறின தீர்க்கதரிசனங்கள் யாவும் எவ்வித தர்க்கத்திற்கும் இடமில்லாமல் வேதாகமம் தேவனுடைய வார்த்தை தான் என்பதற்கு சான்றுகளாக இருக்கின்றன. வேதாகமத்தைப் போல

தீர்க்கதரிசனங்களையும் அவைகளின் நிறைவேருதலையும் உள்ளடக்கிய வேறே ஒரு புத்தகம் இவ்வுலகில் இல்லை.

வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தைதான் என்பதற்கான மூன்றாவது உள்ளான ஆதாரம் என்னவென்றால், அதனுடைய தனித்துவமான அதிகாரமும் வல்லமையும் ஆகும். இந்த ஆதாரம் மேற்கண்ட இரண்டு ஆதாரங்களைப்போன்று அல்லாமல் அக எண்ணஞ்சார்ந்தது ஆகும். அதே வேளையில் வேதாகமம் தேவனுடைய வார்த்தைதான் என்கிற விஷயத்தில் எந்த வகையிலும் வல்லமை குன்றியது அல்ல.

வேதாகமத்தின் அதிகாரம் இதுவரை எழுதப்பட்ட மற்ற புத்தகங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகும். தேவனுடைய வார்த்தையின் அற்புத சக்தியால் எண்ணற்றோர் வாழ்வுகள் மாறியிருக்கிற விதத்தில் இந்த புத்தகத்தினுடைய அதிகாரமும் வல்லமையும் சிறந்து விளங்குகின்றன. மயக்கமருந்துக்கு அடிமையானவர்கள் இதனால் குணப்பட்டு இருக்கிறார்கள், ஓரினச்சேர்க்கையாளர்கள் இதனால் விடுவிக்கப்பட்டுள்ளனர், கைவிடப்பட்ட அநாதைகளும் சுற்றித்திரிகிற பரதேசிகளும் இதனால் மாற்றம் அடைந்துள்ளனர், கடினமாக்கப்பட்ட இருதயம் கொண்ட குற்றவாளிகள் இதனால் மாறியிருக்கிறார்கள், பாவிகள் இதனால் கடிந்துகொள்ளப்பட்டு இருக்கிறார்கள், மற்றும் வெறுப்புடன் இருந்தவர்கள் அன்பு காட்டுகிறவர்களாக மாறியிருக்கிறார்கள். வேதாகமம் உண்மையிலேயே தேவனுடைய வார்த்தை என்பதால் மட்டுமே இவையெல்லாம் சாத்தியமானது, மற்றபடி இந்த புத்தகத்திற்கு ஏதோ வல்லமை இருக்கிறது என்று அர்த்தமல்ல.

வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தைதான் என்பதற்கான சில புறம்பான ஆதாரங்களும் உண்டு. வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தைதான் என்பதற்கான புறம்பான ஆதாரங்களில் ஒன்றுதான் வேதாகமத்தின் வரலாற்று உண்மை.

வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் வரலாற்று நிகழ்வுகள் என்பதால், அதன் உண்மைத்தன்மை மற்றும் துல்லியம் பிற வரலாற்று ஆவணம் போன்று சரிபார்ப்புக்கு உட்பட்டு இருக்கின்றன. தொல்பொருள் சான்றுகள் மற்றும் பிற எழுத்துக்களின் ஆவணங்கள் மூலமாக வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று விவரங்கள் யாவும் துல்லியமாகவும் உண்மையுடனும் இருக்கின்றன என மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளன. வேதாகமத்தின் உண்மையை ஆதரிக்கும் எல்லா தொல்பொருள் மற்றும் கையெழுத்துப்பிரதி ஆதாரங்களும் பண்டைய நாட்களிலிருந்து காக்கப்பட்டு வந்திருக்கிற சிறந்த ஆவணப்படுத்தப்பட்ட புத்தகமாக வேதாகமத்தை ஆமோதிக்கின்றன. வேதாகமம் துல்லியமாகவும், உண்மையாகவும் வரலாற்றுக் நிகழ்வுகளை பதிவுசெய்கிறது என்பது மட்டுமல்லாமல் மதம் சம்பந்தப்பட்ட அனைத்து விசுவாச கோட்பாடுகளுக்கும், பாடங்களுக்கும் மற்றும் போதனைகளுக்கும் ஆதாரமாகவும் இருக்கிறது.

வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தைதான் என்பதற்கான அடுத்த புறம்பான ஆதாரம் என்னவென்றால், மனித எழுத்தாளர்களின் துல்லியம். முன்னமே குறிப்பிட்டபடி, வாழ்க்கையின் பல பின்னணி, கலாசாரம் மற்றும் பல்வேறு பூகோள பகுதிகளிலிருந்து தேவன் அவருடைய வார்த்தைகளை பதிவு செய்ய மனிதர்களைப் பயன்படுத்தினார். இந்த மனிதர்களின் வாழ்க்கையைப் படிக்கும்போது, அவர்கள் நேர்மையாகவும் நேர்மையுடனும் இருப்பதைக் காண்கிறோம். தேவன் தங்களோடு பேசியதற்கு உண்மையுள்ள சாட்சிகளாக இவர்கள் இருக்கிறபடியினாலும் தாங்கள் எழுதியவைகள் யாவும் தேவனுடைய வார்த்தைதான் என்கிற பரிபூரண நம்பிக்கையும் இவர்களுக்கு இருந்தபடியினால்தான், தங்கள் உயிரையே கொடுத்தார்கள். புதிய ஏற்பாட்டை எழுதியவர்களும் மற்ற நூற்றுக்கணக்கான விசுவாசிகளும் (1 கொரிந்தியர் 15:6) எழுதப்பட்ட செய்தி சத்தியம் என அறிந்திருந்தனர். ஏனென்றால் அவர்கள் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவுவை நேரில்

கண்டவர்கள். உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைப் பார்த்தது அவர்கள் மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. அதனிமித்தம் மரணத்திற்கு பயந்து ஒளிந்துகொள்லாமல் தேவனுக்காகவும் அவருடைய வார்த்தைக்காகவும் தங்கள் உயிரையே கொடுத்தார்கள். அவர்களுடைய வாழ்வும் மரணமும் வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்தைதைதான் என்பதற்கான சான்றுகளாக இருக்கின்றன.

வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தைதான் என்பதற்கான இறுதியான புறம்பான ஆதாரம் என்னவென்றால், வேதாகமம் அழிக்கப்பட முடியாமல் இன்றும் நிலைத்திருப்பது. வேதாகமத்தின் முக்கியத்துவமும் அது தேவனுடைய வார்த்தையாக இருப்பதாகக் கூறிக்கொள்ளும் காரணமும் நிமித்தம் உலக வரலாற்றில் இதுவரையிலும் வேறே எந்த புத்தகத்திற்கும் வராத அளவிற்கு எண்ணற்ற இன்னல்களையும் பல தீய தாக்குதல்களையும் அது நேரிட்டு பலர் அழிக்க முயன்றும் அழிக்கமுடியாமல் இன்றும் அது சிறந்து ஜொலிக்கிறது. ரோம சக்கிரவர்த்தி டயோகிலேஷன் தொடங்கி, கம்யூனிச சர்வாதிகாரிகள், நவீனகாலத்து நாத்திகர்கள் மற்றும் அக்னோஸ்டிஸ்ட்டுகள் என பலரால் தாக்கத்தை சந்தித்தும் அனைத்தையும் தாங்கிக்கொண்டு, இன்னும் உலகில் பரவலாக வெளியிடப்பட்ட மிகப்பெரிய புத்தகமாக வேதாகமம் உள்ளது.

சந்தேகவாதிகள் பலர் எழும்பி வேதாகம் வெறும் கட்டுக்கதை மற்றும் புராணங்களாக இருக்கிறது என விவாதித்தபோதிலும், தொல்பொருளியல் கண்டுபிடிப்புகள் மற்றும் ஆதாரங்கள் வேதாகமத்தை மெய்யான வரலாற்று புத்தகம் என்று உறுதியளித்தது. எதிரிகள் பலர் வேதாகம போதனைகள் பழமையானது மற்றும் காலாவதியானது என தாக்கினர், ஆனால் அதன் தார்மீக மற்றும் சட்ட கருத்துகள் மற்றும் போதனைகள் உலகெங்கிலும் உள்ள சமூகங்கள் மற்றும் கலாச்சாரங்களில் வளர்ந்தோங்கி மாபெரும் செல்வாக்கைக் கொண்டிருகின்றன. போலி அறிவியல், உளவியல் மற்றும் அரசியல் இயக்கங்களால் தொடர்ந்து தாக்கப்பட்டு வந்தாலும், வேதாகமம்

*முதலில் எழுதப்பட்டபோது இருந்ததைப் போல இன்றும் அது உண்மையானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கிறது. வேதாகமம் கடந்த 2000 ஆண்டுகளில் எண்ணற்ற மக்களின் வாழ்க்கை மற்றும் கலாச்சாரங்களை மாற்றிய ஒரு புத்தகம் ஆகும். எத்தனை எதிரிகள் தோன்றி எப்படி தாக்கினாலும், அழிக்க நினைத்தாலும் அல்லது இழிவுபடுத்தினாலும் வேதாகமம் அப்படியாகவே எவ்வித குறைச்சலுமில்லாமல் தேவனுடைய வார்த்தையாக திகழுகிறது. வேதாகமத்தின் உண்மைத்தன்மையும், மனித வாழ்க்கையின் மீதான அதன் தாக்கமும் எள்ளளவும் மாறாமல் தேவனாலே பாதுகாக்கப்பட்டு துல்லியமான புத்தகமாக இருக்கிறது.*

*எல்லா தாக்குதல் மத்தியிலும் ஒரு மாற்றமும் இல்லாமல் அன்றும் இன்றும் மாறாமல் அதே நிலையில் இருப்பதைக் குறித்து ஆச்சரியப்பட தேவையில்லை, ஆண்டவர் இயேசு இதைக்குறித்து தெளிவாக கூறியுள்ளார்: "வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை" (மாற்கு 13:31). ஒருவர் இத்தனை சான்றுகளையும் தெளிவாக கண்டபிறகு, வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது என்று கூறாமல் இருக்கமாட்டார் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.*

# 55. கிறிஸ்தவம் என்றால் என்ன? கிறிஸ்தவர்கள் என்ன விசுவாசிக்கிறார்கள்?

*கிறிஸ்தவ விசுவாசத்தின் மையப்பகுதி 1 கொரி. 15:1-4 வரையுள்ள வசனங்களில் சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். அவர்மேல் விசுவாசம் வைக்கிற யாவருக்கும் இரட்சிப்பை வழங்குகிறார். பிற விசுவாசங்களை காட்டிலும் கிறிஸ்தவ விசுவாசம் எந்த வகையில் விசேஷித்து இருக்கிறது என்றால், அதற்கு காரணம் கிறிஸ்தவம் மத சடங்குகளை காட்டிலும் உறவுகளில் கரிசனையுள்ளதாக இருக்கிறது. இதைச் செய் அதைச் செய்யாதே என்கிற நியமங்களை விட தேவனோடு நெருங்கி வாழ்கிற உறவில் முக்கியத்துவம் காண்பிக்கிறதாக இருக்கிறது. இந்த உறவும் ஐக்கியமும் சாத்தியமானது இயேசு கிறிஸ்து செய்து முடித்த செயல்களிலும் ஆவியானவர் தொடர்ந்து நம்மில் செய்து வருகிற ஊழியத்திலும் அடங்கி இருக்கிறது.*

*இப்படிப்பட்ட பிரதான காரியங்களோடு சில முக்கியமான விசுவாச போதனைகளிலும் கிறிஸ்தவம் தனித்தன்மை வாய்ந்ததாக இருக்கிறது. கிறிஸ்தவர்கள் வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்றும் தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது என்றும் விசுவாசிக்கிறார்கள் (2 தீமோ. 3:16, 17; 2 பேதுரு 1:20-21). கிறிஸ்தவர்கள் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவி ஆகிய மூன்று*

*ஆள்தன்மைகளில் தேவன் நம்மை வெளிபடுத்துகிறார் என்றும் விசுவாசிக்கின்றனர்.*

*கிறிஸ்தவர்கள் தேவன் மனிதனை தன்னோடு ஐக்கியம் கொள்ள வேண்டும் என்பதற்காக படைத்தார் என்றும், ஆனால் அவனுடைய பாவம் தேவனை விட்டு அவனை பிரித்தது என்றும் விசுவாசிக்கிறார்கள் (ரோமர் 5:12; 3:23). இயேசு கிறிஸ்து இந்த பூமியில் முற்றிலும் மனிதனாகவும் முற்றிலும் தெய்வமாகவும் சுற்றி திரிந்தார் என்றும், அந்தபடியே சிலுவையிலும் மரித்தார் என்று கிறிஸ்தவம் போதிக்கிறது (பிலிப்பியர் 2:6-11). இயேசு கிறிஸ்து மரித்தபின் அடக்கம் பண்ணபட்டு, உயிர்த்தெழுந்து விசுவாசிகளுக்காக பிதாவின் வலது பாரிசத்தில் இருந்துகொண்டு பரிந்து பேசுகிறார் (எபிரெயர் 7:25) என்று கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கிறார்கள். இயேசுவின் சிலுவை மரணம் பாவங்கள் மன்னிக்கபடுவதற்கும் தேவனுடன் முறிக்கப்பட்டதான மனித உறவு மீண்டும் சரிபடவும் போதுமானது என்று கிறிஸ்தவம் பறைசாற்றுகிறது (எபிரெயர் 9:11-14; 10:10; ரோமர் 5:8; 6:23).*

*ஒருவர் இரட்சிக்கபட வேண்டும் மற்றும் மரணத்திற்கு பின்பு பரலோகம் செல்வதற்கு அனுமதி வேண்டும் என்றால் அவர் சிலுவையில் இயேசு பரிபூரணமாக செய்து முடித்ததான பணியின் மேல் விசுவாசத்தை வைக்கவேண்டும். இயேசு நம்முடைய பாவத்திற்காக நம்முடைய ஸ்தானத்தில் மரித்து, நம்முடைய பாவத்தின் விலையை செலுத்தி, மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார் என்று விசுவாசித்தால், நாம் இரட்சிக்கப்பட்டு இருக்கிறோம். இரட்சிக்கப்படுவதற்கு இதை காட்டிலும் அதிகமானதை யாரும் செய்யவேண்டிய அவசியமில்லை. நாம் நம்முடைய சொந்த நற்கிரியைகளினால் தேவனை பிரியபடுத்த முடியாது, ஏனென்றால்! நாம் அனைவரும் பாவிகளாக இருக்கிறோம் (ஏசாயா 53:6; 64:6-7). இனி நாம் அதிகமானதொன்றும் செய்யவேண்டியது இல்லை! ஏனென்றால் கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து எல்லா*

*பணியையும் செய்து முடித்து "முடிந்தது" என்று கூறிவிட்டார் (யோவான் 19:30), அதாவது இரட்சிப்பின் வேலையை பரிபூரணமாக முடித்து விட்டார்.*

*கிறிஸ்தவத்தின் படி, இரட்சிப்பு என்பது பழைய பாவ சுபாவத்தில் இருந்து விடுதலை மற்றும் தேவனோடு உள்ள சரியான உறவை தொடருவதற்கான விடுதலையும் ஆகும். நாம் முன்னே பாவத்திற்கு அடிமைகளாக இருந்தோம் இப்பொழுது கிறிஸ்துவுக்கு அடிமைகளாய் இருக்கிறோம் (ரோமர் 6:15-22). விசுவாசிகள் தாங்கள் இந்த பாவ சரீரத்தில் இந்தப் பூமியில் வாழ்கிறவரை, அவர்களுக்கு பாவத்தோடு தொடர்ந்து போராட்டம் உண்டு.*

*எனினும், கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்வில் தேவனுடைய வார்த்தையை படித்து தங்களுடைய வாழ்வில் நடைமுறைப் படுத்தி, பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்படுத்துதலுக்கு தங்களை முற்றிலுமாய் ஒப்புக்கொடுப்பதன் மூலம் பாவம் போராட்டத்தில் இருந்து வெற்றி பெற முடியும் - அதாவது, அன்றாட சூழ்நிலைகளில் ஆவியானவரின் நடத்துதலுக்கு சமர்ப்பித்து நடப்பதன் மூலமாகும்.*

*ஆக, பல மத அமைப்புகள் ஒரு நபர் சில காரியங்களைச் செய்ய வேண்டும் அல்லது செய்யக்கூடாது என்று கூறுகிற வேளையில், கிறிஸ்தவம் நம்முடைய பாவங்களுக்காக கிறிஸ்து சிலுவையில் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார் என விசுவாசிக்கும் விசுவாசத்திலும் அதன் மூலமாக நாம் தேவனோடு ஐக்கியப்பட்டிருக்கலாம் என்கிற உறவிலும் கரிசனையை காண்பிக்கிறது. நம்முடைய பாவங்களுக்கான கடனை கிறிஸ்து செலுத்தி முடித்து மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார், அதனால் நாம் நம் தேவனோடு ஐக்கியப்பட்டு இருக்கலாம். நாம் நமது பாவ சுபாவத்தின்மேல் வெற்றிபெற முடியும், தேவனுக்கு கீழ்படிந்து அவரோடு உறவில் ஐக்கியப்பட்டிருப்போம். இதுதான் மெய்யான கிறிஸ்தவம்.*

# 56. பரிசுத்த ஆவியானவர் யார்?

பரிசுத்த ஆவியானவர் யார் என்பதைக் குறித்து அறிந்துகொள்வதில் பல தவறான கருத்துக்கள் நிலவுகின்றன. பரிசுத்த ஆவியானவர் ஏதோ ஒரு மாயமான சக்தி என்று சிலர் நினைக்கின்றனர். வேறு சிலரோ பரிசுத்த ஆவி கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களுக்காக தேவனால் அளிக்கப்படும் ஆள்தன்மையில்லாத ஒரு சக்தி அல்லது வல்லமை என்று நினைக்கின்றனர். பரிசுத்த ஆவியானவரின் தனித்துவம் குறித்து வேதாகமம் என்ன கூறுகிறது? சுருக்கமாகக் கூறவேண்டுமானால், பரிசுத்த ஆவியானவர் தேவன் என்று வேதாகமம் பறைசாற்றுகின்றது. மேலும், பரிசுத்த ஆவியானவர் தெய்வீகத் தன்மை உடையவர்; அதாவது சிந்தை, உணர்ச்சி மற்றும் சித்தம் கொண்டிருக்கிற ஒரு நபர் என்றும் வேதாகமம் கூறுகிறது.

அப்போஸ்தலர் 5:3-4 உட்பட வேதாகமத்தின் பல இடங்களில் பரிசுத்த ஆவியானவர் தேவன் என்பதற்கான மிகத்தெளிவான சான்றுகள் இருக்கின்றன. உதாரணமாக, இந்த வசனங்களில் பேதுரு அனனியாவிடம் அவன் ஏன் பரிசுத்த ஆவியானவரிடத்தில் பொய் கூறினான் என்று கூறியபின்பு, அவன் "மனிதனிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னான்" என்றும் கண்டிக்கிறார். அதாவது பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லுவது என்பது தேவனிடத்தில் பொய் சொல்லுவதற்கு சமம் என்பதை இது காட்டுகின்றது. மேலும், பரிசுத்த ஆவியானவர் தேவனுக்கு மட்டுமே உரிய குணாதியங்களை அல்லது பண்புகளை தானும் உடையவராக இருப்பதால், பரிசுத்த ஆவியானவர் தேவன் தான் என்பதை நாம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். உதாரணமாக, அவர் சர்வவியாபியாக இருக்கிறார் என்பதை சங்கீதம் 139:7-8 ல் அறிந்துகொள்ளலாம். "உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தை விட்டு எங்கே ஓடுவேன்? நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே

*இருக்கிறீர்; நான் பாதாளத்தில் படுக்கை போட்டாலும் நீர் அங்கேயும் இருக்கிறீர்."* மேலும், *1 கொரிந்தியர் 2:10-11* வசனங்களில் பரிசுத்த ஆவியானவர் சர்வ ஞானி என்பதையும் நாம் அறிந்துகொள்ளலாம், "*நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்கு உரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்கு உரியவைகளை அறியமாட்டான்.*"

மேலும், பரிசுத்த ஆவியானவர் சிந்தை, உணர்ச்சி மற்றும் சித்தம் உடையவராக இருப்பதால் அவர் தெய்வீகத்தன்மை உடையவர் என்று நாம் அறிந்துகொள்ளலாம். பரிசுத்த ஆவியானவர் சிந்திக்கிறவர் மற்றும் அறிகிறவராக இருக்கிறார் *(1 கொரிந்தியர் 2:10)*. பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தமுடியும் *(எபேசியர் 4:30)*. ஆவியானவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார் *(ரோமர் 8:26-27)*. ஆவியானவர் தமது சித்தத்தின்படி தீர்மானிக்கிறார் *(1 கொரிந்தியர் 12:7-11)*. பரிசுத்த ஆவியானவர் தேவன் என்கிற நிலையில், திரித்துவத்தில் மூன்றாம் நபராக இருக்கிறார். ஆவியானவர் இன்ன பிரகாரமாக இருப்பார் என்று இயேசு கிறிஸ்து வாக்குத்தத்தம் செய்ததுபோலவே, தேவனாக இருக்கிற பரிசுத்த ஆவியானவர் மெய்யாகவே தேற்றரவாளராகவும், ஆலோசனை வழங்குகிறவராக செயல்படமுடியும் *(யோவான் 14:16, 26; 15:26)*.

# 57. கிறிஸ்துவின் தெய்வீகம் வேதாகமத்தின் அடிப்படையிலானதா?

*இயேசு தம்மைக் குறித்து கூறிய குறிப்பிட்ட கூற்றுக்களோடு கூட அவரது சீஷர்களும் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை அறிக்கையிட்டுள்ளனர். தேவனாலே மட்டும் செய்யக்கூடியதான பாவத்தை மன்னிக்கும் தன்மை (ஆம் தேவனே பாவத்தினால் பாதிப்புக்குள்ளானவர்) (அப்போஸ்தலர் 5:31; கொலொசேயர் 3:13; சங்கீதம் 130:4; எரேமியா 31:34) இயேசுவுக்கும் உண்டு என்று பறைசாற்றினார்கள். இயேசுவின் உரிமைக்கோரல் கூற்றின்படி, "உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்து" (2 தீமோ. 4:1) என்று காண்கிறோம். தோமா இயேசுவை நோக்கி, "என் ஆண்டவரே, என் தேவனே!" என்று கூப்பிட்டார் (யோவான் 20:28). பவுல் இயேசுவை "மகா தேவனும், இரட்சகரும்" (தீத்து 2:13) என்று கூறி, மேலும் இயேசு மனிதனாக அவதரிப்பதற்கு முன், "தேவனுடைய ரூபமாயிருந்தார்" (பிலிப்பியர் 2:5-8) என்றும் சுட்டிக்காட்டுகிறார். பிதாவாகிய தேவன் இயேசுவைக் குறித்து "தேவனே, உம்முடைய சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது" என்று கூறுகிறார் (எபிரேயர் 1:8). யோவான் "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை [இயேசு] தேவனாயிருந்தது" என்று குறிப்பிடுகிறார் (யோவான் 1:1). வேதாகமத்தின் பல பகுதிகள் கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை எடுத்துரைக்கின்றன (பாருங்கள்: வெளி. 1:17; 2:8; 22:13; 1 கொரிந்தியர் 10:4; 1 பேதுரு 2:6-8; சங்கீதம் 18:2; 95:1; 1 பேதுரு 5:4; எபிரேயர் 13:20), கிறிஸ்து அவரது சீஷர்களால் தேவனாக எண்ணப்பட்டார் என்பதற்கு இவற்றில் ஒன்றே போதுமானது.*

*பழைய ஏற்பாட்டில் யெகோவாவிற்கே (தேவனுடைய அதிகாரப்பூர்வமான நாமம்) உரிய நாமங்கள் இயேசுவுக்கும் அளிக்கப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டு நாமமான "மீட்பர்" (சங்கீதம் 130:7; ஓசியா 13:14) புதிய ஏற்பாட்டில் இயேசுவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது (தீத்து 2:13; வெளி. 5:9). மத்தேயு 1 ல், இயேசு இம்மானுவேல்-"தேவன் நம்மோடிருக்கிறார்" என்றழைக்கப்படுகிறார். சகரியா 12:10 ல், யெகோவா தான், "அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து," கூறுகிறார். ஆனால் புதிய ஏற்பாடு இயேசுவின் சிலுவை மரணத்தைக் குறிப்பிட இந்த வசனத்தைப் பயன்படுத்துகிறது (யோவான் 19:37; வெளி. 1:7). யெகோவாவைக் குறித்தும், இயேசுவைக் குறித்தும் "குத்தினார்கள்" மற்றும் "நோக்கிப்பார்த்தார்கள்" என வேதாகமம் சொல்லுமானால், இயேசுவும் யெகோவாவும் ஒன்றாக இருக்கிறார்கள் அல்லது இருவரும் ஒன்றே என்று அர்த்தம் கொள்ளமுடியும். ஏசாயா 45:22-23 ஐ அப்போஸ்தலனாகிய பவுல் இயேசுவுக்கு உபயோகித்து வியாக்யானம் செய்கிறார் (பிலிப்பியர் 2:10-11). மேலும், இயேசுவினுடைய நாமம் ஜெபத்தில் தேவனுடைய நாமத்தோடு பயன்படுத்தப்பட்டுள்ளது, "நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" (கலாத்தியர் 1:3; எபேசியர் 1:2). கிறிஸ்து தெய்வீகத்தன்மை இல்லாதவரென்றால், இது தேவதூஷணமாகிவிடும். இயேசுவின் ஞானஸ்நானக் கட்டளையிலும் இயேசுவினுடைய நாமம் தேவனுடைய நாமத்தோடு இணைந்து காணப்படுகிறது, "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே [ஒருமை]" (மத்தேயு 28:19; மற்றும் 2 கொரிந்தியர் 13:14 யையும் காண்க).*

*தேவனால் மட்டுமே செய்யக்கூடிய செயல்கள் இயேசுவுக்கு சூடப்பட்டுள்ளது. இயேசு மரித்தோரை எழுப்பினது மட்டுமல்லாமல் (யோவான் 5:21, 11:38-44) பாவத்தையும் மன்னித்தார் (அப்போஸ்தலர்*

*5:31, 13:38), அவர் உலகைப் படைத்து, தாங்கவும் செய்கிறார் (யோவான் 1:2; கொலொசேயர் 1:16-17). யெகோவா மட்டுமே சிருஷ்டிப்பின் போது இருந்தார் என்பதை ஒருவர் எண்ணும் போது இது மேலும் தெளிவாகின்றது. மேலும், தெய்வீகதன்மையுள்ளவர் அல்லது தேவன் மட்டுமே கொண்டுள்ள பண்புகளை கிறிஸ்துவும் உடையவராயிருக்கிறார்: நித்தியமானவர் (யோவான் 8:58), சர்வ வியாபி (மத்தேயு 18:20, 28:20), சர்வ ஞானி (மத்தேயு 16:21) மற்றும் சர்வவல்லமையுள்ளவர் (யோவான் 11: 38-44).*

*நான் தேவன் என்று கூறுவது ஒன்று அல்லது அது உண்மையென்று மற்றவர்களை நம்பவைத்து முட்டாளாக்குவது வேறு, பிறகு முழுக்க முழுக்க அது உண்மையென்று நிரூபிப்பது வேறு. கிறிஸ்து தன்னுடைய தெய்வீகத்தன்மைக்கான கோரிக்கையை பல அதிசயங்கள் மற்றும் அற்புதங்கள் மூலமாக நிரூபித்திருக்கிறார். இயேசுவின் அற்புதங்களில் ஒருசில: தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றியது (யோவான் 2:7), தண்ணீரின் மேல் நடந்தது (மத்தேயு 14:25), பொருட்களைப் பன்மடங்காக்கியது (யோவான் 6:11), குருடரைக் குணமாக்கியது (யோவான் 9:7), முடவரைக் குணமாக்கியது (மாற்கு 2:3), பிணியாளிகளைக் குணமாக்கியது (மத்தேயு 9:35; மாற்கு 1:40-42), மேலும் மரித்தோரை உயிரோடு எழுப்பியது (யோவான் 11:43-44; லூக்கா 7:11-15; மாற்கு 5:35) ஆகியவைகள் அடங்கும். மேலும், கிறிஸ்து தாமே மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். புறமதத்திலுள்ள புராணக்கதைகளில் பெயரளவில் மரித்து, உயிர்த்தெழும் கடவுள்களோடு ஒப்பிடும் போது, உயிர்த்தெழுதலைப் போன்ற எதுவும் மற்ற மதங்களால் வலியுறுத்தப்படவில்லை, மற்றும் மற்ற எந்தக் கோரிக்கையும் இந்த அளவிற்கு வேதத்திற்கு அப்பாற்பட்ட சான்றுகளை உடையதாயில்லை.*

*கிறிஸ்தவரல்லாத குற்றங்காண்கிற அறிஞர்கள் கூட ஏற்றுக் கொள்ளுகின்ற வகையில் இயேசுவைக் குறித்து குறைந்தது பன்னிரண்டு வரலாற்று உண்மைகள் இருக்கின்றன:*

1. இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்தார்.

2. அவர் அடக்கம் பண்ணப்பட்டார்.

3. அவரது மரணம் சீஷர்களை கலங்கச் செய்து நம்பிக்கை இழக்கவும் செய்தது.

4. சில நாட்களுக்குப் பின்பு இயேசுவின் கல்லறை வெறுமையானதாக கண்டுபிடிக்கப்பட்டது (கண்டுபிடிக்கப் பட்டதாகக் கோரப்பட்டது).

5. உயிர்த்தெழுந்த இயேசுவின் காட்சிகளை உணர்ந்ததாக சீஷர்கள் நம்பினர்.

6. இதற்குப் பின்பு, சந்தேகித்தவர்கள் தைரியமான விசுவாசிகளாக மாறினர்.

7. இச்செய்தியே ஆதித் திருச்சபையின் மையப் பிரசங்கமானது.

8. இச்செய்தி எருசலேமில் பிரசங்கிக்கப்பட்டது.

9. இப்பிரசங்கத்தின் விளைவாக திருச்சபை தோன்றி வளர்ந்தது.

10. உயிர்த்தெழுதல் நாள், ஞாயிறு, ஓய்வு நாளுக்குப் (சனிக்கிழமை) பதிலாக பிரதான ஆராதனை நாளானது.

11. நாஸ்திகவாதியாக இருந்த யாக்கோபு, உயிர்த்தெழுந்த இயேசுவை கண்டபோது அவரும் விசுவாசித்து சீஷரானார்.

12. கிறிஸ்தவத்திற்கு எதிரியாயிருந்த பவுல் உயிர்த்தெழுந்த இயேசுவின் காட்சியைக் கண்ட அனுபவத்தால் மாற்றப்பட்டார்.

இந்த குறிப்பிட்ட பட்டியலை யாராவது எதிர்த்தாலும் கூட, உயிர்த்தெழுதலை நிரூபிக்கவும், சுவிசேஷத்தை நிலைநாட்டவும் ஒரு சில சான்றுகளே போதுமானது: இயேசுவின் மரணம், அடக்கம்,

*உயிர்த்தெழுதல், தோன்றி காட்சியளித்தல் (1 கொரிந்தியர் 15:1-5). ஒருவேளை சில கோட்பாடுகள் மேற்கூறிய ஒன்று அல்லது இரண்டு உண்மைகளுக்கு விளக்கமளிக்க முடிந்தாலும், உயிர்த்தெழுதலினால் மட்டுமே அனைத்தையும் விளக்கவும் கணக்கிடவும் முடியும். சீஷர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவைக் கண்டதாக கூறுவதை திறனாய்வாளர்கள் ஏற்றுக்கொள்கின்றனர். மக்களை மாற்றின உயிர்த்தெழுதல் போல் பொய்களோ, பிரம்மைகளோ செய்யமுடியாது. முதலாவது, இதனால் அவர்களுக்கு லாபம் என்ன? கிறிஸ்தவம் பிரசித்தி பெறவுமில்லை, நிச்சயமாக பணம் ஈட்டித்தரவுமில்லை. இரண்டாவது, பொய்யர்கள் நல்ல இரத்தச்சாட்சிகளாகயிருக்க முடியாது. தங்களது விசுவாசத்திற்காக கொடூரமான முறையில் மரித்த சீஷர்களின் விருப்பத்திற்கு சிறந்த விளக்கம் உயிர்த்தெழுதல் தவிர வேறொன்றுமில்லை. ஆம், பலர் தாங்கள் உண்மையென்று நம்பின பொய்க்காக மரிப்பார்கள், ஆனால் எவரும் உண்மையில்லை என்று தாங்கள் அறிந்த ஒன்றுக்காக மரிக்கமாட்டார்கள்.*

*முடிவாக, கிறிஸ்து தான் யெகோவா என்று உரிமைக்கோரினார், அதாவது அவர் தெய்வீகத்தன்மை உடையவர் (ஏதோ "ஒரு கடவுள்" அல்ல ஆனால் ஒரே உண்மையான தேவன்); அவரது சீஷர்கள் (விக்கிரக ஆராதனைக்குப் பயந்தவர்கள்) அவரை தேவன் என்று நம்பி ஏற்றுக்கொண்டனர். கிறிஸ்து தனது தெய்வீகத்தன்மையை அதிசயங்கள் (உலகையே மாற்றின உயிர்த்தெழுதல் உட்பட), மூலம் நிருபித்தார். வேறெந்த கற்பிதக் கொள்கையும் (உத்தேசம்) இந்த உண்மைகளை விளக்க முடியாது. ஆம், கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மை வேதாகமத்தின் பிரகாரமானதாகும்.*

# 58. தேவனுடைய சித்தம் என்றால் என்ன?

*மனித சித்தம் என்பது மிகவும் நேரடியானது: ஏதாவது நடக்க வேண்டும் என்று நாம் விரும்பும்போது, அது நடக்க நாம் "சித்தம்" கொள்வோம்; நாம் ஏதாவது செய்யும்போது, அந்த விஷயத்தில் நாம் நம்முடைய "சித்தத்தை" காட்டியுள்ளோம். தேவனுடைய சித்தம் இன்னும் கொஞ்சம் சிக்கலானது. உண்மையில், இறையியலாளர்கள் தேவனுடைய சித்தத்தின் மூன்று வெவ்வேறு அம்சங்களை வேதாகமத்தில் காண்கின்றனர்: அவருடைய ராஜ்யபார (ஆணையிடப்பட்டது) சித்தம், அவரது வெளிப்படுத்தப்பட்ட (ஒழுக்கநெறி சார்ந்தது) சித்தம் மற்றும் அவரது மனநிலை சித்தம்.*

*தேவனுடைய ராஜ்யபாரம் அல்லது ஆணையிடப்பட்ட சித்தம் என்பது அவரது "மறைக்கப்பட்ட" சித்தம் என்றும் அழைக்கப்படுகிறது. இது அவருடைய "சர்வ ஆளுமையாகும்" ஆகும், இது தேவனை பிரபஞ்சத்தின் ராஜ்யபாரம் கொண்ட ஆட்சியாளராகக் காட்டுகிறது. இது தேவனுடைய கட்டளைகளை உள்ளடக்கியிருப்பதால் அது "ஆணையிடப்பட்டது" ஆகும். இது "மறைக்கப்பட்டுள்ளது", ஏனென்றால் தேவனுடைய சித்தத்தின் இந்த அம்சத்தை நாம் வழக்கமாக அறிந்திருக்க மாட்டோம். தேவனுடைய ராஜ்யபாரத்துக்கு வெளியே எதுவும் நடக்காது. உதாரணமாக, யோசேப்பு எகிப்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பார்வோனின் சிறையில் வாடினார், ராஜாவின் கனவுகளை விளக்கி, இறுதியில் அவரது மக்களை பஞ்சத்திலிருந்து காப்பாற்றி அனைவராலும் மதிக்கப்பட வேண்டும் என்பது தேவனுடைய முன்னமே தீர்மானிக்கப்பட்ட சித்தமாகும் (ஆதியாகமம் 37-50). முதலில், யோசேப்பும் அவருடைய சகோதரர்களும் இந்த விஷயங்களில் தேவனுடைய சித்தத்தை முற்றிலும் அறியாதவர்களாக இருந்தனர், ஆனால், ஒவ்வொரு அடியிலும், தேவனுடைய திட்டம் தெளிவாக இருந்தது. எபேசியர் 1:12 தேவனை "தமது சித்தத்தின் ஆலோசனைக்குத்தக்கதாக*

எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே" என்று விவரிக்கும்போது, அது தேவனுடைய ராஜ்யபாரம் அல்லது ஆணையிடப்பட்ட சித்தத்தைப் பற்றி பேசுகிறது. ஏசாயா 46:10 இல் தேவன் தனது ராஜ்யபாரத்தின் உண்மையை வெளிப்படுத்துகிறார்: "என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்." தேவன் ராஜ்யபாரம் கொண்டவர் என்பதால், அவருடைய சித்தம் ஒருபோதும் ஏமாற்றமடைய முடியாது.

தேவனுடைய ராஜ்யபாரம் அல்லது ஆணையிடப்பட்ட சித்தத்தை அவரது திறத்தன்மையுள்ள சித்தம் மற்றும் அவரது அனுமதிக்கப்பட்ட சித்தமாக பிரிக்கலாம். நாம் இதைச் செய்ய வேண்டும், ஏனென்றால் தேவன் நேரடியாக எல்லாவற்றையும் நடக்க "காரணமாக" செய்வதில்லை. அவருடைய சில ஆணைகள் செயல்திறன் மிக்கவை (அதாவது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற அவை நேரடியாக பங்களிப்பு செய்கின்றன); அவருடைய கட்டளைகளில் மற்றவை அனுமதிக்கப்படுகின்றன (அதாவது தேவனுடைய சித்தத்தை மறைமுகமாக நிறைவேற்ற அனுமதிக்கின்றன). தேவன் ராஜ்யபாரம் கொண்டவர் என்பதால், அவர் அனைத்து நிகழ்வுகளையும் சம்பவங்களையும் குறைந்தபட்சம் "அனுமதிக்க" வேண்டும். தேவனுடைய ராஜ்யபார சித்தத்திற்குள், அவர் மகிழ்ச்சி கொள்ளாத பல விஷயங்களை அனுமதிக்க அவர் தேர்வு செய்கிறார். மீண்டும் யோசேப்பு மற்றும் அவரது சகோதரர்களின் உதாரணத்தை நாம் இங்கே மேற்கோள் காட்டலாம், தேவன் யோசேப்பின் நாடு கடத்தல் மற்றும் அடிமைத்தனத்தை அனுமதிக்க, தமது முன்னமே ஆணையிடப்பட்ட சித்தத்தின் மூலம் தேர்வு செய்தார். தேவனுடைய அனுமதி யோசேப்பின் சகோதரர்களின் பாவங்களை அதிக நன்மையைக் கொண்டுவர அனுமதிக்கும்படியாய் முடிந்தது (ஆதியாகமம் 50:20 ஐப் பார்க்கவும்). யோசேப்பு அநீதியான முறையில் தவறாக நடத்தப்பட்ட ஒவ்வொரு முறையும், வேண்டுமானால்

தேவனுக்கு தலையிடும் வல்லமை இருந்தது, ஆனால் அவர் அப்படிச் செய்யாமல் அந்த தீங்கை யோசேப்பின் மேல் வரும்படி "அனுமதித்தார்" மற்றும் அந்த வரையறுக்கப்பட்ட அர்த்தத்தில், அவர் அதை ராஜ்யபாரமாக்க "சித்தங்கொண்டார்".

தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட அல்லது தீர்க்கமான சித்தம் என்பது நம்மிடமிருந்து மறைக்கப்படவில்லை. தேவனுடைய சித்தத்தின் இந்த அம்சம் தேவன் நமக்கு வேதாகமத்தில் வெளிப்படுத்தத் தேர்ந்தெடுத்ததை உள்ளடக்கியது ஆகும் அதாவது வேதாகமத்தில் அவருடைய கட்டளைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறார்; நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்'' (மீகா 6:8). தேவனுடைய கட்டளையிடும் சித்தம் தான் நாம் செய்ய வேண்டும் (அல்லது செய்யக்கூடாது) என்று தேவன் விரும்புகிறார். உதாரணமாக, நாம் அன்பில் சத்தியத்தைப் பேசுவது தேவனுடைய சித்தம் என்பதை நாம் அறிவோம் (எபேசியர் 4:15), மனந்திரும்பி, தேவனிடம் திரும்புங்கள் (அப். 3:19). நாம் விபச்சாரம் செய்யக்கூடாது (1 கொரிந்தியர் 6:18) அல்லது மதுபானவெறி கொள்ளக்கூடாது என்பது தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தம் (எபேசியர் 5:18). தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தம் தொடர்ந்து "பேதையை ஞானியாக்குகிறது" (சங்கீதம் 19:7).

தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட அல்லது தீர்க்கமான சித்தத்திற்கு கீழ்ப்படிய நாம் கடமைப்பட்டுள்ளோம்; எனினும், நமக்கு கீழ்ப்படியாமல் இருக்கும் திறன் உள்ளது. ஆதாம் மற்றும் ஏவாளின் விஷயத்தில் தேவன் வெளிப்படுத்திய சித்தம் பலுகிப் பெருகுவதும், தோட்டத்தை பராமரிப்பதும், பூமியை ஆண்டுகொள்வதும், ஒரு குறிப்பிட்ட மரத்தின் கனியை புசியாமல் இருப்பதுமாகும் (ஆதியாகமம் 1-2). துரதிருஷ்டவசமாக, தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட

விருப்பத்திற்கு எதிராக அவர்கள் கலகம் செய்தனர் (ஆதியாகமம் 3). அவர்கள் அனுபவித்த விளைவுகள் அவர்கள் தங்கள் பாவத்தை மன்னிக்க முடியாது என்பதைக் காட்டுகின்றன. நம்முடைய பாவம் தேவனுடைய ராஜ்யபாரத்தை நிறைவேற்றுவதாக நாம் கூற முடியாது, அது நம்மை குற்றத்திலிருந்து விடுவிப்பது போலவும் அல்ல. இயேசு பாடுபட்டு மரிப்பது தேவனுடைய சித்தம், ஆனால் அவருடைய மரணத்திற்கு காரணமானவர்கள் இன்னும் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள் (மார்க் 14:21).

தேவனுடைய மனநிலை அவருடைய "மனப்பான்மையை" கையாள்கிறது; அவரது மனநிலை சித்தமே அவரை மகிழ்விக்கும் அல்லது மகிழ்வியாமல் இருக்கிறது. உதாரணமாக, "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோத்தேயு 2:4). இது இழந்துபோனவர்கள் குறித்த தேவனுடைய மனநிலையின் வெளிப்பாடாகும் அதாவது அவர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார் (அப்படி இல்லையென்றால், அவர் இரட்சகரை அனுப்பியிருக்க மாட்டார்). தேவனுடைய இருதயம் அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்று விரும்பினாலும், அனைவரும் இரட்சிக்கப்படுவதில்லை. எனவே, தேவனுடைய விருப்பத்திற்கும் அவருடைய ராஜ்யபாரத்துக்கும் இடையே வேறுபாடு உள்ளது.

சுருக்கமாக கூறவேண்டுமானால், தேவனுடைய விருப்பம் மூன்று அம்சங்களை உள்ளடக்கியது: 1) தேவனுடைய ராஜ்யபாரம் அவரது மாற்ற முடியாத கட்டளைகளில் வெளிப்படுகிறது. வெளிச்சம் உண்டாகக்கடவது என்று அவர் கட்டளையிட்டார், மேலும் வெளிச்சம் உண்டாயிருந்தது (ஆதியாகமம் 1:3) அதாவது அவருடைய வல்லமையான ஆணைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அவர் சாத்தான் யோபுவைத் துன்புறுத்த அனுமதித்தார் (யோபு 1:12) - அவருடைய அனுமதிக்கப்பட்ட ஆணைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. 2) தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தம் அவருடைய கட்டளைகளில்

*அடங்கியுள்ளது, நாம் பரிசுத்தமாக நடக்க வேண்டும் என்று நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த கட்டளைகளை உடைக்கும் அல்லது மீறும் திறன் நமக்கு உள்ளது (ஆனால் அப்படி செய்வது சரியானது அல்ல). 3) தேவனுடைய மனநிலை அவருடைய அணுகுமுறை. சில சமயங்களில், பொல்லாதவர்களின் மரணம் போன்ற எந்த மகிழ்ச்சியையும் அளிக்காத ஒன்றை தேவன் ஆணையிடுகிறார் (எசேக்கியேல் 33:11 ஐப் பார்க்கவும்).*

# 59. என்னுடைய வாழ்விற்கான தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளுதல் எப்படி?

*தேவனுடைய சித்தத்தை தெரிந்துகொள்கிற காரியம் முக்கியமானதாக இருக்கிறது. தேவனை அறிந்து அவர் சித்தத்தின்படி செய்கிறவர்களே தம்முடைய மெய்யான உறவுகள் என இயேசு கூறினார்: "தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்குச் சகோதரனும், எனக்குச் சகோதரியும், எனக்குத் தாயுமாய் இருக்கிறான் என்றார்" (மாற்கு 3:35). இரண்டு குமாரர்களைக் குறித்த உவமையில், பிதாவினுடைய சித்தத்தை செய்ய தவறிய பிரதான ஆசாரியர்களையும் மூப்பர்களையும் இயேசு கடிந்து கொள்ளுகிறார்; குறிப்பாக "விசுவாசிக்கும்படியாகப் பின்பாகிலும் மனஸ்தாபப்படவில்லை" (மத்தேயு 21:32). பாவத்திலிருந்து மனந்திரும்பி இயேசுவை நம்புவதே தேவனுடைய சித்தமாக இருக்கிறது. நாம் இந்த பிரதான படியில் அடியெடுத்து வைக்கவில்லையென்றால், நாம் தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு ஒப்புக்கொடுக்காமல் இருக்கிறோம்.*

*விசுவாசத்தினால் கிறிஸ்துவை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாக மாறுகிறோம் (யோவான் 1:12), பிறகு அவர் நம்மை அவர் வழியில் நடத்த பிரியப்படுகிறார் (சங்கீதம் 143:10). நம்மிடம் காண்பிக்கக் கூடாதபடிக்கு தேவன் தமது சித்தத்தை மறைத்து வைத்திருக்கவில்லை; அவர் அதை வெளிப்படுத்தவே விரும்புகிறார். அதைக்குறித்து ஏற்கனவே அவருடைய வார்த்தையில் எண்ணற்ற முறை வழி நடத்துதல்களை நல்கியிருக்கிறார். "எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது" (1 தெசலோனிக்கேயர் 5:18). நாம் நற்கிரியைகளை செய்யவேண்டும் (1 பேதுரு 2:15). "நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே*

*தேவனுடைய சித்தமாயிருக்கிறது: அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து" (1 தெசலோனிக்கேயர் 4:3).*

தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளவும் முடியும் அதை நிரூபிக்கவும் முடியும். ரோமர் 12:2ல், "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்று வாசிக்கிறோம். இந்த வசனத்தில் நமக்கு ஒரு முக்கிய வரிசை கொடுக்கப்பட்டிருக்கிறது: ஒரு தேவனுடைய பிள்ளை இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் இருக்கவேண்டும் மற்றும் தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக அவர்களுடைய மனம் ஆவியானவராலே புதிதாக்கப்பட்டு மறுரூபமாகவேண்டும். அவர்களுடைய மனது தேவனுடைய காரியங்களின் பிரகாரம் புதுப்பிக்கப்படும்போது அவர்கள் தேவனுடைய சித்தம் இன்னதென்று அறிந்துகொள்ள முடியும்.

நாம் தேவனுடைய சித்தம் இன்னதென்று அறிந்துகொள்ள நாடும்போது, நாம் சிந்திக்கிறபடி வேதாகமம் வேண்டாம் செய்யக்கூடாது என தடைசெய்கிற காரியங்கள் என்ன என்பதை தேடி கண்டு பிடிப்பதல்ல. உதாரணமாக, வேதாகமத்தில் திருடுவது தடைசெய்யப்பட்டுள்ளது; இதைக்குறித்து தேவன் மிகத்தெளிவாக கூறியிருக்கிறபடியினால் நமக்கு தெரியும் நாம் வங்கியில் கொள்ளையடிப்பது தேவனுடைய சித்தம் அல்ல. இதற்காக நாம் ஜெபிக்கவேண்டிய அவசியமும் இல்லை. அதேவேளையில், நாம் என்னென்ன காரியங்களை செய்தால் தேவனுடைய நாம் மகிமைப்படும் மற்றும் பிறரும் அவர்கள் ஆவிக்குரிய வாழ்வில் வளருவதற்கு ஊக்குவிக்கும் எனவும் நிதானித்துப்பார்க்கவேண்டும்.

தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்கு பொறுமை தேவை என்பதால் சிலவேளைகளில் கடினமாக இருக்கிறது. நமக்கு இருக்கிற

*ஒரு பிரச்னை என்னவென்றால், தேவனுடைய சித்தம் அனைத்தையும் ஒரே சமயத்தில் தெரிந்துகொள்ள விரும்புவது ஆகும், ஆனால் தேவன் அவ்வாறு செயல்படுவதில்லை, அவர் விரும்புகிறபடி அவர் விரும்புகிற காரியங்களில் அவருடைய சித்தத்தை நமக்கு வெளிப்படுத்துகிறார். அவர் ஒரு தடவை நமக்கு ஒரு படி எடுத்து வைக்க அனுமதிக்கிறார், அதுபோலவே ஒவ்வொரு படியாக விசுவாசத்தின் மூலமாக அவரையே நம்பி நாம் செல்ல வேண்டும் என்று அவர் விரும்புகிறார். முக்கியமான விஷயம் என்னவென்றால், நாம் மேலும் வழிநடத்துதலுக்காக காத்திருக்கையில், நமக்கு தெரிந்திருக்கிற நன்மையான காரியங்களை செய்வதில் நாம் மும்முரமாக இருந்துவிடுகிறோம் (யாக்கோபு 4:17).*

*நாம் எப்போதும் தேவன் நமக்கு நாம் விரும்புகிற குறிப்பிட்ட காரியங்களை மட்டுமே செய்ய வேண்டும் என வாஞ்சிக்கிறோம். உதாரணமாக, எங்கே வேலை வேண்டும், என்ன வேலை வேண்டும், எங்கு வசிக்கவேண்டும், யாரை திருமணம் செய்ய வேண்டும், எந்த மகிழுந்து வாங்க வேண்டும் முதலியவற்றை தேவன் நமக்குத் தருவார் அல்லது தரவேண்டும் என்று நாம் விரும்புகிறோம். தேவன் நம்மைத் தேர்ந்தெடுப்பதற்கு அனுமதிக்கிறார், அதேவேளை நாம் அவருக்குக் கீழ்ப்படிந்து அவர் விரும்புகிறபடி இருப்போமானால் தவறான தெரிவுகளை தேர்ந்தெடுப்பதில் இருந்து நம்மை பாதுகாக்கிறார் (அப்போஸ்தலர் 16:6-7 பார்க்கவும்).*

*ஒரு நபரை நாம் அதிகமதிகமாக தெரிந்துகொள்ளும்போது, அவருக்கு என்னென்ன காரியங்கள் பிடிக்கும் என்பதை சுலபமாக அறிந்து கொள்கிறோம். உதாரணமாக, ஒரு சிறுவன் மிகவும் பரபரப்பாக இருக்கும் ஒரு தெருவில், ஒரு பந்து எழும்பி போவதை காநல்லம், உடனே அதன் பின்னால் போகவேண்டிய அவசியமில்லை.ஏனென்றால் "என் அப்பா அதை செய்ய விரும்பவில்லை" என்று அவன் அறிந்திருக்கிறான். ஒவ்வொரு குறிப்பிட்ட சூழ்நிலையிலும் அறிவுரைக்காக அவனது தந்தையிடம் அவன் கேட்க வேண்டிய அவசியம் இல்லை; அவன் தனது தந்தையை*

*அறிந்திருப்பதால் அவர் என்ன சொல்லுவார் என்பது அவனுக்குத் தெரியும். நமக்கும் தேவனுக்கும் இடையேயுள்ள உறவில் இந்த காரியம் மெய்யாய் இருக்கிறது. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, ஆவியானவரில் சார்ந்து தேவனோடு நடக்கும்போது, நமக்கு கிறிஸ்துவின் சிந்தையை தேவன் கொடுக்கிறார் (1 கொரிந்தியர் 2:16). நாம் அவரை அறிந்திருக்கிறோம், அவரும் அவருடைய சித்தத்தை அறிய நமக்கு உதவி செய்கிறார். தேவனுடைய வழிநடத்துதல் நமக்கு துரிதமாக கிடைக்கிறதாய் இருக்கிறது. "உத்தமனுடைய நீதி அவன் வழியைச் செம்மைப்படுத்தும்; துன்மார்க்கனோ தன் துன்மார்க்கத்தினால் விழுவான்" (நீதிமொழிகள் 11:5).*

*நாம் கர்த்தருடன் நெருக்கமாக நடந்துகொண்டு உண்மையிலேயே நம் வாழ்வில் அவருடைய சித்தத்தை செய்ய விரும்புகிறோமானால், தேவன் நம் இருதயங்களில் அவர் விருப்பங்களை வைப்பார். இதில் முக்கியமானது என்னவென்றால், தேவனுடைய சித்தத்தை மட்டுமே விரும்பவேண்டும், நம் சொந்த விருப்பங்களையல்ல. "கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்" (சங்கீதம் 37:4).*

# 60. தேவ சித்தத்தைத் திட்டமாய் அறிய முடியுமா?

தேவ சித்தம் குறித்துப் பேசுகையில் நாம் இரு பகுதிகளை அறிய வேண்டும். ஒன்று பொதுவான தேவ சித்தம், மற்றது தனிப்பட்ட தேவ சித்தம். பொதுவான தேவசித்தம் அடிப்படையானதும் நம்மெல் லாருக்கும் ஒன்று போலவும் இருப்பதாகும். அடுத்ததோ நபருக்கு நபர் வேறுபட்டதாகும். பரிசுத்தம், தொழுகை, தீமைக்கு நன்மை செய்தல் போன்றவை முதல் வகையைச் சேரும் *(1 தெச 4:3; 5:18; 1 பேது 2:15)*. இப்பகுதியை உத்தமமாய் நெடுகவே நிறைவேற்றி வந்தால், தனிப்பட்ட வாழ்விற்கான குறிப்பான தேவ சித்தத்தை அறிந்து செயல்படுத்துவது இலகுவாகும்.

தேவனது தனிப்பட்ட, குறிப்பான சித்தத்தை அறியப் பொதுவாக நான்கு உதவிகள் உண்டு. முதலாவது, வேத போதனை. வாழ் விற்கும் நடத்தைக்கும் முடிவான அதிகாரம் தேவ வசனமே. எந்த வொரு செயலும் திருவசன அடிப்படையில் முழுமையாக அங்கீ கரிக்கப்பட முடியாததானால் அடுத்து அதைக் குறித்துச் சிந்திக்கத் தேவையேயில்லை. இரண்டாவது, நமது உள்ளத்தில் தூயாவி யானவரின் சத்தம். நமக்குள்ளிருக்கும் ஆவியானவர் நமது இருதயத் திலும் மனதிலும் சில உணர்வுகளைப் பதிக்கிறார். நம்மை நடத்தும் தேவனவர். மூன்றாவது, தேவபக்திக்கேதுவான ஆலோசனைகள். முதிர்ச்சியுள்ள விசுவாசிகளும் தலைவர்களும் தங்கள் அறிவு, அனுபவம், வரங்கள் மூலமாக நமக்கு ஆலோசனைகள் தரமுடியும்.முடி வாக, நாம் கவனிக்கவேண்டியது சூழ்நிலைகள். பொதுவாக இது தீர்மானத்தை நிச்சயப்படுத்திக்கொள்ள உதவும். ஏனெனில், நமது வாழ்க்கையின் காரியங்களைக் கட்டளையிடுபவர் தேவன்தானே. நம்மைத் தமது உள்ளங்கைகளில் அவர் வரைந்து வைத்திருக்கிற ராம் *(ஏசா 49:16)*. மேற்குறிப்பிட்ட இந்நான்கு காரியங்களும் ஒரே வரிசையில் அமையுமானால் அத்திசையில் தைரியமாக முன்

*செல்லலாம். அத்தீர்மானத்தைக் குறித்த மனச் சமாதானமும் கூடுதல் உறுதியளிக்கும்.*

*ஆனால், இவ்விதப் படிகள் வழியாகச் சென்றாலும் சில சமயங்களில் தேவ சித்தத்தைத் திட்டமாகச் சொல்லமுடியாதிருக்கலாம். அதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்–*

*அ) அக்காரியத்தில் தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்தினால் அதை நிறைவேற்றக்கூடிய பக்குவம் நமது மனதிலும், ஆன்மாவிலும், உடலிலும் இல்லையென தேவன் அறியலாம். "இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" என்று ஒருமுறை இயேசு தமது சீடரிடம் சொன்னார்! (யோ 16:12). அப்படியானால் நாம் ஜெபத்திலும் தியானத்திலும் கூடுதல் நேரம் செலவழித்துக் கொண்டேயிருந்து தெளிவாக நமக்குத் தெரிந்த காரியங்களை விறு விறுப்பாகச் செய்துகொண்டிருக்கவேண்டும்.*

*ஆ) திருமறைத் தத்துவங்களுக்குக் கீழ்ப்படியாத சில பகுதிகள் நமது வாழ்வில் இருக்கலாம். நமக்குக் கூடுதலாகத் தேவையானது கீழ்ப்படிதலானால் தேவன் கூடுதலாக வெளிப்பாடு தரமாட்டார். நாம் நம்மை நன்கு ஆராய்ந்து பார்த்துக் காரியங்களைச் சரிசெய்யவே அவர் எதிர்பார்ப்பார். "தன் வழியைச் சரிசெய்கிறவனுக்குத் தேவனது இரட்சிப்பை வெளிப்படுத்துவேன்" (சங் 50:23ஆ). பள்ளங்கள் நிரப் பப்பட்டு, மலைகள் தகர்க்கப்பட்டு, கோணலானவைகள் நேராக்கப் பட்டு, கரடு முரடானவைகள் சமமாகும்போது நாம் தேவனது வழி யைத் தெளிவாகப் பார்க்கமுடியும் (லூக் 3:4-6).*

*இ) நமது விசுவாசத்தைப் பலப்படுத்த தேவன் சற்று நிச்சய மின்மையை (uncertainty) விட்டுவைக்கிறார். கிறிஸ்தவ வாழ்வைச் சவாலாக்குவதே அதுதான். கட்டிட வரைபடம் (blueprint) போன்ற தொன்றை நமது வாழ்விற்காக தேவன் தருவதில்லை. ஒரு திசை மானியை (compass) மட்டும் கையில் கொடுக்கிறார். நாம் விசுவா*

*சத்தோடு அடியெடுத்து வைக்கவேண்டும். முன்செல்லும் வேளையில் இடது வலதுபுறம் வழிவிலகினால், "வழி இதுவே; இதிலே நடவுங்கள்" எனும் அவரது சத்தம் பின்னாலே கேட்கும் (ஏசா 30:21). எங்கே என்று தெரியாது முன்செல்வதுதான் விசுவாசம் (எபி 11:8).*

# *61.* கடவுள் நமது வாழ்க்கைக்கு முழு வரைபடத்தையும் கொடுத்துவிடுகிறாரா?

*வெளிப்பாட்டு வரங்களாகிய தீர்க்கதரிசனம், ஞானத்தைப் போதிக்கும் வசனம், அறிவை உணர்த்தும் வசனம் ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சி தேவன் இன்றும் பேசுகிறாரென்பதைப் புதுப் பொலிவுடன் நிச்சயப்படுத்துகிறது. ஆனால் இவ்வரங்களைக் கொண்டுள்ளதாகக் கூறும் சில பிரசங்கிமார் விசுவாசிகளின் வாழ்க்கைக்கு முழுக் கட்டிட வரைபடத்தையும் (blueprint) வாக்களிக்கையில் இவ்வரங்கள் துர்ப்பிரயோகம் செய்யப்படுகின்றன என்றுதான் சொல்லவேண்டும். இவ்விதம் அவர்கள் வாக்களிப்பது பரவசமூட்டு வதாயிருந்தாலும் அது புதிய ஏற்பாட்டு உபதேசத்திற்கு உகந்ததல்ல.*

*தேவன் நமக்குக் கட்டிட வரைபடத்தையல்ல, தேசப் படத்தையும் திசைமானியையும் (map & compass) மட்டுமே கொடுக்கிறார். கட் டிட வரைபடம் கொடுக்கப்பட்டுவிட்டால் தெரிந்தெடுப்புகளுக்கு இடமில்லாதுபோகிறது. வரைபடத்திலுள்ள விபரங்களாலன்றி கர்த்தரின் ஆவியினால் நாம் நடத்தப்படமாட்டோம். வாழ்க்கையே "சப்" என்றிருக்கும். திட்டமாய்த் தெரியாத நிலைதான் வாழ்க்கையை சுவாரஸ்யமாக்கி விசுவாசத்தைப் பலப்படுத்தும். விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமைக் குறித்து, "தான் போகுமிடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுப் போனான்'' என்றெழுதப்பட்டிருக்கிறது (எபி 11:8). இதுதான் விசுவாசித்து நடப்பதாம். எதிர்காலம் நமக்கு "எதை" வைத்திருக்கிறதென்று நாம் அறியத் தேவையில்லை; எதிர்காலத்தை நமக்காய் வைத்திருப்பது ''யார்'' என்ற நிச்சயம் நமக்கிருந்தால் போதும்.*

*மனந்திரும்பிய வேளையில், "ஆண்டவரே, நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்?" என்று பவுல் கேட்டபோது, அவனது எஞ்சிய வாழ்க்கைக்கு ஒட்டுமொத்தமான வரைபடம் அவனுக்குக் கொடுக்*

கப்படவில்லை. மாறாக, "நீ எழுந்து நகருக்குள்ளே போ; நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்று ஆண்டவர் பதிலளித்தார் (அப் 9:6). ஞானியான பவுலுக்கு இது மட்டந்தட்டுவது போலிருந்திருக்கும். ஆனாலும், ஒவ்வொரு அடியாய்த்தான் தேவன் நம்மை நடத்துகிறாரென்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. ஹென்றி நியூமேன் (1801-1890) இவ்விதம் பாடினார்-

காரிருளில் என் நேச தீபமே, நடத்துமேன்;

வேறொளியில்லை, வீடும் தூரமே, நடத்துமேன்.

நீர் தாங்கின், தூர காட்சி ஆசியேன்;

ஓர் அடிமட்டும் என்முன் காட்டுமேன்.

எதிர்காலத்தைக் குறித்த முழு வரைபடத்தைத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறேன் எனும் பிரசங்கிமாரைக் குறித்துக் கவனமாயிருங்கள்; அது உங்கள் வாழ்க்கையையே நாசமாக்கிவிட வாய்ப்புண்டு. வெளிப் பாடு வெளிப்பாடு என்று பிரசங்கிமாரைத் தரிசனம் காணச் செல்லா தீர்கள். பரிசுத்த ஆவியானவரின் எளிய, நேரடி வழிநடத்துதல் தேவப் பிள்ளைகள் ஒவ்வொருவரின் பிறப்புரிமையாகும் (ரோ 8:14). உங்கள் வாழ்க்கையில் தேவ நடத்துதல் உத்திரவாதமாய்க் கிடைக்கவேண்டு மானால் நான்கு ஒழுங்குமுறைகள் கைக்கொள்ளப்படவேண்டும். (அ) அனுதின ஜெப தியானத்தில் கிரமமாயிருங்கள். ஜெபம் நம் மைத் திருச்சிந்தையோடு இணைக்கும். வேதம் நமது கால்களுக்குத் தீபம்; பாதைக்கு வெளிச்சம் (சங் 119:105). (ஆ) உங்கள் வேலை யில் சுறுசுறுப்பாயிருங்கள். "உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ அதை உன் முழு பலத்தோடே செய்" (பிர 9:10அ). சோம்பேறிகள்மீது ஆண்டவர் தமது வழிநடத்துதலை வீணடிக்கிறதில்லை. (இ) திருப் பணியில் உற்சாகமாயிருங்கள். முழு மனதுடன் கடவுளைச் சேவிப் போர் அவர் சித்தமறியத் தவறுவதரிது. இறையரசிற்காய் உச்ச அளவு

*உழைக்கப்போகிறேனென்று அர்ப்பணிப்பது அவரது இதயத்தை மகிழ்விக்கும். (ஈ) தேவ மக்களின் ஐக்கியத்தில் களிகூறுங்கள். ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்வது உங்களுக்குப் புதுக் கருத்துகளைத் தரும். அது உங்கள் இருதயம் கடினப்பட்டுப்போகாமலும் பார்த்துக்கெல்ள்ளும் (எபே 5:17,19; எபி 3:13).*

*தவறிழைத்துவிடுவோமோ என்ற பயத்திலேயே மக்கள் முழு வரைபடம் தேடியலைகின்றனர். விழாமல் குழந்தை நடக்கப் பழகுமோ? எல்லாவற்றைக் குறித்தும் தீர்க்கமாய்த் தெரிந்திருக்கவேண்டுமென விரும்புவது நம்மை முடமாக்கும். வேதத்தின் அடிப்படைத் தத்துவங்களை மனதில் வைத்துக்கொண்டு, உங்களுக்குக் கிடைத்த வெளிச்சத்திற்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள். நீங்கள் வழி விலகினால் "பின்னாலே" இருந்து சத்தங்கொடுத்து ஆண்டவர் உங்களைத் திருத்துவார் (ஏசா 30:21). ஒருவேளை தவறு செய்துவிட்டாலும், பதறத் தேவையில்லை. தவறுகளிலிருந்து எவ்வளவோ படிக்கிறோமே! நமது இருதயம் தேவனை நோக்கி உறுதியாயிருக்குமானால் அவர் எல்லாவற்றையும் நன்மையாக்கிவிடுவார். ஆண்டவர் முதலிலேயே அப்போஸ்தலரை மக்கெதோனியாவிற்குப் போகச் சொல்லவில்லை. அவர்கள் ஆசியாவுக்குச் சென்றபோது, அங்கு பிரசங்கியாதபடி ஆவியானவரால் தடுக்கப்பட்டனர். அவர்கள் பித்தினியாவுக்குப் போக முயற்சித்தபோது அங்கும் ஆவியானவரால் தடைபண்ணப்பட்டனர். பித்தினியாவிலிருக்கும்போதுதான் கர்த்தரிடமிருந்து மக்கெதோனியா செல்லும்படியான அழைப்பு வந்தது (அப் 16:6-10).*

*நமது வாழ்வில் இருட்டான காலங்களைத் தேவன் அனுமதிக்கத்தான் செய்கிறார். நாம் அவரை அப்படியே விசுவாசித்துத் தரித்திருக்க வேண்டும் (ஏசா 50:10). "துன்பத்தின் அப்பத்தையும் உபத்திரவத்தின் தண்ணீரையும்" கண்டு மிரண்டுவிடக்கூடாது (ஏசா 30:20). அங்குமிங்கும் ஓடித்திரிவது நம்மை எங்கும் கொண்டு செல்லாது (வச 15,16,18). தாவீதோடு சேர்ந்து, 'தேவன் எனக்குப் பலத்த அரணா*

னவர்; அவர் என் வழியைச் செவ்வை பண்ணுவார்" எனப்பாடுவோம் *(2 சாமு 22:33).*

நாம் வளர வளரத்தான் கடவுளுடைய வழிகளை அதிகமதிகமாய்ப் புரிய முடிகிறது. வயதுவந்தவன் மட்டுமே புரிந்துகொள்ளமுடிவதை எந்தத் தந்தையாவது சிறு குழந்தையிடம் சொல்வானா? இயேசு தமது சீடரிடம் அவர்களது மூன்றாண்டு பயிற்சியின்போது எல்லா வற்றையும் சொல்லிவிடவில்லை. ஒருமுறை அவர் அவர்களிடம், "இன்னும் அநேகக் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண் டும்; அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்" என்றார் *(யோ 16:12).* கடவுளோடுள்ள நமது ஐக்கிய வாழ்வின் துவக்கத் திலோ பின்னர் எந்தக் கட்டத்திலோ நமது எதிர்காலத்தைக் குறித்த முழு விபரப்படத்தையும் அவர் தருவாரானால் அது அவரது சொந்த ஞானத்திற்கே எதிரிடையானதாகும்.

# 62. நான் ஒரு இந்து, நான் எதற்காக கிறிஸ்தவனாகவேண்டும்?

*இந்துமதத்தையும் கிறிஸ்தவத்தையும் ஒப்பிடுவது சற்று சிரமமானது, அதிலும் குறிப்பாய் மேற்கத்தியர்களுக்கு இந்துமதம் அவர்களுடைய புரிதலுக்கு மிகவும் அப்பாற்பட்டதும் அளந்திடமுடியா ஆழமும், தொன்மையும், விரிவான இறையியல் கோட்பாடுகளை உடைய ஒன்று. உலகத்திலே இதைப் போன்ற பன்முக பரிமாணமும் நுண்ணிய பாரம்பரியமும் கொண்ட வேறொரு மதம் இருக்க வாய்ப்பில்லை. மதங்களின் ஒப்பிலக்கணத்தை படிக்க விரும்பும் கத்துக்குட்டி ஒருவன் இந்து-கிறிஸ்தவ மதங்களின் ஒப்பியலில் இறங்கினால் அது அவனை எளிதில் மூழ்கடித்துவிடும். ஆகையால், கேட்கப்படும் கேள்வியை நாம் மிகுந்த தாழ்மையுடனும், கவனத்துடனும் கையாளவேண்டும். மேலும் கொடுக்கப்பட்ட பதிலும் இந்துமதத்தின் ஆழத்தை நன்றாகவோ அல்லது ஓரளவுக்காவவது புரிந்துகொண்டோம் என்கின்ற மிதப்பிலும் வழங்கப்படவில்லை. கிறிஸ்தவம் ஏன் மேன்மையானது என்பதனை விளக்கி காட்ட இவ்விரு மதங்களுக்கு இடையே உள்ள ஒரு சில முக்கியமான குறிப்புகளை மட்டும் ஒப்பிடப்போகிறோம்.*

*முதலாவது, கிறிஸ்தவத்தை அதனுடைய வரலாற்றுப் பின்னணியை கருத்தில்கொண்டு அணுகவேண்டும். தடையயியல், தொல்பொருள் ஆராய்ச்சி, உரை ஒப்பீடு போன்றவைகளை கொண்டு நிரூபிக்கப்பட்ட வரலாற்று கதாபாத்திரங்களையும், சம்பவங்களையும் கொண்டதுவே கிறிஸ்தவம். இந்துமதத்திலும் வரலாற்று குறிப்புகள் உண்டு. ஆனால், அதனுடைய இறையியல், புராணம் மற்றும் வரலாறு ஒன்றோடு ஒன்று பின்னி பிசைந்திருப்பதினால் கதை எங்கே முடிகிறது, எங்கே ஆரம்பிக்கிறது என்பதை வகையறுப்பது மிகவும் கடினம். தெய்வங்கள் மற்றும் அவர்களுடைய ஆளுமையை விளக்கக்கூடிய நெடிய*

கட்டுக்கதைகள் கொண்ட புராணங்கள் இந்துமதத்தில் உண்டு என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொள்கின்றனர். மேலும் வரலாற்றுத் தொடர்பான தெளிவின்மையின் காரணமாக இந்துமதம் நெகிழ்வுத்தன்மை கொண்டதும் எளிதில் மற்றவைகளோடு சமரசமாககூடியதாயும் உள்ளது. ஆகவே, சரியான வரலாற்று பின்னணி இல்லாத ஒரு மதத்தை நாம் சோதித்து பார்க்க இயலாது. அதனால் அதை நாம் பொய்யென்று தீர்க்காவிட்டாலும் அதனை சரிப்பார்க்கவும் இயலாது என்பதை புரிந்துகொள்ளவேண்டும். மாறாக, கிறிஸ்தவத்தின் இறையியலை யூதர்களின் எழுத்தப்பட்ட வரலாறும், கிறிஸ்தவ பாரம்பரிய பதிவுகளும் உறுதிசெய்கின்றது. ஆதாம் மற்றும் ஏவாள் இல்லாமல் இருந்திருப்பார்களானால், எகிப்திலிருந்து இஸ்ரவேல் மக்கள் வெளியேறாமல் போயிருந்தால், யோனா ஒரு புனைக்கப்பட்ட கதாபாத்திரமாய் இருந்திருந்தால் அல்லது இயேசு பூமியில் நடக்காமல் போயிருந்தால் ஒட்டுமொத்த கிறிஸ்தவமதத்தின் நம்பிக்கையும் இந்த குறிப்புகளின் அடிப்படையில் தவிடுபொடியாயிருக்கும். கிறிஸ்தவத்தை பொறுத்தவரையில் தவறான வரலாறு ஓட்டையான இறையியலுக்கு சமம். வரலாற்றுடன் வேரூன்றியது கிறிஸ்தவத்திற்கு பெலவீனமாய் தோன்றினாலும், கிறிஸ்தவ பாரம்பரியம் வரலாற்றினால் சோதிக்கப்பட்டு உறுதிசெய்யப்படும் போது அப்பெலவீனமே பெலமாய் மாறுகிறது.

இரண்டாவது, கிறிஸ்தவம் மற்றும் இந்துமதம் இரண்டிலும் முக்கியமான வரலாற்று புருஷர்கள் இடம்பெற்றிருந்தாலும், இயேசு ஒருவரே மரித்தோரிலிருந்து சரீரப்பிரகாரமாய் உயிர்த்தெழுந்தார் என்று குறிப்பிடப்படுகிறார். வரலாற்றில் அநேகர் ஞானபோதகர்களாய் இருந்துள்ளனர் அல்லது மத இயக்கங்களை நிறுவியுள்ளனர். இந்துமதத்திலேயும் இப்படிப்பட்ட ஞானபோதகர்களும் உலகத்தலைவர்களும் உண்டு. ஆனாலும் இயேசு அவர்களுக்கு அப்பாற்ப்பட்டவர். ஒரு தெய்வீக வல்லமையின் உதவியன்றி அவருடைய ஆவிக்குரிய போதனைகளை நம்மால்

*பரிசோதிக்க இயலாது: தன்னைப் பற்றிய திர்க்கத்தரிசனத்தை உரைத்து அதனை தன்னிலே நிறைவேற்றினார் (மத்தேயு 16:21, 20:18-19, மாற்கு 8:31, லூக்கா 9:22, யோவான் 20:21, 1 கொரிந்தியர் 15)*

*அதுமட்டுமல்ல, உயிர்த்தெழுதலைப் பற்றிய கிறிஸ்தவ உபதேசம் இந்துமதத்தின் மறுஜென்ம நம்பிக்கையிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. இந்த இரண்டு கருத்துகளும் ஒன்றன்று. வரலாறு மற்றும் ஆதாரத்தின் அடிப்படையில் 'உயிர்த்தெழுதலை' மட்டுமே நாம் திட்டமாய் உறுதிசெய்யமுடியும். குறிப்பாக இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மட்டுமே சமுதாய அறிஞர்கள் மற்றும் நன்னெறி போதகர்கள் என்ற இரு சாராரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாய் உள்ளது. அதன் சரிபார்ப்பு இந்து மறுஜென்ம கொள்கைக்கு எவ்விதத்திலும் ஒத்ததாயில்லை. கீழ்காணும் வேறுபாடுகளை கவனியுங்கள்:*

*உயிர்த்தெழுதலில் ஒரு மரணம், ஒரு வாழ்க்கை, ஒரு சாவுக்கேதுவான சரீரம் மற்றும் ஒரு புதிய சாவுக்கேதுவல்லாத மகிமையின் சரீரம். உயிர்த்தெழுதல் தெய்வீக செயல்பாட்டினால் நடக்கிறதும், ஒரே தேவனை சார்ந்ததும், பாவத்திலிருந்து விடுவிக்கக்கூடியதும் மற்றும் கடைசி காலத்தில் மட்டுமே நடக்கக்கூடியதாயும் உள்ளது. மாறாக மறுஜென்மம் அல்லது மறுபிறவி கொள்கை என்பது பலமுறை மரிப்பதும், பலமுறை பிறப்பதும், பற்பலமுறை சாவுக்கேதுவான சரீரத்தை பெற்றுக்கொள்வதும், சாவுக்கேதுவல்லாத சரீரம் என்பதின் இல்லாமையையும் காண்பிக்கிறது. அதோடுகூட, மறுஜென்மம் இயற்கை விதியினாலும், அனைத்து இறைக்கொள்கையின் (எல்லாம் தெய்வம்) அடிப்படையிலும், கர்ம வினையை சார்ந்ததும், நித்தமும் இயங்கிக்கொண்டே இருக்கின்ற ஒன்றாகவும் உள்ளது. ஆனாலும், வேறுபாடுகளை மட்டும் பட்டியலிட்டு இவ்விரண்டு கொள்கைகளின் உண்மையை நாம் நிருபிக்கமுடியாது. ஆகவே, வரலாற்று பிரகாரமாக உயிர்த்தெழுதலை நிரூபிக்கக்கூடுமானால், மரணத்திற்கு அப்பால்*

*சம்பவிக்கும் இவ்விரண்டு தெரிந்தெடுத்தல்களையும் நாம் வேறுபடுத்தும்போது உறுதிசெய்யப்பட்டது உறுதிசெய்யமுடியாததிலிருந்து ஒரு படி உயர்ந்து நிற்கிறது. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலும், உயிர்த்தெழுதலைப் பற்றிய விளக்கமான கிறிஸ்தவ உபதேசமும் நாம் கருத்தாய் கவனிக்கவேண்டியவைகள்.*

*மூன்றாவது, கிறிஸ்தவ மறைநூல்கள் வரலாற்றுப்பிரகாரமாய் தலைசிறந்ததும், கவனிக்கூடியவைகளாயும் உள்ளன. பற்பல பரிசோதனைகளில் கிறிஸ்தவ வேதாகமம் இந்து வேதங்கள் மற்றும் அனைத்து பண்டைய மதஇலக்கியங்களை காட்டிலும் மேலோங்கி நிற்கிறது. எல்லா பண்டைய மத இலக்கியங்களிலும் கிறிஸ்தவ வேதாகமம் மட்டுமே வரலாற்றுப் பிரகாரமாய் மிக அதிக அளவில் நிருபிக்ககூடிய ஒன்றாய் இருப்பதால், வேதாகமத்தை சந்தேகிப்பது வரலற்றை சந்தேகிப்பதாகிவிடும். எபிரேய வேதாகமமான பழைய ஏற்பாட்டை விட கூடுதலாய் நிருபணம் பண்ணக்கூடிய புத்தகம் ஒன்று இருக்குமானல் அது புதிய ஏற்பாடு மட்டுமே. கீழே குறிப்பிட்டுள்ளவைகளை கவனியுங்கள்:*

*1)மற்றெந்த பண்டைய மதநூல்களைவிட புதிய ஏற்பாட்டுக்கு கூடுதலான எழுத்துபிரதிகள் காணப்படுகின்றன - 5000 பண்டைய கிரேக்க எழுத்துப்பிரதிகள், மொத்தமாக எல்லா மொழிகளிலும் 24,000 எழுத்துப்பிரதிகள். ஏராளமான கைப்பிரதிகள் நம்மிடம் காணப்படுவது ஆராய்ச்சி செய்வதற்கான நல்லதொரு அடித்தளத்தை அமைத்து தருகின்றது. அதனால் இதிலே உள்ள வேதபகுதிகளை ஒன்றோடொன்று பரிசோதித்து மூலமொழியில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்பதனை நாம் அடையாளம் கண்டுகொள்ளலாம்.*

*2) எந்தவொரு பண்டைய மதம்சார்ந்த ஆவணத்தை விட புதிய ஏற்பாட்டு எழுத்துப்பிரதிகள் அவைகள் படைக்கப்பட்ட காலத்திற்கு*

*மிக சமீபத்தில் எழுதப்பட்டவைகளாய் உள்ளன. எல்லா மூலப்படைப்புகளும் சமகாலத்தில் வாழ்ந்தவர்களுடைய (கண்களால் கண்ட சாட்சிகள்) காலத்தில், கி.பி. 1-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை .மற்றும் நம்மிடம் கி.பி.125-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கையெழுத்துப் பிரதியும் உள்ளது. கி.பி. 200-ஆம் ஆண்டில் முழுபிரதிகளும், கி.பி.250-ஆவது ஆண்டில் முழுமையான புதிய ஏற்பாட்டும் எழுத்தப்பட்டிருக்கிறது. சம்பவங்களை கண்களால் கண்ட மக்களின் காலத்திலேயே புதிய ஏற்பாட்டின் எல்லா புத்தகங்களும் எழுதப்பட்டுள்ளதால், கட்டுகதைகள், புராணங்கள் போன்றவைகளுக்குள் போக அவரகளுக்கு நேரம் இல்லாதிருந்திருக்கும். அதுமட்டுமன்றி, அப்போதிருந்த சபை மக்கள் சம்பவங்களை நேரடியாக கண்டவர்களாகையால் , உண்மையோடு இதை எளிதில் ஒப்பிட்டு பார்க்கக்கூடியவர்களாயும் இருந்தார்கள்.*

*3) வேறெந்த பண்டைய ஆவணங்களைக் காட்டிலும் புதிய ஏற்பாடு ஆவணங்கள் மிகவும் துல்லியமானவைகள். “ஹானஸ்ட் டு காட்” (தேவனுக்கு உண்மை) எனும் நூலில் ஜான்.R.ராபின்சன் என்பவர் புதிய ஏற்பாடு ஆவணங்கள் அனைத்தும் 99.9% துல்லியமானவை என்று குறிப்பிடுகின்றார். கிரேக்க புதிய ஏற்பாட்டின் வல்லுனராய் திகழ்ந்த ப்ரூஸ் மெட்ஸ்கெர் சற்றே கண்ணியமாய் 99.5% என்று குறிப்பிடுகின்றார்.*

*4) எல்லாம் தெய்வக்கொள்கை மற்றும் பலதெய்வக்கொள்கை போன்றவைகளை விட கிறிஸ்தவத்தின் ஒருதெய்வ கொள்கையில் மட்டுமே சாதகமான பல்வேறு அமசங்கள் காணப்படுகிறது. இந்துமதத்தை வெறுமனே எல்லாம் தெய்வக்கொள்கை (“எல்லாம் தெய்வம்”} அல்லது பலதெய்வக்கொள்கை (“பல தெய்வங்கள்”) உடையவர்கள் என்று வகையறுக்கமுடியாது.. இந்துமதத்தில் எந்த பிரிவுடன் ஒருவர் தன்னை அடையாளம் காட்டுகிறாரோ அதன் அடிப்படையில் ஒருவர் எல்லாம் தெய்வக்கொள்கை*

உடையவராகவோ, பலதெய்வக்கொள்கை கொண்டவராகவோ, எல்லாம் ஒன்று ("எல்லாமே ஒன்று") அல்லது ஒரே தெய்வம் போன்ற பல்வேறு தெரிந்தெடுத்தல்களை பின்பற்றுபவராய் இருப்பார். ஆனாலும் இந்துமதத்தின் இரண்டு வலுவான நீரோடைகள் என்று நாம் பிரித்தால், பலதெய்வக்கொள்கை மற்றும் எல்லாம் தெயவக்கொள்கை என்று அதனை இரண்டாக பிரிக்கலாம். கிறிஸ்தவத்தின் ஒருதெய்வகொள்கையை பொறுத்தவரையில் இந்த இரண்டைக் காட்டிலும் தெளிவான சாதக அம்சங்கள் காணப்படுகின்றது. இடநெருக்கடியை கருத்தில்கொண்டு இந்த மூன்று உலகப்பார்வைகளும் 'வாழ்வியல் நீதிநெறிகள்" என்பதன் அடிப்படையிலே ஒப்பிடப்படுகிறது.

பலதெய்வக் கோட்பாடு மற்றும் எல்லாம்தெய்வக் கோட்பாடு, இவ்விரண்டின் நீதிநெறி அடிப்படையும் கேள்விக்குறியவைகள். பலதெய்வக்கோட்பாட்டின்படி ஒன்றுக்கும் மேற்பட்ட தெய்வங்கள் உண்டெனில் நாம் பின்பற்றக்கூடிய உயரிய நெறிமுறைகளை கொண்ட தெய்வம் எது? பற்பல தெய்வங்கள் உண்டெனில், நீதிநெறிகளின் காரியத்தில் ஒன்று அவர்களுக்கும் வேறுபாடில்லாமல் இருக்கவேண்டும், அல்லது வேறுபாடு காணப்படவேண்டும். ஒருவேளை அப்படிப்பட்ட ஒப்பீடே இல்லை என்றால் இவர்கள் கூறும் நீதிநெறிகள் ஆதாரமற்றதாகிவிடும். இந்த நிலைபாட்டின் பெலவீனம் தானாகவே வெளியாகிறது. நீதிநெறிகளில் வித்தியாசங்கள், வேறுபாடுகள் இல்லையென்றால், எந்த கோட்பாட்டில் அவர்கள் ஒத்துப்போகிறார்கள். அப்படி அவர்களை வரிசைப்படுத்தும் தார்ப்பரியம் தெய்வங்களை காட்டிலும் பெரியவைகளாய் மாறிவிடும். இந்த தெய்வங்களும் வேறொரு அதிகாரத்தின்கீழ் இருந்து அதற்கு பதில்சொல்லவேண்டியவைகளாய் இருப்பதால், இவைகள் எல்லாவற்றிற்கும் மேலானவர்கள் என்றும் நாம் எடுக்கமுடியாது. அப்படியானால், நாம் பின்பற்றுவுதற்கு இதைவிட மேன்மையான வழி ஒன்றுண்டு என்பது தெளிவாகிறது. இந்த ஒரு உண்மையினால்

*பலதெய்வக் கோட்பாட்டை வெறுமையானது என்று நாம் சொல்லாவிடினும் அது ஆழமற்றது என்பதை மறுக்கமுடியாது, தெய்வங்களுக்கு இடையே சரி தவறு என்பவைகளைக் குறித்த மதிப்பீடுகளில் வேறுபாடு காணப்படுமானால், ஒரு தெய்வத்திற்கு கீழ்ப்படிவது இன்னொரு தெய்வத்திற்கு கீழ்ப்படியாதது போல் ஆகிவிடும், அதற்கான தண்டனையையும் ஏறகவேண்டிவரும். நீதிநெறிகள் அந்தந்த தெய்வங்கள் சம்பந்தபட்ட ஒன்று. ஒருவருக்கு 'நன்மையாய்' படுவது எல்லோருக்கும் எல்லாவிதத்திலும் நன்மை என்றே பொருள்படாது, உதாரணத்திற்கு, காளி என்கின்ற தெய்வத்திற்கு தங்களுடைய குழந்தையை பலியாக கொடுப்பது இந்துமதத்தின் ஒரு பிரிவினரால் பாரட்டக்கூடியதாய் இருக்கும், ஆனால் அதுவே மற்ற பிரிவனருக்கு கண்டிக்கத்தக்கதாகவும் அமையும். ஆனால், நிச்சயமாகவே, குழந்தைகளை பலி கொடுப்பது, எவ்வித்தத்திலும் ஏற்கமுடியாத ஒன்று என்பதில் ஐயமில்லை. ஒரு சில காரியங்கள், பின்னணி, பாரம்பரியம் என்று எதுவாக இருந்தாலும், காரணரீதியிலும் தோற்றத்தின் படியேயும் ஒன்று சரி அல்லது தவறு என்று இருக்கவேண்டும்.*

*பல்தெய்வக்கொள்கையுடன் ஒப்பிட்டு பார்க்கையில் எல்லாம் தெய்வக்கொள்கை எவ்விதத்திலும் கூடுதல் சிறப்புமிக்கதன்று. ஏனெனில்,, நன்மை அல்லது தீமை என்று வகையறுக்கமுடியாத ஒரே பொருள் – ஒரே தெய்வீக யதார்த்தம் – உள்ளது என்பதே இதன் வாதம். 'நன்மை' மற்றும் 'தீமை' எனும் இரண்டு பிரிவுகள் ஒன்று மற்றதுடன் வேறுபட்டிருக்கையில், வகைபிரிக்கமுடியாத ஒரே நம்பிக்கை என்று அதை நாம் எடுக்கமுடியாது. சொல்லப்போனால், பல்தெய்வக்கொளளைகயில் "நன்மை" "தீமை"என்கின்ற நீதிநெறி சார்ந்த வேறுபாடுகள் . நன்மையும் தீமையும் பிரிக்கமுடியாத ஒரே யதார்த்தத்தில் கலந்துவிடுகிறது. அப்படியே, "நன்மை", "தீமை" எனும் பிரிவினைகளை நாம் உண்டாக்கினாலும், 'கர்மா' என்று அறியப்படும் முன்வினைப் பயன் அந்த நிதிநெறி பிரிவினைகளை*

வெறுமையாக்கிவிடும். இயற்கையில் உள்ள பூவிஈர்ப்பு அல்லது அசைவற்றத் தன்மை போன்றே 'கர்மா' என்பதும் 'ஆட்சார்பற்ற' தத்துவமாய் உள்ளது. பாவியான ஒரு ஆத்துமாவின் மேல் கரம்வினையின் பலன் வரும்போது, தெய்வீக கண்காணிப்பு நியாயத்தீர்ப்பை கொண்டுவருவதில்லை, மாறாக, அது இயற்க்கையின் 'ஆட்சார்பற்ற' எதிர்விளைவாய் அமைகிறது. ஆனால் நீதிநெறி ஒழுக்கம் ஒரு தனிநபரைச் சார்ந்தது, கர்மவினையோ தனிநபர் சாராதது. உதாரணமாக, ஒருவரை அடிக்க பயன்படுத்தப்படும் பிரம்பை நாம் குற்றஞ்சாட்டுவதில்லை . தனிப்பட்டவகையில் அந்த பிரம்பு நீதிநெறிகளையோ கடமையுணர்வையோ அறியாத ஒரு பொருள். மாறாக, அந்தப் பிரம்பை தவறாக கையாண்ட நபரைத் தான் நாம் குற்றஞ்சாட்டுகிறோம். அந்த மனிதருக்கு 'நீதிநெறிகளும், கடமையுணர்வும்' உண்டு. அப்படியே கர்மவினை வெறுமனே 'ஆட்சார்பற்ற' தன்மை கொண்டதானால் அது 'நீதிநெறிகளின்' அடிப்படையில் ஒழுக்கமில்லாதது. ஆகவே, நெறிமுறைகளை ஒப்பிடுவதற்கு போதுமான அடிப்படை காணப்படவில்லை.

ஆனாலும், கிறிஸ்தவத்தின் ஒரேதெய்வக்கொள்கையானது தேவனுடைய தன்மை மற்றும் குணாதிசயத்தின் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது. தேவனுடைய குணாதிசயம் நல்லதாகவே இருப்பதால் அவரை சார்ந்த காரியங்களும், அவருடைய சித்தமும் 'நல்லதாகவே' இருக்கும். தேவனை விட்டு விலகியிருப்பது அல்லது தேவனுடைய சித்தத்தை சாராமல் இருப்பது 'தீமையாகவே' இருக்கும். ஆகையால், இந்த ஒரே தேவன் நீதிநெறிகளுக்கெல்லாம் அடிப்படையாய் இருப்பதால், இவர் தனிநபர் ஒழுக்கத்தின் காரணகர்த்தாவும் நன்மை தீமை பற்றிய அறிவாற்றலின் ஆதாரமாகவும் விளங்குகிறார்.

ஐந்தாவது, "உன்னுடைய பாவத்தை குறித்து என்ன செய்யப் போகிறாய்?" என்ற கேள்விக்கான விடையையும் நாம் கண்டுபிடிக்கவேண்டும். இந்தப் பிரச்சனைக்கு கிறிஸ்தவத்திலேதான்

வலுவான பதில் காணப்படுகிறது. புத்தமதத்தை போன்றே, இந்துமதத்திலும் பாவத்தைக் குறித்து இரண்டுவிதமான எண்ணங்கள் உண்டு. சிலசமயங்களில் பாவம் அறியாமை என்றும் புரிந்துகொள்ளப்படுகிறது. இந்துமத விளக்கத்தின்படி ஒருவர் உண்மை நிலையை பார்க்காமலோ ,புரிந்துகொள்ளாமலோ இருப்பதும் பாவம் என்று அறியப்படுகிறது. அதே வேளையில், 'பாவம்' என்றால் ஒழுக்கநெறி பிழை என்கின்ற தார்ப்பரியமும் உண்டு. வேண்டுமென்றே தீமையை விளைவிப்பது, ஆன்மிக அல்லது இயற்கை விதியை மீறுவது அல்லது தவறான காரியங்களை விரும்புவது, இவைகளெல்லாம் பாவம் என்று அறியப்படுகிறது. ஆனாலும், பாவத்தை பற்றிய ஒழுக்கநெறி சார்ந்த விளக்கம் ஒழுக்கநெறி பிழையை சுட்டிக்காட்டுவதால் ஒரு உண்மையான பரிகாரம் அவசியமாகிறது. எங்கிருந்து பரிகாரம் வரும்? கர்மத்தின் அடிப்படையிலான கொள்கைகளை கடைபிடிப்பதால் பரிகாரம் உண்டாகுமா? கர்மம் ஆட்சார்பற்றதும் ஒழுக்கநெறிக்கு அப்பாற்பட்டதாயும் உள்ளது. நற்காரியங்களை செய்து ஒருவேளை தராசில் சமநிலையை கொண்டுவரலாம், ஆனால் ஒட்டுமொத்தமாக பாவத்தை அகற்றமுடியாது. கர்மம் அல்லது முன்வினை கொள்கையானது ஒழுக்கப்பிழை நீதிநெறியின் அடிப்படையில் எந்த சூழமைவில் நிகழ்கின்றது என்பதனை தெளிவுப்படுத்த தவறுகிறது. உதாரணத்திற்கு, தனிமையில் பாவம் செய்யும்பொழுது நாம் யாரை காயப்படுத்துகிறோம்? அதனால் பாதிக்கப்படுவது யார்? கர்மம் ஆட்சார்பற்றதாய் இருப்பதால் எதை குறித்தும் அது கவலைப்படுவதில்லை. உதாரணத்திற்கு, ஒரு மனிதன் இன்னொரு மனிதனின் மகனை கொலைசெய்கிறார் என்று வைத்துக்கொள்வோம். பாதிக்கப்பட்ட மனிதருக்கு இவர் பணத்தையோ, சொத்தையோ, அல்லது தன்னுடைய சொந்த மகனையோ கொடுக்க முன்வரலாம். ஆனால், செய்த கொலையை திருப்பமுடியாதே. ஏப்பேர்ப்பட்ட நிவாரணமும் அந்த பாவத்தை ஈடுசெய்ய முடியாது. சிவன் அல்லது விஷ்ணுவை பூஜிப்பதினால் அல்லது வேண்டுவதினால் பரிகாரம்

*கிடைக்குமா? அந்த தெய்வங்கள் ஒருவேளை மன்னிப்பை அருளினாலும், அந்தப் பாவத்திற்கான கடன் செலுத்தப்படாமல் இருக்குமே. அது ஒரு பெரிய விஷயம் இல்லை என்று கருதி அவர்களுடைய தெய்வங்கள் அந்தப் பாவத்தை மன்னித்து மோட்சக் கதவுகளை அவர்களுக்காக திறந்துவைக்கலாம்.*

*ஆனால் கிறிஸ்தவத்தில் பாவம் என்பது தேவன் என்கின்ற நபருக்கு விரோதமாக இழைக்கப்படும் முதலும் கடைசியுமான குற்றம் என்று அறியப்படுகிறது. ஆதாம் காலத்திலிருந்தே மனிதர்கள் பாவப் பிறவிகளாய் இருந்துள்ளனர். பாவம் யதார்த்தமானது, மனிதனுக்கும், தேவனுக்குமிடையே பெரிய இடைவெளியை உண்டாக்குகின்றது. பாவம் நியாயத்தை வேண்டுகிறது. அதே வேளையில் நாம் சரிசமமான அல்லது கூடுதலான நற்பணிகளை செய்து அதனை ஈடுகட்ட முடியாது.*

*ஒருவருடைய நற்பணிகள் அவருடைய தீயசெயல்களைவிட பத்து மடங்கு கூடுதலாய் இருந்தாலும், அந்த மனிதனுடைய மனசாட்சியில் இன்னும் தீமை குடிகொண்டிருக்கும். அப்படியானால், எஞ்சியுள்ள தீயசெயல்கள் என்னவாகும்? அது ஒன்றும் பெரிய விஷயமில்லை என்று கருதி அவைகள் அப்படியே மன்னிக்கப்படுமா? மோட்சத்தை அனுபவிக்கும் பாக்கியம் அவர்களுக்கு கிடைக்குமா? இல்லை யாருக்கும் எந்த பிரச்சனையும் இல்லாததால் இவைகள் வெறும் மாயையா? இதிலே எந்த ஒரு தெரிந்தெடுத்தலும் சரியானதன்று. மாயையைப் பற்றி பார்க்கும்போது, பாவம் மிகவும் யதார்த்தமான ஒன்றாய் நமக்கு காணப்படுவதால் அதனை மாயை என்று எளிதில் தள்ளிவடமுடியாது. பாவசுபாவத்தைப் பற்றி கவனிக்கும்போது, நேர்மையாக நாம் நம்மை ஆராய்ந்திட்டால் நாமெல்லாரும் பாவம் செய்துள்ளோம் என்பதை அறிந்துகொள்வோம். மன்னிப்பைக் குறித்து கவனிக்கும்போது, எந்தவொரு விலைக்கிரயமுமின்றி பாவத்தை அப்படியே மன்னிப்பது பாவத்தை ஒரு பொருட்டென்று கருதாதது போலாகிவிடும். அது தவறு என்று நாம் அறிந்திருக்கிறோம். மோட்சத்தை பற்றிய விஷயத்தில்,*

*பாவம் நுழைவதற்கான வாசல் அடைபடும் வரையில் மோட்சம் மோட்சமாகவே இராது. ஆகவே கர்மம் அல்லது முன்வினையின் தராசு நம்மை பாவ இருதயமுள்ளவர்ளாயும், சரி மற்றும் தவறு என்பவைகளின் மதிப்பீடுகளை மீறினவர்களாயும் விட்டுவிடுகிறது. கடைசியில், ஒன்று மோட்சம் நம்மை ஏற்றுக்கொள்ளக்கூடது, அப்படியும் உள்ளே வருவதற்கு அது இடங்கொடுத்தாலும் அது ஒரு பூரணமான இடமாய் அமையாது.*

*கிறிஸ்தவத்திலோ, எல்லா பாவங்களுக்கும் தண்டனை கொடுக்கப்பட்டுவிட்டது. அது எப்படியெனில், சிலுவையில் தன்னை பலியாய் கொடுத்த கிறிஸ்து நம்முடைய ஒட்டுமொத்த பாவத்தின் தண்டனையை தன்மீது ஏற்று அக்கடனைத் தீர்த்தார். தேவன் மனிதனானார், பூரணமான வாழ்க்கையை வாழ்ந்தார், நமக்கு வரவேண்டிய பாவத்தண்டனையை சிலுவை மரணத்தில் அவர் ஏற்றார். நம் சார்பாக, நமக்கு பதிலாக, நம்மை மூடும்படிக்கு, பரிகாரபலியாக அவர் சிலுவையில் அறையப்பட்டார்.*

*மரணமும் அவரை ஜெயிக்கமுடியாது என்பதனை நிரூபிக்கும் வகையில் அவர் மரணத்திலிருந்து உயிருடன் எழுந்தார். மேலும், நித்திய ஜீவனுக்கேதுவான அதே உயிர்த்தெழுதலை தன்னை தேவனாகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு அவர்மேல் நம்பிக்கை வைக்கும் ஒவ்வொருவருக்கும் அவர் வாக்களிக்கிறார் (ரோமர் 3:10, 23, 6:23, 8:12, 10:9-10, எபேசியர் 2:8-9, பிலிப்பியர் 3:21)*

*நிறைவாக, கிறிஸ்தவத்தில் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை அறிந்துள்ளோம். ஒரு நொடிப்பொழுது அனுபவத்திலோ, நம்முடைய நற்பணிகளின் கொண்டுவரும் புண்ணியத்திலோ, பக்திமிகு தியானத்திலோ, "இருப்பதாய் நம்புகிறேன்" என்று நம்முடைய விசுவாசத்தை பொய்யான தெய்வத்தின்மீதோ நாம் வைக்கவேண்டிதில்லை. உண்மையானவரும் உயிரோடிருக்கிற தேவனும், வரலாற்றில் வேரூன்றியுள்ள விசுவாசமும், தேவனைக்*

*குறித்த நிலையான, சோதிக்கத்தக்க வெளிப்பாடும் (வேதவசனம்), நெறிசார்ந்த வாழ்க்கையை பற்றிய இறையியல் அடிப்படையும், மோட்சலோகத்தில் (பரலோகத்தில்) தேவனோடு வாசம்பண்ணக்கூடிய ஒரு நிலையான வசிப்பிடமும் நமக்கு உண்டு.*

*அப்படியானால், இது உங்களுக்கு என்னவாய் தோன்றுகிறது? இயேசுவே முழுமுதல் சத்தியம், பூரணமான யதார்த்தம்! இயேசுவே நம்முடைய பாவங்களுக்கான பூரணமான பலி. அவருடைய சிநேகிதர்களாகிய நமக்கு தன் ஜீவனையே கொடுத்த இயேசுவை நமது இரட்சகர் என்று விசுவாசித்து, அவர் நமக்கு அருளும் வெகுமதியை (யோவான் 1:12) அப்படியே பெற்றுக்கொள்ளும்போது தேவன் நமக்கு மன்னிப்பையும், இரட்சிப்பையும் அளிக்கிறார்.*

*உங்களுடைய நம்பிக்கையை இயேசுவின்மேல் வைத்து, உங்களுடைய ஒரே இரட்சகராக அவரை ஏற்றுக்கொள்ளும்போது, பரலோகத்தில் நித்திய மகிழ்ச்சிக்கான முழு நிச்சயத்தை பெறுவீர்கள். தேவன் உங்கள் பாவங்களை மன்னித்து, உங்கள் ஆத்துமாவை சுத்தமாக்கி, உங்கள் ஆவியை புதுப்பித்து இப்பூவுலகில் பரிபூரணமான வாழ்க்கையையும், மறுஉலகில் நித்திய சந்தோஷத்தையும் உங்களுக்கு அருளுவார். இப்பேர்ப்பட்ட விலையேறப்பெற்ற வெகுமதியை நாம் எப்படி புறக்கணிக்கலாம்? தம்மையே பலியாய் கொடுத்து நம்மேல் அன்புவைத்த தேவனுக்கு நாம் எப்படி நம்முடைய முதுகை காட்டலாம்?*

*ஒரு வேளை, இப்போதும் நீங்கள் நம்புவதை குறித்த ஒரு நிச்சயம் உங்களுக்கு இல்லையெனில், பின்வரும் பிரார்த்தனையை ஏறெடுக்கம்படி உங்களை கேட்டுக்கொள்கிறோம், "தேவனே, உண்மை எதுவோ அதை நான் அறிந்துகொள்ள எனக்கு உதவிடும், தவறானதை வகையறுக்க உதவிடும். இரட்சிக்கப்படுவதற்கான சரியான வழியை தெரிந்தெடுக்க உதவிடும்." அப்படிப்பட்ட பிரார்த்தனையை தேவன் எப்போதும் கனப்படுத்துவார்.*

*இயேசு கிறிஸ்துவை உங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்பினால், வார்த்தைகளை கொண்டோ உள்ளத்தின் உணர்வுகளைகொண்டோ தேவனிடம் பேசுங்கள். இயேசு கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பின் வெகுமதியை பெற்றுக்கொள்கிறேன் என்று அவரிடம் சொல்லுங்கள்.*

*ஒரு பிரார்த்தனையை நீங்கள் ஏறெடுக்க விரும்பினால், இதோ உங்களுக்கான மாதிரி: "தேவனே, நீங்கள் என்மீது காட்டின அன்பிற்காய் நன்றி. எனக்காக உங்களையே பலியாய் தந்தமைக்காய் நன்றி. எனக்கு மன்னிப்பையும் இரட்சிப்பையும் அளித்ததற்காய் நன்றி. இயேசுவின் நாமத்தில் இரட்சிப்பின் வெகுமதியை நான் பெற்றுக்கொள்கிறேன். இயேசுவை என்னுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்கிறேன், ஆமென்!*

# 63. நான் ஒரு முஸ்லீம், கிறிஸ்தவனாக மாறுவதை நான் ஏன் கருத்தில் கொள்ள வேண்டும்?

*உண்மைக்கிறிஸ்தவர்கள் ஈசா/இயேசுவைப் பின்பற்றுபவர்கள் ஆவர். குரானில் இயேசுவைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிற படியால், உண்மையான முஸ்லீம்கள் ஈசாவின் போதனைகளைக் கற்று அவற்றிற்கு கீழ்ப்படிய வேண்டும் (சூரா3:48- 49; 5:46). ஈசாவைக் குறித்து குரான் சொல்வது என்ன?*

*# அல்லா ஈசாவை அனுப்பி, பரிசுத்த ஆவியினால் அவருக்கு உதவி செய்தார்(சூரா.2:87)*

*# ஈசாவை அல்லா உயர்த்தினார் (சூரா 2:253)*

*# ஈசா நீதிமானாகவும் மற்றும் பாவமில்லாதவராகவும் இருந்தார்(சூரா 3:46; 6:85; 19:19)*

*# ஈசா மரித்ததிலிருந்து உயிரோடு எழுந்தார் (சூரா 19:33ҧ4)*

*# ஒரு மதத்தை ஸ்தாபிக்கும்படி ஈசாவுக்கு அல்லா கட்டளையிட்டார் (சூரா 42:13)*

*# ஈசா பரலோகத்திற்கு (சொர்க்கத்திற்கு) ஏறிச் சென்றார்( சூரா 4:157க58)*

**வேதாகமம் - இயேசுவின் வார்த்தை**

*ஈசாவின் சீடர்களால் இஞ்சிலில்( நற்செய்தி நூல்) அவருடைய போதனைகள் எழுதிவைக்கப் பட்டுள்ளது.ஈசா மற்றும் அவருடைய செய்தியில் நம்பிக்கை வைக்கும்படிக்கு அல்லாவினால் சீடர்கள் ஏவப்பட்டனர் என்று சூரா 5:111 குறிப்பிடுகிறது. அல்லாவின்*

உதவியாளர்களாக (சூரா 61:6,14), ஈசாவின் சீடர்கள் அவருடைய போதனைகளை துல்லியமாக பதிவுசெய்திருப்பர்.

தோரா(Torah) மற்றும் இன்ஜிலையும் (Gospels) நிலைநிறுத்தி அவ்விரண்டிற்கும் கீழ்படிய வேண்டுமென்றும் குர்ஆன் முஸ்லீம்களுக்கு போதிக்கிறகிறது (சூரா 5:44ഋ8). நற்செய்தி நூல்கள் திருத்தப்பட்டிருக்குமானால், முகமதுவுக்கு இந்தப் போதனை வழங்கப்பட்டிருக்காது. ஆகவே, முகமதுவின் காலத்தில் இருந்த நற்செய்தி நூல்களின் பிரதிகள் நம்பத்தக்கவையாகவும் துல்லியமானவையாகவும் இருந்தன. முகமது வாழ்ந்த காலத்துக்கும் 450 ஆண்டுகளுக்கு முந்திய காலத்தில் உள்ள நற்செய்தி நூல் பிரதிகள் உள்ளன. மிகவும் பழமையான பிரதிகள், முகமதுவின் காலத்தில் உள்ள பிரதிகள் மற்றும் முகமதுவின் காலத்துக்கு பிந்தினவையாக குறிக்கப்பட்டிருக்கும் கைப்பிரதிகள் இவற்றை ஒப்பிட்டுப்பார்க்கும் போது , நற்செய்தி நூல்களின் அனைத்துப் பிரதிகளும் இயேசு மற்றும் அவருடைய போதனை குறித்த தங்கள் சாட்சியில் முரñபாடற்றவையாக இருக்கின்றன. நற்செய்தி நூல்கள் திருத்தப்பட்டிருக்கின்றன என்று எந்தச் சான்றும் நிரூபிக்க முடியாது. ஆகவே, இயேசுவின் எல்லா போதனைகளும் வேதாகமத்தில் துல்லியமாக பாதுகாக்கப்பட்டுள்ளன.

### இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல்

நற்செய்தி நூல்கள் உண்மை என்று அறிந்து கொள்ளுதல் போன்ற காரியங்கள் இயேசுவைக் குறித்து என்ன போதிக்கின்றன? இயேசு தான் கொலை செய்யப்பட்டு, மரித்து பின்பு மரித்தோரிலிருந்து எழும்புவேன் என்று கூறி தனது வாழ்வு நிகழ்வுகளை முன் அறிவித்ததை நற்செய்தி நூல்கள் பதிவுசெய்திருக்கிறது (மத்தேயு 20:19). இயேசு முன் அறிவித்ததைப் போலவே அவை நடந்ததை நற்செய்தி நூல்கள் பதிவுசெய்திருக்கின்றன (மத்தேயு 27- 28; மாற்கு 15,16; லூக்கா 23,24; யோவான் 19- 21)

*பாவமில்லாத இயேசு கொல்லப்படுவதற்காக தன்னைத்தான் ஒப்புக்கொள்ள வேண்டும்? நீங்கள் உங்கள் நண்பனுக்காக உயிரைக்கொடுக்கும் அன்பைவிட பெரிய அன்பு வேறு இல்லை என்று இயேசு சொன்னார் (யோவான் 15:13). தனது தீர்க்கதரிசி தவறாக நடத்தப்படுவதற்கும், கொல்லப்படுவதற்கும் தேவன் ஏன் அனுமதித்தார்? நமக்காக தியாக பலியாக இயேசுவை அனுப்புமளவுக்கு அவர் நம்மை அன்புகூர்ந்தார் என்று யோவான் 3:16 சொல்கிறது.*

**இயேசு நமது பாவங்களுக்காக பலியானார்**

*இயேசு நமக்காக தன்னுடைய உயிரை ஏன் தியாகம் செய்யவேண்டும்? இது தான் இஸ்லாமிற்கும் கிறிஸ்தவத்திற்கும் இடையே உள்ள மிக முக்கியமான வித்தியாசம் ஆகும். நம்முடைய தீயச் செயல்களை விட நல்ல செயல்கள் அதிகமாக உள்ளனவா இல்லையா என்பதைப்பார்த்து அல்லா நியாயம் தீர்ப்பார் என்று இஸ்லாம் போதிக்கிறது. தீய செயல்களை விட நற்செயல்களைச் அதிகமாக செய்ய வாய்ப்பு உண்டு என்றாலும் கூட, ஒரே ஒரு பாவத்தை செய்தவனைக் கூட பரலோகத்தில் அனுமதிக்க தேவனால் முடியாது. அவர் அவ்வளவு பரிசுத்தமானவராக இருக்கிறார் (யாக்கோபு2:10)பூரணமற்ற எதையும் பரிசுத்த தேவனால் பரலோகத்தில் அனுமதிக்கமுடியாது. நாமெல்லாரும் பாவம் செய்திருக்கிறோம் என்றும் அதனால் நாம் பரலோகத்திற்குள் நுழையமுடியாது என்பதை தேவன் அறிந்திருந்தார். நாம் மன்னிக்கப்படுவதற்கான ஒரே வழி பூரணமான ஒருவர் நமக்குப் பதிலாக மரித்து நமது பாவக்கடன்களை செலுத்தி தீர்ப்பதே என்பதை தேவன் அறிந்த்திருந்தார். தன்னால் மாத்திரமே அப்படிப்பட்ட மாபெரும் கிரயத்தை செலுத்த முடியும் என்பதை தேவன் அறிந்திருந்தார்.*

**நம்மை மீட்பதற்கான தேவனின் திட்டம்**

*ஆகவே, தேவன் ஒரு கன்னியிடம் பிறக்கும்படி தமது மகனை அனுப்பினார். தேவன் மரியாளுடன் பெற்றோர்களுக்குரிய உறவு வைத்திருì¸Å¢ø¨Ä. தேவனுடனான அவருடைய உறவு மற்றும் அவருடைய தெய்வீகத்தின் அடிப்படையில், இயேசு தேவகுமாரன் ஆவார்(யோவான் 1:1,14). தனது பாவமற்ற வாழ்க்கை, பரிபூரண செய்தி, பாவத்துக்காக மரணம் மற்றும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதல் போன்றவற்றால் இயேசு தன்னை தேவகுமாரன் என்று நிரூபித்தார்.*

*இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் மரணம் ஆகியவை உங்களுக்கு தரும் செய்தி என்ன? பாவத்திலிருந்து இரட்சிக்கும்படி இயேசுவை தங்கள் இரட்சகராக நம்புபவர்களுக்கு பாவத்திலிருந்த்து மீட்பை தேவன் அருளுகிறார். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருவனும் (தேவன்) பிதாவினிடத்தில் வரான்". என்று இயேசு சொன்னார்.*

*தேவனிடம் செல்லும் ஒரே வழி நானே என்பதை இயேசு தெளிவாக போதித்தார். இயேசுவின் மூலமாக மட்டுமே நாம் பரலோகம் சென்றடைய முடியும். தேவன் நம் பாவங்களை மன்னித்து, அவருக்காக வாழ உதவி செய்வார். அத்துடன் நித்திய வாழ்வையும் நமக்கு தருவார். இப்படிப்பட்ட விலையேறப்பெற்ற பரிசை நாம் எப்படி வேண்டாமென தள்ளிவிட முடியும்? தம்மைத்தாமே பலியாக ஒப்புக் கொடுக்குமளவுக்கு நம்மை அன்பு செய்த தேவனை எப்படி ஏற்றுக் கொள்ளாதிருக்க முடியும்?*

**ஒரு கிறிஸ்தவனாக மாறுதல்**

*சத்தியத்தைக் குறித்த உறுதி இல்லாதவர்களாக நீங்கள் இருந்தால், பின்வரும் ஜெபத்தை தேவனிடம் கூறுங்கள்: "தேவனே, தயவுசெய்து எனக்கு சத்தியத்தை வெளிப்படுத்தும். தவறாக இருப்பதை கண்டுகொண்டு அதை தள்ளிவிட உதவும். இரட்சிப்புக்கான சரியான*

வழிக்கு நேராக என்னை நடத்தும்." இப்படிப்பட்ட ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பார்.

இயேசுவை உங்கள் இரட்சகராக நம்பும்படிக்கும், அவரைப் பின்பற்றவும் தேவன் உங்களை நடத்துவாரெனில், இயேசுவின் மூலமாக வரும் இரட்சிப்பை தேவனிடம் கேளுங்கள்.. இங்கே ஒரு மாதிரி ஜெபம் தரப்பட்டிருக்கிறது. " தேவனே, நான் எனது பாவத்தை நேசிப்பதையும், எனது சொந்தக் கிரியைகளின் மூலம் சொர்க்கத்திற்கு சென்றடைய முயற்சிப்பதையும் விட்டுவிடுகிறேன். எனது பாவங்களுக்காக மரிக்கும்படி இயேசுகிறிஸ்துவை அனுப்பினதற்காகவும், அவரை மரித்தோரிலிருந்து உயிரோடெழுப்பினதற்காகவும் நன்றி. இயேசுவை நான் எனது சொந்த இரட்சகராக நம்புகிறேன். ஆண்டவரே உம்மை நேசிக்கிறேன், என்னை உம்மிடம் ஒப்புக் கொடுக்கிறேன். ஆமென்!"

# *64.* தேவனிடத்தில் நான் எப்படி சரியான நிலையைப் பெறமுடியும்?

*தேவனுடன் "சரியான" நிலையைப் பெறுவதற்கு, நாம் முதலில் "தவறு" என்ன என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு பதில் பாவம். "நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை" (சங்கீதம் 14:3). நாம் தேவனுடைய கட்டளைகளுக்கு எதிராக கலகம் செய்தோம்; "நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்தோம்" (ஏசாயா 53:6).*

*இதில் கெட்ட செய்தி என்னவென்றால், பாவத்தின் தண்டனை மரணம் என்பதுதான். "பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்" (எசேக்கியேல் 18:4). இதில் நமக்குள்ள ஒரு நற்செய்தியை என்னவெனில், அன்புள்ள தேவன் நமக்கு இரட்சிப்பை அளிக்க அவர் நம்மைப் பின்தொடர்ந்தார் என்பதுதான். "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்" என்று இயேசு தாம் இந்த உலகிற்கு வந்த நோக்கத்தை எடுத்துரைக்கிறார் (லூக்கா 19:10). மேலும் அவர் சிலுவையில் மரித்தபோது "முடிந்தது" என்று சொல்லி இயேசு தாம் எதற்காக இந்த உலகிற்கு வந்தாரோ அதனுடைய நோக்கம் நிறைவேறியாயிற்று என்பதையும் அறிவித்திருக்கிறார் (யோவான் 19:30).*

*தேவனுடன் சரியான உறவு வைத்திருக்கிறேன் என்னும் காரியம் நீங்கள் உங்கள் பாவத்தை ஒப்புக்கொள்வதில் ஆரம்பிக்கிறது. அடுத்தபடியாக நீங்கள் உங்கள் பாவத்தை மனத்தாழ்மையோடு தேவனிடத்தில் அறிக்கையிடுவதில் அடங்கியிருக்கிறது (ஏசாயா 57:15). "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்" (ரோமர் 10:10).*

*விசுவாசத்தினால் இந்த மனந்திரும்புதல் வருகிறதாய் இருக்கவேண்டும் - குறிப்பாக இயேசுவின் சிலுவை மரணம் மற்றும் அற்புதமான அவரது உயிர்த்தெழுதல் ஆகியவைகளின் மேலுள்ள விசுவாசம். "கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்" (ரோமர் 10:9). இன்னும் அநேக வேத பகுதிகள் இந்த விசுவாசத்தின் தேவையைக் குறித்து கூறுகிறது. உதாரணமாக, யோவான் 20:27; அப்போஸ்தலர் 16:31; கலாத்தியர் 2:16; 3:11, 26; மற்றும் எபேசியர் 2: 8.*

*தேவனோடு சரியான நிலையில் இருக்கிறேன் என்று கூறுகிற காரியம் தேவன் உங்களுக்காக செய்த காரியத்திற்கு உங்களுடைய மறுபடியாக இருக்கிறது. அவர் உங்களுக்காக இரட்சகரை அனுப்பினார், அவர் உங்கள் பாவங்களை உங்களில் இருந்து நீக்கிப்போட சிலுவையில் பலியானார் (யோவான் 1:29). அவர் உங்களுக்கு வாக்குறுதியை அளிக்கிறார்: "கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக்கப்படுவான்" (அப்போஸ்தலர் 2:21).*

*மனந்திரும்புதலுக்கும் மன்னிப்பை பெற்றதற்கும் ஒரு அழகான உதாரணம், கெட்ட குமாரனின் உவமையாகும் (லூக்கா 15:11-32). இளைய மகன் அவனது தந்தை அவனுக்கு அளித்த பங்கை வெட்கக்கேடான பாவத்தில் வீணடித்தான் (வசனம் 13). அவன் தான் தவறு செய்ததை ஒப்புக்கொண்டபோது, அவன் தன் வீட்டுக்குத் திரும்ப தீர்மானித்தான் (வசனம் 18). அவன் இனி தன் தகப்பனுக்கு ஒரு மகனாக கருதப்பட மாட்டான் எனவும் எண்ணியிருந்தான் (வசனம் 19), ஆனால் அவன் அப்படி எண்ணியது தவறு. காரணம் அவனது தகப்பன் தன் கெட்டுப்போன மகன் திரும்பி வந்ததை கண்டு சந்தோஷப்பட்டதோடு இல்லாமல் அவனை இன்னும் அதிகமாய் நேசித்தார் (வசனம் 20). அந்த மகன் செய்த எல்லா தப்பிதங்களும்*

*அவனுக்கு மன்னிக்கப்பட்டன, கொண்டாட்டமும் ஏற்பாடானது (வசனம் 24). மன்னிப்பளிக்கும் வாக்குறுதி உட்பட தேவனுடைய எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதில் அவர் நல்லவராகவே இருக்கிறார். "நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்" (சங்கீதம் 34:18).*

*நீங்கள் தேவனோடு சரியான நிலையை வைத்துக்கொள்ள விரும்பினால், நீங்கள் ஜெபிக்க வேண்டிய ஒரு மாதிரி ஜெபம் இதோ. நீங்கள் ஜெபிக்கிற இந்த ஜெபமோ அல்லது இதுபோன்ற மற்ற ஜெபங்களோ உங்களை இரட்சிப்பது இல்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவில் நீங்கள் வைக்கிற நம்பிக்கை மட்டுமே உங்களை உங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கும். அவர்மேல் உங்களுக்கு இருக்கிற நம்பிக்கை மற்றும் அவரால் நீங்கள் பெற்றிருக்கிற இரட்சிப்பை வெளிப்படுத்துகிற ஒரு செயல் தான் இந்த ஜெபம். "ஆண்டவரே, நான் உமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறேன் என்றும் அதினிமித்தம் பாவத்திற்கான தண்டனையை அடைவதற்கு பாத்திரமாய் இருக்கிறேன் என்றும் அறிந்திருக்கிறேன். ஆனால் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து அவரில் நான் மன்னிப்பை பெறத்தக்கதாக நான் அடையவேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார் எனவும் அறிந்திருக்கிறேன். இரட்சிப்பிற்காக உம்மில் எனது பரிபூரண நமிக்கையை வைக்கிறேன். ஈவாகிய நித்திய ஜீவனுக்காக நீர் காண்பித்திருக்கிற அற்புதமான கிருபைக்காகவும் மன்னிப்பிற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன்! ஆமென்!"*

# 65. பரலோகத்திற்கு போகிறதற்கு ஒரே வழி இயேசு மட்டும்தானா?

*ஆம், பரலோகத்திற்கு போக ஒரே வழி இயேசு மட்டுமே. இத்தகைய பிரத்யேக அறிக்கை ஒருவேளை குழப்பத்தை ஏற்படுத்தலாம், ஆச்சரியத்தை தரலாம் அல்லது புண்படுத்தவும் செய்யலாம், ஆனால் இது உண்மையாக கூற்று. இரட்சிப்பு அடைவதற்கு இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறு வழியில்லை என்று வேதாகமம் மிகத்தெளிவாக போதிக்கிறது. யோவான் 14:6ல் இயேசுவே இதை கூறுகிறார்: "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்". அவர் பல வழிகளில் ஒரு வழி இல்லை மாறாக அவர் தான் ஒரே ஒரு வழி. நற்பெயர், சாதனை, சிறந்த அறிவு மற்றும் தனிப்பட்ட பரிசுத்ததன்மை ஆகியவற்றால் எந்த ஒரு நபரும் தேவனிடத்திற்கு வர முடியாது, இயேசு ஒருவர் மட்டும்தான் வழி. ஆம் இயேசுவைத் தவிர வேறு எந்த வழியாகவும் எவரும் பிதாவினிடம் வர இயலாது.*

*பரலோகம் செல்ல இயேசு மட்டுமே ஒரே வழி என்பதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இரட்சகராக இருக்கும்படிக்கு இயேசு "தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்" ஆகும் (1 பேதுரு 2:4). பரலோகத்திலிருந்து இறங்கி வந்தவரும் மீண்டும் ஏறிப்போனவரும் இயேசு ஒரே ஒருவர் மட்டுதான் (யோவான் 3:13). பரிபூரணமான மனித வாழ்வு வாழ்ந்த ஒரே ஒரு மனிதர் இயேசு ஒருவர் மட்டும்தான் (எபிரெயர் 4:15). பாவத்தினுடைய பரிகாரத்திற்கான ஒரே பலியாக பலியானவர் இயேசு ஒருவர் மட்டும்தான் (1 யோவான் 2:2; எபிரெயர் 10:26). நியாயப்பிரமாணத்தையும் தீர்க்கதரிசனங்களையும் நிறைவேற்றினவர் இயேசு ஒருவர் மட்டும்தான் (மத்தேயு 5:17). மரணத்தை என்றென்றுமாய் ஜெயித்த ஒரே மனிதன் இயேசு ஒருவர்*

*மட்டும்தான் (எபிரெயர் 2:14-15). தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் உள்ள ஒரே ஒரு மத்தியஸ்தர் இயேசு ஒருவர் மட்டும்தான் (1 தீமோத்தேயு 2:5). எல்லா நாமத்திற்கும் மேலான நாமம் தந்து தேவன் உயர்த்தின ஒரே மனிதன் இயேசு ஒருவர் மட்டும்தான் (பிலிப்பியர் 2: 9).*

*யோவான் 14: 6-ஐ தவிர மற்ற பல இடங்களிலும், இயேசு தாம் ஒருவரே பரலோகம் செல்லும் வழி என்று மொழிந்துள்ளார். மத்தேயு 7:21-27-ல் விசுவாசத்தின் பொருளாக அவர் தன்னையே முன்வைத்தார். அவர் மொழிந்த அவரது வார்த்தைகள் யாவும் ஜீவனுள்ளவை எனக்கூறினார் (யோவான் 6:63). அவரை விசுவாசிக்கிறவர்கள் யாவரும் நித்திய ஜீவனை அடைவார்கள் என்று அவர் வாக்குறுதி அளித்திருக்கிறார் (யோவான் 3:14-15). அவர் ஆடுகளுக்கு வாசல் (யோவான் 10:7); ஜீவ அப்பம் (யோவான் 6:35); உயிர்த்தெழுதல் (யோவான் 11:25). இயேசு ஒருவரை தவிர இப்படிப்பட்ட தலைப்புகளை வேறு ஒருவரும் உரிமை பாராட்டியது கிடையாது.*

*அப்போஸ்தலருடைய பிரசங்கங்கள் யாவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தையும் உயிர்த்தெழுதலையும் குறித்து மட்டுமே கவனம் செலுத்துகிறதாக இருந்தது. சனகெரிப் சங்கத்தோடு பேதுரு பேசியபோது, பரலோகத்திற்கு செல்லுவதற்கான ஒரே வழி இயேசு மட்டும்தான் என்று தெளிவாக கூறியுள்ளார்: "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்" (அப்போஸ்தலர் 4:12) . அந்தியோகியாவிலுள்ள ஒரு ஜெப ஆலயத்தில் பவுல் பேசியபோது, இயேசுவே இரட்சகர் என முழக்கமிட்டார்: "இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும், மோசேயின் நியாயப்பிரமாணத்தினாலே நீங்கள் எவைகளினின்று விடுதலையாகி*

நீதிமான்களாக்கப்படக்கூடாதிருந்ததோ, விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது" (அப்போஸ்தலர் 13:38-39). அப்போஸ்தலனாகிய யோவான் திருச்சபைக்கு எழுதுகிறபோது, நம்முடைய பாவமன்னிப்பு கிறிஸ்துவின் நாமத்தில் மட்டுமே தெளிவாக குறிப்பிடுகிறார்: "பிள்ளைகளே, அவருடைய நாமத்தினிமித்தம் உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன்" (1 யோவான் 2:12). இயேசுவையல்லாமல் வேறொருவராலும் பாவத்தை மன்னிக்கமுடியாது.

பரலோகத்தில் நித்திய காலமாக வாழ்கிற நித்திய ஜீவன் அருளப்படுவது கிறிஸ்து மூலமாக மட்டுமே ஆகும். இயேசு இப்படியாக ஜெபம் செய்தார்: "ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்" (யோவான் 17:3). இந்த இலவச பரிசாகிய இரட்சிப்பினை பெறுவதற்கு, நாம் இயேசுவை மட்டுமே நோக்கி பார்க்கவேண்டும். நமது பாவ கடனை செலுத்துவதற்காக இயேசு சிலுவையில் மரித்தார் என்றும் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார் என்றும் நாம் நம்ப வேண்டும். “அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை" (ரோமர் 3:22).

இயேசுவினுடைய ஊழியத்தின் ஒரு கட்டத்தில், அவரைப் பின்பற்றின கூட்டத்தாரில் பலர் அவரைவிட்டு திரும்பி வேறொரு இரட்சகரை தேடி போய்விட்டார்கள். அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: “நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ” என்றார்" (யோவான் 6:67). அப்பொழுது பேதுரு அளித்த பதில் சரியான பதிலாக இருந்தது: “ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று

*நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்" (யோவான் 6:68-69). பேதுரு பகிர்ந்துகொண்ட விசுவாசதைப்போலவே இயேசு கிறிஸ்துவில் மட்டுமே நித்திய ஜீவன் இருக்கிறது என நாம் அனைவரும் பகிர்ந்து கொள்வோமாக!*

# 66. இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள் என்பதன் அர்த்தம் என்ன?

*நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா? இந்த கேள்வியை சரியாக புரிந்துகொள்ள நீங்கள் முதலில் "இயேசு கிறிஸ்து", "சொந்த", மற்றும் "இரட்சகர்" ஆகிய சொற்களின் அர்த்தத்தை புரிந்துகொள்ள வேண்டும்.*

*இயேசு கிறிஸ்து யார்? அநேக மக்கள் இயேசு கிறிஸ்துவை ஒரு நல்ல மனிதனாக, மாபெரும் போதகராக அல்லது தேவனுடைய ஒரு தீர்க்கதரிசியாக ஏற்றுக்கொள்வர். இயேசு கிறிஸ்துவை பொறுத்தமட்டில் இந்த விஷயங்கள் யாவும் சரியானவைகள் தான், ஆனாலும் இயேசு மெய்யாகவே யார் அவர் எப்படிப்பட்டவர் என்பதை இவைகள் முழுமையாக வரையறுத்து கூறவில்லை. இயேசு மாம்சத்தில் வந்த தேவன் மற்றும் மனித உருவில் வந்த தேவன் என்று வேதாகமம் கூறுகிறது (யோவான் 1:1, 14-ஐ பாருங்கள்). நமக்கு போதித்து, நம்மை குணமாக்கி, நம்மை திருத்தி, நம்மை மன்னித்து, நமக்காக மரிக்கும்படியாக தேவன் இந்த உலகத்தில் வந்தார்! இயேசு கிறிஸ்து தேவன், சிருஷ்டிகர் மற்றும் பரமாதிகாரமுள்ள ஆண்டவராக இருக்கிறார். இந்த இயேசுவை நீங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா?*

*ஒரு இரட்சகர் என்றால் என்ன, நமக்கு ஏன் ஒரு இரட்சகர் வேண்டும்? நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம் என்றும் நாம் எல்லோரும் தீய செயல்களை செய்திருக்கிறோம் என்றும் வேதாகமம் சொல்கிறது (ரோமர் 3:10-18). நம்முடைய பாவத்தின் விளைவாக, நாம் தேவனுடைய கோபத்தையும் நியாயத்தீர்ப்பையும் பெற்றுக்கொள்ள தகுதியுள்ளவர்கள் ஆனோம். நாம் செய்த பாவத்திற்கான நீதியான தண்டனை என்னவென்றால், அளவில்லாத நித்திய தேவனிடத்தில் இருந்து நிதியமான தண்டனை ஆகும் (ரோமர்*

*6:23; வெளிப்படுத்துதல் 20:11-15). அதனால்தான் நமக்கு ஒரு இரட்சகர் தேவையாக இருக்கிறது!*

*இயேசு கிறிஸ்து இப்பூமியில் வந்து நம் ஸ்தானத்தில் மரித்தார். இயேசுவின் மரணம் நம்முடைய பாவங்களுக்காக செலுத்தி முடித்த எல்லையற்ற முடிவில்லாத தொகையாகும் (2 கொரிந்தியர் 5:21). இயேசு நம்முடைய பாவங்களுக்கான தண்டனையின் விலைக்கிரயத்தை செலுத்தும்படியாக மரித்தார் (ரோமர் 5:8). இயேசு விலைக்கிரயத்தை கொடுத்து தீர்த்தபடியினால் நாம் கொடுக்க வேண்டியதில்லை. மரித்தோரிலிருந்து இயேசு உயிர்த்தெழுந்தபோது, நம்முடைய பாவங்களுக்காக செலுத்தப்படவேண்டிய தொகையை செலுத்த போதுமானவையாக இருந்தது என்று நிரூபித்தார். அதனால்தான் இயேசு ஒரே ஒருவர் மட்டும்தான் இரட்சகர் (யோவான் 14:6, அப்போஸ்தலர் 4:12)! இயேசுவை நீங்கள் உங்களுடைய இரட்சகராக நம்புகிறீர்களா?*

*இயேசு உங்கள் "சொந்த" இரட்சகராக இருக்கிறாரா? பலர் கிறிஸ்தவத்தை சபையில் கலந்துகொள்பவர்கள், சில சடங்குகளை ஆசரிப்பது, மற்றும் / அல்லது சில பாவங்களைச் செய்யாமல் இருப்பதுதான் என கருதுகின்றனர். அது கிறிஸ்தவம் அல்ல. உண்மையான கிறிஸ்தவம் என்பது இயேசு கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவு அல்லது ஐக்கியத்தில் இருப்பதாகும். உங்கள் சொந்த இரட்சகராக இயேசுவை ஏற்றுக்கொள்வதன் மூலம் உங்கள் சொந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் இயேசுவின்மேல் வைக்கிறீர்கள். மற்றவர்களின் விசுவாசத்தால் யாரும் இரட்சிக்கப்படுவதில்லை. சில நற்செயல்களை செய்வதன் மூலம் யாரும் மன்னிக்கப்படுவதில்லை. இரட்சிக்கப்படுவதற்கான ஒரே வழி இயேசுவை உங்கள் வாழ்வில் இரட்சகராக தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்வதாகும். மேலும் உங்களுடைய பாவங்களுக்கான தண்டனையின் விலைக்கிரயத்தை செலுத்தும்படியாக அவர் மரித்தார் என்றும் அதை தம்முடைய உயிர்த்தெழுதலினாலே உறுதிபடுத்தினார் என்றும் பரிபூரணமாக*

*நம்பவேண்டும் (யோவான் 3:16). இயேசு தனிப்பட்ட முறையில் உங்கள் இரட்சகராக இருக்கிறாரா?*

*நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் தனிப்பட்ட அல்லது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள விரும்பினால், பின்வரும் வார்த்தைகளை தேவனிடம் கூறுங்கள். நீங்கள் ஜெபிக்கிற இந்த ஜெபமோ அல்லது இதுபோன்ற மற்ற ஜெபங்களோ உங்களை இரட்சிப்பது இல்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவில் நீங்கள் வைக்கிற நம்பிக்கை மட்டுமே உங்களை உங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கும். அவர்மேல் உங்களுக்கு இருக்கிற நம்பிக்கை மற்றும் அவரால் நீங்கள் பெற்றிருக்கிற இரட்சிப்பை வெளிப்படுத்துகிற ஒரு செயல் தான் இந்த ஜெபம். "ஆண்டவரே, நான் உமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறேன் என்றும் அதினிமித்தம் பாவத்திற்கான தண்டனையை அடைவதற்கு பாத்திரமாய் இருக்கிறேன் என்றும் அறிந்திருக்கிறேன். ஆனால் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து அவரில் நான் மன்னிப்பை பெறத்தக்கதாக நான் அடையவேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார் எனவும் அறிந்திருக்கிறேன். இரட்சிப்பிற்காக உம்மில் எனது பரிபூரண நமிக்கையை வைக்கிறேன். எனக்கு அருளிய இலவச பரிசாகிய நித்திய ஜீவனுக்காக நீர் காண்பித்திருக்கிற அற்புதமான கிருபைக்காகவும் மன்னிப்பிற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன்! ஆமென்!"*

# 67. கிறிஸ்தவன் என்றால் என்ன?

*ஒரு அகராதியில் கிறிஸ்தவன் என்பதற்கு கொடுக்கப்பட்ட விவரணம் மற்றும் அர்த்தம் என்னவெனில், "இயேசுவில் விசுவாசம் வைத்து அவரையே கிறிஸ்துவாக ஏற்றுக்கொள்பவர் அல்லது இயேசுவின் போதனைகளின் அடிப்படையில் இயேசுவை விசுவாசிக்கிற நபர் அல்லது இயேசுவின் போதனைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு மதத்தைப் பின்பற்றுகிறவர்" என்பதாகும். இப்படி பல அகராதிகள் பல நிலைகளில் வேதாகமம் வரையறுத்து கூறுகிறதுபோல அல்லாமல் வித்தியாசமான நிலைகளில் அர்த்தங்களை கொண்டு வருகின்றன. புதிய ஏற்பாட்டில் "கிறிஸ்தவர்கள்" என்கிற வார்த்தை மூன்று முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (அப்போஸ்தலர் 11:26; 26:28; 1 பேதுரு 4:16). இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிய சீஷர்கள் முதன்முதலாக அந்தியோகியாவில் தான் "கிறிஸ்தவர்கள்" என்று அழைக்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 11:26). ஏனென்றால் அவர்களுடைய நடத்தை, செயல்கள், பேச்சு ஆகியவை கிறிஸ்துவைப் போலவே இருந்தன. "கிறிஸ்தவன்" என்கிற வார்த்தையின் எழுத்தியல் பிரகாரமான அர்த்தம் "கிறிஸ்துவை சேர்ந்தவர்கள்" அல்லது "கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள்" என்பதாகும்.*

*துரதிருஷ்டவசமாக, காலப்போக்கில், "கிறிஸ்தவன்" என்னும் வார்த்தை அதன் முக்கியத்துவத்தை இழந்து விட்டது. உயர்ந்த தார்மீக மதிப்பைக் கொண்டுள்ளவர்கள், மத சம்பந்தப்பட்ட நிலையில் மெய்யாகவே கிறிஸ்துவை பின்பற்றாதவர்கள் கூட இப்படி அழைக்கப்படலாயினர். அநேகர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கிறார்கள், காரணம் அவர்கள் கிறிஸ்தவ சபைக்கு போகிறார்கள் அல்லது கிறிஸ்தவ நாடுகளில் வாழ்கிறார்கள். சபைக்கு போகிறதினாலோ அல்லது நல்ல மனிதராக வாழ்கிறதினாலோ ஒருவரை கிறிஸ்தவராக்கிவிடாது. ஒரு கிறிஸ்தவ சபையில்*

உறுப்பினராக இருப்பதினால், கூட்டங்களில் தொடர்ந்து கலந்து கொள்ளுதலினால், சபையினுடைய வேலைக்கு கொடுப்பதினால் நீங்கள் கிறிஸ்தவராகி விடமுடியாது.

நாம் செய்யும் நற்செயல்கள் ஒருபோதும் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு தேவனோடு நாம் ஐக்கியப்பட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட வழி வகுக்காது என வேதாகமம் கூறுகிறது. "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்" (தீத்து 3:5). ஒரு கிறிஸ்தவன் என்பவன் தேவனாலே மறுபடியும் பிறந்தவனாவான் (யோவான் 3:3; யோவான் 3:7; 1 பேதுரு 1:23) மற்றும் இயேசு கிறிஸ்துவில் விசுவாசமும் நம்பிக்கையும் வைத்தவனாவான். "கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபேசியர் 2:8).

ஒரு உண்மையான கிறிஸ்தவன் என்பவன், இயேசு கிறிஸ்துவின் ஆள்தன்மை மற்றும் அவரது செயல்களில் முழு விசுவாசம் மற்றும் நம்பிக்கையை வைத்தவனாவான். மேலும், அவரது சிலுவை மரணம் மற்றும் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்த அவருடைய உயிர்த்தெழுதலிலும் விசுவாசம் வைக்கிறவனாய் இருப்பான். "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" என்று யோவான் 1:12 கூறுகிறது. ஒரு உண்மையான கிறிஸ்தவனின் அடையாளம் என்னவென்றால், அவன் மற்றவர்களை நேசிக்கிறவனாகவும் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிகிறவனாகவும் இருப்பான் (1 யோவான் 2:4, 10). ஒரு உண்மையான கிறிஸ்தவன் மெய்யாகவே தேவனுடைய பிள்ளையாக

*இருக்கிறான், தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கமாக இருக்கிறான் மற்றும் இயேசு கிறிஸ்துவில் புதிய ஜீவனை பெற்றவனாகவும் இருக்கிறான்.*

# 68. இரட்சிப்பின் வழி என்றால் என்ன?

*நீங்கள் பசியுடன் இருக்கிறீர்களா? சரீரபிரகாரமான பசி அல்ல, மாறாக உங்கள் வாழ்கையில் ஏதோ ஒரு காரியத்தைக் குறித்ததான ஆவல் இருக்கிறதா? உங்களது ஆழ்மனதில் உங்களை இதுவரையில் திருப்திபடுத்தாத காரியங்கள் ஏதாகிலும் உண்டா? அப்படியானால் இயேசுவே அதற்கு வழி! "ஜீவ அப்பம் நானே என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்" என்று யோவான் 6:35ல் இயேசு கூறியிருக்கிறார்.*

*நீங்கள் குழப்பம் அடைந்திருக்கிறீர்களா? உங்களது வாழ்க்கையின் பாதை அல்லது நோக்கம் தெரியாமல் இருக்கிறீர்களா? யாரோ ஒருவர் எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டது போலவும் அதினிமித்தம் நீங்கள் அந்த பொத்தானை கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டதாகவும் தோன்றுகிறதா? அப்படியானால் இயேசுவே அதற்கு வழி! "நான் உலகிற்கு ஒளியாயிருக்கிறேன் என்னை பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியைப் அடைந்திருப்பான்" என்று இயேசு கூறியிருக்கிறார் (யோவான் 8:12).*

*உங்கள் வாழ்க்கையில் வெளியேவரமுடியாதபடி நீங்கள் அடைபட்டுப்போனதுபோல உணர்கிறீர்களா? அநேக வழிகளை நீங்கள் முயற்சித்தும் அவைகள் யாவும் வெறுமையாகவும் அர்த்தமற்றதாகவும் இருக்கின்றனவா? உங்கள் வாழ்வை ஏதாவது ஒரு வழியில் நிறப்பவேண்டும் என்று எதிர் பார்க்கிறீர்களா? அப்படியானால் இயேசுவே அதற்கு வழி! நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும்சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" என்று இயேசு அறிவித்தார் (யோவான் 10:9).*

*மற்றவர்கள் எப்பொழுதும் உங்களை வெறுக்கிறார்களா? உங்களுடைய உறவுகள் ஆழமில்லாமல் வெறுமையாக இருக்கிறதா? கண்டவர்கள் யாவரும் உங்கள்மேல் ஆதிக்கம் செலுத்துகிறதாக தோன்றுகிறதா? அப்படியானால் இயேசுவே அதற்கு வழி! "நானே நல்ல மேய்ப்பன்: நல்லமேய்ப்பன் ஆடுகளுக்குக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்" என்று இயேசு சொன்னார் (யோவான் 10:11, 14, 15).*

*மரணத்திற்கு பிறகு என்ன சம்பவிக்கும் என ஆச்சரியப்படுகிறீர்களா? வீணான அர்த்தமில்லாத வாழ்க்கை வாழ்கிறதாக எண்ணி உங்கள் வாழ்வைக் குறித்து விரக்தியடைந்து சோர்ந்து போய்விட்டீர்களா? உங்களுடைய வாழ்க்கைக்கு ஏதாவது அர்த்தம் உண்டாயிருக்குமா என்று சந்தேகப்படுகின்றீர்களா? நீங்கள் மரித்த பின்பும் வாழ விரும்புகிறீர்களா? அப்படியானால் இயேசுவே அதற்கு வழி! இயேசு சொன்னார்: "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" (யோவான் 11:25-26).*

*வழி என்ன? சத்தியம் என்ன? ஜீவன் என்ன? அதற்கு இயேசு: "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14:6).*

*உங்களுக்கு இருக்கிற பசியானது ஆவிக்குரிய பசியாகும். இந்த பசியானது இயேசு ஒருவரால் மட்டுமே போக்கி திருப்தி படுத்தமுடியும். இருளை போக்க வல்ல ஒரே ஒரு நபர் இயேசு மட்டும்தான். திருப்திகரமான வாழ்விற்குள்ள வழி இயேசு ஒருவரே. நீங்கள்*

*எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிற நண்பனும் மேய்ப்பனும் இயேசுவே. அவரே இம்மைக்கும் மறுமைக்கும் ஜீவனாக இருக்கிறார். இயேசுவே இரட்சிப்பின் வழியாக இருக்கிறார்.*

*நீங்கள் ஆவிக்குரிய பசியில் இருப்பதற்கும், காரிருளில் அமிழ்ந்து காணாமல் போய்விட்டதாக தோன்றுவதற்கும் மற்றும் உங்களுடைய வாழ்க்கைக்குரிய அர்த்தத்தை கண்டுபிடிக்காமல் போனதற்கும் காரணம் நீங்கள் தேவனை விட்டு பிரிக்கப்பட்டு இருப்பதே ஆகும். நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம் என்றும் அதின் விளைவாக நாம் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டோம் என்றும் வேதாகமம் கூறுகிறது (பிரசங்கி 7:20; ரோமர் 3:23). நீங்கள் உங்கள் இருதயம் வெறுமையாக இருப்பதாக உணர்வதற்கான முக்கிய காரணம் உங்கள் வாழ்வில் தேவன் இல்லாததே ஆகும். தேவனோடு ஐக்கியமும் உறவும் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம். பாவத்தின் நிமித்தமாகத்தான் நாம் அந்த உறவில் இருந்து பிரிந்துபோனவர்களாய் இருக்கிறோம். இதோடு அல்லாமல் இம்மையோடு சேர்ந்து மறுமையிலும் நாம் தேவனோடு சேராதபடிக்கு இந்த பாவம் நம்மை நிரந்தரமாக தேவனிடத்திலிருந்து நம்மை பிரிக்கிறதாக இருக்கிறது (ரோமர் 6:23; யோவான் 3:36).*

*இந்த பிரச்சனையை எப்படி தீர்வை கொண்டுவருவது? இயேசுவே இதற்கு வழியாக இருக்கிறார்! நம்முடைய பாவங்களை இயேசு அவர்மேல் எடுத்துக்கொண்டார் (2 கொரிரிந்தியர் 5:21). நாம் அடையவேண்டிய தண்டனையை அவர் எடுத்துக்கொண்டு நம்முடைய ஸ்தானத்தில் இயேசு மரித்தார் (ரோமர் 5:8). பாவத்தையும் மரணத்தையும் ஜெயித்தவராய் மூன்று நாளைக்குப்பிறகு இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் (ரோமர் 6:4-5). ஏன் இதை அவர் செய்தார்? இதற்குப்பதில் இயேசுவே கூறியிருக்கிறார்: "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:13). நாம்*

*வாழும்படியாக இயேசு மரித்தார். நமது பாவங்களின் விலைக்கிரயத்தை கொடுத்து தீர்க்கும்படி சிலுவையில் மரித்த இயேசுவின்மேல் நமது விசுவாசத்தை வைப்போமானால், நமது எல்லா பாவங்களும் மன்னிக்கப்பட்டு நாம் சுத்திகரிக்கப்படுவோம். நாம் நமது ஆவிக்குரிய பசி தீர்ந்து திருப்தராக இருப்போம். ஒளிதருகின்ற விளக்குகள் ஒளிரும். நமது வாழ்வை நிரப்பத்தக்கதான பிரவேசனம் கொடுக்கப்பட்டு இருக்கும். நாம் நமது மெய்யான சிநேகிதரும் மேய்ப்பருமானவரை அறிந்திருப்போம். மரணத்திற்கு பிறகு ஒரு வாழ்வு உண்டு என்பதை அறிந்திருப்போம் – அதாவது உயிர்த்தெழுந்து இயேசுவோடு நித்தியத்தில் வாழ்ந்து கொண்டிருப்போம்!*

*“தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்” (யோவான் 3:16).*

# 69. பாவியின் ஜெபம் என்றால் என்ன?

*தான் ஒரு பாவி என்றும் தனக்கு ஒரு இரட்சகர் தேவை என்றும் ஒரு நபர் அறிந்துகொள்ளும்போது, அவர் தேவனிடத்தில் ஏறெடுக்கும் ஜெபம் தான் பாவியின் ஜெபம் என பொதுவாக அழைக்கப்படுகிறது. பாவியின் ஜெபத்தை ஒருவர் வெறுமனே ஜெபிப்பதால் எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை. ஒரு மெய்யான பாவியின் ஜெபம் என்பது அதை ஏறெடுக்கும் நபர் எந்த அளவிற்கு தன்னுடைய பாவதன்மையையும் இரட்சிப்பின் அவசியத்தையும் அறிந்திருக்கிறார் மற்றும் விசுவாசிக்கிறார் என்பதில் அடங்கியிருக்கிறது.*

*ஒரு பாவியின் ஜெபத்தில் இருக்கிற முதலாவது அம்சம் என்னவென்றால், நாமெல்லாரும் பாவிகளாக இருக்கிறோம் என்பதைப் பற்றியதான புரிந்து கொள்ளுதல் ஆகும். "அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" என்று ரோமர் 3:10 எடுத்துரைக்கிறது. நாமெல்லாரும் பாவம் செய்திருக்கிறோம் என்று வேதாகமம் மிகத்தெளிவாக கூறுகிறது. தேவனிடத்திலிருந்து இரக்கம் மற்றும் மன்னிப்பின் தேவையை நாடி நிற்கிற பாவிகளாக நாம் இருக்கிறோம் (தீத்து 3:5-7). நம்முடைய பாவத்தின் நிமித்தம் நாம் நித்திய தண்டனையை அடைய தகுதியுள்ளவர்களாக இருக்கிறோம் (மத்தேயு 25:46). பாவியின் ஜெபம் என்பது தேவனுடைய தண்டனைக்கு பதிலாக அவருடைய கிருபைக்கு வேண்டியுள்ள மனுவாகும். கோபத்திற்கு பதிலாக இரக்கம் காண்பிக்க வேண்டியுள்ள வேண்டுகோளாகும்.*

*ஒரு பாவியின் ஜெபத்தில் காணப்படுகிற இரண்டாவது முக்கிய அம்சம் என்னவென்றால், நம்முடைய இழந்துபோன மற்றும் பாவ நிலையில் இருந்து நாம் மீண்டுவர தேவன் என்ன காரியம் செய்திருக்கிறார் என்பதைப்பற்றிய அறிவாகும். தேவன், இயேசு கிறிஸ்து என்னும் ஆள்தன்மையில் மாம்சத்தை தரித்து ஒரு மனிதனைப்*

*போல இப்பூமியில் வெளிப்பட்டார் (யோவான் 1:1,14). தேவனைக்குரித்த சத்தியத்தை போதித்ததோடு மட்டுமல்லாமல் பரிபூரண நிலையில் நீதியோடும் பவமில்லாமலும் இயேசு இப்பூமியில் வாழ்ந்தார் (யோவான் 8:46; 2 கொரிந்தியர் 5:21). பிறகு நாம் நம்முடைய பாவங்களுக்கு அடைய வேண்டிய தண்டனையை இயேசு தம்மேல் எடுத்துக்கொண்டு நம்முடைய ஸ்தானத்தில் சிலுவையில் மரித்தார் (ரோமர் 5:8). இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்து பாவம், மரணம் மற்றும் நரகத்தின் மேலுள்ள தமது வெற்றியை நிருபித்தார் (கோலோசெயர் 2:15; 1 கொரிந்தியர் 15ஆம் அதிகாரம்). இவை எல்லாவற்றின் நிமித்தம், நாம் இயேசு கிறிஸ்துவின் மேல் நமது விசுவாசத்தை வைத்து அவரை முழுமையாக நம்பினால், நாம் நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதோடு பரலோகத்தில் நித்திய வீட்டில் வசிக்கும் வாக்குதத்தத்தையும் அவரிடத்திலிருந்து பெறுவோம். நாம் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால், நம்முடைய ஸ்தானத்தில் நமக்காக இயேசு மரித்து பிறகு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்தார் என்பதை விசுவாசிக்கவேண்டும் (ரோமர் 10:9-10). கிருபையினாலே மட்டும், விசுவாசத்தைக் கொண்டு மட்டும், இயேசு கிறிஸ்துவில் மட்டும் நாம் இரட்சிக்கப்பட முடியும். "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" என்று எபேசியர் 2:8 கூறுகிறது.*

*பாவியின் ஜெபத்தை ஏறெடுப்பது என்பது இயேசு கிறிஸ்துவின்மேல் முழுமையாக சார்ந்து அவரையே தன்னம்பிக்கையாக கொண்டு அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்டதை தேவனுக்கு முன்பாக எடுத்துறைப்பதாகும். இதிலே இரட்சிப்பை கொண்டு வருகிற "மந்திர வார்த்தைகள்" ஒன்றுமில்லை. இயேசுவின் மரணம் மற்றும் அவரது உயிர்த்தெழுதலில் வைக்கிற விசுவாசம் மட்டுமே ஆகும். இதுவே நம்மை இரட்சிக்கிறதாய் இருக்கிறது. நீங்கள் ஒரு பாவி என்றும் இயேசு கிறிஸ்துவின் மூலமாக*

உங்களுக்கு இரட்சிப்பு வேண்டும் என்றும் என்பதை அறிந்தவர்களானால், தேவனிடத்தில் ஏறெடுக்கப்படவேண்டிய ஒரு பாவியின் ஜெபம் இதோ, இதை நீங்கள் தேவனிடத்தில் சொல்லுங்கள்: "ஆண்டவரே நான் ஒரு பாவி என்பதை அறிந்திருக்கிறேன். நான் செய்த பாவத்தின் நிமித்தம் பாவத்திற்கான தண்டனையை நான் அடைய வேண்டும் என்பதையும் அறிந்திருக்கிறேன். ஆனபோதிலும், இயேசு கிறிஸ்துவை எனது இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரில் பரிபூரணமாய் விசுவாசிக்கிறேன். அவருடைய சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் எனக்கு மன்னிப்பை கொண்டுவந்தது என்று முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன். நான் இயேசு கிறிஸ்துவை எனது சொந்த கர்த்தராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டு அவரை மட்டும் அவரில் மட்டுமே எனது முழு நம்பிக்கையையும் வைக்கிறேன். என்னை மன்னித்து இரட்சித்ததற்காக உமக்கு நன்றி ஆண்டவரே! ஆமென்!"

# 70. மன்னிப்பு கிடைத்ததா? தேவனிடமிருந்து நான் எவ்வாறு மன்னிப்பைப் பெறுவது?

*“ஆதலால் சகோதரரே, இயேசுவின் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறது” என்று அப்போஸ்தலர் 13:38 எடுத்துரைக்கிறது.*

**மன்னிப்பு என்றால் என்ன? ஏன் எனக்கு மன்னிப்பு தேவையாயிருக்கிறது?**

*"மன்னிப்பு" என்னும் சொல்லின் அர்த்தம் கற்பலகையை சுத்தமாக துடைத்தல், மன்னிப்பு, மற்றும் கடனை ரத்து செய்தல் என வருகிறது. நாம் யாருக்கு விரோதமாகவாவது தவறு செய்துவிட்டால், நமக்கு அவரோடு இருக்கிற உறவில் விரிசல் ஏற்பட்டு அதை நாம் இழந்துவிடாதபடிக்கு அல்லது இழந்த உறவை திரும்ப மீட்டு உறவை மேலும் வலுப்படுத்த அவரிடத்தில் மன்னிப்பு கோருகிறோம். அந்த உறவு மீட்கப்பட வேண்டும் என்பதற்காக அவர்களுடைய மன்னிப்பை நாடுகிறோம். மன்னிப்பு வழங்கப்படுவது அதை பெறுகிற மனிதன் தகுதியானவராக இருக்கிறார் என்பதற்காக அல்ல. மன்னிப்பை பெறுவதற்கு ஒருவருவருக்கும் தகுதியில்லை. மன்னிப்பு என்பது ஒரு அன்பின் செயல், இரக்கம் மற்றும் கிருபையாகும். மன்னிப்பு என்பது தனக்கு விரோதமாக எந்த காரியம் செய்யப்பட்டு இருந்தாலும் அதை கணக்கில் கொள்ளாமல் அவருக்கு மன்னிப்பு வழங்க வேண்டும் என்கிற ஒரு தீர்மானம் ஆகும்.*

*நம் எல்லோருக்கும் தேவனிடத்திலிருந்து மன்னிப்பு தேவையாய் இருக்கிறது என்று வேதாகம் கூறுகிறது. நாம் எல்லாரும் பாவம் செய்திருக்கிறோம். “ஒரு பாவமும் செய்யாமல், நன்மையையே செய்யத்தக்க நீதிமான் பூமியிலில்லை” என்று பிரசங்கி 7:20 கூறுகிறது. “நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம், சத்தியம் நமக்குள் இராது” என்று 1*

*யோவான் 1:8 கூறுகிறது. எல்லா பாவமும் முதன்மையான நிலையில் தேவனுக்கு விரோதமான செயலாகும் (சங்கீதம் 51:4). இதன் விளைவாக, நமக்கு தேவனுடைய மன்னிப்பு மாபெரும் அவசியமாயிற்று. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படாவிட்டால், நாம் நமது நித்தியம் முழுவதும் இந்த பாவங்களின் விளைவுகளை அனுபவிக்கிரவர்களாக இருப்போம் (மத்தேயு 25:46, யோவான் 3: 36)*

.

**மன்னிப்பு - நான் எப்படிப் பெற்றுக்கொள்வது?**

*அதிர்ஷ்டவசமாக, தேவன் அன்பானவர், இரக்கமுள்ளவர் மற்றும் மன்னிப்பதற்கு அதீத விருப்பமுள்ளவருமாக இருக்கிறார்! "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" 2 பேதுரு 3:9 நமக்கு சொல்லுகிறது. தேவன் நம்மை மன்னிக்க விருப்பமுள்ளவராக இருக்கிறார். எனவே நம் மன்னிப்பிற்கான வழியை அவரே ஏற்படுத்தி இருக்கிறார்.*

*பாவத்திற்குரிய நியாயமான தண்டனை என்றால் அது மரணம் மட்டும்தான். ரோமர் 6:23-ன் முதல் பகுதி "பாவத்தின் சம்பளம் மரணம்" என அறிவிக்கிறது. நம்முடைய பாவங்கள் நிமித்தமாக நாம் சம்பாதித்த சம்பாத்தியம் தான் "நித்திய மரணம்". தேவன் தமது பரிபூரண திட்டத்தின் பிரகாரம் மனிதனானார் - அவரே இயேசு கிறிஸ்து (யோவான் 1:1, 14). நாம் அடைய இருந்த பாவத்தின் தண்டனையாகிய மரணத்தை இயேசு தம்மேல் எடுத்துக்கொண்டு சிலுவையில் மரித்தார்! "நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" என 2 கொரிந்தியர் 5:21 நமக்கு போதிக்கிறது. நாம் அடைய இருந்த பாவத்தின் தண்டனையை இயேசு தாம் ஏற்றுக்கொண்டு சிலுவையில் மரித்தார். தேவன் என்கிற நிலையில் அவரது மரணம் உலகத்திலுள்ள சகல மனுஷருடைய பாவமும் மன்னிக்கப்பட ஏதுவாயிற்று.*

*"நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்" என்று 1 யோவான் 2:2 எடுத்துரைக்கிறது. இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து, பாவத்தின் மேலும் மரணத்தின் மேலும் தனக்குண்டாயிருந்த வெற்றியை பறைசாற்றுகிறார் (1 கொரிந்தியர் 15:1-28). தேவனுக்கே துதி உண்டாகட்டும்! இயேசு கிறிஸ்துவினுடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக, ரோமர் 6: 23-ன் இரண்டாவது பாதி உண்மையாகியிருக்கிறது, "தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்."*

*உங்களுக்கு உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டுமா? நீங்கள் விட்டு வெளியே வர இயலாத நிலையில் உங்கள் குற்ற உணர்ச்சி உங்களுக்கு பெரும் தொல்லையாக இருக்கிறதா? இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து அவரை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வீர்களானால், உங்கள் பாவங்கள் உங்களுக்கு மன்னிக்கப்படும். "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே, இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" என்று எபேசியர் 1:7 கூறுகிறது.*

*நமது பாவக்கடனை எல்லாம் இயேசு நமக்காக கொடுத்து தீர்த்துவிட்டார், ஆகவே நாம் மன்னிக்கப்படுவோம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், தேவனிடம் இயேசுவின் மூலமாக உங்களை மன்னிகும்படி கேளுங்கள், இயேசு உங்கள் பாவங்களிலிருந்து உங்களை மன்னிப்பதற்காக சிலுவையில் மரித்தார் என விசுவாசியுங்கள். இந்த அற்புதமான செய்தியை யோவான் 3:16-17 தன்னகத்தே கொண்டுள்ளது: "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய்*

*உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.''*

**மன்னிப்பு - அது மெய்யாகவே எளிமையானதா?**

*ஆமாம் அது அவ்வளவு எளிதானது! நீங்கள் உங்கள் கடின உழைப்பின் நிமித்தமாக தேவனிடமிருந்து மன்னிப்பை சம்பாதிக்க முடியாது. உங்கள் மன்னிப்புக்குரிய விலைக்கிரயத்தை உங்களால் தேவனிடத்தில் செலுத்த முடியாது. விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் நீங்கள் அதை பெற்றுக்கொள்ள முடியும்.*

*நீங்கள் இயேசு கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு தேவன் அளிக்கும் பாவமன்னிப்பை பெற விரும்பினால், இந்த ஜெபத்தை ஏறெடுங்கள். நீங்கள் ஜெபிக்கிற இந்த ஜெபமோ அல்லது இதுபோன்ற மற்ற ஜெபங்களோ உங்களை இரட்சிப்பது இல்லை. கிறிஸ்துவில் நீங்கள் வைக்கிற நம்பிக்கை மட்டுமே உங்களுக்கு உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பை கொடுக்கும். அவர்மேல் உங்களுக்கு இருக்கிற நம்பிக்கை மற்றும் அவரால் நீங்கள் பெற்றிருக்கிற மனிப்பிற்கு நன்றி செலுத்துகிற ஒரு செயல் தான் இந்த ஜெபம். "ஆண்டவரே, நான் உமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறேன் என்றும் அதினிமித்தம் பாவத்திற்கான தண்டனையை அடைவதற்கு பாத்திரமாய் இருக்கிறேன் என்றும் அறிந்திருக்கிறேன். ஆனால் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து அவரில் நான் மன்னிப்பை பெறத்தக்கதாக நான் அடையவேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார் எனவும் அறிந்திருக்கிறேன். இரட்சிப்பிற்காக உம்மில் எனது பரிபூரண நமிக்கையை வைக்கிறேன். உம்முடைய அற்புதமான கிருபைக்காகவும் மன்னிப்பிற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன்! ஆமென்!"*

# 71. நான் எப்படி ஒரு கிறிஸ்தவனாக முடியும்?

*ஒரு கிறிஸ்தவனாக மாறுவதற்கான முதல் படி "கிறிஸ்தவன்" என்கிற சொல்லின் அர்த்தம் என்னவென்பதை அறிந்துகொள்வதேயாகும். "கிறிஸ்தவன்" என்கிற சொல்லின் தோற்றம் கி.பி. முதல் நூற்றாண்டில் அந்தியோக்கியா என்னும் நகரில் இருந்தாகும் (காண்க அப்போஸ்தலர் 11:26). முதன் முதலில் "கிறிஸ்தவன்" என்கிற சொல், ஒரு அவமானம் என்று கருதப்பட்டிருக்கலாம். இந்த வார்த்தை முக்கியமாக "சிறிய கிறிஸ்து" என்று அர்த்தப்படுகிறது. எனினும், நூற்றாண்டுகளுக்குப் பிறகு கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிகள் "கிறிஸ்தவன்" என்கிற வார்த்தையை ஏற்றுக்கொண்டு இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாக தங்களை அடையாளம் காட்ட பயன்படுத்தினர். ஒரு கிறிஸ்தவன் என்பதன் எளிய சொற்பொருள் விளக்கம் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிற ஒரு நபர் என்பதாகும்.*

**நான் ஏன் ஒரு கிறிஸ்தவனாக மாறவேண்டும்?**

*இயேசு நான் "ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார்" என்று அறிவித்தார் (மாற்கு 10:45). பிறகு இங்கே கேள்வி எழுகிறது - நாம் ஏன் மீட்கப்பட வேண்டும்? மீட்குதல் என்னும் கருத்து ஒரு நபரை மீட்டுக்கொண்டு வருவதற்கு பதிலாக செலுத்த வேண்டிய பணம் ஆகும். இந்த கறுத்து ஒரு கடத்தலுக்கான யோசனையில் பெரும்பாலும் வருகிறது, அதாவது கடத்தல் சம்பவங்களில் பயன்படுத்தப்படுகிறது, யாரோ ஒருவர் கடத்திச் செல்லப்பட்டு, அவர் விடுதலையைப் பெறுவதற்கு ஒரு மீட்கும் தொகையை கடத்தியவர்கள் பெறும்வரையில் கடத்தப்பட்டவர் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்.*

*அடிமைத்தனத்திலிருந்து நம்மை விடுதலை செய்ய இயேசு நம் மீட்கும்பொருளைக் கொடுத்தார்! என்ன அடிமைத்தனம்? பாவம் மற்றும் அதன் விளைவுகளான சரீர மரணம், பிறகு தேவனிடத்திலிருந்து பிரிந்திருக்கிற நித்தியமான பிரிவு. இயேசு ஏன் இந்த மீட்கும்பொருளை செலுத்த வேண்டியதாயிருந்தது? ஏனென்றால் நாம் எல்லோருமே பாவம் செய்திருக்கிறோம் (ரோமர் 3:23), எனவே தேவனின் நியாயத்தீர்ப்புக்குப் பாத்திரமானவர்களாக இருக்கிறோம் (ரோமர் 6:23). இயேசு நம் மீட்கும் பணத்தை எப்படிக் கொடுத்தார்? நம்முடைய பாவங்களுக்காக தண்டனை அவர் தம்மீது ஏற்றுக்கொண்டு அவைகளின் விலைக்கிரயத்தைக் கொடுப்பதற்காக சிலுவையில் மரித்தார் (1 கொரிந்தியர் 15:3; 2 கொரிந்தியர் 5:21). இயேசுவின் மரணம் நம் எல்லாருடைய பாவங்களுக்கும் போதுமானதாக எப்படி செலுத்தமுடிந்தது? இயேசு மனித உருவில் இருந்த தேவனானவர், தேவன் பூமியில் நம்மில் ஒருவரைப்போலானார், அவர் நம்மைப்போல அடையாளப்படுத்திக்கொண்டு நம்முடைய பாவங்களுக்காக மரித்தார் (யோவான் 1:1, 14). தேவனாக இருக்கிற இயேசுவின் மரணம் முடிவில்லாததும், முழு உலகின் பாவங்களுக்காக செலுத்த வேண்டிய விலைக்கிரயத்திற்கு போதுமானதாவும் இருந்தது (1 யோவான் 2:2). அவருடைய மரணத்திற்குப்பின்புள்ள இயேசுவின் உயிர்த்தெழுதல் போதுமான பலி என்று நிரூபித்தது, மேலும் அவர் பாவத்தையும் மரணத்தையும் உண்மையில் வென்றுவிட்டார் என்பதையும் தெரிவிக்கிறது.*

**நான் எப்படி ஒரு கிறிஸ்தவனாக முடியும்?**

*இது சிறந்த பகுதியாகும். தேவன் நம்மீது கொண்டிருக்கிற அன்பு நிமித்தமாக, ஒருவர் கிறிஸ்தவராவதற்கு மிகவும் எளிமையான வழியை ஏற்ப்படுத்தி வைத்திருக்கிறார். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இயேசுவை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, உங்கள் பாவங்களுக்காக போதுமான பலியாக அவருடைய மரணம் இருந்தது*

*என்று முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் (யோவான் 3:16), அவரையே உங்கள் இரட்சகராக முழுமையாய் நம்பவேண்டும் (யோவான் 14:6; அப்போஸ்தலர் 4:12). ஒரு கிறிஸ்தவராக மாறுதல் என்பது எந்தவிதமான சடங்குகள் பற்றியது அல்ல, திருச்சபைக்கு போகிறது, அல்லது வேறு விஷயங்களை மற்ற சில விஷயங்களை செய்வதிலிருந்து விலகி செய்வது போன்றவைகள் அல்ல. கிறிஸ்தவராக மாறுதல் என்பது இயேசு கிறிஸ்துவோடு தனிப்பட்ட உறவைக் கொண்டிருப்பது ஆகும். விசுவாசத்தின் மூலம் இயேசு கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவு கொள்ளுகிற ஒரு நபரையே ஒரு கிறிஸ்தவனாக உருவாக்குகிறது.*

**நீங்கள் ஒரு கிறிஸ்தவராவதற்கு ஆயத்தமாக இருக்கிறீர்களா?**

*இயேசு கிறிஸ்துவையும் உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்வதன் மூலம் நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாற விரும்பினால், நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் விசுவாசிப்பது ஒன்றுதான். நீங்கள் பாவம் செய்தீர்கள் என்றும் தேவனிடமிருந்து நியாயத்தீர்ப்புக்கு தகுதியானவர்கள் என்பதையும் நீங்கள் புரிந்துகொண்டு நம்புகிறீர்களா? இயேசு உங்கள் தண்டனையை உங்களிடமிருந்து அவர்மேல் ஏற்றுக்கொண்டார் என்பதை நீங்கள் புரிந்துகொண்டு நம்புகிறீர்களா? அவருடைய மரணம் உங்கள் பாவங்களுக்காக செலுத்த வேண்டியதற்குரிய போதுமான பலியாக இருப்பதை நீங்கள் புரிந்துகொண்டு நம்புகிறீர்களா? இந்த மூன்று கேள்விகளுக்கான உங்கள் பதில்கள் ஆம் என்றால், உங்கள் இரட்சகராக இயேசுவில் உங்கள் நம்பிக்கையை வையுங்கள். விசுவாசத்தினாலே அவரை முழுமையாக நம்பி ஏற்றுக்கொள்ளுங்கள். இதுதான் ஒருவர் கிரிஸ்துவராக மாறுவதற்கு தேவையானதாக இருக்கிறது.*

# 72. நான் எப்படி தேவனுடைய பிள்ளையாக முடியும்?

*தேவனுடைய பிள்ளையாக மாறுவதற்கு இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கிற விசுவாசம் தேவையாயிருக்கிறது. "அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்" (யோவான் 1:12).*

**"நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்"**

*நிக்கொதேமு என்னும் மதத் தலைவன் இயேசுவினிடத்தில் விஜயம் செய்தபோது, இயேசு உடனடியாக அவனுக்கு பரலோகத்திற்கு செல்லுவதற்கான உறுதியளிக்கவில்லை. அதற்கு பதிலாக, அவன் தேவனுடைய ஒரு பிள்ளையாக மாறவேண்டும் என்று கூறி, "ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான்" என்றார் (யோவான் 3: 3).*

*முதல் முறையாக ஒரு நபர் பிறக்கிறபோது, அவர் ஏதேன் தோட்டத்தில் ஆதாமின் கீழ்ப்படியாமையிலிருந்து உருவான பாவ சுபாவத்தை அவரிலிருந்து சுதந்தரித்துக்கொள்கிறார். பாவம் எப்படிச் செய்யவேண்டும் என்று ஒரு குழந்தைக்கு ஒருவரும் கற்பிக்க வேண்டியதில்லை. அந்த குழந்தை தன் சொந்த தவறான ஆசைகளை இயல்பாகவே பின்பற்றி, அதன்மூலமாக பொய், திருட்டு, வெறுப்பு போன்ற பாவங்களுக்கு கொண்டுச் செல்லப்படுகிறார். தேவனுடைய பிள்ளையாக இருப்பதற்குப் பதிலாக, அவர் கீழ்ப்படியாமையின் மற்றும் கோபாக்கினையின் பிள்ளையாயிருக்கிறார் (எபேசியர் 2:1-3).*

*கோபாக்கினையின் பிள்ளைகளாக, நாம் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டு நரகத்தில் பங்கடைய வேண்டும். அதிர்ஷ்டவசமாக,*

*எபேசியர் 2:4-5 கூறுகிறது, "தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்." நாம் கிறிஸ்துவுடன் எப்படி உயிரோடு எழுப்பப்படுகிறோம் / மறுபடியும் பிறக்கிறோம் / தேவனுடைய பிள்ளைகளாக உருவாக்கப்பட்டோம்? நாம் விசுவாசத்தினால் இயேசுவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்!*

**இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள்**

*"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்." (யோவான் 1:12.). தேவனுடைய பிள்ளையாக எப்படி ஆக்குவது என்று இந்த வசனம் தெளிவாக விளக்குகிறது. நாம் இயேசுவை விசுவாசத்து அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசுவைப் பற்றி நாம் என்ன நம்ப வேண்டும்? முதலாவதாக, இயேசுவே மனிதனான வந்த தேவனுடைய நித்திய குமாரன் என்பதை ஒரு தேவனுடைய பிள்ளை அறிந்துகொள்ளவேண்டும். இயேசு ஆதாமின் பாவ சுபாவத்திற்குரியவர் அல்ல, பரிசுத்த ஆவியின் வல்லமையினால் ஒரு கன்னியின் மகனாக பிறந்தார். ஆகையால்தான், இயேசு இரண்டாம் ஆதாம் என்று அழைக்கப்படுகிறார் (1 கொரிந்தியர் 15:22). ஆதாமின் கீழ்ப்படியாமை உலகத்திற்கு பாவத்தின் சாபத்தை கொண்டு வந்தபோது, கிறிஸ்துவின் பரிபூரணமான கீழ்ப்படிதல் ஒரு ஆசீர்வாதத்தை கொண்டுவருகிறதாக இருக்கிறது. நம்முடைய பதில் மனந்திரும்ப வேண்டும் (பாவத்திலிருந்து திரும்புதல்) மற்றும் கிறிஸ்துவில் மன்னிப்பைத் தேட வேண்டும்.*

*இரண்டாவதாக, ஒரு தேவனுடைய பிள்ளைக்கு இயேசுவின்மேல் இரட்சகராக விசுவாசம் வைத்து விசுவாசிக்கிறார். தேவனுடைய*

*திட்டம், தம்முடைய பரிபூரணமான குமாரனை சிலுவையில் நாம் அடையவேண்டிய நம்முடைய பாவத்தின் தண்டனையை செலுத்தும்படிக்கு பலியிடுவதாய் இருந்தது: அதாவது அவரது சிலுவை மரணம். பாவத்தின் தண்டனை மற்றும் வல்லமையிலிருந்து அவரை ஏற்றுக்கொள்கிறவர்களை கிறிஸ்துவின் மரணம் விடுவிக்கிறது. அவரது உயிர்த்தெழுதல் நம்மை நீதிமான்களாக்குகிறது (ரோமர் 4:25).*

*இறுதியாக, தேவனுடைய பிள்ளையானவன் இயேசுவைக் கர்த்தராகப் பின்பற்றுகிறார். பாவம் மற்றும் மரணத்தின் மீது வெற்றிக்கொண்டவராக கிறிஸ்துவை எழுப்பின பிறகு, தேவன் அவருக்கு எல்லா அதிகாரத்தையும் கொடுத்தார் (எபேசியர் 1:20-23). அவரை ஏற்றுக்கொள்கிற அனைவரையும் இயேசு வழிநடத்துகிறார்; அவரை நிராகரிக்கிற அனைவரையும் அவர் நியாயந்தீர்ப்பார் (அப்போஸ்தலர் 10:42). தேவனுடைய கிருபையால், நாம் தேவனுடைய பிள்ளையாக புதிய வாழ்க்கைக்கு மறுபடியும் பிறந்திருக்கிறோம். இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் - வெறுமனே அவரை அறிந்துகொண்டதுமட்டுமின்றி, இரட்சிப்புக்காக அவரையே சார்ந்து, எஜமானனுக்கு கீழ்ப்படிதலைப் போல அவருக்கு கீழ்ப்படிந்து, மற்றும் அவரை மிக உயர்ந்த பொக்கிஷமாக நேசிக்கிறவர்கள் - தேவனுடைய பிள்ளைகளாகிறார்கள்.*

**ஒரு தேவனுடைய பிள்ளையாகுதல்**

*நம்முடைய இயற்கையான சரீர பிறப்பில் நமக்கு எந்த பங்கும் இல்லாதது போலவே, நாம் நல்ல காரியங்களைச் செய்வதன் மூலம் அல்லது நம் சொந்த விசுவாசத்தினால் மன்றாடிக்கேட்பதன் மூலம் நாம் தேவனுடைய குடும்பத்தில் பிறக்கச்செய்ய முடியாது. தேவன் ஒருவரே தமது கிருபையுள்ள சித்தத்தின்படி நமக்கு இரக்கம் காண்பித்து நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படிக்கு "அதிகாரம்'' கொடுத்தார். ''நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று*

*பாருங்கள்" (1 யோவான் 3:1). எனவே, தேவனுடைய பிள்ளைக்கு இதில் பெருமை பாராட்டிக்கொள்வதற்கு ஒன்றுமில்லை; அவருடைய ஒரே மேன்மை கர்த்தருக்குள் இருக்கிறது (எபேசியர் 2: 8-9).*

*ஒரு குழந்தை தன் பெற்றோரைப் போல் தோற்றமளிக்கத்தக்க நிலையில் வளர்கிறது. அவ்வாறே, தம் பிள்ளைகள் இயேசு கிறிஸ்துவைப் போலவே அதிகமதிகமாய் வளர வேண்டுமென தேவன் விரும்புகிறார். பரலோகத்திலிருக்கிற போதுதான் நாம் பரிபூரணராக இருப்போம் என்கிறபோதிலும், தேவனுடைய பிள்ளை பாவத்திலிருந்து மனந்திரும்பாமல் பாவத்திலே உழன்று இருப்பதற்கு தன்னைப் பழகிக்கொள்ள மாட்டான். "பிள்ளைகளே நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராய் இருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாய் இருக்கிறான். பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ்செய்கிறான், பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். இதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச்செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனாலுண்டானவனல்ல" (1 யோவான் 3: 7-10).*

*தவறு செய்யாதீர்கள் - தேவனுடைய பிள்ளை பாவஞ்செய்வதன் மூலம் "இல்லையென்று" கைவிடப்பட்டுள்ள நிலைக்கு செல்வதில்லை. ஆனால் கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தையையும் கவனத்தில் கொள்ளாமலேயே தொடர்ந்து பாவத்தை அனுபவிக்கிற ஒருவர் மறுபடியும் பிறக்கவில்லை என்பதை வெளிப்படுத்துகிறார். இப்படிப்பட்ட ஜனங்களைக் குறித்து இயேசு, "நீங்கள் உங்கள்*

*பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்" என்றார் (யோவான் 8:44). தேவனுடைய பிள்ளை மறுபுறம், பாவம் செய்து அதில் தன்னை திருப்திப்படுத்திக் கொள்ளாமல் பிதாவைக் குறித்தும் அறியவும், அன்பு செலுத்தவும், மற்றும் அவரை மகிமைப்படுத்த வேண்டும் என்கிற ஆசைகளை மட்டுமே கொண்டிருப்பான்.*

*தேவனுடைய பிள்ளையாக இருப்பதன் வெகுமதி அளவில்லாததாகும். தேவனுடைய பிள்ளை என்கிற நிலையில் நாம் அவருடைய குடும்பத்தின் ஒரு அங்கமாக இருக்கிறோம் (திருச்சபை), பரலோகத்தில் ஒரு வீட்டிற்கு வாக்குறுதி அளித்திருக்கிறார், ஜெபத்தில் தேவனை அணுகுவதற்கு உரிமையைக் கொடுத்திருக்கிறார் (எபேசியர் 2:19; 1 பேதுரு 1:3-6; ரோமர் 8:15). தேவனுடைய அழைப்பின் சத்தத்திற்கு செவிகொடுத்து பாவத்தை விட்டு மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசியுங்கள். இன்றே தேவனுடைய பிள்ளையாகுங்கள்!*

# 73. கிறிஸ்தவத்திற்கு நான் எப்படி மாறுவது?

*கிரேக்க நகரான பிலிப்புவில் இருந்த ஒரு மனிதன் பவுலுக்கும் சீலாவுக்கும் இதேபோன்ற கேள்வியைக் கேட்டார். இந்த மனிதனைப் பற்றி குறைந்தபட்சம் மூன்று விஷயங்களை நாம் அறிந்திருக்கிறோம்: அவர் ஒரு சிறைச்சாலை அதிகாரி, அவர் ஒரு அஞ்ஞானி, மற்றும் அவர் ஒரு நம்பிக்கை இழந்தவராக இருந்தார். பவுல் அவரை தடுத்தபோது அவர் தன்னை தற்கொலை செய்துகொள்ளும் தருவாயில் இருந்தார். அப்பொழுதுதான் அந்த மனிதன், "இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான்" (அப்போஸ்தலர் 16:30).*

*அந்த மனிதன் இந்த கேள்வியைக் கேட்டதிலிருந்து அவன் தன்னுடைய இரட்சிப்பின் தேவையை உணர்ந்து கொண்டான் என்கிற உண்மை தெளிவாகிறது – அவன் தனக்கான மரணத்தை மட்டுமே அப்பொழுது கண்டான், மேலும் அவனுக்கு அப்பொழுது உதவி தேவை என்பதையும் அவன் அறிந்திருந்தான். பவுல் மற்றும் சீலாவிடம் அவர் இப்படி கேட்பத்திலிருந்து அவர்களிடத்தில் பதில் இருப்பதாக அவர் நம்பினார்.*

*அந்த பதில் விரைவாகவும் எளிமையாகவும் வருகிறது: "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (வசனம் 31). அந்த மனிதன் எப்படி தொடர்ந்து விசுவாசித்து, மாற்றப்பட்டான் என்பதை இந்த பகுதி காண்பிக்கிறது. அந்த நாளிலிருந்து அவரது வாழ்க்கை வித்தியாசத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தது.*

*மனிதனின் மாற்றம் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதைக் கவனியுங்கள் ("விசுவாசம்"). அவர் இயேசுவை நம்புவதையல்லாமல் வேறு ஒன்றும் இல்லை. இயேசு தேவனுடைய குமாரன் ("கர்த்தர்") மற்றும் வசனங்களை நிறைவேற்றிய மேசியா*

*("கிறிஸ்து") என்று அந்த மனிதன் நம்பினார். அவனுடைய விசுவாசம் இயேசு பாவத்திற்காக மரித்தார் மற்றும் உயிரோடு எழுந்தார் என்பதை விசுவாசிப்பதையும் உள்ளடக்கியிருந்தது, பவுலும் சீலாவும் பிரசங்கித்த செய்தியும் இதுவேயாகும் (ரோமர் 10:9-10 மற்றும் 1 கொரிந்தியர் 15:1-4).*

*"மாறுதல்" என்பது எழுத்தியல் பிரகாரம் "திரும்புதல்" என்னும் அர்த்தமாகும், ஒரு காரியத்தை நோக்கி திரும்பும்போது, நாம் வேறு எதையாவது விட்டு விலகிவிடுகிறோம் என்கிற அர்த்தமாகிறது. நாம் இயேசுவிடம் திரும்பும்போது, நாம் பாவத்திலிருந்து திரும்ப வேண்டும். பாவத்திலிருந்து திரும்புதலை "மனந்திரும்புதல்" என்றும் இயேசுவிடம் திரும்புதலை "விசுவாசம்" என்றும் வேதாகமம் அழைக்கிறது. ஆகவே, மனந்திரும்புதலும் விசுவாசமும் ஒன்றுக்கொன்று நிறைவு உண்டாக்குகிறவைகளாக இருக்கின்றன. மனந்திரும்புதலும் விசுவாசமுமாகிய இவைகள் இரண்டையும் 1 தெசலோனிக்கேயர் 1:9-ல் சுட்டிக்காட்டுகின்றன - "நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினீர்கள்." ஒரு கிறிஸ்தவன் தன்னுடைய முன்னாள் வழிகளையும் கிறிஸ்தவத்திற்கு உண்மையாக மாறின மாற்றத்தின் விளைவாக பொய்யான மதம் சம்பந்தப்பட்ட எதையுமே விட்டுவிடுவார்.*

*எளிய நடையில் கூறவேண்டுமானால், கிறிஸ்தவத்திற்கு மாறுவதற்கு, இயேசு உங்கள் பாவங்களுக்காக மரித்தார் என்றும், மறுபடியும் உயிர்த்தெழுந்த தேவனுடைய குமாரன் என்று நீங்கள் நம்பவேண்டும். நீங்கள் இரட்சிப்பின் தேவைக்காக நீங்கள் ஒரு பாவி என்பதை தேவனிடத்தில் ஒப்புக்கொள்ள வேண்டும், மேலும் உங்களை இரட்சிக்க இயேசு ஒருவரையே நீங்கள் நம்பவேண்டும். நீங்கள் பாவத்திலிருந்து கிறிஸ்துவுக்குத் திரும்பும்போது, உங்களை இரட்சிக்கவும் பரிசுத்த ஆவியானவரை உங்களுக்கு அளிக்கவும் தேவன் வாக்களிக்கிறார், அவர் உங்களை ஒரு புதிய சிருஷ்டியாக உருவாக்குகிறார்.*

*கிறிஸ்தவம், அதன் உண்மையான வடிவத்தில், ஒரு மதம் அல்ல. வேதாகமத்தின்படி கிறிஸ்தவம் இயேசு கிறிஸ்துவுடன் உள்ள ஒரு உறவாக இருக்கிறது. கிறிஸ்தவம் என்பது இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் விசுவாசிக்கிற யாவருக்கும் தேவன் இலவசமாக அருளுகிற ஒரு இரட்சிப்பாகும். கிறிஸ்தவத்திற்கு மாறும் ஒரு நபர் மற்றொரு மதத்திற்கு ஒரு மதத்தை விட்டு மாறுகிறதில்லை. கிறிஸ்தவத்திற்கு மாறுவது என்பது தேவன் அளிக்கும் ஈவைப்பெற்றுக்கொண்டு இயேசு கிறிஸ்துவுடன் தனிப்பட்ட உறவைத் துவங்கி, அதன் விளைவாக பாவமன்னிப்பு மற்றும் மரணத்திற்குப் பிறகு நித்தியத்தையும் அடைகிறதாகும்.*

*இந்த கட்டுரையில் நீங்கள் வாசித்திருக்கும் காரணத்தினால் நீங்கள் கிறிஸ்தவத்திற்கு மாற வேண்டுமென்று விரும்புகிறீர்களா? உங்கள் பதில் ஆம் எனில், நீங்கள் தேவனிடத்தில் ஏறெடுக்கவேண்டிய ஒரு மாதிரி ஜெபம் இதோ. நீங்கள் ஜெபிக்கிற இந்த ஜெபமோ அல்லது இதுபோன்ற மற்ற ஜெபங்களோ உங்களை இரட்சிப்பது இல்லை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கிறிஸ்துவில் நீங்கள் வைக்கிற நம்பிக்கை மட்டுமே உங்களை உங்கள் பாவங்களிலிருந்து இரட்சிக்கும். அவர்மேல் உங்களுக்கு இருக்கிற நம்பிக்கை மற்றும் அவரால் நீங்கள் பெற்றிருக்கிற இரட்சிப்பை வெளிப்படுத்துகிற ஒரு செயல் தான் இந்த ஜெபம். "ஆண்டவரே, நான் உமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறேன் என்றும் அதினிமித்தம் பாவத்திற்கான தண்டனையை அடைவதற்கு பாத்திரமாய் இருக்கிறேன் என்றும் அறிந்திருக்கிறேன். ஆனால் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து அவரில் நான் மன்னிப்பை பெறத்தக்கதாக நான் அடையவேண்டிய தண்டனையை அவர் ஏற்றுக்கொண்டார் எனவும் அறிந்திருக்கிறேன். இரட்சிப்பிற்காக உம்மில் எனது பரிபூரண நமிக்கையை வைக்கிறேன். ஈவாகிய நித்திய ஜீவனுக்காக நீர் காண்பித்திருக்கிற அற்புதமான கிருபைக்காகவும் மன்னிப்பிற்காகவும் உமக்கு நன்றி செலுத்துகிறேன்! ஆமென்!"*

# 74. பரலோகத்திற்கு செல்லுதல் - எனது நித்திய இலக்குக்கு எப்படி நான் உத்தரவாதம் அளிக்க முடியும்?

*அதை எதிர்கொள்ளுங்கள். நித்தியத்திற்குள் நாம் நுழைகின்ற நாள் நாம் நினைப்பதைவிட விரைவாக வந்துவிடலாம். அந்த தருணத்திற்கு ஆயத்தப்படுவதற்கு, நாம் இந்த உண்மையை அறிந்து கொள்ள வேண்டும் - எல்லோரும் பரலோகத்திற்குப் போவதில்லை. நாம் பரலோகத்திற்குப் போகப்போகிறோம் என்பதை நாம் எவ்வாறு அறிந்துகொள்வது? சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு அப்போஸ்தலர்களாகிய பேதுருவும் யோவானும் எருசலேமிலுள்ள ஒரு பெரிய கூட்டத்திற்கு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். பேதுரு ஒரு ஆழமான அறிக்கை ஒன்றை வெளியிட்டார், அது இன்றைய பின் நவீனத்துவ உலகில் கூடப் பிரதிபலிக்கிறது: "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" (அப்போஸ்தலர் 4:12).*

*அப்போதிலிருந்து அப்போஸ்தலர் 4:12 அரசியல் ரீதியாக சரியானதல்ல. இன்று "எல்லாரும் பரலோகத்திற்குப் போகிறார்கள்" அல்லது "எல்லா வழிகளும் பரலோகத்திற்கு வழிநடத்துகின்றன" என்று சொல்வது மிகவும் பிரபலமானதாக இருக்கிறது. இயேசுவையல்லாமல் பரலோகத்தைப் பெற முடியும் என்று அநேகர் நினைக்கிறார்கள். அவர்கள் மகிமையை விரும்புகிறார்கள், ஆனால் சிலுவையினால் தாங்கள் தொந்தரவு செய்யப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை, அதில் மரித்தவரை ஒரு குறைவான நிலையில் கூட எண்ணிப்பார்க்க விரும்பவில்லை. பரலோகத்திற்கு செல்வதற்கான ஒரே வழியாக இயேசுவை ஏற்றுக்கொள்ள விரும்பாத பலர், மற்றொரு பாதையை*

கண்டுபிடிக்க தீர்மானிக்கிறார்கள். ஆனால் இயேசு எந்த வழியிலும் இல்லை என்று எச்சரிக்கிறார், இந்த சத்தியத்தை நிராகரிப்பதற்கான விளைவு நித்திய நரகம் ஆகும். “குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றார்” (யோவான் 3:36). கிறிஸ்துவில் வைக்கிற விசுவாசம் தான் பரலோகத்திற்கு செல்வதற்கான திறவுகோலாக இருக்கிறது.

பரலோகத்திற்கு செல்ல ஒரே ஒரு வழியை மட்டும் கொடுக்க தேவன் மிகக் குறுகிய மனப்பான்மை கொண்டவர் என்று சிலர் வாதிடுவார்கள். ஆனால், தேவனுக்கு விரோதமாக மனிதகுலத்தின் கிளர்ச்சியின் வெளிப்பாட்டில், பரலோகத்திற்கு எந்த வழியையும் அவர் நமக்கு அளிப்பதற்கு அவருக்கு அது மிகவும் பரந்த மனப்பான்மையாக இருக்கிறது. நாம் நியாயத்தீர்ப்புக்கு தகுதியுடையவர்கள், ஆனால் நம்முடைய பாவங்களுக்காக மரிக்கும்படி ஒரே ஒரு குமாரனை அனுப்பி, தேவன் நம்மைத் தப்புவிக்கிறார். யாராவது இதை குறுகிய அல்லது பரந்ததாக பார்க்கிறார்களா, இது சத்தியமாக இருக்கிறது. நற்செய்தி என்னவென்றால் இயேசு மறித்து மீண்டும் உயிர்த்தெழுந்தார்; பரலோகத்துக்குப் போகிறவர்கள் விசுவாசத்தினாலே இந்த சுவிசேஷத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

இன்று பலர் மனந்திரும்புதலுக்கான தேவையுடன் விட்டுக்கொடுக்கும் ஒரு நாகரீகமான நற்செய்தியைப் பிடித்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பாவத்தை குறிப்பிடாத மற்றும் தங்கள் வாழ்க்கையில் எந்த மாற்றமும் தேவையில்லை என்று கருதுகிற ஒரு "அன்பான" (நியாயம் விதிக்காத) தேவன்மேல் நம்பிக்கை வைக்க விரும்புகிறார்கள். "என் தேவன் ஒருவரை ஒருபோதும் நரகத்திற்கு அனுப்பமாட்டார்" என்று அவர்கள் கூறலாம். ஆனால் இயேசு பரலோகத்தைப் பற்றி பேசியதைவிட நரகத்தைப் பற்றித்தான் அதிகம் பேசினார், பரலோகத்திற்கு செல்வதற்கான ஒரே வழியைக்

*கொடுக்கிற இரட்சகராக தம்மை அளித்தார்: '' நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' யோவான் 14:6).*

*யார் உண்மையில் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள்? நான் பரலோகத்திற்குப் போகிறேன் என்று எப்படி உத்தரவாதம் அளிக்க முடியும்? நித்திய ஜீவனை உடையவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை வேதாகமம் தெளிவாக குறிப்பிடுகிறது: ''குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்'' (1 யோவான் 5:12). இயேசுவின் மரணம் தங்களுடைய பாவங்களுக்கான விலைக்கிரயம் என்றும் அவருடைய உயிர்த்தெழுதலிலும் விசுவாசிக்கிறவர்கள் எவர்களோ அவர்கள் பரலோகத்திற்குப் போவார்கள். கிறிஸ்துவை புறக்கணிக்கிறவர்கள் பரலோகத்திற்கு செல்ல மாட்டார்கள். ''அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாய் இராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்பட்டாயிற்று'' (யோவான் 3:18).*

*இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்கிறவர்களுக்காக பரலோகம் அற்புதமான ஆச்சரியமூட்டுகிற இடமாக இருக்கும், அவரை நிராகரிக்கிறவர்களுக்கு நரகம் மிகவும் பரிதாபகரமான துக்கம் நிறைந்த ஒரு இடமாக இருக்கும். இதை திரும்ப திரும்ப பார்க்காமல் ஒருவரால் வேதாகமத்தை சீரிய முறையில் வாசிக்கமுடியாது - அதன் கொடு வரைக்கப்பட்டு இருக்கிறது. பரலோகத்திற்கு செல்ல ஒரே ஒரு வழிதான் இருக்கிறது - அந்த வழி இயேசு கிறிஸ்துவே என்று வேதாகமம் சொல்லுகிறது. இயேசுவின் கட்டளையைப்*

*பின்பற்றுங்கள்: "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" (மத்தேயு 7:13-14).*

*இயேசுவில் வைக்கும் விசுவாசம் ஒன்று மட்டும்தான் பரலோகத்திற்கு செல்வதற்கான வழியாகும். விசுவாசமுள்ளவர்கள் அங்கு செல்லுவதற்கு உத்தரவாதத்தைப் பெறுகிறார்கள். நீங்கள் இயேசுவை நம்புகிறீர்களா?*

# 75. இயேசு இரட்சிக்கிறார் என்பதன் அர்த்தம் என்ன?

*"இயேசு இரட்சிக்கிறார்" என்பது பம்பர் ஸ்டிக்கர்களின் ஒரு பிரபலமான கோஷம், தடகள நிகழ்வுகளின் குறியீடுகள், மற்றும் சிறிய விமானங்களால் வானத்தில் இழுத்துச் செல்லப்படுகிற பதாகைகளாக வருகிறது. வருத்தகரமாக, "இயேசு இரட்சிக்கிறார்" என்ற சொற்றொடரைக் காணும் சிலர் மட்டுமே அதை உண்மையாகப் புரிந்துகொள்கிறார்கள். அந்த இரண்டு வார்த்தைகளிலும் மிகப்பெரிய சக்தியும் சத்தியமும் நிறைந்திருக்கிறது.*

**இயேசு இரட்சிக்கிறார், ஆனால் இயேசு யார்?**

*சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரவேலில் வாழ்ந்த ஒரு மனிதராக இயேசுவை பெரும்பாலான மக்கள் புரிந்துகொள்கிறார்கள். உலகிலுள்ள எல்லா மதங்களும் இயேசுவை ஒரு சிறந்த ஆசிரியராகவும் / அல்லது ஒரு தீர்க்கதரிசியாகவும் கருதுகின்றன. இந்த விஷயங்கள் இயேசுவைக்குறித்த உண்மையான கூற்றுகளாக இருக்கிறது என்கிறபோதிலும், இயேசு உண்மையிலேயே யார் என்பதையும் அவர் எதற்காக இரட்சிக்கிறார் என்பதையும் அவர்கள் சரியாகக் கைப்பற்றவில்லை, மற்றும் அவர்கள் விளக்கமளிக்கவுமில்லை. இயேசு மனித உருவில் இருக்கும் தேவனாக இருக்கிறார் (யோவான் 1:1, 14). இயேசு தேவன், பூமிக்கு வந்த, உண்மையான மனிதன் (1 யோவான் 4:2). நம்மை இரட்சிப்பதற்காக தேவன் இயேசுவில் ஒரு மனிதனாக வந்தார். அது அடுத்த கேள்வியைக் கொண்டுவருகிறது: நாம் ஏன் இரட்சிக்கப்பட வேண்டும்?*

**இயேசு இரட்சிக்கிறார், ஆனால் நாம் ஏன் இரட்சிக்கப்பட வேண்டும்?**

*உயிரோடிருந்த அல்லது ஜீவிக்கிற ஒவ்வொரு மனிதனும் பாவம் செய்ததாக வேதாகமம் கூறுகிறது (பிரசங்கி 7:20, ரோமர் 3:23). பாவம்*

*செய்தல் என்பது, சிந்தனை, வார்த்தை, அல்லது செயலில் தேவனுடைய பரிபூரண மற்றும் பரிசுத்தமான தன்மையை முரணாக இருக்கின்ற காரியங்கள் ஆகும். நம்முடைய பாவத்தின் காரணமாக, நாம் எல்லாரும் தேவனால் நியாயந்தீர்க்கப்பட பாத்திரர்களாக இருக்கிறோம் (யோவான் 3:18, 36). தேவன் பரிபூரணமாக நீதியுள்ளவராக இருக்கிறார், ஆகவே பாவம் மற்றும் தீமைகளை அவர் தண்டிக்க முடியாதபடி அனுமதிக்க இயலாது. தேவன் எல்லையற்றவர் மற்றும் நித்தியமானவர் என்பதால், எல்லா பாவங்களும் தேவனுக்கு விரோதமாக இருக்கிறது (சங்கீதம் 51:4), ஒரு முடிவற்ற மற்றும் நித்தியமான தண்டனை மட்டுமே அதற்குப் போதுமானதாக இருக்கிறது. நித்திய மரணம் மட்டுமே பாவத்திற்கு ஏற்ற நீதியுள்ள தண்டனையாக இருக்கிறது. அதனால்தான் நாம் இரட்சிக்கப்பட வேண்டும்.*

### இயேசு இரட்சிக்கிறார், ஆனால் அவர் எப்படி இரட்சிக்கிறார்?

*நாம் எல்லையற்ற தேவனுக்கு எதிராக பாவம் செய்தபடியால், ஒரு வரையறுக்கப்பட்ட மனிதனாக நாம் நம்முடைய பாவங்களுக்காக அளவற்ற நேரங்களாக நமது விலைக்கிரயத்தை செலுத்த வேண்டும், அல்லது எல்லையற்ற நபராகிய (இயேசு) ஒரு முறை நம்முடைய பாவங்களுக்காக விலைக்கிரயத்தை செலுத்த வேண்டும். வேறு எந்தஒரு தேர்வும் இல்லை. நம்முடைய இடத்தில் மரித்ததன் மூலம் இயேசு நம்மை இரட்சிக்கிறார். இயேசு கிறிஸ்து என்னும் நபரில் தேவன் தம்மையே நம் சார்பாக பலியாக கொடுத்தார், அதனிமித்தம் எல்லையற்ற மற்றும் நித்திய தண்டனைக்குரிய விலையை அவரால் மட்டுமே செலுத்த முடியும் (2 கொரிந்தியர் 5:21; 1 யோவான் 2:2). ஒரு பயங்கரமான நித்திய விதியிலிருந்து நம்மை இரட்சிப்பதற்காக, பாவத்தின் விளைவாக நாம் அடையவேண்டிய தகுதியுள்ள தண்டனையை இயேசு தம்மீது எடுத்துக்கொண்டார். நம்மீது அவர் வைத்திருந்த அன்பின் காரணமாக, இயேசு தம் உயிரைக் கொடுத்தார் (யோவான் 15:13), நாம் சம்பாதித்த பாவ தண்டனையை*

*செலுத்தினார், ஆனால் அதை நம்மால் செலுத்த முடியவில்லை. இயேசு உயிர்த்தெழுப்பப்பட்டார், அவருடைய மரணம் நம்முடைய பாவங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய தண்டனைக்கு போதுமானதாக இருந்தது என நிரூபிக்கப்பட்டது (1 கொரிந்தியர் 15).*

**இயேசு இரட்சிக்கிறார், ஆனால் யாரை அவர் இரட்சிக்கிறார்?**

*இரட்சிப்பின் ஈவைப்பெற்றுக்கொள்கிற அனைவருக்கும் இயேசு இரட்சிக்கிறார். பாவத்திற்குக் விலைக்கிரயமாக செலுத்த இயேசுவின் பலியில் மட்டுமே விசுவாசம் வைக்கும் அனைவரையும் இயேசு இரட்சிக்கிறார் (யோவான் 3:16; அப்போஸ்தலர் 16:31). இயேசுவின் பலி எல்லா மனிதகுலத்தின் பாவங்களுக்காக செலுத்த வேண்டிய விலைக்கிரயத்திற்கு போதுமானதாக இருக்கிறபோதினும், தம்முடைய இந்த மிக அருமையான ஈவுகளை இயேசுவை தனிப்பட்ட முறையில் ஏற்றுக்கொள்கிறவர்களை மட்டுமே இரட்சிக்கிறார் (யோவான் 1:12).*

*நீங்கள் இப்பொழுது இயேசு இரட்சிக்கிறார் என்பதை புரிந்துகொண்டு, உங்கள் சொந்த இரட்சகராக அவரை நம்பி ஏற்றுக்கொள்ள விரும்பினால், அதை நீங்கள் மெய்யாகவே புரிந்துகொண்டு, பின்வருமாறு நம்புகிறீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள், அதேபோல் விசுவாசத்தின் செயலாக, தேவனுக்கு கீழ்படிந்து பின்வருபவற்றை தேவனிடத்தில் சொல்லுங்கள். "ஆண்டவரே, நான் ஒரு பாவி என்பதை அறிந்திருக்கிறேன், நான் உமக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறேன் என்றும் அதினிமித்தம் பாவத்திற்கான தண்டனையை அடைவதற்கு பாத்திரமாய் இருக்கிறேன் என்றும் அதினிமித்தமாக நித்தியமாக உம்மிலிருந்து பிரிக்கப்பட்டு இருப்பேன் என்றும் அறிந்திருக்கிறேன். நான் பெற்றுக்கொள்ள தகுதியில்லாத போதிலும், என்னை நேசித்து கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் மூலமாக என்னுடைய பாவத்திற்கான தியாக பலியை ஏற்ப்படுத்தினதற்காக நான் உமக்கு நன்றி செலுத்துகிறேன். நான் மன்னிப்பை பெறத்தக்கதாக நான் அடையவேண்டிய*

*தண்டனையை இயேசு ஏற்றுக்கொண்டார் என விசுவாசிக்கிறேன். இந்த தருணத்திலிருந்து எனது வாழ்க்கையை பாவத்திற்காக அல்லாமல் உமக்காக வாழ உதவி செய்யும். நீர் எனக்கு தந்த இந்த ஆச்சரியமான இரட்சிப்புக்கு நன்றியுள்ளவனாக எனது மீதமுள்ள வாழ்நாளெல்லாம் வாழ உதவி செய்யும். இயேசுவே, என்னை இரட்சித்ததற்காக உமக்கு நன்றி!"*

# 76. நான் எனது விசுவாசத்தை இயேசுவின்மேல் வைத்திருக்கிறேன்... இப்பொழுது அடுத்து என்ன?

*நான் எனது விசுவாசத்தை இயேசுவின்மேல் வைத்திருக்கிறேன்... இப்பொழுது அடுத்து என்ன?*

*வாழ்த்துக்கள்! நீங்கள் உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை கொண்டு வருகிற ஒரு தீர்மானத்தை எடுத்து இருக்கிறீர்கள்! "இப்பொழுது என்ன?" தேவனோடு எனது பயணத்தை எப்படி ஆரம்பிப்பது? வேதாகமத்தில் கீழே கொடுக்கப்பட்டுள்ள ஐந்து படிகள் வேதாகமத்திலிருந்து உங்களுக்கு சரியான திசையைக் காண்பித்து வழி நடத்தும். உங்களுடைய இந்த பயணத்தில் உங்களுக்கு ஏதாவது கேள்விகள் எழுமாயின் www.GotQuestions.org என்கிற இணையதளத்திற்கு சென்று உங்கள் கேள்விகளுக்கான பதிலை தெரிந்து கொள்ளுங்கள்.*

**1. இரட்சிப்பு என்றால் என்ன என்பதை நீங்கள் சரியாக புரிந்து கொண்டதை உறுதி செய்து கொள்ளுங்கள்.**

*"உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" என 1 யோவான் 5:13 கூறுகிறது. நாம் இரட்சிப்பு என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ள வேண்டும் என தேவன் விரும்புகிறார். மேலும் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருக்கிற விஷயத்தில் திடநம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும் என்றும் தேவன் விரும்புகிறார். இரட்சிப்பை பற்றிய முக்கியமான குறிப்புகளை சுருக்கமாக ஆராய்வோம் வாருங்கள்:*

*(a) நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம். நாமெல்லாரும் தேவனுக்கு பிரியமில்லாத காரியங்களை செய்திருக்கிறோம் (ரோமர் 3:23).*

*(b) நாம் செய்த பாவத்தின் நிமித்தமாக தேவனை விட்டு நித்திய காலமாக பிரிந்திருக்கிற தண்டனைக்குள்ளானோம் (ரோமர் 6:23).*

*(c) நம்முடைய பாவங்களுக்குரிய தண்டனையின் விலையை செலுத்துவதற்காக இயேசு சிலுவையில் மரித்தார் (ரோமர் 5:8; 2 கொரிந்தியர் 5:21). நாம் அடைய வேண்டிய தண்டனையை தம்மேல் ஏற்றுக்கொண்டு இயேசு நம்முடைய ஸ்தானத்தில் மரித்தார். அவர் மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்ததன் மூலம் நம்முடைய பாவங்களுடைய தண்டனையை போக்க அவருடைய மரணம் போதுமானது என்பதை நிரூபித்தார்.*

*(d) இயேசுவின்மேல் விசுவாசம் வைத்து நாம் அடைய வேண்டிய தண்டனையை தம்மேல் ஏற்றுக்கொண்டு இயேசு நம்முடைய ஸ்தானத்தில் மரித்தார் என்பதை நம்புகிற யாவருக்கும் தேவன் மன்னிப்பையும் இரட்சிப்பையும் அருளுகிறார் (யோவான் 3:16; ரோமர் 5:1; ரோமர் 8:1).*

*இதுதான் இரட்சிப்பின் செய்தி! நீங்கள் உங்கள் விசுவாசத்தை இயேசு கிறிஸ்துவின் மேல் வைத்து அவரை உங்கள் இரட்சகராக ஏற்றுக்கொண்டிருந்தால், நீங்கள் இரட்சிக்கப்பட்டு இருக்கிறீர்கள்! உங்களுடைய எல்லா பாவங்கள் மன்னிக்கப்பட்டு இருக்கிறது, மேலும் தேவன் நான் உங்களை விட்டு விலகாமாட்டேன் மற்றும் உங்களை கைவிடமாட்டேன் என வாக்கு பண்ணியிருக்கிறார் (ரோமர் 8:38-39; மத்தேயு 28:20). உங்கள் இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவில் பாதுகாப்பாக இருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள் (யோவான் 10:28-29). நீங்கள் உங்களது முழு நம்பிக்கையையும் இயேசுவின் மேல் மட்டும் வைத்து அவரை உங்களுடைய இரட்சகராக*

*ஏற்றுக்கொண்டீர்களானால், நீங்கள் உங்கள் நித்யத்தை தேவனோடு பரலோகத்தில் செலவழிக்கலாம் என திடநம்பிக்கையோடு இருக்கலாம்!*

**2. வேதாகமத்தை சரியாக போதிக்கிற ஒரு நல்ல திருச்சபையை கண்டுபிடியுங்கள்.**

*சபை என்றதும் கட்டிடத்தை சபை என்று கருதிவிட வேண்டாம். சபை என்றால் மக்கள். இயேசு கிறிஸ்துவிற்குள் இருக்கிற விசுவாசிகள் ஒருவருக்கொருவர் ஐக்கியத்தில் இருப்பதும் வளருவதும் மிகவும் முக்கியமான காரியமாகும். சபையின் முதன்மையான நோக்கங்களில் இதுவும் ஒன்றாகும். இப்பொழுது நீங்கள் உங்கள் விசுவாசத்தை இயேசு கிறிஸ்துவின்மேல் வைத்திருக்கிறீர்கள். ஆகையால் நீங்கள் இருக்கிற இடத்தில் வேதாகமத்தை விசுவாசிக்கிற மற்றும் சரியாக போதிக்கிற ஒரு நல்ல சபையை கண்டுபிடித்து உங்களை அந்த ஐக்கியத்தில் இணைத்து கொள்ளுங்கள். அந்த சபை போதகரோடு நீங்கள் புதிதாக இயேசுவை ஏற்றுக்கொண்டு புது ஜீவன் பெற்றவர் என்பதை தெரிவியுங்கள். அவர் நீங்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு புதிதாக விசுவாசத்திற்குள் வந்தவர் என்பதை அறிந்து கொள்ளட்டும்.*

*சபையின் இரண்டாவது பிரதான நோக்கம் என்னவென்றால், வேதாகமத்தை உள்ளதுபோலவே சரியாக போதிப்பதாகும். நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் கைக்கொண்டு நடக்கத்தக்கதான தேவனுடைய அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகளை வேதாகமத்தில் இருந்து கற்றுக்கொள்ளலாம். வேதாகமத்தை சரியாக புரிந்து கொள்ளுகிற காரியம்தான் வலிமையான மற்றும் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு திறவுகோலாக இருக்கிறது. 'வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும்,*

சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2 தீமோத்தேயு 3:16-17).

சபையின் மூன்றாவது நோக்கம் "ஆராதனை". ஆராதனை என்பது தேவன் செய்த எல்லா காரியங்களுக்காகவும் அவருக்கு நன்றி செலுத்துதல் ஆகும். தேவன் நம்மை இரட்சித்திருக்கிறார். தேவன் நம்மை நேசிக்கிறார். தேவன் நமது தேவைகளை சந்திக்கிறார். தேவன் நமக்கு வழிகாட்டி நம்மை வழிநடத்துகிறார். இப்படியிருக்க எப்படி நாம் அவரை துதியாமல் இருக்கமுடியும்? தேவன் பரிசுத்தமுள்ளவரும், நீதியுள்ளவரும், அன்புள்ளவரும், இருக்கமுள்ளவரும் கிருபை நிறைந்தவருமாக இருக்கிறார். "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்; நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள்" என வெளி. 4:11 கூறுகிறது.

**3. தேவன் மேல் கவனம் செலுத்ததக்கதாக ஒவ்வொரு நாளும் அதற்கான நேரத்தை ஒதுக்குங்கள்.**

தேவன் மேல் கவனம் செலுத்ததக்கதாக நாம் ஒவ்வொரு நாளும் அதற்கான நேரத்தை ஒதுக்குவது மிகவும் முக்கியமான காரியமாகும். சிலர் இதை "அமைதியான நேரம்" என அழைக்கிறார்கள். மற்ற சிலர் இதை "தியானங்கள்" என அழைக்கிறார்கள். காரணம் நாம் தேவனோடு நம்மை ஈடுபடுத்திக்கொண்டு அவரை தியானிக்கின்ற நேரமாகும். சிலர் காலை நேரங்களில் இதற்காக நேரத்தை ஒதுக்குவார்கள். வேறு சிலர் மாலை நேரங்களில் இதற்காக நேரத்தை ஒதுக்குவார்கள். இந்த நேரத்தை நீங்கள் எப்படி அழைத்தாலும் எப்பொழுது ஒதுக்கினாலும் அதில் ஒரு பிரச்சனையும் இல்லை. நீங்கள் அனுதினமும் இவ்வகையில் நேரத்தை தேவனோடு செலவழிக்கிறீர்களா என்பதுதான் முக்கியம். நாம் தேவனோடு

நேரத்தை செலவிடும்போது எந்தெந்த காரியங்கள் எல்லாம் அதில் உள்ளடங்கியுள்ளன?

*(a)* ஜெபம். ஜெபம் என்பது தேவனோடு பேசுதல் என்கிற சாதாரண விஷயமாகும். உங்களைக்குறித்த கவலைகள் மற்றும் பிரச்சனைகளை தேவனிடத்தில் கூறுங்கள். உங்களுக்கு தேவையான ஞானம் மற்றும் வழிநடத்துதலை கொடுக்கும்படி அவரிடம் கேளுங்கள். உங்களது தேவைகளை அவரிடத்தில் கூறி அதை சந்திக்கும் படி கேளுங்கள். அதேவேளை நீங்கள் எந்த அளவிற்கு அவரை நேசிக்கிறீர்கள் மற்றும் அவர் உங்களுக்கு செய்த காரியங்களை மறவாமல் அவரை துதித்து உயர்த்துகிறீர்கள் என்பதையும் அவரிடத்தில் கூறுங்கள். இதுதான் ஜெபம்.

*(b)* வேத வாசிப்பு. வேதாகமம் சபை, ஞாயிறு பாடசாலை, வேத ஆராய்ச்சி கூட்டம் போன்றவற்றில் போதிக்கப்பட்டாலும், நீங்கள் உங்களது அனுதின வாழ்வில் வேதாகமத்தை வாசிக்கவேண்டும். நீங்கள் வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதற்கு தேவையான அனைத்து காரியங்களும் வேதாகமத்தில் அடங்கியுள்ளன. தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ளுதல், ஞானமான தீர்மானங்களை எடுத்தல், பிறருக்கு எவ்வகையில் உதவி செய்தல் மற்றும் ஆவிக்குரிய வாழ்வில் முதிர்ச்சியை பெறுதல் போன்ற காரியங்களில் தேவனுடைய வழிநடத்துதல் நமக்கு இதில் உண்டாயிருக்கிறது. வேதாகமமானது தேவனுடைய வார்த்தையாகும். வேதாகமமானது நாம் நமது வாழ்வை தேவன் விருப்புகிற வகையிலும் நமக்கு திருப்தி அளிக்கிற நிலையிலும் எப்படி வாழவேண்டும் என்பதற்கான தேவனுடைய அறிவுறுத்தல்கள் மற்றும் ஆலோசனைகள் அடங்கிய கையேடு ஆகும்.

**4. நீங்கள் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் வளருவதற்கு உங்களுக்கு உதவி செய்து ஊக்குவிக்கும் நபர்களோடு உங்கள் உறவுகளை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.**

*"மோசம் போகாதிருங்கள்; ஆகாதச ம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்" என்று 1 கொரிந்தியர்15:33 கூறுகிறது. தீய செயல்களை செய்யும்படி நம்மை உந்துகிற மக்களில் இருந்து வேறுபட்டு வாழத்தக்கதாக, வேதாகமம் அவர்களைப்பற்றிய எண்ணற்ற எச்சரிக்கைகளை நமக்கு கொடுக்கிறது. பாவமான காரியங்களை செய்கிறவர்களோடு நாம் நேரத்தை செலவழிக்கும் போது அவர்கள் செய்கிற தீய செயல்களை நாமும் செய்யத்தக்கதாக சோதனைக்குள்ளாவோம். அப்படிப்பட்டவர்களோடு உள்ள ஐக்கியம் நம்மை அவர்களுடைய சுபாவக்கரை படியும்படி செய்துவிடும். இதனிமித்தம் நாம் எப்பொழுதும் கர்த்தரை நேசிக்கிற மற்றும் அவருக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணித்தவர்களோடு கலந்து சேர்ந்து இருக்கவேண்டும்.*

*உங்கள் சபையில் இருந்து உங்களுக்கு உதவி செய்கிற மற்றும் ஊக்குவிக்கிற ஓரிரு நண்பர்களை தேர்ந்தெடுங்கள் (எபிரேயர் 3:13; 10:24). உங்களுடைய அமைதி நேரம், தேவனோடுள்ள ஐக்கியம் மற்றும் இதர காரியங்களில் பொறுப்பெடுத்து உங்களை நடத்ததக்க நிலையில் இருக்கும்படி உங்கள் நெருங்கிய நண்பரிடம் கேளுங்கள். அவர்களுக்கும் நீங்கள் இப்படி இருக்க அவர்களிடம் கேளுங்கள். இதன் அர்த்தம் கிறிஸ்துவை அறியாத மற்ற அனைத்து நண்பர்களையும் விட்டு நீங்கள் விலக வேண்டும் என்கிற அர்த்தமல்ல, தொடர்ந்து அவர்களது நண்பராக இருங்கள் அவர்களை நேசியுங்கள். இயேசு கிறிஸ்து உங்களை இரட்சித்ததையும் அவர்கள் செய்கிற எல்லா செயல்களையும் உங்களால் செய்ய இயலாது என சாதாரண நிலையில் கூறுங்கள். அவர்களிடம் இயேசுவைக் குறித்து கூறுவதற்கு உங்களுக்கு நல்ல சந்தர்ப்பங்களை கொடுக்க தேவனிடம் கேளுங்கள்.*

**5. ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளுங்கள்.**

*அநேகருக்கு ஞானஸ்நானம் குறித்து தவறான புரிந்துகொள்ளுதல் இருக்கிறது. ஞானஸ்நானம் என்னும் சொல்லின் அர்த்தம் "தண்ணீரில்*

*முழ்குதல்" என்பதாகும். ஞானஸ்நானம் என்பது வேதாகமப் பிரகாரம் ஒருவர் கிறிஸ்துவில் விசுவாசித்து புதிய வாழ்விற்குள்ளாக வந்ததையும் தொடர்ந்து இயேசுவையே பின்பற்றி செல்லுவேன் என்கிறதுமான தீர்மானத்தை வெளியரங்கமாக அறிக்கை செய்யும் ஓர் செயலாகும். தண்ணீரில் மூழ்குகிற இந்த செயல் கிறிஸ்துவோடு மரித்து அடக்கம்பண்ணப்பட்டதற்கு அடையாளமாக இருக்கிறது. தண்ணீரில் இருந்து வெளியே வருகிற செயல் கிறிஸ்துவோடு உயிர்த்தெழுந்த காரியத்திற்கு அடையாளமாக இருக்கிறது. ஆக ஞானஸ்நானம் எடுத்தல் என்கிற காரியம் இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆவியவற்றோடு ஒப்பிட்டு காண்பிக்கிற ஓர் அடையாளமாக இருக்கிறது (ரோமர் 6:3-4).*

*ஞானஸ்நானம் உங்களை ஒருபோதும் இரட்சிக்காது. ஞானஸ்நானம் உங்களுடைய பாவங்களை கழுவாது. ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் மூலம் மட்டுமே இரட்சிப்பு என்று நீங்கள் வெளியரங்கமாக பண்ணுகிற ஒரு விசுவாச அறிக்கையை காண்பிக்கிற ஒரு கீழ்படிதலின் படி ஆகும். ஞானஸ்நானம் என்பது முக்கியமானதுதான், காரணம் இது நமது கீழ்படிதலைக் காண்பிக்கிறதாய் இருக்கிறது. மேலும் கிறிஸ்துவின்மேல் உங்களுக்கு இருக்கிற விசுவாசத்தை அறிக்கப்பண்ணுகிற தருணமாகவும் இருக்கிறது. நீங்கள் ஒருவேளை ஞானஸ்நானம் பெற ஆயத்தமாக இருந்தால், உங்கள் போதகரிடம் இதைக்குறித்து கூறுங்கள் அவருக்கு தெரிவியுங்கள்.*

## எங்களின் இதர நூல்கள் (Printed / E-Books)

1. *ஒரு வருட வேத வாசிப்பு திட்டம்*
2. *One Year Bible Reading Plan*
3. *சங்கீதமும் நீதிமொழிகளும்*
4. *சங்கீத புத்தகத்திலுள்ள ஜெபங்கள்*
5. *தமிழ் - வேதாகம மனப்பாட வசனங்கள் பாகம் 1*
6. *தமிழ் - வேதாகம மனப்பாட வசனங்கள் பாகம் 2*
7. *Tanglish - Vedaagama Manappaada Vasanagal Bagam 1*
8. *Tanglish - Vedaagama Manappaada Vasanagal Bagam 2*
9. *Bible Memory Verses Volume 1*
10. *Bible Memory Verses Volume 2*
11. *Bible Coloring Books 01 Creation [Tamil, English]*
12. *Bible Coloring Books 02 Adam and Eve [Tamil, English]*
13. *Bible Coloring Books 03 Cain and Abel [Tamil, English]*
14. *Bible Coloring Books 04 Noah [Tamil, English]*
15. *ஞாயிறு பள்ளி பாடங்கள் - தொடக்கநிலை - பாகம் 1*
16. *Tanglish - Gnayiru Palli Paadangal - Thodakkanilai - Baagam 1*
17. *Bible Coloring Book for Sunday School Syllabus Beginners - Volume 1*
18. *வேதாகம தியானங்கள் பாகம் 1 40 லெந்து நாட்கள் [ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]*
19. *வேதாகம தியானங்கள் பாகம் 2 40 லெந்து நாட்கள் [ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]*
20. *வேதாகம தியானங்கள் பாகம் 3 - [25 கிறிஸ்மஸ் தியானங்கள். ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]*
21. *வேதாகம தியானங்கள் பாகம் 4 [365 நாட்கள். ஆசிரியர்: கிளாடிஸ் சுகந்தி ஹாசிலிட்]*
22. *தம்பிரான் வணக்கம் 1578 [ஆசிரியர்: பழங்காசு சீனிவாசன், ஏசுதாஸ் சாலொமோன்]*

*23. தமிழ் பைபிள் 1714 பாகம் 1 (மத்தேயு முதல் அப்போஸ்தலருடைய நடபடிகள் வரை)*
*24. தமிழ் பைபிள் 1714 பாகம் 2 (ரோமர் முதல் வெளிப்படுத்தல் வரை)*
*25. ஒருவருட வேதாகமம் (தமிழ், English, Telugu, Kannada, Malayalam, Hindi)*
*26. ஒருவருட வேதாகமம் - சம்பவங்கள் நடந்த கால வரிசைப்படி (தமிழ், English, Telugu, Kannada, Malayalam, Hindi)*
*27. தமிழ் வேதாகம ஒத்தவாக்கிய விளக்கவுரை*
*28. அபிஷேகம் [ஆசிரியர்: Rev. Dr. A. பிரகாசம்]*
*29. என் வாழ்வில் தேவனுடைய கிருபை [ஆசிரியர்: Rev. Dr. A. பிரகாசம்]*
*30. தமிழ் இணைநிலை வேதாகமங்கள்*
*31. English Parallel Bibles*
*32. கர்த்தருக்குச் சித்தம் [ஆசிரியர்: Rev. Dr. A. பிரகாசம்]*
*33. சீகன்பால்குவின் ஓலைச்சுவடி பிரசங்கங்கள்*
*34. தமிழ் வேதாகம பழைய மொழிபெயர்ப்புகள்*
*35. விசுவாச ஜீவியம் [S. பரமானந்தம் ஐயர்]*
*36. அன்பின் ஜீவியம் [S. பரமானந்தம் ஐயர்]*
*37. தேவசித்த ஜீவியம் [S. பரமானந்தம் ஐயர்]*
*38. நீங்கள் இயேசு கிறிஸ்துவை அறிய வேண்டியது மிக மிக அவசியம் [S. பரமானந்தம் ஐயர்]*
*39. கிறிஸ்தவ கடவுள் யார்? அவர் எப்படிப்பட்டவர்?*
*40. இயேசு கிறிஸ்து யார்? அவர் எப்படிப்பட்டவர்?*
*41. பரிசுத்த ஆவியானவர் யார்? அவர் எப்படிப்பட்டவர்?*

# BIBLE MINUTES

- தேவன்/கடவுள் யார்? அவர் இருப்பது உண்மைதானா?
- தேவனை சிருஷ்டித்தவர் யார்? தேவன் ஆணா அல்லது பெண்ணா?
- திரித்துவம் என்றால் என்ன? திரித்துவத்தை விளக்க முடியுமா?
- தேவன் தீமையை சிருஷ்டித்தாரா?
- தேவன் ஏன் நல்ல மனிதர்களுக்கு தீமையான காரியங்களை சம்பவிக்கும்படி அனுமதிக்கிறார்?
- இன்றும் தேவன் நம்மோடு பேசுகிறாரா?
- தேவன் கிறிஸ்தவர்களை மட்டும் நேசிக்கிறாரா?
- தேவன் பாவியின் ஜெபங்களைக் கேட்கிறாரா?
- தேவன் ஏன் எரிச்சலுள்ள தேவனாக இருக்கிறார்?
- தேவன் அற்புதங்களைச் செய்கிறாரா? தேவன் இன்று எல்லாரையும் சுகமாக்குகிறாரா?
- பூகம்பங்கள், சூறாவளிகள் மற்றும் சுனாமிகள் போன்ற இயற்கை பேரழிவுகளை தேவன் ஏன் அனுமதிக்கிறார்?
- தேவன் அப்பாவி மனிதர்கள் உபத்திரவப் படுவது ஏன்?
- யாராவது தேவனை எப்பொழுதாவது பார்த்திருக்கிறார்களா?
- கடவுள் நம்மை பாவம் செய்ய தூண்டுகிறாரா?
- சில சமயங்களில் விசுவாசிகள் நோய்வாய்ப்படுவது தேவனுடைய சித்தமா?
- தேவன் மனிதரானாரா?
- இயேசு தேவனா?
- வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தையா?
- கிறிஸ்தவம் என்றால் என்ன? கிறிஸ்தவர்கள் என்ன விசுவாசிக்கிறார்கள்?
- என்னுடைய வாழ்விற்கான தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளுதல் எப்படி?
- நான் எதற்காக கிறிஸ்தவனாகவேண்டும்?
- இரட்சிப்பின் வழி என்றால் என்ன?
- நான் எப்படி தேவனுடைய பிள்ளையாக முடியும்?
- இன்னும் பல...